பரிசு

T11206
R003I04

அறிஞர் சி. என். அண்ணாதுரை, எம். ஏ.,

"பரிசு"

அறிஞர் அண்ணா

பரிசு

C. N. அண்ணாதுரை M. A

காசி நிலையம்,
மதுரை.

முதற் பதிப்பு 1958.

விலை ரூ. 1–25.

பதிப்புரிமை பெற்றது.

முன்னுரை:-

மலிவுப்பதிப்பு வரிசைகள்! நாட்டிலே இன்று எங்கும் எல்லா பதிப்பகங்களிலும் எந்தெந்த நூல்களை வெளியிடலாமென்ற எண்ணத்தை எழுப்பிவிட்டு, பதிப்பாசிரியர்களின் மூளையை சாணைக்கல்லில் தீட்ட விட்டிருக்கும் ஒரு போர்முரசாக விளங்கி வருகிறது. இந்த நிலைமை நீடித்தால்—முடிவு என்னவென்பதை யாரும் எளிதில் கணிக்க இயலாது. பெயர் பெற்ற ஒருசில எழுத்தாளர்கள் செத்தாலும் செத்தார்கள் இப்படி பெரும் பெரும் கதைகளாகவும் கவிதைகளாகவும் எழுதிவைத்து விட்டு செத்திருக்கக்கூடாது. அப்படி செத்தவர்களும் தாங்கள் எழுதியவைகளை தமிழ் நாட்டு பதிப்பாசிரியர்கள் கண்களுக்குத் தெரியும்படி வைத்துவிட்டு நிச்சயம் அவர்கள் செத்திருக்கக்கூடாது. நாட்டிலே மடமை மறையக்கூடாது—முட்டாள்கள் என்றும் நிறைந்திருந்தால் தான் மெருகு குலையாத மேனியர்கள் சுகமாக வாழ

முடியும் என்று திட்டம்போட்டு சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் வியாசர் விருந்தை மக்கள் மத்தியிலே மலிவுப்பதிப்பு என்ற கண்கட்டி வித்தையை கட்டவிழ்த்து விட்டுப் பார்த்தார்—கோயாங்கா மூலமாக. சக்கரவர்த்தித் திருமகன் வந்தான் மக்களை மாடுகளாக மாற்ற! அவ்வளவு தான்! புராணங்கள் கிளம்பின புற்றீசல் போல!

தித்திப்பான பதார்த்தத்தை நோக்கியும் எறும்புகள் சாரை சாரையாகச் செல்லுகின்றன. அதே எறும்புகள் இறந்து போன பூச்சிகள் போன்ற துர்நாற்றமானவைகளைத் தேடியும் சாரை சாரையாகச் செல்லத்தான் செய்கின்றன. இதுவரை மக்கள் கூட்டம் துர்நாற்றமானவைகளைத் தேடிச்சென்று அதை விரும்பி ஏற்றுக்கொண்டவர்களும் சிலர் உண்டு. கண்டவுடன் சீ இது எதற்கென்று உதறி எறிந்துவிட்டு வந்தவர்களும் பலர் உண்டு. சிலரைப்பற்றி நமக்கு அக்கறையில்லை. அவர்கள் இன்றில்லாவிடினும் என்றாவது ஒரு நாள் பலரைப் பார்த்து திருந்திவிடுவார்கள் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. நாட்டிலுள்ள அந்தப்பலர் வெகுநாட்களாக எதிர்பார்த்திருந்தார்கள்—எதிர்பார்த்திருந்தது மட்டுமல்ல—எல்லோரும்

ஏ கோபித்த குரலில் 'தென்னகத்துக்கோ' திராவிடத்து முடிசூடாமன்னன், வான வீதியிலே பவனிவரும் பால்நிலவு போன்று, திராவிடத்திலே பவனிவரும் தேன் நிலவாம் மக்கள் தலைவர் **அறிஞர் அண்ணா** அவர்களின் ஏடு ஒன்று ஏன் மலிவு பதிப்பாக வெளியிடவில்லை-அதற்கு எவரும் முன்வராத காரணமென்ன என்று மக்கள் எண்ணத்திலே கேள்வி எழுந்தன! வில்லிலிருந்து விடுபட்ட அம்புபோல— வார்த்தை உருவிலே வந்த அந்த கேள்வி அம்புகள் எம்மை நோக்கியும் பாய்ந்து வந்தன! ''அவாள் ஏடுகளுக்கு சவால்'' என்று அடிக்கடி கூறுவாரே நமது விடுதலை படைவரிசையின் முதல் படை வரிசை தளபதி **கலைஞர் கருணாநிதி** அவர்கள்! முரசொலி பொங்கல் மலருக்கு ஒரு வேடிக்கைச் சொல்லாக உபயோகிப் பார்! அதையே தான் நாங்களும் இங்கு குறிப்பிட விரும்புகிறோம். பரதன் என்ற பெயரிலே 1940ம் ஆண்டு **அறிஞர் அண்ணா** குடியரசு வார இதழ்களிலே தொடர்வாக எழுதிவந்த **''சிங்களச் சீமாட்டி''** இங்கு **பரிசு** என்ற தலைப்பின் கீழ் திகழ்கிறாள். அடுத்து—அழியாத காதல் ஓவியமாக நாட்டிற்கு பயன்பெற குடியரசு இதழ்களில் ''**பரதன்**'' என்ற

புனைப்பெயருடன் எழுதிவந்த **கபோதி புரக்காதல்,** "**காதல்**" என்ற தலைப்புடன் திகழ்கிறது. அடுத்து **அறிஞர் அண்ணா** அவர்கள காஞ்சி மகாநாட்டிலே மக்களுக்கு அளித்த அற்புத கருத்துக்களடங்கிய **சொல்லாரம்** இங்கு "**எண்ணம்**" என்ற தலைப்பின் கீழ் வருகிறது. "**ஜோதி**"—மேலும் இந்நூலுக்கு முத்தாய்ப்பு வைக்கிறது! இதோ உங்கள் கரங்களில் "**பரிசு**" இதை வெளியிட அனுமதிதந்த குடியரசு பதிப்பகத்தாருக்கு எங்கள் இதயங்கனிந்த நன்றியறிதலை தெரிவித்துக்கொள்கிறோம். உடன் ஒத்துழைப்புத்தந்த நண்பர்களுக்கும் எங்கள் அன்பு வணக்கங்கள். இனி உட்செல்லுங்கள் "**பரிசு**" காண.

வணக்கம்.

பதிப்பகத்தார்.

பரிசு

1

"நாகரீக நாட்கள் என நீ கூறுகிருய் பெண்ணே! இன்றுங்கூட நடையிலே, உடையிலே, நாகரீகத்தைக் காண்கிரு‌ேமே தவிர எண்ணத்திலே பழைய விஷம் இருந்த படி தான் இருக்கிறது. உன்னை வலை போட்டு பிடிக்க விரும்பும் சொகுசுக்கார சங்கரன்கூட நாகரீக நாயகனுக நடிக்கிருனே தவிர உள்ளம் பழய எண்ணம் நிரம்பித்தான் இருக்கிறது என்று நான் நினைக்கிறேன்" -என்று மங்கம்மாள் கூறினுள்.

மலர்க்கொடி நகைத்தாள்! அவள் சிரித்த போதுதான் தெரிந்தது, பற்கள் எப்படி இருந்தாள் பாவையருக்கு அழகு தரும் என்பது.

சிவந்த இரு அதரங்களையும் கொண்டு மலர்க்கொடி தனது முத்துப் பற்களை மூடி வைத்தாள். உண்மைதானே! விலையுயர்ந்த வஸ்த்துக்களை சற்று பத்திரமாக வைத்துக்கொண்டுதானே இருக்க வேண்டும். வைர மோதிரத்தை வெல்வெட்டுப் பெட்டியிலும், வரகரிசியை வாசலிலும் போட்டுத்தானே வைப்பார்கள்.

மலர்க்கொடியின் அங்கங்கள் ஒன்றை ஒன்று சண்டைக்கு இழுத்தபடி இருந்தன். கண் சொல்லிற்று "நான் எவ்வளவு அழகாக இருக்கிறேன் பார். கடல் அலைபோல நான் பாய்வதை நோக்கு. அந்த மோகன மிரட்சியைக் காணு" என்று. புருவங்கள் "சும்மா கிட கண்ணே! நான் மதனன் வில்போல் வளைந்து கொடுக்கும் காட்சியன்றோ உன் அழகை எடுத்துக் காட்டுகிறது. நானில்லாவிட்டால் நீ எங்கே. தங்கப் பெட்டிக்கு தகதகப்பு. வைரத்திலே உள்ள ஒளி—இவைபோல கண்ணின் வனப்புக்கு நானன்றோ காரணம்." என்று சொல்லிற்று நெற்றி சும்மா இருந்ததா? நான் பரந்து பளபளத்து பேழை என இல்லாவிடில். இந்தப் புருவமோ, கண்களோ எங்கு தங்கும் என்று வினவிற்று. "என்னைக் கண்டு காதகரும் காமுறும் அளவு உள்ளேன். நானின்றி நல்ல கண்ணோ, புருவமோ, நெற்றியோ, ஏது" என்று கன்னங்கள் கொஞ்சின. "மன்னனுக்கு முடிபோல, மாலைக்கு மணம்போல நான் இருக்கும் வனப்பு என்ன பாருங்கள்" என்று கூந்தல் கூவிற்று. இப்படியே ஒவ்வொரு அங்கமும் ஒன்றை ஒன்று வம்புக்கிழுக்கும் அளவு வனப்புள்ள மங்கை, மலர்க் கொடி.

எனவே அவளால், மனதுக்கும் வாலிபருக்கும் நேரிட்ட போராட்டங்களோ இவ்வளவு அவ்வளவு அல்ல.

எத்தனையோ அதிகாரிகள் தமது பீடத்திலமர்ந்து இந்தப் பெண்ணை எண்ணியபடி, தமது கடமையை மறந்ததுண்டு.

எத்தனையோ இளைஞர்கள், இவளன்றோ வாழ்க்கையின் வழிகாட்டி, இன்பத்தின் இல்லம், இவளன்றி நாம் ஏன் இருப்பது உலகில் என்று எண்ணி ஏங்கியதுண்டு.

மலர்க் கொடியின் மனம், பல்வேறு மாற்றங்களுக்குப் பிறகு, சங்கரன் மீது சென்றது. நிலைத்தது. அவனையேமணப்பது என்று அவளும் எண்ணினாள். அவள் எண்ணத்தை அறிந்ததும் அவன் துள்ளினான். படிப்பு முடிந்து பரீட்சை தேறியதும் மணம். எனவே நாளை எண்ணிக்கொண்டும், ஏட்டைத் தள்ளிக் கொண்டும், "என்று வரும் அந்நாள்"? என்று மந்திரம் ஓதியபடி இருந்தான்.

மங்கம்மாளுக்கு மலர்க்கொடிதான் செல்வம். அந்தப் பூஞ்சோலையில் விளைந்தது அது ஒன்றுதான்! ஒன்றே போதுமே. அது ஒப்பற்ற கொடியன்றோ!

மங்கம்மாளுக்கு நவநாகரீகத்திலே விருப்பம். அதனுடைய மேற்பூச்சுகளில் மட்டுமல்ல. கருத்துக்களில் வேட்கை. தன் வாழ்க்கையிலே நாகரீகக் கோட்பாடுகளை புகுத்தி வாழ்ந்து வந்தனள். மலர்க் கொடியும் அப்படியே.

சங்கரன் பார்வைக்கும், பேசும் போதும் நாகரீக புருஷனாகவே காணப்பட்டான். ஆனால் உள்ளத்திலே வைதீகம் குடி கொண்டிருக்கிறது என்பது மங்கம்மாள் கருத்து. அதனையே தன் மகளுக்கும் எடுத்துக் கூறினாள். மலர்க் கொடி அதனை நம்பவில்லை. நம்பாதுதான் நகைத்தாள்.

சிரிக்கிறாயா? ஏனோ? என்று மங்கம்மாள் கேட்டாள். இல்லையம்மா அவரைக்கூட சந்தேகிக்கிறாயே என்றுதான் சிரித்தேன். நேற்று கூட அவர் தமது கல்லூரி மாணவர் சங்கத்திலே "மூட நம்பிக்கையும் முற்போக்கும்" என்பதைப் பற்றி மிகதீவிரமாகப் பேசினாராம் என்றாள் மலர்க் கொடி.

"பேசலாம், அதை யாரம்மா இல்லே என்று சொன்னது? காரியத்திலே காட்ட வேண்டுமே, அது தானே தேவை, உங்கள் பள்ளி வாத்தியாருக்கு கிரகணம் எப்படி உண்டாகிறது என்பது நன்ருகத் தெரியும். அதை உங்களுக்கு சொல்லியுங் கொடுக்கிருர். ஆனுல் கிரகணத்தன்று அவர் எங்கே இருக்கிருர்" என்று மங்கம்மாள் கூறினுள். மலர்க் கொடி "ஆமாம்! அர்த்த நாரிசுவர ஐயர் அவசியம் குளத்தங்கரைக்குத்தான் செல்வார். மறக்கமாட்டார்" என்ருள்.

"அதைத்தான் சொல்லுகிறேன் நானும்" என்ருள் மங்கம்மாள்.

2

பாழாய்ப்போன சூரியன் ஏன் இப்படிப் பாடுபடுத்துகிருனே தெரிய வில்லேயே. நெருப்பிலே போட்டு வாட்டுவதைப்போல வாட்டி விடுகிருன். கால் கொப்பளித்து விடும்போல இருக்கிறது என்று காலே முதல் மாலே வரை கூறுபவரிடம், அதே சூரியன் மாலேயிலே மறைகிற நேரத்திலே ஒரு அரைமணி நேரம், அளவுகடந்த புகழ்ச்சியைப் பெற்று விடுகிறது. வானத்திலே சூரியன் மறையும் போது கிளம்பும் அந்த செந்நிறம் எவ்வளவு சொகுசு! கண்களுக்கு அது தரும் குளிர்ச்சி எவ்வளவு! காவியக்காரரையும் ஓவியக்காரரையும் அந்த காட்சி தூண்டி விடுகிறது. காதலருங்கூட அவ்வேளேயில் மிக "குஷாலாக" இருப்பதுண்டு. ஏண்டி மாரீ, எடுத்துக்கோ கூடையை அரிவாளேப் போட்டாயா, ஆகட்டும். புறப்படு வீட்டுக்கு" என்று கெஞ்சின படி குப்பன் மாரியுடன், களத்தை விட்டு புறப்படும் நேரம்.

"அதோ பார்! கோடியிலே உம்! அப்பா, வருகிறுர் பார். கூப்பிடு, அப்பா—அப்பா!" என்று தனது குழந்தையைத் தபாலாபீசாக வைத்துக்கொண்டு, வேலையினின்று விடுபட்டு வீடு திரும்பும் கணவருடன், மாதர் கொஞ்சும் வேளை.

அந்த வேளையிலே, பங்களா தோட்டத்திலே, "தம்பீ! ஏன் இந்த கிளாஸ்கோ பிஸ்கட்டு பிடிக்க வில்லையோ" என்று மங்கம்மாள் கேட்க, அதுவரை, மலர்க் கொடியின் கண்களிலே கோடிப் பொருளை கண்டு கண்டு களிப்படைந்து கொண்டிருந்த சங்கரன், "ஏன் பிடிக்காது, எனக்கு ரொம்ப இஷ்டமாச்சே" என்று கூறியபடி ஸ்பூனை தவருக எடுத்து வாய்க்கருகில் கொண்டுபோக, மலர்க் கொடி நகைக்க, மங்கம்மாள் புன்சிரிப்பு கொள்ள, சங்கரன் முகத்திலே அசடுதட்ட வீற்றிருக்கும் காட்சி காணப் பட்டது.

"மாலை நேரத்திலே தம்பி, மனது குளிர்ந்து இருக்குமல்லவா?" என்றுள் மங்கம்மாள். "மனது குளிர்ந்ததோ இல்லையோ, டீ, குளிர்ந்தே போய் விட்டது" என்றுள் மலர்க் கொடி.

ஆமாம்! ஆமாம்! என்று இரண்டிற்கும் பதிலளித்தான் சங்கரன். "நாளைக்கு நாம் மூவரும் நத்தம் ஜெமீந்தாரின் விருந்துக்குப் போக வேண்டும். மாலை ஐந்து மணிக்கெல்லாம் இங்கே வந்து விடு. காரில் மூவருமாகப் போவோம்" என்று மங்கம்மாள் கூறினுள். சரி என்றுன் சங்கரன். பிறகு மூவருமாக பல விஷயங்களைப்பற்றி பேசிக் கொண்டனர். இரவு ஏழு மணிக்குக் கலைந்தனர். மறு தினம்

மாலை குறிப்பிட்ட நேரத்தில் சங்கரன் வந்து சேர்ந்தான். விருந்து நடக்கும் நத்தம் ஜெமீன்தாரின் மாளிகைக்குச் சென்றனர்.

விருந்துக்கு. அநேக சீமான்களும் சீமாட்டிகளும் வந்திருந்தனர். நகை அணிந்திருக்கிறளே அந்த அம்மை தான் அகிலாண்டேஸ்வரி, அதோ சிரிக்கிருள் பார், பல்லிலே கொஞ்சம் தங்க முலாம் கூட இருக்கிறதே, அவள் யார் தெரியுமா, அன்னம்மாள். மணபுரி ஜெமீன்தாரின் மருமகள். அவள் கணவன் சீமைக்குப் போகிருன். அதோ அவர் தான் வைரவியாபாரி வரத ராஜ செட்டியார். அது சுபேதார் சுந்தரம் —டாக்டர் ரகுமாரன்—என்றுவிருந்துக்கு வந்தவர்களை எல்லாம், மங்கம்மாள், தனது மருமகனுக வர இருக்கும் சங்கரனுக்குக் காட்டினுள், வந்தவர்களும், இந்த மூவரையும் அறிந்துகொண்டு, உபசார மொழிகள் உரைத்தனர். விருந்து முடிந்து போகும் நேரத்திலே, ஒரு நடுத்தர வயதுடையவர், மங்கம்மாளை அணுகிவந்தார்.

"சௌக்கியந்தானு சுந்தரம் ? சௌந்தரவல்லி எப்படி இருக்கிருள்" என்று மங்கம்மாள் கேட்டாள். "சுகந்தான் மங்கு! சௌந்திரம் ரங்கூனுக்குப் போனுள். இன்னும் அங்கு நாடகம் நடக்கிறது. முடிந்து தானே வருவாள்." என்ருன் சுந்தரம். இதுதான் என் தங்கை புருஷன் சுந்தரம்-என்று மங்கம்மாள் அவனை, சங்கரனுக்கு அறிமுகப்படுத்தி வைத்தாள். சங்கரன் கை குலுக்கினுன். மலர்க் கொடியை சுந்தரம் தட்டிக் கொடுத்து "ஏ! அப்பா, இவ்வளவு பெரிய பெண்ணுகி விட்டாயா நீ-என்று கேலி செய்தான். கொஞ்ச நேரம் சென்றதும் விருந்துக்கு வந்தவர்கள் வீடு திரும்பினர். நமது கதா பாத்திரங்களும் தத்தமது வீடு சென்றனர்.

வீட்டிற்குப் போனதும் மங்கம்மாள் மலர்க்கொடியைப் பார்த்து, "ஏன் பெண்ணே நாம் சௌந்திரத்தைப்பற்றிப் பேசும்போது, உன் சங்கரன் முகம் எப்படி இருந்தது கவனித்தாயா" என்று கேட்க, மலர்க்கொடி, "ஒரு மாதிரியாகத்தானிருந்தது" என்றாள். மங்கம்மாள், "போகப் போகத் தெரியும்" என்று கூறினாள். உள்ளபடி, சௌந்திரம் என்ற நாடகக்காரியின் அக்காள் மகள் மலர்க்கொடி என்ற சேதி சங்கரனுக்கு விசாரத்தைத்தான் கிளப்பி விட்டது. அவன் அதுவரை எண்ணிக்கொண்டிருந்தது, சிங்களச் சீமாட்டி மங்கம்மாளின் மகள் மலர்க்கொடி என்பதே! அது ஒரு நாடகக்கார குடும்பம் என்பது தெரியாது. சிங்கள நாட்டிலே பல ஆண்டுகள் இருந்துவிட்டு சென்னைக்கு வந்த குடும்பம் என்றும், அதிலே மணம் புரிந்து கொள்வது தனக்குப் பெருமை என்றும் எண்ணினான் சங்கரன். அன்றைய விருந்தின் போதுதான் தெரிந்த விஷயம். நாடகக்காரி சௌந்தரம்! அவள் தமக்கை மங்கம்மாள். இவளும் ஒரு நாடகக்காரி தானே. இவள் மகளா மலர்க்கொடி! ஐயோ! இவளை நான் மணம் புரிந்துகொள்வதா. நாடு நகைக்காதா, கூத்தாடிச் சிறுக்கியை, கொங்கு நாட்டு வேளாளக் குடி பிறந்த நானா மணப்பது? என் குடிப் பெருமை என்னாவது. சிச்சீ! ஐய்யோ! என்று விசாரப் பட்டான் சங்கரன். ஜாதி உணர்ச்சி அவனுக்கு அவ்வளவு இருந்தது.

3

சிங்களச் சீமாட்டி என்று பலராலும் அழைக்கப் பட்ட மங்கம்மாள் நல்ல நாயுடு வகுப்பு. சிறு வயதிலேயே விதவையாகிவிட்டாள். பள்ளியில் படித்துக்கொண்

டிருக்கும்போதே மங்கம்மாளுக்கு பாட்டிலும் நடிப்பிலும் அதிக பிரியம். பள்ளிக்கூடத்தில் நடக்கும் எந்த விழாவுக்கும் மங்கம்மா தான் பாடவேண்டும். மங்கம்மாவும் தங்கு தடையின்றி பாடுவாள். வந்த பிரமுகரும் தட்டிக் கொடுத்துவிட்டு, சாரீரம் ரொம்ப ஜோர்-பாடும் போதே காது குளிருகிறது-என்று சொல்லாமற் போவதில்லே. விதவையாகும் வரையிலே, மங்கம்மாள் பாடுவது கிடையாது. பாட்டு பாடினுல் பதி தன்னைப்பற்றி என்ன எண்ணுகிருரோ என்று பயம். விதவையான பிறகு பிழைப்புக்கு வழியாக பாட்டுத்தான் உதவிற்று. அண்டை அயலார் வீட்டு குழந்தைகளுக்கு நலங்கு பாட்டு கற்றுக்கொடுப்பது. சின்ன சின்ன சிங்காரப்பாட்டு தங்கமே தங்கம், கும்மி, முதலிய பாட்டுகள் கற்றுக்கொடுத்து வந்தாள். ஒரு தினம் ஒரு வீட்டுக் குழந்தைக்கு,

திருவொற்றியூர் தேர்
வருகுது திரும்பிப் பாரடி
கண்ணே திரும்பிப் பாரடி,
உன் மடியில் இருக்கும்
மக்காச் சோளத்தை
தின்னு பாரடி

என்று பாட்டு கற்றுக்கொடுத்துக்கொண்டிருந்த சமயத்தில் அந்த வீட்டுக்கு வந்திருந்த ஒருவர், பாட்டைக்கேட்டு சொக்கிவிட்டார். பலே பேஷ் என்று கொண்டாடினுர். பிறகு மெதுவாக மங்கம்மாளிடம் பேச ஆரம்பித்து, கடைசியில் தமது நாடகக் கம்பெனியில் நடிகையாகச் சேர்த்துக் கொண்டார். மங்கம்மாளின் புகழ் மலேயா, சிங்கப்பூர்

பூராவும் பரவிற்று. பாட்டிலும் நடிப்பிலும் இணையில்லை என்று பெயர் எடுத்தாள் மதனசுந்தரி-அது மங்கம்மாளின் நாடகப் பெயர். பணமும் சேர்த்துக்கொண்டாள். பணத்துடன் பிறந்தது தான் மலர்க்கொடி. இத்தனை சேதியும் சங்கரனுக்கு முதலில் தெரியாது. சிங்கள நாட்டிலிருந்து விட்டு, சென்னை திரும்பிய ஒரு பிரபல குடும்பம் என்பது தான் அவன் முதலில் கேள்விப்பட்டது. சங்கரன், பெற்றோரை இழந்த ஒரு கொங்கு வேளாளன். பெருங்குடி. செல்வம் கொஞ்சம். இருந்தாலும் தனது ஜாதி உயர்விலே மட்டற்ற நம்பிக்கை உண்டு. அந்த உணர்ச்சி உள்ளத்திலே எங்கேயோ தூங்கிக்கொண்டிருந்தது. அன்று விருந்திலே, மங்கம்மாள் ஒரு நாடகக்காரி என்பது தெரிந்த உடனே, உணர்ச்சி பொங்கி மேலிட்டு வெளி வந்தது.

4

சேற்றிலே செந்தாமரை போல, இந்த மலர்க்கொடி, கடைசியில் ஒரு நாடகக்காரியின் மகளாகவா இருக்க வேண்டும்? என்னென்பேன் என் அதிர்ஷ்டத்தை ? அந்தப் பேரழகியை நான் மணந்தால் ஊரார் என்னை நேரில் ஏதும் கூருவிட்டாலும், மறைவாக வேனும் நாடகக்காரியைக் கலியாணம் செய்துகொண்டவன் என்று தானே தூற்றுவார்கள், நான் எங்ஙனம் அதைக் கேட்டு சகிப்பேன்- என்று எண்ணி சங்கரன் விசாரப்பட்டான். மலர்க்கொடியின் அழகு, அவள் மீது அவன் கொண்ட காதல், “ஜாதியாவது பாழாவது சங்கரா, அவளை நீ நேசிக்கிருய், அவள் உன்னை நேசிக்கிருள்-நல்ல ஜோடி ! அவ்வளவு

தானே கலியாணத்திலே கவனிக்கப்பட வேண்டிய விஷயம்'' என்று சொல்லிற்று. சிச்சீ ! கூத்தாடிப்பெண்ணையா மணப்பது ? ஒரு மாடு வாங்குவதானாலும், எத்தனை குறிகள் பார்த்து வாங்குகிறோம்-என்று எச்சரித்தது ஜாதி உணர்ச்சி !

எனவே சங்கரன், மலர்க்கொடியின் புகைப் படத்தைப் பார்ப்பதும், சிந்திப்பதுமாக ஒரு வாரங் காலந் தள்ளினான். அந்த ஒரு வாரமும் அவனுடைய முகத்தைக் காணாத மலர்க்கொடி வாடினாள். மங்கம்மாள் ''என் பேச்சு சரி யெனத் தோன்றுகிறதல்லவா குழந்தாய்-சங்கரன், எப்படி ஒரு டிராமாக்காரியின் பெண்ணை மணப்பது என்று எண்ணுகிறான். பார்! அவனைவிட்டதா அந்த பழங்காலக் கொள்கை'' என்று கூறினாள்.

இவ்வளவு தானா! நான் நாடகக்காரியின் மகள் என்ற காரணத்திற்காக, என் மீது இவர் வைத்திருந்த காதல் எப்படி மாறுவது. என் தாய் நாடகக்காரி என்பதால் எனது இலட்சணத்திலே எது மாறி விட்டது. என் உள்ளத்திலே இவர் என்னதவறு இருப்பதாகக் கருதுகிறார். என்னே ஜாதிப்பித்து! என்று எண்ணி எண்ணி ஏங்கினாள் மலர்க்கொடி.

ஜிலு ஜிலு வென்ற காற்றும், சிறு தூறலும் இருந்தால் தானே பூஞ்சோலை பூத்து நிற்கும் அதைப்போல காதலில் சிக்குண்டவர் முன்பு காதலை ஊட்டியவர், நின்று பேசினால் தானே அவர்களுக்கு இன்பம்.

சங்கரனே, மலர்க்கொடியின் மாளிகைக்கு வருவதில்லை. மலர்க்கொடியோ வாடி வதைந்தாள் பாபம். சங்கரனுக்கு வருத்தந்தான். வாட்டந்தான். ஆனால் அவன் அதனைத் தீர்த்துக்கொள்ள வேறு மார்க்கத்தைத் தேடினன். நண்பர்களிடம் சென்று முறையிட்டான். அவர்களிலே சிலர், "ஒரு டிராமாக்காரிக்காக ஏனப்பா இப்படி ஏங்குகிருய். சும்மா ஒரு பச்சை நோட்டை வீசினல் காரியம் முடிகிறது. இதை விட்டு என்னமோ ஏங்குகிருயே" என்றும், "என்னடா பித்தனுக இருக்கிருய், ஆகட்டும் கலியாணம் செய்துகொள்கிறேன் என்று சொல்லேன். காரியம் முடியட்டுமே. பிறகு பார்த்துக்கொண்டால் போகிறது" என்றும், பைத்தியக்காரப் பேர்வழி, இத்தனை நாளாக ஒரு 'சான்ஸ்' கூட அகப்படவில்லையா?" என்றும் சொன்னர்களே யொழிய ஒருவராவது, "நீ காதலிக்கும் மங்கையை மணக்க ஜாதி ஏன் குறுக்கிடுவது" என்று உண்மையைக் கூறவில்லை.

இன்பம் வேண்டும். ஆனல் அதைப்பெற இடர் மட்டும் வரக்கூடாது; போகம் வேண்டும்-ஆனல் பொறுப்பு இருக்கலாகாது என்ற எண்ணம் அந்த இளைஞர்களுக்கெல்லாம்.

மலர்க்கொடியை தனது காமக்கிழத்தியாக்கிக்கொள்வது என்று சங்கரன் எண்ணினன். மணம் செய்துகொண்டால் தானே ஊரார் ஏசுவார்கள். கூத்தி என்று கொண்டால் என்ன சொல்லப் போகிருர்கள். என்னமோ பிள்ளையாண்டான் சற்று துடியான ஆள். அவள் வலையிலே

விழுந்துவிட்டான். இது சகஜந்தானே, அவனும் சந்நியாசியல்ல அவளும் பத்தினியல்ல என்று சொல்லுவார்கள். அவள் வேறு ஜாதியாச்சே-இவன் வேறு ஜாதியாச்சே அவளை இவன் கூடுவதா என்று கவலைப்படமாட்டார்கள். அது சகஜமானதாகிவிட்டது. ஆனால் அதே மங்கையை கலியாணம் செய்துகொண்டால் மட்டும் ஐயோ என பதைப்பார்கள். ஆகுமா என்று அலறுவார்கள். அது என்ன கோலம் என்று கேட்பார்கள். உலகத்தின் போக்கு இது,

5

மெள்ள மெள்ள சங்கரனின் உள்ளத்திலே கள்ளத்தனமான எண்ணங்கள் எழ ஆரம்பித்தன. ஜாதீய உணர்ச்சி அவனை மலர்க்கொடியை மணக்கக்கூடாது - ஆனாலும் அவளை அடைய வேண்டும் என்ற எண்ணத்தைத் தந்துவிட்டது. எனவே அவன் சாகசமாக தன் காரியத்தைச் சாதித்துக்கொள்ளவேண்டுமெனக் கருதினான். நல்ல காரியம் செய்வதென்றால் அவ்வளவு விரைவில் யோசனைகள் வருவதில்லை. கெட்ட காரியத்திற்கோ பற்பல யோசனைகள் வருவதுண்டு. எனவே சங்கரன் எப்படியோ மிகத்தாழ்ந்த விதமான சூது செய்யவுந் துணிந்துவிட்டான். ஒரு நாள் மாலை மலர்க்கொடியும் மங்கம்மாளும், தோட்டத்திலே உலவிக்கொண்டிருக்கையில் ஒரு ஆள் அங்கு வந்து சங்கரன் தந்ததாக ஒரு கடிதம் தந்தான். மலர்க்கொடி அதைப் பிரித்துப் படித்தாள்,

அன்பே,

எனக்கு திடீரென காய்ச்சல் வந்துவிட்டது. ஆகவே நான் அங்கு வர முடியவில்லை. இன்றிரவு எட்டு மணிக்கு தயவு செய்து என் அறைக்கு வர வேண்டும். கண்ணே, உன்னைக் காணுது எனக்குப் பெரிதும் கவலையாக இருக்கின்றது. தேவீ. உன் தரிசனத்தைக் கொடு. தவருது வா. தவறக்கூடாது. தவறவே கூடாது.

இப்படிக்கு,
உனது காதலன்
சங்கரன்.

என்று எழுதப்பட்டிருந்தது. மலர்க்கொடி கடிதத்தை தாயிடம் தந்தாள். மங்கம்மாள் படித்துவிட்டு "சரி மணி சங்கரன் சூது செய்வான். அவன் மனம் கெட்டுவிட்டது. இனி நான் சொல்வது போல் நட மகளே. உன்னை சங்கரன் கெடுத்துவிடுவான். இங்கே வா" என்று கூறி, நெடு நேரம் ஏதேதோ பேசிக்கொண்டிருந்தாள்.

இரவு எட்டு மணிக்கு, சங்கரன் அழைத்த படி, மலர்க்கொடி சென்ருள். ஆனல் அவனுக்கு முன்பு இருந்த உற்சாகம் இல்லை. சங்கரனின் உண்மைச் சுபாவத்தைத் தெரிந்து கொள்வது என்ற யோசனையிலேயே அங்கு சென்ருள்.

சங்கரன், அவளுக்காகக் காத்துக் கொண்டிருந்தான். மலர்க் கொடியைக் கண்டதும் நகைத்தான். மயிலே, குயிலே, மானே தேனே என கொஞ்சினுன். மலர்க் கொடி பழையபடி சிரிக்க வில்லை. முன்பு போல பேசவில்லை.

இவ்வளவும் வெளிவேடந்தானே என்று எண்ணும் போது அவளுக்கு துக்கம் பொங்கி எழுந்தது. அதனை அடக்கிக் கொண்டு மங்கை, பேசினுள். "உடம்பு காய்ச்சல், என்று எழுதினீர்களே. உள்ளத்திலே காய்ச்சல், உடம்பில் அல்ல. உம்! சரி உள்ளத்து காய்ச்சலுக்கு காரணம் யாதோ ?

"உல்லாசி! உன்னுல் வந்ததுதான். வா இங்கே. என் பக்கத்தில் அமரு. எதோ, ஒரு முத்தம். ஒரே ஒரு முத்தம் கொடு பார்ப்போம்."

பலே! சங்கர், இவ்வளவு தூரம் வளர்ந்து விட்டதா உமது சாகசம், திடீர்வளர்ச்சியாக இருக்கிறதே.

காதலி! இதிலே சாகசமேது. உன்னைக் கண்டால் என் மனம் அவ்வளவு பூரிக்கிறது. ஒரு முத்தம் தாராயா? நான் யார்? உன் காதலன் அல்லவா!

" நீர் யார்! ஒரு வேளாளர்! அழகுள்ள மங்கை எவளேனும் அகப்பட்டால் அவளைச்சேர என்னும் சொகுசுக்காரர்."

கோபமேன் பெண்ணே!

கோபம் ஏன் உள்ளபடி! ஒரு நாடகக்காரியின் மகள் கோபிக்கலாமா! அதிலும் ஒரு வேளாள இளைஞர், படித்தவர், முத்தம் கொடு என்று கேட்பதே அவளுக்கு பாக்கியமல்லவா, கிடைக்குமா ? அவளுக்கு அவ்வளவு பெரிய பாக்கியம்!

மலர்க் கொடி நீ ஏன் ஏதோ சந்தேகங்கொண்டு பேசுகிருய். நீ நாடகக் காரியின். மகளானுலென்ன. உன்னைத்

தானே நான் மணம் செய்து கொள்ளப்போகிறேன். என் காதலியின் கரத்தைப் பிடித்திலுத்து கட்டில் மீது தூக்கிப் போட்டு முத்தமிட எனக்கு உரிமையில்லையா. முடியாதா என்றால்—

முடியும் நான் ஏமாந்தால்! என்று சொல்லிக்கொண்டே மலர்க் கொடி, சங்கரன் தாடையிலே வைத்தாள் ஒரு அறை. அதே நேரத்திலே அவள் கண்களிலே நீர் ததும்பிற்று. மங்கம்மாளும் அந்த அறைக்கு வந்தாள். "அம்மா! நான் ஏமாந்தேன்—இவனை நம்பினேன். இவன் கடைசியில் என்னை வெறும் காமப் பொருளாகக் கருதுகிறான். நீ சொன்னது முற்றிலும் உண்மை. என்னை இந்த இடத்தை விட்டு அழைத்துக் கொண்டு போய்விடு. என்று அழுது, தாயின் மார்பிலே சோர்ந்து சாய்ந்தாள். மங்கம்மாள் புன்னகையுடன், திகைத்து உட்கார்ந்து கொண்டிருந்த சங்கரனை உற்று நோக்கினாள். "சங்கரா! ஜாதியை நீ காப்பது போலத்தான் நானும் என் மகளைக் காப்பேன். மலர்க் கொடியும் தன் மானத்தைக் காப்பாள்" என்று கூறினாள். தாயும் மகளும், வீடு சென்றனர். சங்கரன் சோர்ந்து படுக்கையில் சாய்ந்தான். தன் சாகசம் தோற்றதே, சாயம் வெளுத்ததே, மலர்க்கொடியை இழந்தோமே என்று.

சங்கர்! என்ன என் யோசனைப்படி முடித்து விட்டாயோ. மலர்க் கொடி வரும்போது நான் பார்த்தேனே—என்று கேட்டான், சங்கரனுக்கு யோசனை கூறிய சதாசிவம், மறுநாள் காலை சதாசிவம்!

முழுத்தோல்வி! அந்த மங்கா என்னைப்பற்றி மலர்க் கொடியிடம் ஏதேதோ கூறி விட்டாள். இனி என்னால் அவளை அடைய முடியாது. கலியாணம் செய்து கொள் வதானாலும் நடக்காது. என் மீது அவர்களுக்கு அளவு கடந்த வெறுப்பு உண்டாய் விட்டது என்றான் சங்கரன்.

நான்சென்ஸ்! அப்படித்தானிருக்கும் முதலிலே. பாபம்! நீ கலியாணம் செய்து கொள்ளுவாய் என்று நம்பி னார்கள். இப்போது தானே விஷயம் தெரிந்தது. அதனால் தான் ஆத்திரம் அவர்களுக்கு. போகப் போக தணிந்து விடும். நீ மட்டும் சற்று பிகுவாக இருக்க வேண்டும். ஏதோ சோகமடைந்தவனைப்போல இருந்தால் அவர்கள் வழிக்கு வரமாட்டார்கள் என்றான் சதாசிவம்.

நண்பா! எனக்கு ஒரு பயமிருக்கிறது. வேறு யாராவது மலர்க் கொடியை மணம் புரிந்து கொண்டால் என்ன செய்வது. பிறகு நான் என்னாவது என்றான்.

அதற்கெல்லாம் தக்க ஏற்பாடுகள் செய்கிறேன். எழுந்திரு, வெளியே போய் சற்று ஜாலியாக இருப்போம். உன் மனமும் சாந்தியடையும். வா போவோம் என் றழைத்தான் சதாசிவம்.

எங்கே போவது?

ஜீவா வீட்டுக்கு.

ஜீவாவா! யாரது?

வந்து பார்! உன் மலர்க்கொடி, கிலர்க்கொடியை எல்லாம் தூக்கித் தூரப் போட்டு விடுவாள். மந்திரசாமித் தெருவு தாசி ஜீவா தெரியாதோ உனக்கு.

சிச்சீ! நான் வரமாட்டேன். யாராவது கண்டால் ஏதாவது சொல்வார்கள்.

சொன்னார்கள்! வா-போவோம்-என்று வலிய, சங்கரனை அவன் தோழன் தன் கூத்தி வீட்டுக்கு அழைத்துச் சென்றான்,

6

ஜீவா ஜடைவாரிக் கொண்டிருந்தாள். மேற்பூச்சு வேலைகள் இல்லை. அது மாலையிலே நடக்கும். இருந்த போதிலும் பரவாயில்லை. கண்ணுக்கு காட்சியாகத் தானிருந்தாள். ஆனாலும் அதனை உணர்ந்தவர் அநேகர் என்பது, ஜீவாவின் கன்னங்களிலே பளபளப்பு குறைந்ததிலிருந்தே தெரிந்து கொள்ளக்கூடும்,

சங்கர்! இதோ பார் என் ஜீவாவை. மலர்க்கொடி மலர்க்கொடி என்று அழுகிறாயே தம்பீ, இதோ பாரப்பா பார்! என்றான் சதாசிவம், சங்கரனுக்கு கொஞ்சம் வெறுப்பாகத் தானிருந்தது. என்னடா இது இவ்வளவு பச்சையாகப் பேசுகின்றானே என்று. ஒரு மாதின் எதிரிலே அவளைவிட மற்றொருத்தி அழகு என்று சொல்வதைப் போல ஆபத்துண்டோ! சொல்லப்பா! யார் அழகு? என் ஜீவாவா-மலர்க்கொடியா? என்று மறுபடி கேட்டான் சதாசிவம்.

உனக்கு ஜீவா அழகு. எனக்கு மலர்க்கொடி-என்று சமரசமாகக் கூறினான் சங்கரன்

எந்த மலர்க்கொடியைப்பற்றிப் பேசுகிறீர்கள்? அந்த நாடகக்காரி பெண்ணு-என்று ஜீவா கேட்டாள். ஆமாம் என்ருன் சதாசிவம்.

அவள் அழகுதான்! டிராமா காரிகள் கூட அழகில்லா மல் இருப்பார்களா? அவர்களுடைய பார்டர் சேலேயும், கர்ல் கூந்தலும், தளுக்கும் குலுக்கும், எங்களுக்கு எங் கிருந்து வரும். நாங்கள் பரம்பரையாக பார்த்தசாரதி கோயிலுக்கு, 'முத்திரை'. ஏதோ ராமா, கோவிந்தா, கிருஷ்ணு என்று காலங்கழிப்பது என்று ஜீவா தன் பெரு மையைப் பேசினுள்.

கேள் ஜீவு கதையை! அந்த கூத்தாடி சிறுக்கியை கலியாணம் செய்து கொள்ள வேண்டுமாம் இவர். நான் மட்டும் இல்லாவிட்டால், அந்த மங்கா, மெதுவாக என் நண்பனை மாட்டவைத்து விட்டிருப்பாள். ஆசாமி தலே கால் தெரியாமல் ஆடினுர்-என்ருன் சதாசிவம்.

சங்கரன் "இதேது தொல்லேயாகப் போச்சு. நான் தான் விட்டுவிட்டேனே அந்த எண்ணத்தை" என்று கூறினுன்.

அது இல்லே-என்ன அவள் அவ்வளவு அழகு. அவளேக்கண்டு இவர் எப்படி சிக்கிக்கொண்டார். இவரைப்பார்த்தால் ராஜா போலே இருக்கிறதே. அவள் என்ன-ஏதே சிகப்புத்தோலும், நாரும் நரம்புமாக இருக் கிருள். அவ்வளவு அழகா அவள்-என்று ஜீவா, சங்கரனேக்

கேட்டாள். என் கண்களுக்கு.........என்று இழுத்தாற் போல் பதில் சொன்னுன் சங்கரன்.

ராஜா மெச்சினது ரம்பை - என்றுள் ஜீவா. சம்பாஷணை வளர்ந்தது. கடைசியிலே ஜீவா மலர்க்கொடியைப் பற்றி சொல்லாத "சொட்டு" இல்லை. அவள் கண் திருட்டுக் கண். கை கால்கள் நோயாளிக்கு இருப்பதைப் போல இருக்கிறது. தலை மயிர் ஆயிரத்தெட்டு கோணல். ரொம்ப கர்வம். நடப்பது அசல் டிராமா நடை. சிரிப்பு, வெறும் சூது-என்று ஜீவா அடுக்கடுக்காக அடுக்கினுள்.

சங்கரன் அவ்வளவையும் கேட்டுக்கொண்டே இருந்தான்.

ஒரு வாரத்துக்கு முன்பு மட்டும், வேறு யாரேனும் மலர்க்கொடியைப்பற்றி ஜீவா சொன்னதைப் போல் ஒரு வார்த்தை சொல்லியிருந்தாலும்,சங்கரன் துள்ளியிருப்பான். இப்போது அப்படியில்லை.

முன்பு மலர்க்கொடி காதலி! இப்போது டிராமாக்காரி எனவே தன் எதிரிலேயே அவள் இழிவாகப் பேசப்பட்டும், காது கொடுத்துக் கேட்டுக்கொண்டும், இடையிடையே சிரித்துக்கொண்டும் இருந்தான் சங்கரன்,

7

அன்று ஆரம்பமான பொழுது போக்கு, அன்றோடு நின்று விடவில்லை. ஜீவா வீட்டுக்கு தினமும் இரு தோழரும்

போக ஆரம்பித்தனர். அங்கு தான் மாலை வேளைகளிலே "டீ" பல நாட்கள் அங்கு விருந்து, மேலும் கொஞ்ச நாட்களுக்குப் பிறகு, சதாசிவம் வராவிட்டாலும் சங்கரன் போவது என்ற முறை வளர்ந்து முடிவிலே, ஜீவாவே சங்கரனின் வைப்பாட்டியாகவும், சதாசிவன் சங்கரனின் விரோதியுமாகிவிட்டான். பரீட்சையில் சங்கரன் தோற்ருன். சதாசிவம் ஊர் பூருவும் சங்கரன் மீது பழி தூற்ற ஆரம்பித்துவிட்டான். எங்கு பார்ப்பினும், சங்கரன் பேச்சுதான்.

இப்படியா இந்தப் பிள்ளை கெட்டுவிடவேண்டும். ஐயோ பாபம். ஏதோ படித்தான். கொண்டான். கடைசியில் ஜீவா வீட்டிலேயே குடி புகுந்துவிட்டானமே-என்று ஊரார் பேசிக்கொண்டனர்.

மலர்க்கொடிக்கும் இந்தச் சேதி எட்டிற்று. மிக மனம் வருந்தினுள். என் செய்வாள் மங்கை. ஏங்கினுள் தன் காதலனுக்கு நேரிட்ட கதியை எண்ணி.

மலர்க்கொடியின் மனம் புண்ணுனது தெரிந்த மங்கம்மாள் சிலகாலம் இந்தியாவை விட்டு வெளி நாடு சென்று வருவது என்று தீர்மானித்தாள். சிலோனுக்குப் போக ஏற்பாடு செய்துவிட்டார்கள்.

புறப்படுவதற்கு முன்னுல் மலர்க்கொடிக்கு எப்படியாவது சங்கரனைக் கண்டு பேசிவிட்டுப் போகவேண்டுமென்ற எண்ணம்.

ஜீவா வீட்டுக்கு ஆள் விட்டார்கள். "சங்கரன் ஆகட்டும் நாளைக்கு வந்து பார்க்கிறேன்" என்று கூறி முடிப்பதற்குள், அவர் அங்கே வரமாட்டார். ஏன் அந்த சிறுக்கி தான் இங்கு வருவது தானே, வந்தால் அவள் கௌரவம் குறைந்துவிடுமா என்ன ? என்றாள் ஜீவா.

வந்த வேலையாளுக்கு சங்கரன் ஒரு காலத்தில் மலர்க் கொடியிடம் எவ்வளவு அன்பு வைத்திருந்தான் என்பது தெரியும். எனவே அவன் ஜீவாவின் துடுக்கான பேச்சுக்கு சங்கரன் என்ன பதில் கூறுவானோ-என்று எதிர்பார்த்தபடி இருந்தான். ஜீவா தயாரித்த கிராமபோன் பிளேட்டை, சங்கரன் பாடினான் "ஆமாம், அவ்வளவு அக்கரை இருந் தால் அவளை இங்கு வரச் சொல்லு" என்று கூறினான்.

8

மலர்க்கொடியும் மங்கம்மாளும் சிலோனுக்குச்சென்று பல மாதங்களாகிவிட்டன. சங்கரன் அவர்களை மறந்தும் விட்டான். ஜீவாவிடம் ஜீவனைக் கொடுத்ததுடன் நிற் காது மேலும் பல தொல்லைகளைத் தானாக வரவழைத்துக் கொண்டான், பெண்களிடம் அவனுக்கு அதுவரை இருந்து வந்த கூச்சம் பறந்துவிட்டது. ஜீவாவுக்குத் தெரிந்த பெண் களிடமெல்லாம் வெகு தாராளமாகப் பழக ஆரம்பித்தான். அது ஜீவாவுக்குக் கொஞ்சம் கஷ்டந்தான். தாசி என்ற போதிலும் அவள் ஒரு பெண்ணல்லவா ! அதிலும் இவன் மீது அவளுக்கு கொஞ்சம் இஷ்டமுங்கூட. சொத்து போய்,

பரீட்சை போய் வேலையின்றி கிடந்த சங்கரனின் வீண் அதிகாரத்தைக்கூட ஜீ வா பொறுத்துக்கொண்டு தான் இருந்தாள்.

இன்னும் ஒரு மாதத்தில் வேலை வரப்போகிறது. அதுவரை பல்லைக்கடித்துக் கொண்டிருக்க வேண்டும். என்ன செய்வது ஜீவா, உன்னாலே நான் கெட்டேன். என்னாலே நீ கெட்டாய் என்பான் சங்கரன்.

எனக்கென்னமோ உங்கள் போக்கே பிடிக்கவில்லை. நல்ல குடும்பத்திலே பிறந்து, செல்வமாய் வளர்ந்து, படித்து கடைசியில் இப்படி கெட்டுவிட்டீர்கள். என்னமோ என் மீது ஆசைவைத்து வந்தீர்கள். அத்தோடு நின்றீர்களா? ஏதோ வேலைபார்த்து சம்பாதித்து எனக்கு கொடுத்து, நாம் குடியும் குடித்தனமுமாக இருக்கக் கூடாதா? போன மாதத்திலே "செயின்" மார்வாடி கடைக்குப் போச்சு. இந்த மாதத்திலே இந்த வளையல் போகப் போகிறது-என்று அழுதபடி சொன்னாள் ஜீவா.

அழாதே ஜீவு நான் நிச்சயம் அந்த நகைகளையெல்லாம் மீட்டுக் கொடுக்கிறேன். அடுத்த மாதம் வேலை நிச்சயம் கிடைக்குமாம். எதிர் வீட்டிலே இருக்கிறாரே எதிராஜ நாயுடு-அவர் சொன்னார் என்றான் சங்கரன்.

9

மறுநாள் ஜீவா, எதிர்வீட்டு எதிராஜ நாயுடுவை அழைத்துக் கேட்டாள். அவர் ஒரு சீமைச் சாராயக்

கம்பெனியிலே வேலே பார்த்துக் கொடுப்பதாகச் சொன்னுர். ஜீவா தனது கஷ்டங்களே அவரிடம் கூறி "எனக்கு அவரை விட்டால் கதி இல்லே. அவரும் உற்ருர் உறவினரை எல்லாம் விட்டு என்னிடமே வந்து விட்டார். ஏதோ நீங்கள் இந்த உதவி செய்தால் மெத்த புண்ணிய முண்டு" என்று வேண்டிக் கொண்டாள். "ஆகட்டும்" என்று கூறிவிட்டுப்போனுர் அவர். எதிராஜலு நாயுடுவை ஜீவா கூப்பிட்டுப் பேசிய சேதி சங்கரனுக்குத் தெரிந்தது. அவ்வளவுதான். அவனுக்கு கோபம் பொங்கிவிட்டது. குதித்தான், கோபித்தான். காட்டி விட்டாயே ஜாதி புத்தியை என்ருன். "ஏண்டி" ஜீவு, மெள்ள எதிர் வீட்டு நாயுடுவை இழுக்கப்பார்க்கிருயோ-ஜாக்ரதை! அப்படி ஏதாவது நடந்தால், கொலே நடக்கும் இங்கே" என்று கூறினுன் சங்கரன். உனக்காகத்தானே நான் அவரைக் கூப்பிட்டுப் பேசினேன்-என்று வாதாடினுள் ஜீவா.

தெரியும் உன் சால் ஜாப்பு. எனக்காக வாதாடினுளாம். புது மாப்பிள்ளே தேடுகிருயோ.

இதென்ன சனியனு போச்சே. நான் ஏன் தேடுகிறேன்.

நீலி! அப்படியே உருகுகிருள். என்னேக் கெடுத்தது மன்றி............

யார் யாரைக் கெடுத்தது. ஏன் சும்மா பேசுகிறீர்கள். உன்னுலேதான் ஊரார் சொன்ன சொல்லேயும் கேளாது, மேலே இருந்த நகைகளே விற்று உன் இழவுக்குப் போட்டேன்.

ராஸ்கல்! என்னடி ஏதேதோ பேசுகிருய். உதைப்பேன்.

சும்மா நிறுத்து! உதைக்கமாட்டீர்களா என்ன.

இந்த சம்பாஷணையின் காரம் அதிகமாயிற்று. சங்கரன் ஜீவாவை அடிக்கலானுன். அவள் ஐயோவென அலறினுள். தெருவில் போவோர் வருவோர் நின்றனர். கும்பல் கூடி விட்டது. அக்கம் பக்கத்து வீட்டார் வந்து சமாதானம் சொன்னுர்கள். அன்று தான் ஒரு விஷயம் விளங்கிற்று ஜீவாவுக்கு. அதாவது சங்கரன் குடிக்கிருன் என்பது.

10

கெட ஆரம்பித்து விட்டால் அதற்கு ஒரு எல்லையுண்டோ. ஜீவாவின் மனம் கொதிக்கும்படியும், சங்கரன் நடந்து கொள்ள ஆரம்பித்தான். நாயுடு சொன்னபடி வேலைபார்த்துக் கொடுத்தார். வந்த சம்பளத்திலே பாதி வேறு சாராயக் கடைக்குச் சென்றது. பாதி பார்வதி வீட்டுக்குப் போயிற்று. பார்வதி ஜீவாவுக்குத் தெரிந்தவள் எவ்வளவோ வற்புறுத்திக் கூறினுள் சங்கரனைத் தன் வீட்டுக்கு வரவேண்டாமென்று. கேட்கவில்லை சங்கரன். உருட்டி மிரட்டி அவளையும் சிநேகம் பிடித்துக் கொண்டான். ஜீவா அந்த சமயத்தில் கர்ப்பம். குழந்தை பிறந்து இரண்டொரு மாதம் ஆவதற்குள் சங்கரனை வேலையினின்றும் நீக்கிவிட்டார்கள். அதுமட்டுமல்ல-கணக்கிலே தகருறு என வழக்கு தொடுத்து விட்டார்கள். போலீஸார் தேடிக்

கொண்டிருக்கும் சமயத்தில், ஜீவாவுக்கு கடுமையான ஜுரம். வீடு சோதனை போடப்பட்டது. சங்கரனை ஒளித்து வைத்துக் கொண்டே ஜீவா போலீசை ஏய்க்கிருள் என எண்ணிப் போலீசார் அவளைக் கண்டித்துப் பேசினர்கள், தூற்றினர்கள், இவ்வளவு தொல்லைகளுக்கிடையே வறுமை அவளை வாட்டி விட்டது. சங்கரனே ஊரை விட்டு ஓடி விட்டான். ஜுரமோ குறைய வில்லை. குழந்தையோ கோடி சூரியப் பிரகாசமாக இருந்தது. அதைக் காணக் காண, ஐயோ! எப்படி இதை விட்டு நான் பிரிவேன். என் கண்ணே, செல்வமே! கட்டிக் கரும்பே,-உன்னை விட்டுப் போவதா-என்று புலம்பினள் ஜீவா. ஜுரம் போக வைத்தியவசதி செய்து கொள்ள மிச்சம் மீதி இருந்த சொத்தும் போய்விட்டது. கடைசியில் பிழைப்பது கஷ்டம் என டாக்டர் கூறிவிட்டார். ஜீவாவுக்கு என்ன செய்வதெனத் தோன்றவில்லை.

பார்வதிக்கு ஆள் விடுத்தாள். பார்வதி வந்ததும் குழந்தையை அவள் வசம் ஒப்புவித்தாள். இரண்டொரு நாளிலே ஜீவா இறந்தாள் பாபம்!

11

இந்த விஷயமெல்லாம் கேள்விப்பட்ட சங்கரன் உள்ள படி வருத்தப்பட்டான். ஆனல் தலையை வெளியே காட்டுவதற்கில்லை. கிராமத்திலே தனது மாமன் வீட்டில் ஒளித்துக் கொண்டு, வழக்கை சமரசத்துக்குக் கொண்டுவர முயற்சித்தான். அது முடிந்த பிறகுதான் வெளியே வர முடியும்.

சங்கரனின் மாமன், ரிடையர்டு பென்ஷனர். அவர், வழக்கை ஒரு சமரச முடிவுக்குக் கொண்டு வந்தார். கம்பெனிக் காரருக்குப் பணம் கொடுத்து பைசல் செய்து விட்டார். சங்கரன் 'இந்தப் பூனையும் பால் குடிக்குமா' என்றபடி மாமன் வீட்டிலேயே இருந்து வந்தான். இனியாவது புத்தியாகப் பிழை. எனக்கும் வேறே பிள்ளை குட்டி கிடையாது. என் சொத்து உனக்குத்தானே சொந்தம் என்று கூறினர். சங்கரனுக்கும் கொஞ்சம் கொஞ்சமாக புத்தி வந்தது. மாதத்துக்கொருமுறை பார்வதி வீடு சென்று குழந்தையை பார்த்து விட்டு வருவான். சங்கரனின் மாமன், அதற்காக ஒன்றும் குறை சொல்வதில்லை, இவ்வளவாவது நல்லபடி திரும்பினனே என்ற சந்தோஷம் அவருக்கு.

12

மலர்க்கொடி சிலோனில் 'நர்சு' வேலைக்குச் சென்று விட்டாள். சங்கரன் தன்னைக் கைவிட்டதால் மனம் உடைந்தது மாறவே இல்லை, உயிரைக் கொடுத்து விடுவதாகச் சொன்ன சங்கரனே தன்னைக் கைவிட்டு விட்ட போது, வேறு யாரைத்தான் நம்புவது அவள். மலர்க்கொடி நர்சு வேலைக்காகப் பயிற்சிபெற தாயிடம் அனுமதி கேட்டாள். தாயும் கொடுத்தாள். சில ஆண்டுகள் சிலோன் வைத்தியசாலை யொன்றில் அவள் நர்சாக இருந்தாள். இடையே சங்கரன் சென்னைக்கே திரும்பவும் சென்று ஒரு பிரபல மருந்து கம்பெனியில் கிளார்க்காக

வேலைக்கு அமர்ந்தான். அந்த சமயத்தில்தான் அவனுக்கு, சிலோன் வைத்தியசாலையில், மலர்க்கொடி 'நர்சாக' இருப்பது தெரிய வந்தது. ஏதோ சில மருந்துகள் தேவை என சிலோன் வைத்தியசாலைக்காக மலர்க்கொடி எழுதிய கடிதமொன்று சங்கரனுக்குச் சிக்கிற்று. அதைக் கண்டதும் அவனுக்கு முன்னுள் நினைகள் யாவும் ஒன்றன் பின் ஒன்ருக வந்தன. தன்னைத் தானே கெடுத்துக் கொண்டதை எண்ணி வருந்திஞன். சிலோன் "நர்சு" தான் காதலித்த மலர்க்கொடி தான் என்பதைத் தெரிந்து கொண்டான். அவனுக்கு-பிறகு, எப்படியேனும் மலர்க்கொடியைக் காண வேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. சிலோனுக்குச் செல்வதென தீர்மானித்தான். நேரே தன் மாமன் வீடு வந்தான். தன் மனதில் ஒன்றைக் கூட ஒளிக்காது கூறிஞன்.

நாம் கொங்கு வேளாளக் குடியில் பிறந்து நாடகக்காரியை மணப்பதா என்று எண்ணியே, என் இன்பத்தை விடுத்தேன் என்ருன் சங்கரன்.

நாடகக்காரியை மணம் செய்து கொண்டால் நாடு கேலி செய்யும் என்று எண்ணிஞயே-பிறகு நடந்த சம்பவங்களைப் பற்றி அவ்விதம் எண்ணிஞயோ என்று கேட்டார் மாமன்.

அவைகள் வெளிக்கு வராது என்று எண்ணினேன். அப்படி வரினும், அதைப் பற்றி அவ்வளவு கேவலமாகக் கருதமாட்டார்கள், கலியாணம் செய்து கொண்டால்

தான் ஜாதி கெட்டவன் எனச் சொல்லுவார்கள் என்று எண்ணினேன். அது தான் நான் செய்த தவறு என்றான் சங்கரன்,

சிலோனுக்கு நீ போக வேண்டாம். மலர்க்கொடியும் மங்கம்மாளும் இங்கு வரும்படி நான் ஏற்பாடு செய்கிறேன். மலர்க்கொடி, வேறு யாரோ என்று எண்ணவேண்டாம். அவள் என் மகள்தான். மங்கம்மாளை நான் காதலித்து அவளோடு வாழ்ந்து வந்தேன். ஆனால் உன்னைப் போல தான் நானும் ஊருக்கஞ்சி விஷயத்தை வெகு இரகசியமாக வைத்துக் கொண்டிருந்தேன். மங்கா நாடகத்திலே சென்று விட்டாள். நான் அவளை விட்டுப் பிரிந்தேன். ஆனால் எங்களிருவருக்கும் மனக்கசப்பு கிடையாது.

என் பொருட்டு மங்கா, எதையும் தியாகம் செய்யத் தயாராக இருந்தாள், நான் மணம் செய்துகொள்ள மறுத்த போது மங்காதான், என்னை வற்புறுத்தினாள், நானும் அவளும் பிரிந்தோம், அப்போது மலர்க்கொடி ஐந்து வயதுக் குழந்தை, பிறகு அவர்களைப்பற்றி நான் அக்கரை எடுத்துக் கொள்ளாதிருந்தேன், நான் "சிங்களச் சீமாட்டி" என்று எழுதிய நாடகத்திலே எங்கள் இருவரின் காதல் சம்பவத்தை எழுதியிருந்தேன். அதை படித்து மங்கா பெரும் பெயரெடுத்தாள்-என்று சங்கரனின் மாமன் தன் சுய சரிதையைச் சொன்னபோது சங்கரன் ஆச்சரியப்பட்டான்,

ஆனால் மலர்க் கொடிக்கு இன்னேரம் மணம்........ என்று கேட்டான் சங்கரன்.

இல்லை! மணம் ஆகவில்லை. நான் அதைப்பற்றி விசாரித்து வைத்துள்ளேன். அது மட்டுமல்ல சங்கரா, உன் விஷயம் பூராவும் எனக்குத் தெரிந்ததும், மலர்க்கொடிக்கு அவைகளை விளக்கி எழுதி விட்டேன். அடுத்த கப்பலில் சிங்களச் சீமாட்டியும் அவளுடைய தங்கப்பதுமையும் வந்து சேருவர்-என்றார்.

அதைப்போலவே தாயும் மகளும் வந்தனர். மலர்க்கொடி ஒரே புன்சிரிப்பால் சங்கரனை மன்னித்துவிட்டாள். மணம், வெகு எளிய முறையிலே நடந்தது. பார்வதியிடம் வளர்ந்து வந்த குழந்தை குமுதா, சங்கரன் வீட்டில் சேர்ப்பிக்கப்பட்டது. எல்லோரும் ஒரே குடும்பமாக இருந்தனர். ஊரார் ஏதேதோ பேசினார்கள். ஆனால் அந்தக் குடும்பத்தின் ஆனந்தத்தை ஊரார் என்ன அறிவார்கள். அளவு கடந்த ஆனந்த வாழ்வு வாழ்ந்தனர் அவர்கள்.

காதல்?

ஜல் ஜல் ஜல ஜல! ஜல் ஜல் ஜல ஜல!

"உம்! கொஞ்சம் வேகமா நட, வேகற வெய்யில் வர்ரதுக்குள்ளே ஊர் போவோம்..."

ஜல் ஜல், ஜல ஜல, ஜல் ஜல், ஜல ஜல,

"சும்மா போவ மாட்டியே, நீ, உன் வாடிக்கையே அது தானே? சவுக்கடி கொடுத்தால் தானே போவே... உம்......

"வேண்டாமப்பா, பாவம், வாயில்லா பிராணி, வெயில் வேளை. போகட்டும்மெதுவா, அடிக்காதே, என்று வேதவல்லி சொன்னாள், மாட்டை சவுக்கால் சுரீல் என அடித்து வாலைப் பிடித்து ஒடித்து வண்டியை ஓட்டியவனைப் பார்த்து, மணி காலை பதினொன்று ஆகிறது. ஒரு சாலை ஓரமாக வண்டி போகிறது. வண்டியிலே இரு மாதர், தாயும் மகளும், தலைக் குட்டையும், சந்தனப்

பொட்டும், பொடி மட்டையுடன் ஒரு ஆடவர், வேத வல்லியின் புருஷர், வீராசாமிபிள்ளை, ஆகமூவரும் செல்லு கின்றனர். வண்டி மாடு செவில நிறம், ஓட்டுகின்ற ஆளும் சிகப்பு, மீசை கருக்கு விட்டுக் கொண்டிருக்கிற பருவம். "என்னமோம்மா, நீங்க பாவ புண்ணியத்தைப் பாக்குறீங்க. மாட்டை அடிச்சு ஓட்டாதீங்கன்னு சொல் றீங்க. சில பேரே பார்க்கணுமே; என்னடா, மாடு நகருது, அடிச்சு ஓட்டேன். கொடுக்கிறது காசா மண்ணு என்று கோபிப்பார்கள்" என்ருன் வண்டிக்காரன்.

"சிலபேரு அப்படித்தான். ஓட்டமும் நடையுமா போனுக் கூட, பன்னிரண்டு மணிக்குள்ளே போயிடலாமே மாரிக்குப்பத்துக்கு, உச்சி வேளை பூஜைக்குப் போய்ச் சேர்ந் துடலாமே" என்று வேதவல்லி கூறினுள்.

"அதுக்குள்ளே பேஷா போகலாம். அடிச்சி ஓட்டினு அரைமணிலே போகலாம். எதுவும் அப்படித்தான். அடிச்சி ஓட்டாத மாடும், படிச்சி வழிக்கு வராத பிள்ளை யும் எதுக்கு உதவப் போவுது. என் சேதியைக் கேட்டா சிரி சிரின்னு சிரிப்பிங்கோ, நான் படிச்சதும், பிழைச்சதும் அப்படி" என்ருன் வண்டியோட்டி.

"நீ படிக்கவே இல்லையாப்பா" என்று கேட்டாள் வேதவல்லி. "படிச்சேன், ஆருவது வரையிலே. அதுக்கு மேலே ஆட்டமெல்லாம் ஆடினேன். இப்போ மாட்டு வண்டி ஓட்டுற வேலை தான் கிடைச்சுது. அதுவும் நம்ம

சிநேகிதர் ஒருவர் காட்டினர், இந்தப் பிழைப்பையாவது- உம்! எல்லாம் இப்படித்தான். அந்த சினிமாவிலே கூட பாட்ருங்களே, "நாடகமே உலகம், நாளை......" என்று மெல்லிய குரலிலே, பாடலைப் பாடினன் பரந்தாமன்—அது தான் அவன் பெயர். நாடகமே உலகத்திலிருந்து "மாயப் பிரபஞ்சத்துக்கு" வந்தான். அதிலிருந்து "ராதே உனக்குக் கோபம் ஆகாதடி" என்று ஆரம்பித்தான். வீராசாமி கனைத்தார், "தம்பி, பாட்டு பிறகு நடக்கட்டும். ஓட்டு வண்டியை" என்ருர். வேதவல்லி "சாரதா! சாரதா! என் னம்மா? மயக்கமா இருக்கா" என்று தன் மகளைக் கேட் டாள்.

கொஞ்ச நேரம் சென்றதும் வண்டிக்குள்ளே நோக் கினன். சாரதா வேதவல்லியின் தோள்மீது சாய்ந்து படுத்துக் கொண்டிருந்தாள். ஒரு முறை அவளைக் கண் டான், ஓராயிரந்தடவை ராதே உனக்குக் கோபம் ஆகாதடி என்று பாடலாமா என்று தோன்றிற்று. பரந்தாமன் உள்ளத்தை அந்தப்பாவை கொள்ளை கொண்டாள். கண் கள் மூடித்தான் இருந்தன; ஆனுலும் அதிலும் ஒரு வசீகரம் இருந்தது. காற்றினுல் சீவி விடப்பட்டிருந்த கூந்தல் சற்று கலைந்து, நெற்றியில் அங்குமிங்குமாக அலைந்தது, கருப்புப் பொட்டு அந்த சிங்காரியின் நெற்றியிலே வியர்வையில் குழைந்து ஒருபுறம் ஒழுகிவிட்டது. ஆனுல் அதுவும் ஒரு தனி அழகாகத்தான் இருந்தது, "மாதே உனக்குச் சோகம் ஆகாதடி" என்று பாட எண்ணினன். சோகித்துச் சாய்ந்

திருந்த அந்த சொர்ண ரூபியை நோக்கி 'ஆஹா! நான் வண்டியை ஓட்டுபவனாகவன்றோ இருக்கிறேன். எனக்கு இவள் கிட்டுவாளா?' என்று எண்ணினான், ஏங்கினான், மாடு தள்ளாடி நடந்தது, பரந்தாமனுக்கு அதைத்தட்டி ஓட்டமுடியவில்லை. இஷ்டங்கூட இல்லை. அந்த ரமணி எவ்வளக்கெவ்வளவு அதிகமாக வண்டியில் இருக்கிறாளோ அவ்வளவு ஆனந்தம், வண்டியோட்டுகிற வேளையிலும் இப்படிப்பட்ட சம்பவம் இருக்கிறதல்லவா? என்று கூட' எண்ணினான்.

ரயில்வே ஸ்டேஷனிலிருந்து ஆறுவது மைலில் மாரிக்குப்பம். அங்கு ஆடி வெள்ளிக்கிழமையிலே, குறி சொல்வதும், பிசாசு ஓட்டுவதும், குளிச்சம் கட்டுவதும், முழுக்கு போடுவதும் வழக்கம். சுற்றுப்பக்கத்து ஊரிலிருந்து திரளான கூட்டம் வரும். மாரிக்குப்பம் கோயில் பூசாரி மாடிவீடு கட்டியதும், அவன் மகன் மதராசிலே மளிகைக் கடை வைத்ததும், அந்த மகமாயி தயவாலேதான், எத்தனையோ ஆயிரம் குளிச்சம் கட்டியிருப்பான் பூசாரி. அவனைத்தேடி எத்தனையோ ஆயிரம் பேர் வந்திருப்பார்கள், எவ்வளவோ பேரைப் பார்த்தவன். எத்தனையோ பிசாசை ஓட்டியவன். அந்தப் பேர்வழியைக் காணவும் சாரதாவுக்கு அடிக்கடி வருகிற சோகம், ஏதாவது காத்து சேஷ்டையாக இருக்கலாம். அதுபோக ஒரு குளிச்சம் வாங்கிப் போகலாமென்றும்தான் ஐம்பது அறுபது மைல் தாண்டி அழகாபுரியை விட்டு, வீராசாமிப் பிள்ளை மனைவியையும்

மகளையும் அழைத்துக்கொண்டு வந்தார். ஆவணியிலே சாரதாவுக்கு கலியாணம் நிச்சயமாகிவிட்டது. நல்ல பெரிய இடத்திலே ஏற்பாடு, நூறு வேலிக்கு நிலம், ஆடும், மாடும் ஆளும், அம்பும், வண்டியும் அதிகம், அந்த அழகாபுரிக்கே அவர்தான் ஜெமீன்தார் போல. வயது கொஞ்சம் அதிகம் தான். அறுபது என்று சொல்லுவார்கள், ஆனால் அவர் நினைப்பு முப்பத்தைந்திலிருந்து நாற்பதுக்குள்தான். ஆள் நல்ல உயரம், பருமன், மீசை மயில்ராவணன் படத்திலே இருப்பது போல. ஆசாமி பேசினால், இடி இடித்த மாதிரி தான். அழகாபுரியிலே மாரியப்ப பிள்ளை என்றால் போதும் கிடுகிடுவென நடுங்குவார்கள்.

அவருக்கு மூன்றுந்தாரமாக சாரதா ஏற்பாடாகி விட்டது. சாரதாவுக்கு வயது பதினாறுகூட நிரம்பவில்லை. அவள் அழகு அழகாபுரிக்கே அழகு செய்தது. நல்ல பஞ்ச வர்ணக்கிளி என்றாலும் சோலையில் பறக்க விடுகிறார்களா? தங்கக் கூண்டிலே போட்டுத்தானே அத்துடன் கொஞ்சு வார்கள். அதைப் போலத்தான் சாரதாவுக்கு மாரியப்ப பிள்ளை கூண்டு, அவருடைய பணம் பேசுமே தவிர வயதா பேசும்? அதிலும் வீராசாமிப் பிள்ளை வறட்சிக்கார ஆசாமி. கடன் பட்டுப்பட்டுக் கெட்டவர். இந்த சம்பந்தத்தினால் தான் ஏதாவது கொஞ்சம் தலை எடுக்க முடியும். வேத வல்லிக்குக் கொஞ்சம் கசப்புத்தான். இருந்தாலும் என்ன செய்வது? சாரதாவுக்குத் தெரியும் தனக்குப் பெற்றோர்கள் செய்கிற விபரீத ஏற்பாடு. அதனை எண்ணி எண்ணி ஏங்கி

னுள். வாடினுள், மாரியப்ப பிள்ளையை மனதாலே நினைத் தாலே பயமாக இருந்தது அவளுக்கு. எண்ணுத எண்ண மெல்லாம் எண்ணியதால் உடல் இளைக்கலாயிற்று. ஐயோ! அந்த ஆர்ப்பாட்டக்காரக் கிழவனுக்கு வாழ்க்கைப்பட்டு நான் எக்கதியாவது? என்று நடுங்கினுள் அந்தப் பெண். தனது குடும்பத்திலுள்ள கஷ்டமும், அந்தக் கஷ்டத்தைப் போக்கிக் கொள்ளவே தன்னை, கிளியை வளர்த்து பூனை யிடம் தருவது போல மாரியப்ப பிள்ளைக்கு மணம் செய்து கொடுக்கத் துணிந்ததும் அவளுக்குத் தெரியும். தனது குடும்பக் கஷ்டத்தைப் போக்க வேண்டுமென்பதிலே சாரதாவுக்குத் திருப்திதான். ஆனல் தான் கிழவனுக்குப் பெண்டாக வேண்டுமே எண்றெண்ணும்போது, குடும்ப மாவது பாழாவது, எங்கேனும் ஒரு குளத்தில் விழுந்து சாகலாமே எள்று தோன்றும். இது இயற்கைதானே!

இப்படிப்பட்ட பொருத்தமில்லாத ஜோடிகளைச் சேர்ப்பதற்காக யார் என்ன செய்கிருர்கள்? ஊரார் கேலி யாகப் பேசிக் கொள்வார்களே யொழிய, இவ்விதமான வகையற்ற காரியம் நடக்க வொட்டாது தடுக்கவா போகிருர்கள்? கல்லென்ருலும் கணவன், புல்லென்ருலும் புருஷன் என்று பழ மொழி இருக்க, கல்லோ புல்லோ அல்லாத மாரியப்ப பிள்ளைக்கு சாரதாவை மணமுடித்துக் கொடுக்காது இருப்பார்களோ?

அதிலும் மாரியப்ப பிள்ளை ஒரு ஏழையாக இருந்தால் "கிழவனுக்கு எவ்வளவு கிறுக்கு பார்த்தீர்களா! காடு வா

வா என்கிறது. வீடு போபோ என்கிறது. கிழவன் சரி யான சிறு குட்டி வேண்டுமென்று அலைகிருனே. காலம் கலிகாலமல்லவா'' என்று கேலி செய்வார்கள். மாரியப்ப பிள்ளேயோ பணக்காரர். எனவே அந்த ரமணி சாரதா சமூகத்தில் வளர்த்து விடப்பட்ட பழக்கத்துக்கு தனது அழகையும் இளமையையும் பலிகொடுக்கப் போகிருள். இவ்விதம் அழிந்த 'அழகுகள்' எவ்வளவு! தேய்ந்த இளமை எத்துணை!!

சாரதாவுக்குப் பிசாசு பிடித்துக்கொண்டது என்று அவளின் பெற்ருேர் எண்ணிஞர்கள். அவளுக்கா பிசாசு பிடித்தது? அல்ல! அல்ல! மாரியப்ப பிள்ளே பிடித்துக் கொள்ளப்போகின்ருரே என்ற பயம் பிடித்துக்கொண்டது. பாவை அதனுலேயே பாகாய் உருகிஞள். அதைத் தவிர வேறு என்ன செய்யமுடியும்? அவள் புரட்சிப் பெண் ணல்ல! புத்துலக மங்கையல்ல!

மாரி கோயிலுக்கு மாட்டுவண்டி வந்து சேர்ந்தது. அம்மன் தரிசனமாயிற்று. அந்தப் பூசாரி ஏதோ மந்திரம் செய்தான். மடித்துக் கொடுத்தான் மாரி பிரசாதத்தை வாரத்திற்கோரு முறை முழுக்கு. ஒருவேளே உணவு. ஒரு நாளேக்கு ஒன்பது முறை அரசமரம் சுற்றுவது என்று ஏதேதோ 'நிபந்தனே' போட்டான். கோவிலில் விற்ற சோற்றைத் தின்ருர்கள். மிச்சம் கொஞ்சம் இருந்தது. "பாவம்! வண்டிக்கார பிள்ளேயாண்டானுக்குப் போட லாமே'' என்ருள் வேதவல்லி. "ஆமாம், பாபம் என்ருள் சாரதா.

ஒவ்வொரு உருண்டையாக உருட்டி வண்டியோட்டும் பிள்ளையாண்டான் கையிலே கொடுத்தாள் சாரதா. அந்த நேரத்திலே அவள் தந்தை வெகு சுவாரசியமாக பூசாரியுடன் பேசிக் கொண்டிருந்ததால், அதுவும் நடக்க முடிந்தது. அவர் மட்டும் அதைப் பார்த்திருந்தால், ஒரு முறைப்பு, ஒரு கனைப்பு-உடனே சாரதா நடுநடுங்கிப் போயிருப்பாள்.

சாரதா வண்டியோட்டிக்குச் சோறு போட்டதாக அவன் கருதவில்லை. அமிர்தம் கொடுத்தாள் என்றே கருதினான். அந்த மங்கையின் கையால் கிடைத்த உணவு, அவனுக்கு அவ்வளவு இன்பமாக இருந்தது. அவளும் அவனுக்கு வெறும் சாதத்தைப் போடவில்லை. ஒவ்வொரு பிடியிலும், தனது காதல் ரசத்தைக் கலந்து பிசைந்து தந்தாள். இவரைப் போன்றதன்றோ என் புருஷன் இருக்க வேண்டும் என்று எண்ணினாள். அந்த எண்ணம் திடரெனத் தோன்றியதால் துணிவும் ஏற்பட்டது. அந்தத் தையலுக்கு. எனவே அவனுக்குச் சாதம் போட்டுக் கொண்டே புன்சிரிப்பாக அவனைப் பார்த்துச் சிரித்தாள். பூந்தோட்டத்தின் வாடைபோல அந்தப் புன்சிரிப்பு பரவிற்று. வாலிபன் நாடி அனைத்திலும் அது புகுந்தது. இந்தக் காதல் காட்சியைக் கடைக் கண்ணால் கண்டாள் வேதவல்லி ..பெருமூச்சு விட்டாள்.

மாரி பிரசாதம் பெற்றாள் சாரதா. இனி நோய் நீங்குமென வீராசாமிப் பிள்ளை எண்ணினார். சாரதா முன்போல

முகத்தைச் சுளித்துக் கொள்ளாமல், சற்று சிரித்த முகமாக இருப்பதைக் கண்டு, வீராசாமிப் பிள்ளை தம் மனைவி வேத வல்லியை அருகே அழைத்து, "வேதம்! பார்த்தாயா பெண்ணை. பூசாரி போட்ட மந்திரம் வேலை செய்கிறது. முகத்திலே தெளிவு வந்து விட்டது பார்." என்று கூறினர். வேதவல்லிக்குத்தெரியும், சாரதாவின் களிப்புக்குக் காரணம். பூசாரியுமல்ல, அவன் மந்திரமுமல்ல. ஆனல் புதிதாகத் தோன்றிய பரந்தாமனும், அவன் ஊட்டிய காத லும் பெண்ணின் உள்ளத்திலே ஆனந்தத்தைக் கிளப்பி விட்டதென்பது.

மறுபடி அவர்கள் அதே வண்டியிலேறி ரயிலடிக்கு வந்தனர். வண்டியோட்டியிடம் கூறிவிட்டு, ரயிலேறும் சமயம் வேதவல்லி, பரந்தாமனைப் பார்த்து. "ஏன் தம்பி, எங்க ஊருக்கு வாயேன் ஒரு தடவை" என்று அழைத் தாள். சாரதா வாயால் அழைக்கவில்லை; கண்ணல் கூப் பிட்டாள். வேதவல்லி வாயால் கூப்பிட்டது பரந்தாமன் செவியில் புகவில்லை. சாரதாவின் கண்மொழி, அவனுடைய அத்தனையிலும் புகுந்து குடைந்தது. "மாடாவது வண்டி யாவது, மாரிக்குப்பமாவது. பேசாமல் சாரதாவைப் பின் தொடர்ந்து போக வேண்டியதுதான்" என்று நினைத்தான் "எனைக் கணம் பிரிய மனம் வந்ததோ, நீ எங்கு சென்ருலும் உன்னை விடுவேனே, ராதே" என்ற பாட்டை எண்ணினன்.

மணி அடித்துவிட்டார்கள்! வீராசாமிப் பிள்ளை கனைத்து விட்டார். வேதவல்லி உட்கார்ந்தாகி விட்டது.

சாரதாவின் கண்கள், பரந்தாமனை விட்டு அகலவில்லை. பரந்தாமன் பதுமை போல் நின்ருன்.

வண்டி அசைந்தது சாரதாவின் தலையும் கொஞ்சம் அசைந்தது. அவளுடைய செந்நிற அதரங்கள் சற்று அசைந்தன. அலங்காரப் பற்கள் சற்று வெளிவந்தன. அவளையும் அறியாமல் புருவம் வளைந்தது. கண் பார்வையிலே ஒரு விதமான புது ஒளி காணப்பட்டது. வண்டி சற்று ஓட ஆரம்பித்தது. பரந்தாமனின் கண்களில் நீர் ததும்பிற்று. வண்டி ரயிலடியை விட்டுச் சென்றுவிட்டது. பரந்தாமன் கன்னத்திலும் இரு துளி கண்ணீர் புரண்டு வந்தது. நேரே வண்டிக்குச் சென்ருன். வைக்கோல் மெத்தை மீது படுத்தான், புரண்டான். சாரதாவை நான் ஏன் கண்டேன்? என்று கலங்கினுன். கிட்டாதே பொருள். கலங்குவது ஏன்? என்று மனதைத் தேற்றினுன்.

''சாரதா, நீ ஏன் அவ்வளவு அழகாய் இருக்கிருய்? என் கண்களை ஏன் கவர்ந்து விட்டாய். அழகி, என் மனதைக் கொள்ளை கொண்டாயே, என்னைப் பார்த்ததோடு விட்டாயா? எனக்கு 'அமிர்தம்' அளித்தாயே. ரயில் புறப்படும் போது என்னைக் கண்டு சிரித்தாயே, போய் வருகிறேன் என்று தலையை அசைத்து ஜாடை செய்தாயே, நீ யார்? ஏன் இங்கு வந்தாய்? வண்டியோட்டும் எனக்கு ஏன் நீ எதை எதையோ எண்ணும்படி செய்துவிட்டாய்? சாரதா, உன்னை நான் அடையத்தான் முடியுமா? எண்ணத்தான் படுமா?—''என்று எண்ணினுன். இரண்டு நாட்கள்

பரந்தாமனுக்கு வேறு கவனமே இருப்பதில்லை. எங்கும் சாரதா! எல்லாம் சாரதா! எந்தச் சமயத்திலும் சாரதாவின் நினைப்பு தான்! இளைஞன் படாத பாடு பட்டான். பஞ்சில் நெருப்பென காதல் மனதில் புகுந்து அவனை வாட்ட ஆரம்பித்து விட்டது. அதிலும் கைகூடும் காதலா? வண்டியோட்டும் பரந்தாமன் அழகாபுரி முதலாளி மாரியப்ப பிள்ளைக்கு வாழ்க்கைப்பட இருக்கும் சாரதாவை அடைய முடியுமா?

அழகாபுரி வந்து சேர்ந்த அழகிக்கு, பரந்தாமன் நினைப்புத்தான் ! பரந்தாமனின் வாட்டம் சாரதாவுக்கு வராமற் போகவில்லை சாரதாவின் கவலை பரந்தாமனை விட அதிகம். பரந்தாமனுக்கேனும் சாரதா கிடைக்கவில்லையே—இன்பம் வராதே—என்ற கவலை மட்டுமேயுண்டு. சாரதாவுக்கு இரு கவலை. பரந்தாமனைப் பெற முடியாதே—இன்ப வாழ்வு இல்லையே-என்பது ஒன்று. மற்றொன்று மாரியப்ப பிள்ளையை மணக்கவேண்டுமே—துன்பத்துக்கு அடிமைப் பட வேண்டுமேயென்பது. எனவே சாரதாவின் 'சோகம்' குறையவில்லை...அதிகரித்தது.

மாரியப்ப பிள்ளைக்கு ஆத்திரம் அதிகமாகிவிட்டது. ஆச்சு! ஆவணி பிறக்கப்போகிறது! இந்தப் பெண் 'சோகம்' 'சோகம்' என்று படுத்தபடி இருக்கிருள். இவள் எப்போது போவது? என் மோகம் எப்போது தணிவது'' என்று கோபித்துக்கொண்டான்.

"அழகான பெண்ணாக இருக்கிறாளே என்று பார்த்தால் இப்படி 'சீக்' பேர்வழியாக இருக்கிறாள். உடல் கட்டை மட்டும் கவனித்தால், 'உருட்டி எடுத்த கிழங்குகள்,' போல் இருக்கின்றன" என்று கவலைப்பட்டான். சாரதாவுக்கு வைத்தியத்தின் மேல் வைத்தியம். ஒரு மந்திரவாதி உபயோகமில்லை என்று தெரிந்ததும். மற்றொரு மந்திரவாதி என்று சிகிச்சை நடந்து வந்தது. ஆனால் அவளுடைய மன நோய் மாறினால்தானே சுகப்படும்.

வீராசாமிப் பிள்ளைக்கு விசாரம்! வேதவல்லிக்கு விஷயம் வெளியே சொல்ல முடியாது. ஒரு நாள் மெதுவாக சாரதாவிடம் "மாரியப்ப பிள்ளையை மணந்துகொண்டால் படிப்படியாக நோய் குறைந்துவிடும்" என்று கூறினாள். "யார் நோய் குறையுமம்மா! அப்பாவுக்குள்ள பண நோய் குறையும்! அந்தக் கிழவனுக்கு ஆத்திரம் குறையும்" என்று அலறிச் சொன்னாள் சாரதா. பிறகு அவளுக்கே ஆச்சரியமாக இருந்தது தனக்கு எங்கிருந்து இவ்வளவு தைரியம் வந்தது என்று. நோய் தானாகப் போகும் கல்யாணத்துக்கு நாள் குறிப்பிட வேண்டியதுதான் என்று மாரியப்ப பிள்ளை கூறிவிட்டார். நாள் வைத்துவிட்டார்கள். கலியாண நோட்டீசுகள் அச்சடிக்கப்பட்டு உறவினருக்கும் தெரிந்தவர்களுக்கும் அனுப்பப்பட்டன. இரண்டே நாட்கள் தான் இருக்கின்றன கல்யாணத்துக்கு. அந்த நேரத்தில் தான் மாரியப்ப பிள்ளைக்கு, தனது பேரனுக்கு அழைப்பு அனுப்பவதா வேண்டாமா என்ற யோசனை வந்தது. ஆகவே, தமது காரியஸ்தர் கருப்பையாவை அழைத்துக் கேட்டார்.

“ஏ! கருப்பையா! அந்தப் பையலுக்கு கல்யாணப் பத்திரிகை அனுப்பலாமா வேண்டாமா?

“யாருக்கு எஜமான்?” என்ருன் கருப்பையா.

“அதாண்டா அந்த தறுதலே பரந்தாமனுக்கு”—என் ருர் மாரியப்ப பிள்ளே.

“ஒண்ணு அனுப்பித்தான் வைக்கிறது...வரட்டுமே” என்று யோசனே சொன்னுன் காரியஸ்தன்.

இந்த சம்பாஷணேகளேக் கேட்டுக் கொண்டிருந்த வீராசாமிப் பிள்ளே மேற்கொண்டு விசாரிக்கலானுர். அப்போது சொன்னுர் மாரியப்ப பிள்ளே தனது பூர்வோத்ரத்தை.

“எனக்கு 15 வயதிலேயே கல்யாணம் ஆகிவிட்டது. மறு வருஷமே ஒரு பெண் பிறந்தது. ஐந்து ஆறு வருஷத்துக்கெல்லாம் என் முதல் தாரம் என்னிடம் சண்டை போட்டுவிட்டு குழந்தையுடன் தாய் வீடு போனுள். நான் வேறே கல்யாணம் செய்து கொண்டேன். என் பெண் பெரியவளானுள். அவளுக்கு 12-வது வயதிலேயே கலியாணமாயிற்று. நான் அதற்குப் போகவேயில்லே. அவர்களும் அழைக்கவில்லே. அந்தப்பெண் மறு வருஷமே ஒரு பிள்ளேயைப் பெற்று ஜன்னி கண்டு செத்தாள். அந்தப் பயல் எப்படியோ வளர்ந்தான். அவளும் செத்தாள். கோர்ட்டில் ஜீவனும்சம் போட்டார்கள். அவர்களால் வழக்காட முடியுமா? என்னிடம் நடக்குமா? ஏதோ கொஞ்சம் பணம்

கொடுத்து விடுதலைப் பத்திரம் எழுதி வாங்கி விட்டேன். இப்போ அவன் அந்த ஊரிலே ஏதோ கடை வைத்துக் கொண்டிருக்கின்றான் என்று கேள்வி'' என்று கூறி விட்டு மாரியப்ப பிள்ளை ''கருப்பையா, பையனுக்கு இப்போ என்ன வயதிருக்கும்?'' என்று கோட்டார். ஏறக்குறைய இருபது இருக்கும்'' என்று வீராசாமி பிள்ளை பதில் கூறினார்.

''உங்களுக்கெப்படித் தெரியும்?'' என்று கேட்டார் மாரியப்ப பிள்ளை. ''அந்த பிள்ளையாண்டான் மாரிக்குப் பத்துக்கு நாங்கள் போனபோது வண்டி ஓட்டிக் கெண்டு வந்தான்'' என்றார் வீராசாமிப் பிள்ளை. பிறகு வேறு விஷயங்களைப் பேசிவிட்டு, வீராசாமிப் பிள்ளை வீடு வந்தார். வேதவல்லியைத் தனியே அழைத்து விஷயத்தைச் சொன்னார். சாரதா காதில் விழுந்தால் அவள் ஒரே பிடிவாதம் செய்வாள். கலியாணத்துக்கு ஒப்பவே மாட்டாள். சொல்லவேண்டாம் என்று வேதவல்லி யோசனை கூறினாள். எனவே சாரதாவுக்கு தான் மணக்கப்போவது தன் காதலனின் தாத்தா என்பது தெரியாது. விசாரத்துடன் மாரிக்குப்பத்துக்கும் ரயில்வே ஸ்டேஷனுக்கும் இடையே வண்டியோட்டிக்கொண்டு வாழ்ந்துவந்த பரந்தாமனுக்கும் தெரியாது. தன் காதலி சாரதா, தனக்கு பாட்டி ஆகப்போகிறாள் என்பது! காதலியே தனக்குப் பாட்டி ஆனால் என்பது தெரிந்தால் அவன் மனம் என்ன பாடுபடும்?

''என்னடா பரந்தாமா, ரெம்ப குஷியாக இருக்கிறாய். சம்பாத்தியம் ரொம்ப ஜாஸ்தியோ?'' என்று மற்ற வண்டிக்காரர்கள் பரந்தாமனைக் கேட்டனர்.

“நான் அழகாபுரிக்குப் போகப்போகிறேன். அங்கே ஒரு கலியாணம் டேய், யாரும் சிரிக்கக்கூடாது. எங்க தாத்தாவுக்கு கல்யாணம், கார்டு வந்தது வரச்சொல்லி” என்ருன் பரந்தாமன்.

“பலே! சரியான பேச்சு பேசினுனப்பா பரந்தாமன். தாத்தாவுக்குக் கலியாணமாம். பேரன் போகிருனும்!” என்று சொல்லி சிரித்து கேலி செய்தார்கள்.

பரந்தாமனும், கூடவே சிரித்தான். அவனுக்கு உள்ளபடி மாரியப்ப பிள்ளைக்கு அறுபதாம் கலியாணம் நடக்க வேண்டி இருக்க, நிஜமான கலியாணமே செய்துகொள்ளப் போவதாகவும், அதற்கு வரும்படி, காரியஸ்தன் கருப்பையா கார்டு போட்டதைக் கண்டதிலிருந்து சிரிப்புத்தான்! அழகாபுரியிலே தானே, அந்தப் பெண் சாரதா இருக்கிருள்; கலியாண சாக்கிலே, அவளைக் காணலாமே என்று எண்ணித்தான். தன் தாத்தா கலியாணத்துக்குப் போக முடிவு செய்தான்.

விஷயத்தைச் சொன்னுலே, எல்லோரும் சிரிக்கிருர்கள். எவ்வளவோ சொன்னுன். விழுந்து விழுந்து சிரித்தார்களே தவிர, ஒருவர்கூட நம்பவில்லை.

கடைசியில், மடியில் வைத்திருந்த கார்டை எடுத்து வேறு ஆளிடம் கொடுத்து படிக்கச் சொன்னுன். பிறகு தான், பரந்தாமன் சொல்வது உண்மை எனத் தெரிந்தது. உடனே சிரிப்பு போய்விட்டது. ஒவ்வொருவரும், கண்ட

படி பேசலாயினர். "என்ன கிருக்குடா கிழவனுக்கு? கல்லு புள்ளேயார்போல பேரன் இருக்கத்லே மூணும்தாரம் செய்கிருனுமே" என்று ஒருவனும், "இதாண்டாப்பா கலி காலம்" என்று மற்றொருவனும், "சே! என்ன இருந்தாலும் இந்த மாதிரி அநியாயம் கூடாது" என்று பிறிதொருவனும் கூறி, எல்லோருமாக "பரந்தாமா, நீ போகாதேடா என்று சொன்னார்கள்! நான் போறது அந்தக் கல்யணத்துக்காக மாத்திரமில்லே. வேறு சொந்த வேலே கொஞ்சம் இருக்கிறது" என்று பரந்தாமன் சொன்னான்.

தூக்கம் தெளியாத நேரம்! முகூர்த்தம் அந்த வேளேயில் தான் வைக்கப்பட்டிருந்தது! கோழி கூவிற்று! கூடவே வாத்தியம் முழங்கிற்று! சாரதா கண்களிலே வந்த நீரை அடக்கிக்கொண்டு "கலியாண சேடிகளிடம்" தலேயைக் கொடுத்தாள்! அவர்கள் தைலம் பூசினார்கள்! சீவி முடித்தார்கள்! ரோஜாவும் மல்லிகையும் சூட்டினார்கள்! புத்தாடை தந்தார்கள்! பொன் ஆபரணம் பூட்டினார்கள்! முகத்தை அலம்பச் செய்தார்கள்! பொட்டு இட்டார்கள்! புறப்படு என்றார்கள்! மாரியப்ப பிள்ளேக்கு மாப்பிள்ளே வேடத்தை காரியஸ்தர் கருப்பையா செய்து முடித்தார்! மேளம் கொட்டினார்கள்! மணப் பந்தலுக்கு சாரதா வந்தாள் பரந்தாமன் அங்கொரு பக்கம் உட்கார்ந்திருப்பதைக் கண்டாள். அவள் கால்கள் பின்னிக்கொண்டன. கண் மயங்கி விட்டது. சோகம் மேலிட்டுவிட்டது. சுருண்டு கீழே விழுந்துவிட்டாள். எல்லோரும் 'என்ன? என்ன?' என்று

கேட்டுக்கொண்டு ஓடினார்கள் சாரதா அருகில். பரந்தாமன் உட்கார்ந்தவன்தான் அவனால் அசையக்கூட முடியவில்லை. அவ்வளவு திகைப்பு! என் சாரதா மணப்பெண்! என் காதலியா, இந்தக் கிழவனுக்கு! பாட்டியாகிறாளே என் பாவை! இந்தக் கோலத்தையா நான் காணவேண்டும்- என்று எண்ணினான். அவனால் ஏதும் செய்யமுடியாது தவித்தான்! யாரிடம் பேசுவான்! என்ன பேசுவது! யார் இவன் பேச்சைக் கேட்பார்கள்! எப்படி இவனால் தடுக்க முடியும்! மெல்ல எழுந்து சாரதா படுத்திருந்த பக்கமாகச் சென்றான். வேதவல்லி கண்களைப் பிசைந்துகொண்டே, "தம்பி, போய் ஒரு விசிறி கொண்டு வா!" என்றாள். விசிறி எடுத்துக்கொண்டு வந்தான். "வீசு" என்றாள் வேதவல்லி. வீசினான். சில நிமிஷங்களில் சாரதா கண்களைத் திறந்தாள். வீசுவதை நிறுத்திவிட்டான். இருவர் கண்களும் சந்தித்தன. பேசவேண்டியவைகள் யாவும் தீர்ந்துவிட்டன! மெல்ல எழுந்தாள் மங்கை. தூர நின்றான் பரந்தாமன். வாத்தியங்கள் மறுபடியும் கோஷித்தன. புரோகிதர் கதராலானார்! கருப்பையா வந்தவர்களை உபசரித்தார். 'பலமாக மேளம்" என்றனர். பக்கத்தில் அமர்ந்திருந்த பதுமை போன்ற சாரதாவுக்கு, பரந்தாமனின் பாட்டன். அவன் கண் முன்பாகவே தாலி கட்டினான். எல்லோரும் 'அட்சதையை' மணமக்கள் மீது போட்டனர்! பரந்தாமனும் போட்டான். போடும்போது பார்த்தான் சாரதாவை! அவள் கண்களில் நீர் ததும்பியபடி இருந்தது. புரோகிதர் போட்ட புகை கண்களைக் கலக்கிவிட்டது" என்றாள் வேதவல்லி. அல்ல!

அல்ல! பாழும் சமூகக் கொடுமை அந்த கோமளத்தின் கண்களைக் கலக்கிவிட்டது என்று எண்ணினன் பரந்தாமன்.

ஆம்! சாரதாவை அவன் காதலித்தான். அவளும் அவனைத்தான் விரும்பினுள். அவளே அவன் பாட்டியுமானுள். என்செய்வான் ஏங்கும் இளைஞன்?

சாரதாவின் சோகம், பரந்தாமனின் நெஞ்சம் பதறினது. வேதவல்லி வாட்டம் இவைகளைப்பற்றி மாரியப்ப பிள்ளைக்கு கவலை ஏன் இருக்கப் போகிறது.

வீட்டிலுள்ள கஷ்டத்தினல் கழுத்திலுள்ள நகையை விற்று விட்டால், வாங்குகிறவர்கள் விற்றவர்களின் வாட்டத்தை எதற்காக கவனிக்கப்போகிருர்கள். அந்த நகையைத் தாங்கள் அணிந்துகொண்டால் அழகாக இருக்கும் என்ற எண்ணம் மட்டுந்தானே இருக்கும். அதைப் போலவே மங்கை மனவாட்டம் கொண்டாலும், தனக்கு மனைவியாளுளல்லவா அதுதான் மாரியப்பபிள்ளைக்கு வந்த எண்ணம். தன் இரண்டாம் மனைவி இறந்தபோது காரியஸ்தன் கருப்பையா தேறுதல் கூறும் போது "எல்லாம் நல்லதுக்குத்தான் வருத்தப் படாதீர்கள்" என்று கூறினுன்.

அன்றலர்ந்த ரோஜாவின் அழகு பொருந்திய சாரதாவை அடையத்தான் போலும், அந்த விபத்து நேரிட்டது என்று கூட எண்ணினர் மாரியப்பபிள்ளை, கல்யாணம் முடிந்து விருந்து முடிந்து மாலையில் நடக்க வேண்டிய காரியங்கள் முடிந்து 'ஒரு நாள் இன்பம் பூர்த்தியாயிற்று.

அன்றிரவே வேதவல்லி, விம்மி விம்மி அழும் சாரதாவுக்கு என்ன சொல்லி அடக்குவது என்று தெரியாது விழித்தாள். பரந்தாமன், பதை பதைத்த உள்ளத்தினனுய் படுத்துப் புரண்டான்.

மறு தினம், சாரதாவுக்கு காய்ச்சல் வந்து விட்டது. இரவு முழுவதும் அழுது அழுது கண்கள் சிவந்து விட்டன. இருமலும் சளியும், குளிரும் காய்ச்சலுமாக வந்து விட்டது மறுநாள் நடக்க வேண்டிய சடங்குகள் முடிந்து, உறவினர் கள் ஒவ்வொருவராக விடை பெற்றுக் கொண்டு போயினர் பரந்தாமனுக்கு போக எண்ணந்தான். ஆனல் சாரதாவுக்கு காய்ச்சல் விட்ட பிறகு போகலாம். காய்ச்சலாக இருக்கும் போதே ஊருக்குப் போய் விட்டால், எப்படி இருக் கிறதோ, என்ன ஆயிற்ருே என்று கவலைப் படத்தானே வேண்டும். என்று எண்ணியதால் அவன் அங்கேயே தங்கி விட்டான்.

மாரியப்பபிள்ளை மகிழ்ச்சியின் மேலீட்டால், பரந்தா மனை, "டேய் பயலே, அங்கு போய்த்தான் என்ன செய்யப் போகிருய்? இங்கேயே இருப்பது தானே. பத்துப் பேரோடு பதினென்ருக இரு. இங்கே கிடைக்கிற கூழோ தண்ணி யோ, குடித்து விட்டு காலத்தைத் தள்ளு. ஏதாவது வயல் வேலையைப் பார்த்துக்கொள். வண்டி பூட்ட ஓட்ட ஆள் வைத்திருக்கிறேன். அவனையும் ஒழுங்காக வேலைவாங்கு இரு இங்கேயே" என்று கூறினுர். காரியஸ்தன் கருப் பையாவும் இந்த யோசனையை ஆதரித்தான். வேதவல்லி

யும் இது நல்ல யோசனை என்ருள். பரந்தாமன், "சரி பார்ப்போம்" என்று கூறினுன். அவனுக்கு தான் காதலித்த சாரதா ஒரு கிழவனின் மனைவியாக இருப்பதைக் கண்ணுலே பார்த்துக் கொண்டிருக்க இஷ்டமில்லை. சாரதாவுக்கு உடம்பு சரியாகு மட்டும் இருந்து விட்டு, ஊர் போய்ச் சேருவது என்று முடிவு செய்தான்.

சாரதாவுக்கு ஒரு நாட்டு வைத்தியர் மருந்து கொடுத்து வந்தார். ஜுரம் குறையவில்லை.

இரண்டு நாட்களுக்குப் பிறகு தான் ஜுரம் விட்டது. ஆனுல் களைப்பும், இருமலும் அதிகமாக இருந்தது. அன்று மருந்து வாங்கிவர பரந்தாமனையே அனுப்பினுர்கள். வைத்தியர் வீட்டை விசாரித்துக் கொண்டு வந்து சேர்ந்தான். வைத்தியர் சற்று வெறியில் இருந்தார். அவர் கொஞ்சம் "தண்ணீர்" சாப்பிடும் பேர்வழி எனவே, அவர் கிண்டலாகப் பேசினுர். இது பரந்தாமனுக்குப் பிடிக்கவில்லை.

"வாயா, வா! என்ன மருந்துக்கு வந்தாயா! யாருக்கு? சாரதாபாய்க்குத்தானே." என்று ஆரம்பத்திலேயே கிண்டலாகப் பேசினுன்.

"ஆமாம் வைத்தியரே, பாவம் கலியாணமானதும் காய்ச்சல் இப்படி வந்துவிட்டது சாரதாவுக்கு" என்ருன் பரந்தாமன்.

"ஏனப்பா வராது? ஏன் வராது சொல்லு? பெண்ணே பதுமைபோல ஜிலு ஜிலுன்னு இருக்கிருள். பருவமோ ஜோரான பருவம். புருஷனுக வந்த ஆளோ ஒரு கிழம். இதைக் கண்ட பெண்ணுக்கு வருத்தம் இருக்காதா?" என்

ருன் வைத்தியன். ''இதெல்லாம் நமக்கேன் வைத்தியரே எல்லாம் ஆண்டவன் எழுதிவைத்தபடி நடக்கும்'' என்ருன் பரந்தாமன். ''ஆண்டவனை ஏனப்பா இந்த வேலைக்கு அழைக்கிறே. அவர் தன் வரைக்கும் சரியாகத்தான் செய்து வைத்துக் கொண்டார். பார்வதி—பரமசிவன் ஜோடிக்கு என்ன குறை! லட்சுமி—விஷ்ணு இந்த ஜோடி தான் என்ன இலேசானதா. சாமிகளெல்லாம் பலே ஆசாமி களப்பா. அவர்கள் பேரைச் சொல்லிக் கொண்டு நாம் தான் இப்படி இருக்கிறேம்'' என்று வைத்தியன் சொன்ஞன்.

பரந்தாமனுக்கு இந்த வேடிக்கைப்பேச்சு சிரிப்பை உண்டாக்கியது. பரந்தாமன் சிரித்ததும், வைத்தியருக்கு மேலே பேச்சு பொங்கிற்று, உள்ளேயும் ''அது'' பொங்கிற்று!

''கேளப்பா கேளு. இந்த மாதிரி ''ஜோடி'' சேர்ந்தால் காரியம் ஒழுங்காக நடக்காது. என்னமோ, மாரியப்ப பிள்ளைக்கு பணம் இருக்கிறதே என்று ஆசைப்பட்டு அந்த வேதவல்லி இந்த மாதிரி முடிச்சுபோட்டு விட்டாள். பணமா பெரிசு! நல்ல ஒய்யாரமான குட்டி சாரதா. அவளை ஒரு ஓடிந்து விழுந்து போகிற கிழவனுக்கு பெண்டாக்கிஞல், அந்த குடும்பம் எப்படியாவது? உனக்கு தெரியாது விஷயம். மாரியப்ப பிள்ளை, ஆள் ரொம்ப முடுக்காத்தான் இருப்பாரு. ஆனல், இந்த ''பொம்பளை'' விஷயமென்ருல், நாக்கிலே தண்ணி சொட்டும், அந்த ஆளுக்கு. ரொம்ப சபலம், ரொம்ப சபலம். எப்படியோ பார்த்து போட்டுட்டான். சரியான பெண்ணை தன் வலையிலே'' என்ருன் வைத்தியன்.

பரந்தாமன் பார்த்தான். மேலே பேச்சு வளர ஆரம்பிக்கிறது. வைத்தியர் ரொம்ப வாயாடி என்பது தெரிந்துவிட்டது. "நேரமாயிற்று மருந்துகொடு, வைத்தியரே போகிறேன்' என்று கேட்டான். வைத்தியர், "மருந்து கொடுக்கிறேன். ஆனால் அந்த மருந்து மட்டும் வேலை செய்தா போதாது. அந்தப் பெண்ணுக்கு மனேவியாகூலம் இருக்கக்கூடாதே. அதுக்காக என்ன மருந்து தரமுடியும்.? நான் ஜுரம் தீர மருந்து தருவேன். குளிர்போக குளிகை கொடுப்பேன். காய்ச்சல்போக கசாயம் தருவேன். ஆனால் சாரதாவின் மன வியாதியைப்போக்க நான் எந்த மருந்தைக் கொடுப்பது? தம்பீ, சரியான ஜோடி நீதான். சாரதாவுக்கு மருந்தும் நீயே'' என்றான் வைத்தியன்.

தன் சாரதாவைப்பற்றி இவ்வளவு கிண்டலாக ஒரு வைத்தியன் பேசுவதா—அதிலும் தன் எதிரிலே பேசுவதா என்று கோபம் வந்துவிட்டது பரந்தாமனுக்கு. ஓங்கி அறைந்தான் வைத்தியனை.

"படவா, மருந்து கேட்க வந்தால் வம்புந்தும்புமா பேசுகிறாய். யார் என்று என்னை நினைத்தாய்'' என்று திட்டினான்.

வைத்தியன் வெறி தெளிந்து "அடே தம்பி, நான் வேடிக்கையாகப் பேசினேன், கோபிக்காதே. இந்தா மருந்து'' என்று சொல்லிவிட்டு மருந்துகொடுக்கச் சென்றான்.

வைத்தியனை, கோபத்தில், பரந்தாமன் அடித்து விட்டானே தவிர, அவனுக்கு நன்றாகத் தெரியும், வைத்தியன்,

சொன்னதிலே துளிகூட தவறு இல்லை என்று. சாரதாவின் நோய் மன வியாதிதான் என்பதிலே சந்தேகமில்லை. அது அவனுக்குத் தெரிந்ததுதான். பிறர் சொல்லும் போதுதான் கோபம் வருகிறது. அதிலும் சாரதாவைக் கிண்டல் செய்வது போலக் காணப்படவேதான் கோபம் மிக அதிகமாகி விட்டது. ஆழ்ந்து யோசிக்கும் போது, அந்த வைத்தியர் மட்டுமல்ல, ஊரில் யாரும் அப்படித்தானே பேசுவார்கள். நேரில் பேச பயந்து கொண்டு இருந்துவிட்டாலும், மறைவில் பேசும்போது, இதைப்பற்றிக் கேலியாகவும், கிண்டலாகவுந்தானே பேசுவார்கள் என்று எண்ணிய பரந்தாமன் "ஆஹா! இந்த அழகி சாரதாவுக்கு இப்படிப்பட்ட கதி வந்ததே! ஊர் முழுவதும் இனி இவளைப்பற்றித்தானே பேசுவார்கள். என்னிடம் வைத்தியன் கிண்டலாகப் பேசியதே எனக்குக் கஷ்டமாக இருந்ததே. சாரதாவின் காதில் இப்படிப்பட்ட கேலி வார்த்தைகள் விழுந்தால், அவள் மனம் என்ன பாடுபடுமோ? பாவம் எங்கெங்கு இதே வேளையில், கிழவனை மணந்தாள் என்று கேலி செய்யப்படுகிறதோ. எத்தனை கணவன்மார்கள், தமது மனைவியிடம், 'நான் என்ன மாரியப்ப பிள்ளையா?' என்று கிண்டலாகப் பேசுகின்றார்களோ! எத்தனை உணர்ச்சியுள்ள பெண்கள், 'நான் குளத்தில், குட்டையில் விழுந்தாலும் விழுவேன்' இப்படிப்பட்ட கிழவனைக் கலியாணம் செய்துகொள்ள மாட்டேன்,' என்று பேசுகின்றனரோ? சேச்சே! எவ்வளவு கேலி பிறக்கும், கிண்டல் நடக்கும். இவ்வளவையும் என் பஞ்சவர்ணக் கிளி எப்படிப் பொறுத்துக் கொள்ள முடியும்? நான் அவள் வருத்தத்தைப் போக்க என்ன செய்ய முடியும்? எனக்கோ அவள் பாட்டி!" என்று எண்ணிப் பரந்தாமன்

வாட்டத்துடன் வீடுவந்து வேதவல்லியிடம் மருந்தைக் கொடுத்தான்.

"தம்பி, நீயே இந்த வேளே உன் கையாலேயே மருந்தைக் கொடு, நீ கொடுக்கிற வேளேயாவது, அவளுக்கு உடம்பு குணமாகட்டும்" என்று கூற, மருந்து கொடுக்க பரந்தாமன் சாரதா படுத்துக்கொண்டிருந்த அறைக்குச் சென்ருன்.

நல்ல அழகான பட்டுமெத்தை! அதன்மீது சாரதா ஒரு புறமாகச் சாய்ந்துகொண்டு படுத்திருந்தாள். அவள் படுத்துக்கொண்டிருந்த பக்கமாக, தலேயணே, சிறிதளவு நனேந்து கிடந்தது கண்ணீரால்! "சாரதா! கண்ணே, இதோ, இப்படித் திரும்பு, இதோ பார், பரந்தாமன் மருந்து எடுத்து வந்திருக்கிருர்" என்று வேதவல்லி கூறிக்கொண்டே சாரதாவை எழுப்பினுள்.

சாரதா தாயின் குரலேக் கேட்டுத் திரும்பினுள். கண்களேத் திறந்தாள். பரந்தாமன் மருந்துடன் எதிரில் நிற்பதைக் கண்டாள். அந்த ஒரு விநாடிப் பார்வை சாரதாவின் உள்ளத்தில் புரண்டுகொண்டிருந்த கருத்துக்கள் அத்தனேயையும் காட்டிவிட்டது. கை நடுக்கத்துடன் மருந்துக் கோப்பையைப் பிடித்துக்கொண்டு பரந்தாமன் நின்ருன். "வேதம்! வேதம்" என்று வெளியே வேதவல்லியின் புருஷன் கூப்பிடும் சத்தம் கேட்டது. வேதவல்லி "இதோ என்று கூறிக்கொண்டே வெளியே போனுள். காதல் நோயால் கட்டில் மீது படுத்துள்ள மங்கையும், அவளேக் காதலித்துக் கிடக்கப்பெருது வாடிய பரந்தாமன் கையில் மருந்துடனும் இருவருமே அங்கு இருந்தனர்.

அந்த அறை ஒரு தனி உலகம்!

அங்கு இன்பத்திற்குத் தடை இல்லை! கட்டு இல்லை! காவல் இல்லை! பெண்டு கொண்டேன் என அதிகாரம் செலுத்த மாரியப்ப பிள்ளை இல்லை, 'மகளே, என்ன வேலை செய்கிறாய்' என்று மிரட்ட வேதவல்லி இல்லை. கனைத்து மிரட்ட சாரதாவின் தகப்பன் இல்லை,

காவலற்ற கட்டற்ற உலகம். காதலர் இருவர் மட்டுமே இருந்த உலகம்.

"மருந்தைக் குடி சாரதா" என்றான் பரந்தாமன்.

சாரதா வாயைக் கொஞ்சமாகத் திறந்தாள். மருந்து நெடியினால் முகத்தைச் சுளித்தாள். கட்டில் ஓரத்தில் உட்கார்ந்தான் பரந்தாமன். "சாரதா! திற வாயை, இதோ மருந்து, குடித்துவிடு" என்று மருந்தை ஊற்றிவிட்டு வாயைத் துடைத்தான், அந்த "தீண்டுதல்" சாரதா அது வரை கண்டறியாத இன்பத்தை அவளுக்குத் தந்தது. முகத்திலே ஒருவித ஜொலிப்பு. கண்டு கொண்டான் பரந்தாமன். குனிந்து அவளுடைய கொஞ்சும் உதடுகளில் ஒரு முத்தம் கொடுத்தான்.

"ஆஹா! என்ன வேலை செய்தாயடி கள்ளி! என்ன வேலையடா செய்தாய் மடையா" என்று கர்ஜித்தார், மாரியப்ப பிள்ளை வாயற்படியில் நின்றுகொண்டு.

"மடையா!" என்ற சொல் காதில் விழுந்த உடனே பரந்தாமன் காதல் உலகைவிட்டுச் சரேலெனக் கிளம்பி சாதாரண உலகுக்கு வந்தான். மணமான சாரதாவை கண

வன் காணும்படி முத்தமிட்டதும், பேரன் செய்த செயலைப் பாட்டன் கண்டதும், அவன் நினைவிற்கு வந்தது. அவனோ, சாரதாவோ, மேற்கொண்டு எண்ணவோ, எழவோ நேர மில்லை. 'மடையா!' என்று கர்ஜித்துக்கொண்டே மாரியப்ப பிள்ளை எருது கோபத்தில் பாய்வதுபோல, பரந்தாமனின் மீது பாய்ந்தார். அவன் கழுத்தைப் பிடித்தார், அவன் கண்கள் சிவந்தன. மீசை துடித்தது. கை கால்கள் வெடவெடத்தன. மாரியப்ப பிள்ளையின் பிடியினால் பரந்தாமனின் கண்கள் பிதுங்கி வெளி வந்துவிடுவது போலாகிவிட்டது. பரபரவெனப் பரந்தாமனை இழுத்து எறிந்தார். மாரியப்ப பிள்ளையின் கரத்துக்குப் பரந்தாமன் எம்மாத்திரம்! அடியறுந்த மரம்போல சுருண்டு சுவரில் மோதிக்கொண்டான் பரந்தாமன். குபீலென மண்டையிலிருந்து ரத்தம் பெருகிற்று. 'ஐயோ!' என்று ஈனக் குரலில் அலறினாள் சாரதா! 'என்ன! என்ன!' என்று பரபரப்புடன் கேட்டுக்கொண்டே வேதவல்லியும்,அவள் புருஷனும், கருப்பையாவும் வந்தனர்.

பரந்தாமன், இரத்தம் ஒழுக நிற்பதையும், சாரதா கண்ணீர் பெருக நடுங்குவதையும், கோபத்தின் உருவமென, மாரியப்ப பிள்ளை உறுமிக்கொண்டிருப்பதையும் கண்டவுடன் வந்தவர்களுக்கு விஷயம் ஒருவாறு விளங்கிற்று.

''நடடா! நட! உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்யும் பாதகா! நட! இங்கு நிற்காதே'' என்று மாரியப்ப பிள்ளை கூறிக்கொண்டே பரந்தாமனின் தலை மயிரைப் பிடித்து இழுத்து அறையை விட்டு வெளியே கொண்டு கொண்டுவந்தார்.

''எஜமானருக்குத்தான் சொல்கிறேன். இவ்வளவு உரக்கக் கூவாதீர்கள். அண்டை அயலார் காதில் கேட்கப் போகிறது'' என்று கருப்பையா கூறினன்.

''கேட்பதென்ன, செய்வதென்ன, என் போருதவேளே ஒரு வெட்கங்கெட்ட சிறுக்கியைத் தேடிப்பிடித்துக் கட்டிக்கொண்டேன். என் சோறு' தின்றுவிட்டு சோரம் செய்கிருள் இந்தக் கள்ளி. இன்று இருவரும் கொலே! ஆமாம்! விடமாட்டேன்! எடுத்துவா, அரிவாளே, இரண்டு துண்டாக அந்தக் கள்ளியையும் வெட்டிப் போடுகிறேன். விடு, கருப்பையா, கையை விடு, டே, கிழ ராஸ்கல்! நல்ல பெண்ணடா! என் தலேக்குத் தீம்பாகக் கொண்டுவந்தாய் நிற்காதே என் எதிரே. யாரும் நிற்கவேண்டாம். யார் நின் ருலும், உதை. குத்து, வெட்டு, கொலே, ஆமாம்! விட மாட்டேன்,'—என்று மாரியப்ப பிள்ளே, இடி முழக்கம் போலக் கத்தினர். அவர் ஆயுளில், அதைப்போல, அவர் கத்தியதில்லே.

காரியஸ்தன் கருப்பையா விடவில்லே அவர் கரங்களே. ''எஜமான்! எஜமான்! சற்று என் பேச்சைக் கேளுங்கள். ஊர் நாடு தெரிந்தால் நமக்குத்தானே இழிவு. டே, பரந் தாமா, போய்விடுடா வெளியே, வேதம்மா நீங்களும் போங்க—'' என்று மிக சாமர்த்தியமாகக் கூறிக்கொண்டே துடித்துக்கொண்டு, கொலேக்கும் தயாராக நின்று கொண்டிருந்த மாரியப்ப பிள்ளேயை, மெதுவாக தோட் டத்துக்கு அழைத்துச் சென்றுவிட்டான். மாரியப்ப பிள்ளே போன உடனே வேதத்தின் புருஷர், பரந்தாமனே நையப் புடைத்து ''பாவி! ஒரு குடும்பத்தின் வாயிலே மண் போட் டாயே,' என்று அழுதார்,

''புறப்படடி! போக்கிரிச் சிரிக்கி, போதும் உன்னுலே எனக்கு பரிசு'' என்று சாரதாவை கட்டிலிலிருந்து பிடித்து இழுத்து, மூவருமாக தமது வீடு போய்ச் சேர்ந்தனர்.

பரந்தாமன், இன்னது செய்வதென்று தோன்ருது ஊர்க் கோடியில் இருந்த பாழடைந்த மண்டபத்தில் புகுந்துகொண்டான் அன்றிரவு. ஊரில் இலேசாக வதந்தி பரவிற்று. சாரதா வீட்டாருக்கும், அவள் கணவனுக்கும், பெருத்த தகராரும். சாரதாவை கணவன் வீட்டை விட்டு துரத்தி விட்டார்களாம். என்று பேசிக்கொண்டனர்.

வீடு சென்ற சாரதா, நடந்த காட்சிகளால், நாடி தளர்ந்து சோர்ந்து படுத்துவிட்டாள். ஜுரம் அதிகரித்து விட்டது. மருந்து கிடையாது, பக்கத்தில் உதவிக்கு யாரும் கிடையாது. ''அவள் பக்கம் போனுல் உன் பற்கள் உதிர்ந்துவிடும்; இடுப்பு நொறுங்கிவிடும்'' என்று வேதத்துக்கு அவள் கணவன் உத்திரவு.

எனவே தாலி கட்டிய புருஷன் தோட்டத்தில் தவிக்க, காதலித்த கட்டழகன் மண்டை உடைபட்டு பாழ் மண்டபத்தில் பதுங்கிக் கிடக்க. பாவை சாரதா படுக்கையில் ஸ்மரணையற்றுக் கிடந்தாள்.

இரவு 12 மணிக்குமேல், மெள்ள மெள்ள, நாலைந்து பேர் பரந்தாமன் படுத்திருந்த மண்டபத்தில் வந்து பதுங்கினர். அவர்களின் நடை உடை பாவனைகள் பரந்தாமனுக்கு, சந்தேகத்தைக் கொடுத்தது. வந்தவர்களிலே ஒருவன், மெதுவாக பரந்தாமன் அருகே வந்து, தீக்குச்சியைக் கொளுத்தி, முகத்தைப் பார்த்தான். பரந்தாமன் கண்களை இறுக மூடிக்கொண்டிருந்தான்.

"எதுவோ பரதேசிக் கட்டை போலிருக்கு" என்று சோதித்த பேர்வழி, மற்றவர்களுக்குக் கூற, வந்தவர்கள் மூலையில் உட்கார்ந்துகொண்டு கஞ்சா பிடித்துக்கொண்டிருந்தனர். அந்த நெடி தாங்கமாட்டாது பரந்தாமன் இருமினுன். வந்தவர்கள் குசுகுசுவெனப் பேசினர்.

அதே நேரத்தில் "டார்ச்லைட்" தெரிந்தது. "ஆஹா! மோசம் போனுேமடா முத்தா. சின்ன மூட்டையை மடியிலே வைத்துக்கொள். பெரிசை அந்தப்பயல் பக்கத்திலே போட்டுடு, புறப்படு, பின் பக்கமாக" என்று கூறிக்கொண்டே ஒருவன், மற்றவர்களை அழைத்துக்கொண்டு இடிந்திருந்த சுவரை ஏறிக் குதித்து ஓடினுன். பரந்தாமன் பாடு பெருத்த பயமாகிவிட்டது. ஓடினவர்கள் கள்ளர்கள் என்பதும், சற்று தூலைவிலே டார்ச்லைட் தெரிவதும், போலீசாரின் ஊதுகுழல் சத்தமும் கேட்டதும், 'புலியிடமிருந்து தப்பி பூதத்திடம் சிக்கிவிட்டோம்' என்று பயந்து என்ன செய்வதெனத் தெரியாது திகைத்தான். கள்ளர்களோ ஒரு மூட்டையைத் தன் பக்கத்திலே போட்டுவிட்டுப் போயினர். அது என்ன என்றுகூட பார்க்க நேரமில்லை. டார்ச்லைட் வரவர கிட்டே நெருங்கிக்கொண்டே வரவே வேறு மார்க்கமின்றி திருடர்கள் சுவரேறிக் குதித்ததைப் போலவே தானும் குதித்து ஓடினுன். கள்ளர்கள் தனக்கு முன்னுல் ஓடுவதைக் கண்டான். அவர்கள் செல்லும் பாதை வழியே சென்றுன். அது ஒரு அடர்ந்த சவுக்கு மரத் தோப்பில் போய் முடிந்தது. கள்ளர்கள் எப்படியோ புகுந்து போய்விட்டனர். பரந்தாமன் சவுக்குத் தோப்பில் சிக்கிக்கொண்டு விழித்தான். அதுவரையில் போலீசாரிடம் சிக்காது தப்பினதே போதுமென்று திருப்திகொண்டான்.

தன் நிலைமையைப்பற்றி சிறிதளவு எண்ணினுன். அவனையும் அறியாமல் அவனுக்கு சிரிப்பு வந்தது 'என் பாட்டிக்கு ஜுரம். நான் அவளுக்கு மருந்து கொடுப்பதை விட்டு முத்தம் கொடுப்பது. பாட்டன் என் மண்டையை உடைப்பது! அவருக்குப் பயந்து பாழும் மண்டபத்துக்கு வந்தால் கள்ளர்கள் சேர்வது! அவர்கள் கிடக்கட்டும் என்று இருந்தால், போலிசார் துரத்துவது! அதனைக் கண்டு அலறி ஓடி வந்தால், சவுக்குத் தோப்பில் சிக்கிக் கொள்வது! நரி ஊளை யிடுவதைக் கேட்பது—நல்ல பிழைப்பு என் பிழைப்பு!' என்று எண்ணினுன். சவுக்கு மரத்திலிருந்து ஒரு கிளையை எடுத்து தயாராக வைத்துக்கொண்டான் கையில். ஏனெனில் தூரத்தில் நரிகள் ஊளையிடுவது கேட்டது. அவைகள் வந்து விட்டால் என்ன செய்வது என்றுதான். சவுக்கு மலார் வைத்துக்கொண்டு உட்கார்ந்தபடி இருந்தான். ஒரு மணி நேரத்திற்குப் பிறகு அவன் கண்கள் தானுக மூடிக் கொண்டன. அவன் தூங்கி விட்டான் அலுத்து.

அதே நேரத்தில் கணவனுக்குத் தெரியாமல், வேதவல்லி மெதுவாக எழுந்து, சாரதா படுத்திருந்த அறைக்குள் சென்றுள். சாரதாவின் நெற்றியிலும், கழுத்திலும் வியர்வை முத்து முத்தாக சொட்டிக் கொண்டிருந்தது. ஜாக்கட் பூராவும் வியர்வையில் நனைந்து விட்டது. ஜுர வேகத்தால் ஆடை கலைந்து இருந்தது. ஜுரம் அடித்த வேகம் குறைந்து வியர்வை பொழிய ஆரம்பித்திருப்பதைக் கண்ட வேதம் தன் மகளின் பரிதாபத்தை எண்ணி கண்ணீர் பெருக்கிக் கொண்டே தன் முந்தாணியால் சாரதாவின்

முகத்தையும், கழுத்தையும் துடைத்தாள், சாரதா கண்களைத் திறந்தாள். பேச நாவெடுத்தாள், முடியவில்லை. நெஞ்சு உலர்ந்து போய் இருந்தது, உதடு கருகி விட்டிருந்தது. ஓடோடிச் சென்று கொஞ்சம் வெந்நீர் எடுத்து வந்தாள். அந்நேரத்தில் அது தான் கிடைத்தது. அதை ஒரு முழுக்கு சாரதாவுக்குக் குடிப்பாட்டினுள், சாரதாவுக்குப் பாதி உயிர் வந்தது. தன்னுல் வந்தவினை இதுவென தெரியும் சாரதாவுக்கு. ஆகவே அவள் தாயிடம் எதுவுமே பேசவில்லை, தாயும் ஒன்றும் கேட்கவில்லை, வேறு இரவிக்கை எடுத்துக் கொடுத்தாள். சாரதா நனைந்து போன இரவிக்கையைக் கழற்றி விட்டு தாய் தந்த இரவிக்கையைப் போட்டுக்கொண்டாள். ''என் பொன்னே உன் பொல்லாதவேளை இப்படிப்புத்திகொடுத்ததடி கண்ணே'' என்று அழுதாள் வேதம். சாரதா, படுக்கையில் சாய்ந்து விட்டாள் தாயின் கரத்தைப் பற்றிக்கொண்டு, ''அம்மா! நான் என்ன செய்வேன். நான் எதை அறிவேன். என் நிலை உனக்கு என்ன தெரியும்'' என்று மெல்லிய குரலில் கூறினுள். தாய் தன் மகளைத் தொட்டுப் பார்த்துவிட்டு ''காலையில் ஜுரம் விட்டு விடும். இப்போதே வியர்வை பிடிக்க ஆரம்பித்து விட்டது'' என்று கூறினுள்.

''என் ஜுரம் என்னைக் கொல்லாதா? பாவி நானேன் உயிருடன் இருக்க வேண்டும்? ஊரார் பழிக்க, உற்றுர் நகைக்க, கொண்டவர் கோபிக்க பெற்றவர் கைவிட நான் ஏன் இன்னமும் இருக்க வேண்டும்? ஐயோ! அம்மா! நான் மாரி கோயிலில் கண்ட நாள் முதல், அவரை மறக்க

வில்லையே, எனக்கு அவர் தானே மணவாளன் என நான் என் மனதில் கொண்டேன். என்னை அவருக்கே நான் அன்றே அர்ப்பணம் செய்துவிட்டேனே! அவருக்குச் சொந்தமான உதட்டை நீங்கள் வேருெருவருக்கு விற்கத் துணிந்தீர்கள், அவர் கேட்டார் அவர் பொருளை. நான் தந்தேன். அவ்வளவுதான். உலகம் இதை உணராது. உலகம் பழிக்கத்தான் பழிக்கும். என்னைப் பெற்றதால் நீங்கள் ஏன் இப்பாடு படவேண்டும். அந்தோ! மாரியாயி, மகேஸ்வரி! நீ சக்தி வாய்ந்தவளாக இருந்தால் என்னை அழைத்துக் கொள், நான் உயிருடன் இரேன், இரேன், இரேன்''—என்று கூறி அழுதாள்.

நாட்கள் பல கடந்தன, வாரங்கள் உருண்டன, மாதங்களும் சென்றன, சாரதாவின் ஜுரம் போய்விட்டது. ஆனல் மனே வியாதி நீங்கவில்லை, அவளைக் கணவன், வீட்டுக்கு அழைத்துக் கொள்ளவில்லை. பரந்தாமன் மனம் உடைந்து தொழிலை விட்டுப் பரதேசியாக ஊரூராகச் சுற்றினுன். சாரதாவின் தாயார் தனது மருமகப் பிள்ளையைச் சரிபடுத்த எவ்வளவோ முயன்றும் முடியவில்லை,

இங்கிலையிலே, சாரதாவைப்பற்றி ஊரிலே பழித்தும் இழித்தும் பேசத் தொடங்கினுர்கள். இதுவும் அவள் காதில் விழுந்தது. அவள் கவலை அதிகமாகி விட்டது.

கடைசியில் காரியஸ்தன் கருப்பையாதான் கை கொடுத்து உதவினுன். மெள்ள மெள்ள மந்திரம் ஜெபிப்பது போல ஜெபித்து, "ஏதோ சிறு பிள்ளைத்தனத்தில்

துடுக்குத்தனத்தால் நடந்துவிட்டது. இனி ஒன்றும் நடவாது. சாரதாவை அவள் வீட்டிலேயே விட்டு வைத்தால் ஊரார் ஒரு மாதிரியாகப் பேசுகிருர்கள்'' என்று மெதுவாக சாரதாவின் புருஷனிடம் கூறினுன். சாரதாவின் கணவன் உள்ளபடியே வருந்தினுன். வருத்தம்போக மருந்து தேடினுன். அவனுக்கு அபின் என்னும் பழக்கம் கற்றுக் கொடுக்கப்பட்டு விட்டது. மாலையில் அபினைத் தின்று விட்டு மயங்கி விழுந்து விடுவான். இரவுக் காலத்தில் கவலையற்றுக் கிடக்க அபினே அவனுக்கு உதவிற்று.

கருப்பையாவின் முயற்சி கொஞ்சம் கொஞ்சமாக பலிக்க ஆரம்பித்தது. ஊரிலே திருவிழா வந்தது, "திருவிழாக் காலத்தில், உறவினர்கள் வருவார்கள். அந்த நேரத்தில் சாரதா வீட்டில் இல்லாவிட்டால் கேலியாகப் பேசுவார்கள்'' என்று கூறினுன், அனுல் "நீயே போய் அவளை அழைத்துவா'' என்று கூறினுர். காரியஸ்தன் கருப்பையா சாரதாவை அழைத்து வந்து வீட்டில் சேர்த்தான். சாரதாவும் மிக அடக்கஒடுக்கமாக பணிவிடைகள் செய்துகொண்டு வந்தாள். புருஷனுக்கு மனைவி செய்யவேண்டியமுறையில் துளியும் வழுவாது நடந்தாள்.

சாரதா வீடு புகுந்ததும் வீட்டிற்கே ஒரு புது ஜோதி வந்து விட்டது. வேலையிலே ஒரு புது ரகம். வீடு வெகு சுத்தம் தோட்டம் மிக அலங்காரமாக இருந்தது. மாடு கன்றுகள் நன்கு பராமரிக்கப்பட்டன. பண்டங்களைப் பாழாக்குவதோ, வீட்டு வேலையாட்களிடம் வீண் வம்பு

வளர்ப்பதோ, சாரதாவின் சுபாவத்திலேயே கிடையாது. சாரதாவின் நடவடிக்கையைக் கண்ட அவள் புருஷன், "இவ்வளவு நல்லசுபாவமுள்ள பெண், அன்று ஏன் அவ் விதமான துடுக்குத்தனம் செய்தாள்? எவ்வளவு அடக்கம், எவ்வளவு பணிவு. நான் நின்றால் உட்கார மாட்டேனென் கிறாள். ஒரு குரல் கூப்பிட்டதும். ஓடோடி வருகிறாள். வீட்டுக் காரியமோ, மிக மிக ஒழுங்காகச் செய்கிறாள். இப் படிப்பட்டவள் அந்தப் பாவியின் துடுக்குத் தனத்தால் கெட்டாளே தவிர, இவள் சுபாவத்தில் நல்லவள் தான்" என்று எண்ணினான்.

ஆனால், சாரதா வெறும் யந்திரமாகத்தான் இருந்தாள். வேலையை ஒழுங்காகச் செய்தாள். ஆனால் பற்றோ, பாசமோ இன்றி வாழ்ந்தாள். வாழ்க்கையில் அவளுக்கு இன்பம் என் பதே தோன்றவில்லை. புருஷனுக்கு அடங்கி நடப்பது தான் மனைவியின் கடமை என்பதை உணர்ந்து, அவ்விதம் நடந் தாளேதவிர, புருஷனிடம் அவளுக்கு அன்பு எழவில்லை. பயம் இருந்தது! மதிப்பு இருந்தது! கடமையில் கவலை இருந்தது! காதல் மட்டும் இல்லை! காதலைத்தான். அந்தக் கள்ளன் பரந்தாமன் கொள்ளை கொண்டுபோய் விட்டானே! அவள் தனது இருதயத்தை ஒரு முத்தத்துக்காக, அவனுக்கு தத்தம் செய்து விட்டாள்.

சிரித்து விளையாடி சிங்காரமாக வாழ்ந்த சாரதா போய் விட்டாள். இந்தச் சாரதா வேறு. பயந்து வாழும் பாவை. இவள் உள்ளத்திலே, காதல் இல்லை. எனவே வாழ்க்கையில் ரசம் இல்லை.

இதை இவள் கணவன் உணரவில்லை. எவ்வளவுக்கெவ்வளவு அடக்கமாக இருக்கிருளோ அவ்வளவு அன்பு என்று எண்ணிக்கொண்டான். உலகில் இதுதானே பெரும்பாலும் பெண்கள் கடமை என்றும், புருஷனுக்கும் பெண்டுக்கும் இருக்கவேண்டிய அன்பு முறை என்றும் கருதப்பட்டு வருகிறது.

"பெண், மகா நல்லவள், உத்தமி. நாலுபேர் எதிரே வரமாட்டாள். நாத்தி, மாமி எதிரே சிரிக்கமாட்டாள். சமையற் கட்டை விட்டு வெளிவரமாட்டாள் புருஷனைக் கண்டால் அடக்கம், உள்ளே போய்விடுவாள். கண்டபடி பேசிக் கொண்டிருக்க மாட்டாள்" என்று பெண்ணின் பெருமையைப் பற்றி பேசப்படுவதுண்டு. அந்தப் பேதைகள், வாழ்க்கையில் ரசமற்ற சக்கைகளாக இருப்பதை உணருவதில்லை. வெறும் இயந்திரங்களாக, குறிப்பிட்ட வேலைகளை, குறித்தபடி செய்து முடிக்கும் இயந்திரம்—அந்தப் பெண்கள். ஆனல் காதல் வாழ்க்கைக்கு அதுவல்ல மார்க்கம்.

செடியில் மலர் சிங்காரமாக இருக்கிறது! அதனைப்பறித்து கசக்கினல் கெடும். வண்டுஆனந்தமாக ரீங்காரம் செய்கிறது! அதனைப்பிடித்துப் பேழையிலிட்டால்கீதம்கிளம்பாது.கிளி, கூண்டிலிருக்கும்போது கொஞ்சுவதாகக் கூறுதல், நமது மயக்கமே தவிர வேறில்லை. கிள்ளை கொஞ்சவேண்டுமானல், கோவைக் கனியுள்ள தோப்பிலேபோய்க் காணவேண்டும். மழலைச்சொல் இன்பத்தை மற்றதில் காணமுடியாது. அது

போன்றே இயற்கையாக வாழும் காதல், தடைப்படுத்தப் படாமல், அதற்குச் சுவர் போடப்படாமல், அது தாண்டவ மாடும் போது கண்டால் அதன் பெருமையைக்காண முடியுமே தவிர வேறு விதத்தில் காணமுடியாது.

நமது குடும்பப் பெண்களிலே எவ்வளவோ பேர், தங்கள் மன விகாரத்தை மாற்ற முகத்தில் மஞ்சள் பூசி, குங்குமமிட்டு வாழுகின்றனர். எத்தனை பெண்கள் வாழ்க்கையின் இன்பம் என்றால், சமையற்கட்டில் அதிகாரம் செலுத்துவதும், கட்டிலறையில் விளக்கேற்றுவதும், கலர் புடவை, கல்கத்தா வளையல், மங்களூர் குங்குமம், மயில் கழுத்து ஜாக்கெட் ஆகியவைகளைப்பற்றிப் புருஷனிடம் பேசுவதும், தொட்டிலாட்டுவதுந்தான் என்று கருதிக் கொண்டு வாழுகின்றனர். ரசமில்லாத வாழ்க்கை, பாவம்!

அப்படிப்பட்ட வாழ்க்கைதான் சாரதாவுக்கு. புருஷனை அபின் தின்று ஆனந்தமாக இருந்தான். இங்கிலேயில் தான் காரியஸ்தன் கருப்பையாவுக்கு சாரதாவின் மீது கண் பாய்ந்தது. சாரதாவின் தற்கால வாழ்வுக்குத் தானே காரணமென்பது அவனுக்குத் தெரியும். அது மட்டுமல்ல! சாரதாவை தன் வலையில் போடுவதும் சுலபமென எண்ணினான். நாளாவட்டத்தில், பேச்சிலும், நடத்தையிலும் தன் எண்ணத்தை, சாரதாவுக்கு உணர்த்த ஆரம்பித்தான்.

தாகமில்லாத நேரத்திலும் ஒரு டம்ளர் தண்ணீர் வேண்டும் என்பான். ஒய்வு கிடைக்கும் நேரத்தில் வலியச் சென்று பேசுவான். தோட்டத்துப் பூவைப் பறித்து வந்து

5

கொடுப்பான். விதவிதமான சேலை வகைகளைப்பற்றி பேசு வான். சாரதாவின் அழகை அவர்கள் புகழ்ந்தார்கள், இவர் கள் புகழ்ந்தார்கள் என்று கூறுவான்.

"உன் அழகைக்காண இரு கண்கள் போதாதோ" என்று பாடுவான். சாரதாவைக் கண்டதும் ஒரு புன் சிரிப்பு.

இவனுடைய சேட்டைகள் எதுவும் சாரதாவின் புருஷனுக்குத் தெரியாது. சாரதா உணர்ந்து கொள்வ தற்கே சில நாட்கள் பிடித்தன. உணர்ந்த பிறகு திகைத் தாள். விஷயத்தை வெளியில் சொல்லவோ பயமாக இருந் தது. "மகா யோக்யஸ்தி தான் போடி! கலியாணமான உடனே, எவனையோ கட்டி முத்தமிட்டாய். பாவம், அந்தக் காரியஸ்தன் உனக்காக எவ்வளவோ பாடுபட்டு, கணவனோடு சேர்த்து வைத்தான். இப்போது அவன் மீது பழிபோடுகிறாய்" என்று தன்னையே தூற்றுவார்கள் என்று சாரதா எண்ணினாள். அதுமட்டுமா! காரியஸ்தனைக் கோபித்துக் கொண்டால், தன் கணவனிடம் ஏதாவது கூறி, அவர் மனதை கெடுத்து விடுவான் என்று பயந்தாள். இந்த பயத்தை சாரதாவின் தாய் அதிகமாக வளர்த்து விட் டாள். எனவே கருப்பையாவின் சேட்டையை முளையி லேயே கிள்ளிவிட சாரதாவால் முடியவில்லை. கருப்பையா பாடு கொண்டாட்டமாகி விட்டது. சரி! சரியான குட்டி கிடைத்து விட்டாள், என்று தீர்மானித்து விட்டான்.

அவனுடைய வெறி, வினாடிக்கு வினாடி வளர்ந்தது. "சாரதா, நம்மைக் கவனிக்க மாட்டாயோ, தயவு இல்லையே"

என்று கேட்பான். சிரித்துக்கொண்டே, "என்ன வேண்டும் கருப்பையா, சொல்லேன்" என்பாள் சாரதா. கருப்பையா பெருமூச்சு விடுவான், "கொஞ்சம் தாகந்தீர உன் கையால் தண்ணீர் கொடம்மா" என்பான். சாரதா விசாரத்துடன் நீர் தருவாள். ஏனம்மா முகம் வாட்டமாக இருக்கிறது" என்பான். "ஒன்றுமில்லையே" என்று கூறுவாள் சாரதா. "அம்மா! நீ முகத்தை ஒரு மாதிரியாக வைத்துக் கொண்டால், என் மனம் படாதபாடு படுகிறது" என்று தன் அக்கரையைக் காட்டுவான் காரியஸ்தன்.

"உன்னுடைய சிகப்பு மேனிக்கு அந்த நீலப்புடவை கட்டிக்கொண்டு, வெள்ளை ஜாக்கெட் போட்டுக்கொண்டு ஜவ்வாது பொட்டு வைத்து நிற்கும்போது, அசல் ரவிவர்மா பிக்சர்போல இருக்கிறது என் கண்களுக்கு" என்பான்.

இவ்விதமாக, கருப்பையா மிக விரைவில் முன்னேறிக் கொண்டே போனான். ஆனால் ஜாடை செய்து சாரதாவைப் பிடிக்க அதிக நாட்களாகும் என்பதைத் தெரிந்து கொண்டு, வாய் திறந்து கேட்டு விடுவதே மேல் என எண்ணினான். அதற்கும் ஒரு சமயம் வாய்த்தது.

முதலாளி பக்கத்து ஊருக்குப்போனார், ஒரு பாகப் பிரிவினை மத்தியஸ்துக்காக. வர இரண்டு நாட்கள் பிடிக்கும். அந்த இரண்டு நாட்களில் காரியத்தை எப்படியாவது முடித்துவிட தீர்மானித்துவிட்டான் கருப்பையா.

மாலை நேரம், தோட்டத்திலே சாரதா பூப்பரித்துக் கொண்டிருந்த சமயத்தில் கருப்பையா அங்கு போனுன். சாரதாவுடன் பேச ஆரம்பித்தான். சற்று தைரியமாகவே "சாரதா, நீ நல்ல சாமர்த்தியசாலி".

"நானு! ஊம்! என்ன சாமர்த்தியும் கருப்பையா? என் சாமர்த்தியம் தெரியாதா; எட்டு மாதம் சீந்துவாரற்றுக் கிடந்தவள் தானே."

"சீந்துவாரற்ரு! அப்படிச் சொல்லாதே. உன் அழகைக் கண்டால் அண்டசராசரத்தில் யார்தான் சொக்கிவிட மாட்டார்கள்".

"போ! கருப்பையா, உனக்கு எப்போதும் கேலிதான்

"கேலியா இது, நீ கண்ணுடி எடுத்து உன் முகத்தைக் கண்டதில்லையா?"

"சரி! சரி! நாடகம்போல நடக்கிறதே."

"ஆமாம்! நாடகம்தான். காதல் நாடகம்".

"இது என்ன விபரீதப்பேச்சு கருப்பையா, யார் காதிலாவது விழப்போகிறது."

"நான் சற்று முன் ஜாக்கிரதை உள்ளவன். தோட்டக்கார முனியனை நாலு மணிக்கே அனுப்பிவிட்டேன் கடைக்கு."

"நீ ஏதோ தப்பு எண்ணம் கொண்டிருக்கிருய், கருப்பையா. தயவு செய்து அதனை விட்டுவிடு. நான் அப்படிப் பட்டவளல்ல."

"சாரதா! நான் இனி மறக்கப் போவதில்லை, உன்னை எப்படியாவது கூடவேண்டுமென நான் தவங்கிடந்து வந்தேன். இன்றுதான் தக்க சமயம்."

என்று கூறிக்கொண்டே சாரதாவின் கரத்தைப் பிடித்துக் கொண்டான். சாரதா திமிறினாள், பூக்கூடை கீழே விழுந்தது. மலர்கள் மண் மீது சிதறின, சாராதாவின் கண்களிலே நீர் பெருகிற்று. கருப்பையாவின் கரங்கள் அவள் உடலைக் கட்டிப் பிடித்துக்கொண்டன, அவனுடைய உதடுகள் அவள் கன்னத்தில் பதிந்தன. அந்த முத்தங்களின் ஓசை கேட்டு பறவைகள் பறந்தன. சாரதா கருப்பையாவிடம் சிக்கிவிட்டாள்.

சாரதா ஜென்மம் இப்போதுதான் சாபல்யமாயிற்று. அடி பைத்தியமே! ஏன் இவ்வளவு நடுங்குகிறாய்? பயப்படாதே! இந்த கருப்பையாவை சாமன்யமாக எண்ணாதே. நான் இந்த இன்பத்துக்காக எவ்வளவு பாடுபட்டேன். எத்தனை நாள் காத்துக்கொண்டிருந்தேன் தெரியுமா? தேனே, நான் இதற்காகத்தானே உன்னை தாய் வீட்டிலிருந்து இங்கு வரும்படி செய்தேன்" என்று களிப்பாய் கருப்பையா கூறினான், சாரதாவின் ஆடையைப்பற்றி இழுத்தான். கன்னங்களைக் கிள்ளினான். "ஒரே ஒரு முத்தம் —இன்னம் ஒன்று ஆம்! அப்படி. பலே பேஷ்" என்று கொஞ்சினான்,

சாரதா மயக்கத்தில் ஈடு பட்டவள் போல, அவன் இஷ்டபடியே நடந்தாள். அன்று தோட்டத்தில் சாரதா, தனது மூன்றாவது பிறப்புப் பெற்றாள்.

அவளுடைய கன்னிப் பருவம் காதலைக் கண்டது! அது கருவிலேயே மாண்டது. அவளுடைய இரண்டாம் பிறப்பு கணவனுக்கு மனைவியாக வாழ்க்கையில் ரசமின்றி இயந்திரம் போல இருந்தது. அன்று தோட்டத்தில் சாகசக்கார கருப்பையாவிடம் சிக்கியதால் அவள் மூன்ரும் பிறப்பு-வெளிக்கு கற்புக்கரசியாகவும், மறைவில் பிறருக்குப் பெண்டாவும் இருக்கும் வாழ்வைப் பெற்ருள்.

கணவனுக்கும் அவளுக்கும் மணமாயிற்று என்பதைத் தவிர வேறு பிணைப்பு இல்லை. அவன், அவள் கழுத்தில் தாலியைக் கட்டினுனே தவிர மனதிலே அன்பு என்ற முத்திரையைப் பதிய வைக்கவில்லை. எனவே அவள் கணவனிடம் கலந்து வாழுவதை தனது கடமை, உலகம் ஏற்படுத்திய கட்டு எனக் கொண்டாளே தவிர அதுவே தனது இன்பம் என்று கொள்ளவில்லை,

பரந்தாமனை மணந்திருந்தால், அவளை பதைக்கப் பதைக்க வெட்டினுலும் பாழும் கிணற்றில் தள்ளினுலும் பயப்பட மாட்டாள். பிறருடைய மிரட்டலுக்கு காலடியில் கோடி கோடியாகப் பணத்தைக் குவித்தாலும் நிமிர்ந்து நோக்கியிருக்க மாட்டாள் மற்ருெருவனை. அவள் காதற் செல்வத்தைப் பெறவில்லை. அவள் இன்பக் கேணியில் புகவில்லை. எனவே அவள் வாழ்க்கையில் இவனிடம் எளிதில் வழுக்கி விழுந்தாள்.

உலகம் தன் குற்றத்தைத் தெரிந்து கொள்ளாதிருக்கு மட்டும், கவலை இல்லை என்று எண்ணினுள்.

இனி, இந்த உலகில், ஜோராக வாழவேண்டும். சொகு சாக உடுத்தி நல்ல நல்ல நகைகள் போட்டுக்கொண்டு கண வர் கொண்டாட, ஆனந்தமாய் வாழவேண்டும். அதற்கு காரியஸ்தன் தயவிருந்தால், கணவனைச் சரிப்படுத்த முடியும். காரியஸ்தனே தன் கால் அடியில் கிடக்கிறான். இனி தனக் கென்ன குறை! என்று எண்ணினாள் சாரதா. சாரதா புது உருவெடுத்தாள். உடைகளை தேடித்தேடி அணிந்தாள். நகைகள் புதிதாகப் போட்டாள். ஒரு நாளைக்கு பத்து முறை முகத்தை அலம்புவாள். நிமிடத்துக்கொருமுறை கண்ணாடி முன் நிற்பாள். வலியச்சென்று புருஷனிடம் கொஞ்சுவாள். அவள் சரஸம் புரியத் தொடங்கினாள். கிழக் கணவன் அவள் வலையில் வீழ்ந்தான். கேட்டதைத் தந்தான் சாரதாவே கண்கண்ட தெய்வம் என்றான். ஆனால் அவன் அறியான் பாவம். அவள் கற்பை இழந்த சிறுக்கியானாள் என்பதை.

மயிலும், மாதரும் தமது அழகை பிறர் காணவேண்டு மென்ற எண்ணத்துடன் இருப்பதாக கவிகள் கூறுவர். மயிலின் தோகை அவ்வளவு வனப்புடன் இருக்கும்போது அது பிறர் கண்களுக்குத் தெரியாமல் மறைந்துகிடப்பின் பயன் என்ன? கண்டோர் மனதில் களிப்பை உண்டாக்கும் ஒப்பற்ற பணியை அழகு செய்கிறது. அந்த அழகு, அன் றலர்ந்த பூவிலுண்டு! அந்திவானத்திலுண்டு! அதரத்தில் தவழும் அலங்காரப் புன்சிரிப்பிலுண்டு. கிளியின் கொஞ்சு தலில், குயிலின் கூவுதலில், மயிலின் நடனத்தில், மாதரின் சாயலில் உண்டு! சிற்பத்தில் உண்டு. ஆனால் அதன்

சிறப்பை முழுவதும் காணவல்லார் மிகச்சிலரே. ஆனால் மாதரின் எழில் அத்தகையதன்று. அது கண்டவரை உடனே களிக்கவைக்கும் தன்மையது. காற்று வீசும் போது குளிர்ச்சி தருகிறேன் பாரீர் எனக் கூவுமா! அதன் செயல் நமக்கு அந்த இயற்கையான எண்ணத்தை உண்டாக்கும். அதுபோலவே, எந்த மாதும், என் அழகைக் கண்டாயோ எனக்கேளாய். ஆனால் தம் அழகைப் பிறர்கண்டனர், களித்தனர் என்பது அவர்களுக்குத் தெரியும். அதிலே பூரிப்பும் பெருமையும் அடையாத பெண்கள் மிகமிகச் சொற்பம்.

ஆனால், அழகு களிப்பதற்கு எங்ஙனம் உதவுகிறதோ அதைப்போலவே பிறரை அழிக்கவும் செய்கிறது. எனவே தான் புலவர்கள், மாதர்களின் விழியிலே அமிர்தமும் உண்டு, நஞ்சும் உண்டு என்றனர்.

இசைந்த உள்ளத்தை எடுத்துக் காட்டும் விழி, அமிர்தத்தைஅள்ளி அள்ளி ஊட்டும்! இல்லை! போடா! மூடா! எட்ட—நில் என்ற இதயத்துக்கு ஈட்டி போன்ற பதிலைத் தரும் விழிகள், நஞ்சு தரும். ஆம்! அமிர்தம் உண்டு ஆனந்தப்பட்டவர்களுமுண்டு. நஞ்சு கண்டு நலிந்தவர்களுமுண்டு! ஒரே பொருள் இருவகையான செயலுக்குப் பயன்படுகிறது! ஆனால் சாரதாவின் கண்கள் அமிர்தத்தையும் ஊட்டவில்லை. நஞ்சையும் தரவில்லை! இயற்கையாக எழும் எண்ணத்தை அடக்கி, மடக்கி மாற்றிக்காட்ட அவளது கண்கள் கற்றுக்கொண்டன!

உண்மையான அன்பு கனிந்திருந்தால், அக்காரிகை தன்னைக் காதலன் நோக்கும்போது தலை குனிந்து நிற்பாள். பளிங்குப் பேழையின் மூடியை மெதுவாக திறப்பாள். கண் சரேலெனப்பாயும் காதலன் மீது! நொடியில் மூடிக் கொள்ளும்! இடையே ஒரு புன் சிரிப்பு மின்னலெனத் தோன்றி மறையும்!

காதலற்று, வேறு எதனாலேனும், பொருள் காரணமாகவோ, வேறு போக்கு இல்லை என்ற காரணத்தாலோ கட்டுப்பட்ட காரிகை தன்னுடன் பிணைக்கப்பட்டுள்ளவன் தன்னைக் காணும்போது உள்ளத்தில் களிப்பு இருப்பினும் இல்லாது போயினும், பற்களை வெளியே காட்டியும், அவன் அப்புறம் சென்றதும், முகத்தில் மெருகு அற்று சோருவதும் உண்டு! தானாக மலர்ந்த மலருக்கும், அரும்பை எடுத்து அகல விரித்ததற்கும் உள்ள வித்தியாசம் இங்கும் உண்டு.

சாரதா மலராத மலர்! அரும்பு! அந்த அரும்பு முள் வேலியில் கிடந்தது. கருப்பையா, அதனை அகல விரித்தான்! அவன் ஆனந்தமடைந்தான்! சாரதா ஆனந்தமடைந்ததாக நடித்தாள்! அந்நடிப்பே அவனுக்கு நல்லதொரு விருந்தாயிற்று! நடிப்பும் ஒரு கலைதானே?

கருப்பையாவுக்கும் சாரதாவுக்கும் கள்ள நட்பு பெருகி வருவதைக் கணவனறியான். நல்ல தோட்டம். அழகான மாடு கன்று இருப்பது கண்டும், பெட்டியைத் திறந்ததும் பணம் நிரம்பி இருப்பதைப் பார்த்தும் பெருமை அடை

வதைப் போலவே தன் அழகிய மனைவி சாரதாவைக் கண்டு அவன் பெருமை அடைந்தான்,

“என் சாரதா குளித்துவிட்டு, கூந்தலைக் கோதி முடிக் காது கொண்டையாக்கி, குங்குமப் பொட்டிட்டு, கோயில் போகும் லட்சுமியோ, பார்வதியோ என்று தோன்றுகிறது. பூஜா பலன் இல்லாமலா எனக்கு சாரதா கிடைத்தாள்” என்று அவள் கணவன் எண்ணினன்.

அந்த லட்சுமி தனது செல்வத்தை, இன்பத்தை, கருப் பையாவுக்குத் தருவதை அவன் அறியான். அறிய ஒட்டாது அபின் தடுத்தது. நாளுக்கு நாள் அபினின் அளவும் அதி கரித்தது, கள்ள நட்பும் பெருகி வந்தது. இவ்வளவு சேதி யும் பரந்தாமன் செவி புகவில்லை.

அவன் செவியில்:

‘காயமே, இது பொய்யடா, நல்ல காற்றடைத்த பை யடா’ என, கருணனந்த யோகீசுவரர் செய்து வந்த கானமே, பரந்தாமன் செவிபு குந்தது. பரந்தாமன் பால சந்நியாசியாகக் காலந்தள்ளி வந்தான். காதலைப் பெற முடியவில்லை, கருத்தி லிருந்து சாரதாவை அகற்ற முடியவில்லை. அன்று மருண்டு ஊரை விட்டோடி, பாழும் சத்திரத்தில் படுத்துப் புரண்டு, கள்ளரைக் கண்டு கலங்கி, கடுக நடந்து தோப்புக்குள் புகுந்து துயின்ற நாட் தொட்டு, பரந்தாமன் ஊர் ஊராக அலைந்தான்! காவி கட்டியவர்களை எல்லாம் அடுத்தான்! “சாந்தி வேண்டும் சுவாமிகளே! உலக மாயையினின்று

நான் விடுபட அருளும் என் ஐயனே! உண்மை நெறி எது வெனக் கூறும் யோகியே'' என்று கேட்டான் பலரிடம்.

கருணனந்த யோகிசுவரர், தமது சீடராக இருப்பின் சின்னுட்களில், ''கைலை வாழ் ஐயனின் காட்சியும் காட்டு வோம்'' எனக்கூறினர். பரந்தாமன் சிகை வளர்த்தான். சிவந்த ஆடை அணிந்தான். திருவோட்டைக் கையி லெடுத்தான்.

''சங்கர சங்கர சம்போ, சிவ சங்கர, சங்கர சம்போ', என்று கீதம் பாடியபடி கிராமங் கிராமமாக, யோகீசுவர ருடன் சென்ருன்.

''சாரதா! ஒரு விசேஷம்!''

''என்ன விசேஷம்?''

''நம் வீட்டுக்கு விருந்தாளிகள் வருகின்றனர் நாளைக்கு!''

''யார் வருகிருர்கள்!''

''சென்னையிலிருந்து எனது உறவினர் ஒருவர் வரு கிருர். சிங்காரவேலர் என்பது அவர் பெயர். அவருடன் கோகிலம் என்ற அவர் தங்கை வருகிருள். அவர்கள் மகா நாசூக்கான பேர்வழிகள். பெரிய ஜெமீன் குடும்பம்.''

''வரட்டுமே, எனக்கும் பொழுது போக்காக இருக் கும்''

''கோகிலத்தை நீ கண்டால் உடனே உன் சிநேகிதை யாக்கிக் கொள்வாய், நன்ருகப் படித்தவள் கோகிலம்.''

"படித்தவர்களா! சரி சரி! எனக்கு அல்லியரசாணி மாலை தவிர வேறு என்ன தெரியும்? என்னைப் பார்த்ததும் அந்தம்மாள் நான் ஒரு பட்டிக்காட்டுப்பெண் என்று கூறி விடுவார்."

"கட்டிக் கரும்பே, நீயா ஒரு பட்டிக்காட்டுப் பெண்—" என்று கூறிக்கொண்டே சாரதாவின் ரம்மிய மான கன்னத்தைப் பிடித்துக் கிள்ளினான் கணவன்.

"இது தானே உங்கள் பழக்கம்! இது என்ன தவ டையா, ரப்பர் பந்தா இப்படிப் பிடித்துக் கிள்ளுவதற்கு. வரட்டும் அம்மா, சொல்லுகிறேன் நீங்கள் செய்த வேலை யை..." என்று கொஞ்சினாள் சாரதா.

"அடடா, பாவம்! கன்னம் சிவந்து விட்டதே! சாரதா. கிள்ளினதற்கே இப்படிச் சிவந்து விட்டதே..."

"போதும் நிறுத்துங்கள் விளையாட்டை. நான் பூப் பறிக்கப் போகவேண்டும்" என்று கூறிவிட்டு, சாரதா தன் கணவன் தன்னிடம் வசியப்பட்டு இருப்பதை எண்ணிப் பெருமை அடைந்தபடியே தோட்டத்துக்குச் சென்றாள். அங்கு கருப்பையா காத்துக் கொண்டிருந்தான்.

"ஏது! ரொம்பக் குஷிதான் போலிருக்கு!" என்று கூறிக் கொண்டே, சாரதாவின் கரங்களைப் பிடித்து இழுத் தான். "இது என்ன வம்பு! விடு கருப்பையா, அவர் வந்துவிட்டால் என்ன செய்வது" என்று கூறி கையை இழுத்துக் கொண்டாள். அந்த வேகத்தில் வளையல்

உடைந்து, கீறிக் கொண்டதால், பொன்னிற மேனியில், செந்நிற இரத்தத் துளியும் வந்தது.

"பார் நீ செய்த வேலையை" என்று கரத்தைக்காட்டினுள்.

"சூ மந்திரக்காளி! ஓடிப்போ!"—என்று கூறிக் கொண்டே, கருப்பையா அந்தக் கரத்திற்கு முத்தமிட்டான் அவன் அறிந்த மந்திரம் அது!

"ஒரு சங்கதி கருப்பையா, நாளைக்கு விருந்தாளிகள் வருகிறுர்கள். நாம் சற்று ஜாக்கிரதையாக நடந்துகொள்ள வேண்டும். யாரோ ஜெமீன்தாராம்; அவர் தங்கையாம், இருவரும் வருகிறுர்களாம்" என்று சாரதா எச்சரித்தாள்.

அன்றிரவு சாரதாவுக்கு நாளைக்கு எந்தக் கலர் புடவை உடுத்திக்கொண்டால் அழகாக இருக்கும், கார்டுகலர் சேலையா, ரிப்பன் பார்டர் சேலையா, மயில்கழுத்து காலரா மாதுளம் பழநிறச் சேலையா, ஜவ்வாது இருக்கிறதா, தீர்ந்து விட்டதா, என்ற யோசனைதான்.

மாதுளம் பழ நிறச்சேலை கட்டிக்கொண்டால்தான் நன்ருக இருக்கும் என முடிவு செய்தாள். உடனே முகம் மாறிற்று. ஆம்! முதன் முதலில் பரந்தாமனைக் காணும் போது மாதுளம்பழ நிறச்சேலைதான் கட்டிக் கொண்டிருந்தாள் சாரதா!

பழைய நினைவுகள், தோணி ஒட்டையில், நீர் புகுவது போல விரைவிற் புகுந்தன. தோணி, கடலில் அமிழ்வதைப் போல, அவள் துக்கத்தில் ஆழ்ந்தாள். தலையணையில் நீர்; கண்கள் குளமாயின! அவளது வாசனை திரவியப் பூச்சு வேலை சேருகிவிட்டது. சாரதா தனது உண்மைக் காதலை நினைந்து உள்ளம் கசிந்தாள். உறக்கமற்ருள்! மறுநாள் காலையில் முகவாட்டத்துடன் விருந்தாளிகளை வரவேற்ருள்

சிங்காரவேலுக்கு அந்த முக வாட்டமே, ஒரு புது. மோஸ்தர் அழகாகத் தெரிந்தது. கோகிலம் கத்திரிப் பூக் கலர் சேலைதான்—சாரதாவுக்கு ஏற்றது என்று யோசனை கூறினள். விருந்தாளிகள் வந்த ஒரு மணி நேரத்துக்குள் சாரதாவுடன், வருஷக் கணக்கில் பழகினவர்கள் போல நடந்துகொண்டனர். ஒரே பேச்சு! சிரிப்பு! கோகிலத்தின் குட்டிக் கதைகளும் சிங்காரவேலின் ஹாஸ்யமும் சாரதா வுக்குப் புதிது. அவைகள் அவளுக்குப் புதியதொரு உலகைக் காட்டிற்று. அதிலும் அந்த மங்கை புகுந்தாள்!

ஒரு முறை வழி தவறிவிடின் பிறகு எவ்வளவோ வளைவுகளில் புகுந்தாகத்தானே வேண்டும்.

அத்தகைய ஒரு வளைவு சிங்காரவேலர்—கோகிலா பிரவேசம்!

கோகிலா அழகியல்ல! சாரதா அதைத் தெரிந்து கொண்டாள். என்ருலும், கோகிலத்தின் நடை உடை பேச்சில் ஒரு தனி வசீகரம் கண்டாள். கோகிலத்தின் கண்

கள் சில மணி நேரங்களில் சாரதா—கருப்பையா நட்பைக் கண்டுவிட்டன. அவள் வாய், ஒரு நொடியில் சிங்கார வேலருக்குக் கூறிவிட்டது அவரது மூளை உடனே சுறு சுறுப்பாக வேலை செய்ய ஆரம்பித்துவிட்டது. சிங்கார வேலரும், கோகிலமும் செல்வக் குடி பிறந்தோர். செல்வத்தை வீண் ஆட்டத்தில் செலவிட்டு பிறகு உல்லாசக் கள்ளராயினர்! கோகிலம் தன் கணவனை வீட்டுக்கு வரவே கூடாது எனக் கண்டிப்பாக உத்தரவிட்டுவிட்டவள். சிங்காரவேலர் முதல் மனைவி பிரிந்த துக்கத்தை மறக்க முடியுமா—என்பவர். தாரமிழந்தவர். இருவருமாக பழைய ஜெமீன் பெருமையைக்கூறி, ஊரை ஏய்ப்பதும் உலாவுவதுமாகவே இருந்தனர்.

சாரதா—கருப்பையா உறவு நல்லதொரு தங்கச்சுரங்கம் என்று சிங்காரவேலன் எண்ணினான். அவனுடைய சிந்தனையில் சூதுவலை உடனே வளர்ந்தது. கோகிலத்திடம் கலந்தான்.

''பேஷான யோசனை அண்ணா! சரியான யோசனை!',

''நம் யோசனை எது சரியானதாக இராமற் போய் விட்டது கோகிலம்.''

''இந்த 'விடுமுறை' வியாபார தோரணையில் நமக்கு மிகச் சிறந்தது.''

''ஆமாம்! நாம் போடப்போகும் 'முதல் தொகை' மிகச் சொற்பம். கோடாக் நாதனின் கருணையால், நமக்குக் குறைவே ஏற்படாது'' என்றான் சிங்காரவேலன்.

கோகிலா அண்ணனின் சமர்த்தை எண்ணிச் சிரித்தாள்.

அண்ணனும் தங்கையுமாகச் சிரிக்கும் நேரத்திலே சாரதா, அங்கு வந்தாள். சிரிக்கும் காரணம் என்னவோ என்று கேட்டாள்.

''நாங்களா! சிரிப்பதா! ஏன் அண்ணு, நாம் எதற்காகச் சிரித்தோம்''–என்று கோகிலம் கேட்டாள். அவள் கேட்ட கேள்வியும், பேசிய விதமும் சாரதாவுக்கும் சிரிப்பை உண்டாக்கிவிட்டது.

மூவருமாக விழுந்து விழுந்து சிரித்தனர்! ''பேதைப் பெண்ணே சிக்கினுயா'' என்று சிங்காரவேலன் எண்ணினுன்!

''குட்டி மகா கெட்டிக்காரியாக இருக்கிருள், எங்கே நமது கண்களுக்கு விஷயம் தெரிந்துவிடுகிறதோ.வென்று மிக ஜாக்கிரதையாக நடந்துகொள்கிருள். அவனுவது பரவாயில்லை. நான் பார்க்கவில்லை யென்று எண்ணிக்கொண்டு சில சமயங்களில் அவளை நோக்கி சிரிக்கிருன். கொஞ்சுகிருன், இருவரும் கைப்பிடியாகக் கிடைக்கவேண்டும். அது போட்டோ எடுக்கப்படவேண்டும். அது தான் என் பிளான். சமயம் வாய்க்கவில்லையே'' என்ருன் சிங்காரவேலன் கோகிலத்திடம்.

''அண்ணு! பெண்கள் எப்போதும் நிறைகுடம் போன்றவர்கள். உணர்ச்சியை ததும்பவிட மாட்டார்கள். ஆண்கள் அப்படியல்லவே. நிழலசைந்தாலும் அவள் அசைந்தாள் என்று எண்ணிக் கொண்டு அவதிப்படுவார்கள். இது இபற்கை தானே'' என்ருன் கோகிலம்.

"அது எப்படியாவது தொலையட்டும். நமக்கு வேண்டியது நடக்கவேண்டுமே" என்றான் வேலன். "இது ஒரு பிரமாதமா! நாளை மாலை, சாரதா கருப்பையாவின் தோளைப் பிடித்திழுத்து முத்தமிடும் காட்சியை நீங்கள் போட்டோ எடுக்கலாம். அந்தக் காட்சியை நான் டைரக்ட் செய்கிறேன்" என்றாள் கோகிலம்.

சிங்காரவேலன் முகம் சற்று சுளித்தது. கோகிலம் சிரித்துக்கொண்டே "ஏன் அண்ணா, உமக்கும் சாரதா மீது......"என்று கேலி செய்தாள்.

"தூ! தூ! நான் பெண்கள் மீது ஆசை வைப்பதை விட்டு பல வருஷங்களாகி விட்டன" என்றான் வேலன்.

"சரி! நான் நமது சினிமா காட்சிக்கு வேண்டிய ஏற்பாடு செய்கிறேன்" என்று சொல்லிவிட்டு, கோகிலம் கருப்பையாவைத் தேடிக்கொண்டு தோட்டத்துக்குச் சென்றாள்.

"கருப்பையா! நாளைக்கு நாங்கள் ஊருக்குப் போகப் போகிறோம்" என்று கோகிலம் சம்பாஷணையைத் துவக்கினாள்.

"ஏனம்மா! எங்கள் ஊர் பிடிக்கவில்லையோ" என்று கருப்பையா கேட்டான்.

"பிடிக்கவில்லையா! சரிதான், ரொம்ப அதிகமாகப் பிடித்துவிட்டது. இன்னம் கொஞ்ச நாள் போனால் என்

அண்ணனுக்கு பித்தம் பிடித்துவிடும் போல் இருக்கிறது'' என்றாள் கோகிலம்.

''நீங்கள் சொல்வது எனக்கொன்றும் விளங்கவில்லையே'' என்றான் கருப்பையா.

''கருப்பையா, நீ எங்கும் வெளியில் சொல்லக்கூடாது மிக ரகசியம். வெளியில் தெரிந்தால் தலை போய்விடும்'' என்றாள் கோகிலம்.

''என்ன இரகசியம்?'' என்று கேட்டான் கருப்பையா.

கோகிலம், அவன் காதில் 'குசுகுசு' வென ஏதோ கூறினாள். கருப்பையாவின் கண்களில் தீப்பொறி பறந்தது.

''அதனால் தான் கருப்பையா, வம்பு வளருவதற்குள் நாங்கள் போய் விடுகிறோம். அவளோ, பாவம் கிழவனின் மனைவி. என் அண்ணனோ, மகா ஷோக் பேர்வழி. பஞ்சு அருகே நெருப்பை வைத்து விட்டு, பற்றி எரிகிறதே என்று பிறகு நொந்து கொள்வதில் என்ன பயன்?'' என்று வேதாந்தம் பேசிவிட்டு. விஷயத்தை எங்கும் மூச்சு விடக்கூடாது என்று கோகிலம் கேட்டுக் கொண்டாள். கருப்பையாவுக்கு கவலை அதிகரித்து விட்டது. அடடா! மோசம் வந்து விடும் போலிருக்கிறதே என்று கலங்கினான். சாரதா மீது அளவு கடந்த கோபம் அவனுக்கு. சும்மா விடக்கூடாது. கேட்டுத் தீர வேண்டும். சிறுக்கி இவ்வளவு தூரம் கெட்டு விட்டாளா! அந்த சிங்கார வேலன் என்ன சொக்குப்பொடி போட்டானோ! என்று ஏதேதோ எண்ணி ஏங்கினான்.

கோகிலத்துக்கு, தான் மூட்டி விட்ட கலகம் வேலை செய்யுமென்று தெரிந்து விட்டது. தன் சாகசப் பேச்சில் கருப்பையாவைப் போன்ற காட்டான் ஏமாறுவது சுலபந் தானே என எண்ணி, அண்ணனிடம் தன் வெற்றியைக் கூறவும், சாரதாவும், கருப்பையாவும் தனியாக சந்திக்கும் நேரத்தில், ரசமான காட்சி நடந்தே தீருமெனச் சொல்லவும் சென்றாள்.

செல்வம் ஒருவருக்கு இருந்து மற்றொருவருக்கு இல்லாது போவது அவ்வளவு அதிகமான பொறாமையைக் கிளப்புவதில்லை. அது "கொடுத்து வைத்தவன்," "ஆண்டவன் அருள்", "பூர்வ ஜென்ம புண்ணிய பலன்", என்ற சமாதானங்களால் சாந்தியாகிவிடும். ஆனால் காதல் செல்வத்தின் விஷயம் அங்ஙனம் அன்று.

"உருகி உடல் கருகி உள்ளீரல் பற்றி" விடும் காதல் சம்மதக் கண்ணொளியால் தணிக்கப்பட்டு, காதல் விளையாட்டுகளால் சாந்தியாக்கப்பட்டு இன்ப வெள்ளத்தில் மூழ்கி இருக்கும் ஒருவருக்கு தன் காதலில் பிறனொருவன் புகுவதாகவோ கெடுக்கவோ கண்டால், கோபமும் கொதிப்பும் உள்ளத்தின் அடிவாரத்திலிருந்து கிளம்பும்.

பசியினால் களைத்துப் படுத்துத் துயிலும் புலியின் வாலை வேண்டுமானாலும் வளைத்து ஒடிக்கலாம். ஆனால் காதல் நோயில் சிக்கிக்கொண்டவனைத் தொந்தரவு செய்தால் அவன் புலியினும் சீறுவான், எதுவுஞ் செய்வான் எதற்

கும் அஞ்சான், எதையுங் கருதான். ஆம்! இன்னமும் மனி தன் மாடமாளிகை கூடகோபுரத்தைவிட, மங்கையின் அன்பையே பெரிதென எண்ணுகிருன். பொன்மணி பொருளைவிட தனது பிரியையின் புன்சிரிப்பே பெரிதெனக் கருதுகிருன். எதையும் இழப்பான். காதலை இழக்கத் துணியான். எது இல்லாமற் போய்விடினும், "இதுதான் நம் நிலை என் செய்வது' எனத் தன்னைத்தானே தேற்றிக் கொள்வான், ஆனுல் மனதில் குளிர்ச்சி ஊட்டும் மனேகரி ஒருவள் இல்லையெனில் அவன் செத்த வாழ்வு வாழ்வ தாகவே கருதுவான். பருவமும் பழக்க மிகுதியால் வரும் சலிப்பும் ஒரு சிறிது இக்குணத்தைக் குறைக்கலாம். அடி யோடு மாற்றுவதென்பதோ அந்தக் குணமே வர ஒட்டாது தடுத்து விடுவது என்பதோ முடியாத செயலாகும். கிடைக்காவிட்டால் கிலேசப்படும் உள்ளம், கிடைத்ததைக் கெடுக்க யாரேனும் முற்பட்டால், அவர்களைக் காலடி போட்டு மிதித்துத் துவைத்து விடவே எண்ணும்.

கருப்பையா அந்நிலையில்தான் இருந்தான். அவன் கொண்ட நட்பு, கள்ளத்தனமானதுதான்—துரோகத்தின் மீது தோற்றுவிக்கப்பட்டதுதான். மருண்ட இளமனதை மிரட்டிப் பெற்றதுதான் என்ருலும் "தான் பெற்ற இன் பம் பிறனுக்குச் செல்வதென்ருல்?" அவமானம் பொறுக்க முடியவில்லை. சிங்காரவேலனுக்கும் சாரதாவுக்கும் ஏதோ நடக்கும் போலத் தோன்றுகிறது என கோகிலம் கயிறு திரித்தாள். அது கருப்பையாவின் மனதைக் கலக்கி விட்டது.

மறுநாள் மாலை, தோட்டத்தில் கோகிலம் குறிப்பிட்ட படியே ஊடல் காட்சி ஆரம்பமாயிற்று. கருப்பையா, கருத்து. வியர்க்கும் முகத்துடன், பெருமூச்சு விட்டுக் கொண்டு, வேலியைச் சரிப்படுத்திக்கொண்டிருந்த நேரத்தில் சாரதா வந்தாள். அவள் கோகிலம் செய்துவிட்டுப் போன குட்டிக் கலகத்தையும் அறியாள். கோடியில் மர மறைவில் 'கோடக்'குடன் ஒளிந்துகொண்டு சிங்கார வேலன் இருப்பதையும் அறியாள். அன்றெல்லாம் கருப்பையா முகத்தைக் கோணலாக்கிக் கொண்டும், சிடு சிடு வெனப் பேசிக்கொண்டும் இருந்தது கண்டு ஒன்றும் புரியாது தத்தளித்தாள். அதனை விசாரிக்கவே அங்கு வந்தாள்.

''கருப்பையா–''

பதில் இல்லை......

''கருப்பையா......''

''கந்தன் ஒரு வேலையையும் சரியாகச் செய்யமாட்டேனென்கிறான். ஆமாம்! அவனுக்கு நிலைமை மாறிவிட்டது. புது கிராக்கி–'' என்று தோட்டக்காரக் கந்தனை சாக்காக வைத்துக்கொண்டு, கருப்பையா பேசினான், சாரதாவுக்கு அப்போது தான் கருப்பையா ஏதோ தன் மீது சந்தேகங் கொண்டிருக்கிறான் என்பது தெரிந்தது. உடனே கோபமும் வந்தது. இருவரும் கோபித்துக்கொண்டே இருந்தால் என்ன செய்ய முடியும்! அதிலும் இவள் ஒரு பெண்! வழி தவறி நடந்த பெண்!! எனவே. பணிந்து போக வேண்டி

யவள் தானே என எண்ணினாள். அந்த ஒரு விநாடியில் அவள் மனக்கண் முன்பு, தனது முன்னாள் நிலை யாவும், படமெடுத்தது போல் தோன்றிற்று.

ஒரு முறை தவறினாள்—பெற்றோர் தவற விட்டார்கள்—அது முதல், சருக்கு மரத்தில் செல்வது போல, நழுவி நழுவி வழுக்கி வழுக்கி கீழுக்கு வந்து, கடைசியில் திருட்டுத்தனமாகப்பெற்ற ஒரு முரட்டு ஆளுடன், கொஞ்ச வேண்டிய நிலையும் வந்ததல்லவா—காரணமின்றி அவன் கொண்ட கோபத்துக்கும் சமாதானம் கூற வேண்டி வந்ததல்லவா—என்று எண்ணியதும், சாரதாவின் கண்கள் தானாகக் கலங்கின.

மெள்ள நடந்து, கருப்பையாவை அணுகினாள். அவன் அங்கு மரமென நின்றான். "சொல்லு கருப்பையா, என் மீது ஏன் உனக்குக் கோபம்? நான் என்ன செய்தேன்?" என்று வீட்டு எஜமானி சாரதா, காரியஸ்தன் கருப்பையாவைக் கேட்டாள்—காதலால் கட்டுப் பட்டு அல்ல, அவனிடம் கண்மூடித்தனத்தால் கட்டுண்டகாரணத்தால்.

"எனக்கென்னம்மா உங்கள் மீது கோபம், நீங்கள் வீட்டு எஜமானியம்மா, நான் கணக்கு எழுதி காலந் தள்ளுபவன்" என்று எரிகிற நெருப்பை ஏறத்தள்ளினான் கருப்பையா.

"இதோ, இப்படிப்பார், விஷயத்தைச் சொல்லு. வீணாக என் மனதைப் புண்ணாக்காதே" என்றாள் சாரதா.

கருப்பையாவின் தோளைப் பிடித்து இழுத்துக் கொண்டே. கோடியில் இருந்த சிங்கார வேலன், பதுங்கியபடி சற்று அருகிலிருந்த மரத்தின் பின்புறம் நின்று கொண்டு. கோடாக்கை சரிபடுத்திக் கொண்டான்.

"மனம் புண்ணுகுமா! மகராஜி நீ. நான் இங்கு மாதச் சம்பளத்துக்கு இருப்பவன். என் கோபம் உன் மனதைப் புண்ணுக்குமா" என்றான் கருப்பையா.

"விஷயத்தைச் சொல்கிறாயா, நான் விழுவதற்கு குளம் குட்டை தேடட்டுமா" என்று உறுதியுடன் கேட்டாள் சாரதா.

"ஐயோ! அம்மா! அப்படி ஒன்றும் செய்து விடாதே சிங்காரவேலருக்கு யார் சமாதானங் கூறுவது" என்று கிண்டல் செய்தான் கருப்பையா.

சாரதாவுக்கு விஷயம் விளங்கி விட்டது. தனக்கும் சிங்காரவேலுக்கும் ஏதோ தொடர்பு ஏற்பட்டதாக எண்ணிக் கொண்டுதான் கருப்பையா கோபித்தான் என்பது தெரிந்து விட்டது. அவளையும் அறியாமலே சிரிப்பு வந்தது.

"கருப்பையா, விஷயம் தெரிந்து கொண்டேன். நீ நினைப்பது தவறு. ஆண்டவனறியக் கூறுகிறேன், சிங்காரவேலுக்கும் எனக்கும் துளியும் நேசம் கிடையாது. நீ இதனை நம்பு, வீண் சந்தேகம் வேண்டாம்" என்றாள் சாரதா உறுதியுடன்.

துளியும் தட்டுத் தடங்கலின்றி நிதானமாக சாரதா கூறியதைக் கேட்ட கருப்பையாவுக்கு பாதி சந்தேகம் போய் விட்டது.

''கோகிலம் சொன்னுளே......''என்று ஆரம்பித்தான்

''கோகிலம் குறும்புக்குச் சொல்லி இருப்பாள்''என்று கூறிக்கொண்டே, சாரதா, கருப்பையாவின் இரு தோள் பட்டைகளேயும் பிடித்துக் கொண்டே அவன் முகத்தை நோக்கியபடி. ''கருப்பையா, நான் ஏதோ இப்படிக் கெட்டு விட்டேனே தவிர, நான் சுபாவத்தில் கெட்டவ ளல்ல'' என்ருள். கருப்பையாவின் மனம் இளகிற்று. சாரதாவின் தலேயைத் தடவினுன்.

''சாரதா, கண்ணே, உன்னே நான் இழக்கமாட்டேன். உயிர் எனக்கு நீதான்'' என்று கொஞ்சினுன். சாரதா சிரித்தாள். கருப்பையா அவளே, அருகிலிழுத்து முத்த மிட்டான்.

''கடக்'' என்ற சப்தமும், ''சபாஷ்'' என்ற பேச்சும் கேட்டு, இருவரும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தனர். கையில் காமிராவுடன் சிரித்தபடி சிங்காரவேலன் நிற்கக் கண்டனர்.

''ஆ! ஐயோ!''

''என்ன! நீயா ?''

''பதறவேண்டாம்!''

பெருமூச்சுடன் கருப்பையா நின்றுன். உடம்பெல்லாம் துடிக்க சாரதா நின்றுள். சிரித்துக்கொண்டே சிங்காரவேலன் நின்றுன்.

“நான் உல்லாசப் பிரயாணம் செய்வதே, இவ்விதமான அழகு ததும்பும் காட்சிகளை போட்டோ எடுப்பதற்குத்தான். இயற்கையின் அழகுகள் எனக்கு மெத்தப் பிரியம். அதனைவிட உணர்ச்சிதரும் உல்லாசக் காட்சிகள் என்றுல் நான் விடவே மாட்டேன். மலர் அழகுதான்! போட்டோ எடுத்தாலும் அழகாகத்தானே இருக்கும். ஆனுல் அந்த மலரிடம் வண்டு பறந்து சென்று தேன் உண்டு களிக்கும் காட்சி இருக்கிறதே, ஆஹா! நான் என்ன சொல்வேன் அந்த ரம்மியத்தை...” என்று சிங்காரவேலன் பிரசங்கம் செய்ய ஆரம்பித்தான்,

சிவ பூஜையில் கரடி புகுந்ததுடன், கவி வேறு பாடினுல் எப்படி இருக்கும்?

“சாரதா. இந்த ஒரு தோட்டக் காட்சிக்கு மட்டும் நியூ தியேட்டர்சார் பத்தாயிரம் கொடுப்பார்கள். கதாநாயகனைத்தான் மாற்றவேண்டும். காட்சியில் குற்றமில்லை. நீ மிக அழகுபட நடித்துமுள்ளாய். திகைக்க வேண்டாம். கருப்பையா, முட்டாளுக்கு முத்து கிடைத்ததைப்போல உனக்கு இந்த மங்கை கிடைத்தாள். நீ அதிர்ஷ்டசாலிதான், ஆனுல் நான் உன்னைவிட அதிர்ஷ்டசாலி. உறுமாதே. ஊரார் அறியும்படி இப்படத்தை வெளியிட்டால் உன் கதி என்னுகும்? இந்த உல்லாசியின் நிலைமை என்னுகும்?”

"கப்சிப்!! இங்கே நிற்கவேண்டாம். அதோ யாரோ வரும் காலடிச் சப்தம் கேட்கிறது. இன்று இரவு 12 மணிக்கு சாரதா, நீ என் அறைக்கு வரவேண்டும்........ வேண்டாம் வேண்டாம். நீ வரவேண்டாம் உன்னை நான் தனியாகச் சந்திக்கமாட்டேன்—கருப்பையா, நீ வா' சில நிபந்தனைகள் கூறுகிறேன். அதன்படி நீங்கள் நடக்கவேண்டும்" என்று கண்டிப்பாகக் கூறிவிட்டு சிங்காரவேலன் போய்விட்டான்.

சாரதாவும் கருப்பையாவும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தனர்.

"விதியே தலைவிதியே" என்று சாரதா விம்மினாள்.

"சாரதா! யரோ வருகிறார்கள். கவலைப்படாதே, நான் பார்த்துக்கொள்கிறேன்" என்று கூறினான் கருப்பையா.

"என்னடி மெத்த தளுக்குக் காட்டுகிறாய்" என்று இனிய குரலில் இசைத்துக்கொண்டே கோகிலம் அங்கு வந்து சேர்ந்தாள்.

இரவு கருப்பையா, சிங்காரவேலன் அறைக்குச் சென்றான். மடியில் கூரான ஈட்டியுடன், சாரதாவின் மானத்தையும், தன் மரியாதையையும் வாழ்வையும் அழிக்கக் கூடிய அந்த வேலனின் உயிரைப் போக்கி விடுவது என்ற முடிவுடன்.

ஒரு கொலை செய்வதற்கு வேண்டிய அளவு உறுதி அவன் முகஜாடையில் காணப்பட்டது.

வேலன் ' வா கருப்பையா, சொன்னபடி வந்து விட்டாயே'' எனத் துளியும் தடுமாற்றமின்றி பேசினன்.

கருப்பையாவின் கரம், மடியில் சொருகி வைக்கப்பட்டிருந்த ஈட்டியின் மீது சென்றது.

வேலனின் கூரிய பார்வை ஏதோ ஆபத்து இருக்கிறது என்பதை உணர்த்திற்று. ஆனால் அவன் துளியும் அசையவில்லை. படுக்கையின் மீது உட்கார்ந்தபடியே ஒரு முடிவுக்கு வந்தான்.

சாமர்த்தியமாக கருப்பையாவை ஏமாற்ற வேண்டும்.

''ஓ! கோகிலா, வாயேன் உள்ளே'' என்று கூறினன். கோகிலம் வருவது போலப் பாசாங்கு செய்து கொண்டே.

முரட்டுக் கருப்பையா, சரலெனத் திரும்பினன் கதவுப் பக்கம். வேலன் புலி போல அவன் மீது பாய்ந்து மடியில் இருந்த ஈட்டியைப் பிடுங்கிக் கொண்டான்.

சட்டை கிழிந்து விட்டது கருப்பையாவுக்கு, தான் முட்டாள் தனமாக நடந்து கொண்டதை எண்ணினன்.

வேலன் இளித்தான். ''கருப்பையா, நான் சொல்வதைக் கேள். என்னிடம் உன் முரட்டுத்தனம் பலிக்காது. மூடு கதவை. இப்படி உட்கார்'' என்று கட்டளையிட்டான்

பெட்டியிலிட்ட பாம்பென அடங்கிய கருப்பையா, மிகப்பரிதாபத்துடன். ''ஐயா, என்னைப்பற்றிக் கூட கவலையில்லை. அந்தப் பெண்ணின் மானம்-அதைக் காப்

பாற்றும். அவசரப்பட்டு எதுவும் செய்ய வேண்டாம்'' என்று கெஞ்சினன்.

''கருப்பையா, நான் அவசரப்படுகிற வழக்கமே கிடையாது தோட்டத்தில் உங்கள் சல்லாபத்தைக் காண எவ்வளவு நேரம் பொறுமையாக இருந்தேன் தெரியுமா? இன்று தான் என்ன, ஈட்டி முனைக்கு எதிரில் கூட நான் அவசரப் படவில்லை'' என்றான் வேலன்.

''அந்தப் போட்டோ அதனைக் கொடுத்துவிடு. உனக்குக் கோடிப் புண்ணியம் உண்டு உன் பிள்ளைகுட்டிகளுக்குப் புண்ணியம், ஒரு குடும்பத்தைக் கெடுக்காதே'' என்று கருப்பையா வேண்டினன். ''உளராதே கருப்பையா, குடும்பத்தை நானு கெடுத்தேன்'' என்று கோபித்தான் வேலன்.

கருப்பையா வேலன் காலில் விழுந்தான், வேலன், ''சரி சரி சர்வ மங்களம் உண்டாகட்டும். எழுந்திரு, நான் சொல்வதைக் கேள். முடியாது என்று சொல்லக் கூடாது. நாளைக் காலைக்குள் எனக்கு ஆயிரம் ரூபாய் வேண்டும். கொடுத்தால் உடனே நாங்கள் போய் விடுகிறோம். இல்லையேல் நீயும் சாரதாவும் போக வேண்டிய இடத்திற்குப் போகத்தான் வேண்டும்'' என்றான் வேலன்.

''ஆயிரம் ரூபாயா......என்னிடம் இருப்பதே கொஞ்சந் தானே'' என்றான் கருப்பையா.

''கிடைத்தற்கரிய செல்வத்தைப் பெற்ற நீயா, ஒரு ஆயிர ரூபாய்க்கு அஞ்சுவது'' என்றான் வேலன்.

'சரி' என ஒப்புக்கொண்டான் கருப்பையா, ஆனுல் ஆயிர ரூபாய் தந்ததும் போட்டோவை (நெகட்டிவுடன்) தன்னிடம் தந்துவிட வேண்டுமெனப் பேரம் பேசினுன்.

"அது முடியாது. ஆயிரம் ரூபாய், நான் வெளியே போவதற்கு படத்தை நான் வெளியிடாதிருப்பதற்கு, மாதாமாதம் 200 ரூபாய் தவருமல் என் சென்னை விலாசத்துக்கு அனுப்பிக் கொண்டு வரவேண்டும். நான் கண்டிப்பான பேர்வழி. ஒரு முறை பணம் வருவது தவறினுலும் படம் வெளிவரும். படம் வெளிவந்தால் என்ன ஆகும் என்பது உனக்கே தெரியும். சாரதா கர்ப்பவதியல்லவா! அவள் பிள்ளை தெருவில் அலைய வேண்டித்தான் வரும்" என்ருன் வேலன் "கண்டிஷன்கள்" போட்டான்.

"ஐயா உனக்குக் கருணை இல்லையா" என்று கெஞ்சினுன் கருப்பையா.

"கருணை இருந்தது சில வருஷங்களுக்கு முன்பு இப்போது கருணை இல்லை. இப்போது உலகமும் உல்லாசமும் எதிரே இருக்கிறது" என்ருன் அந்த உல்லாசக்கள்ளன்.

வேறுவழியின்றி கருப்பையா ஒப்புக்கொண்டான்.

மறுதினம் ஆயிரம் ரூபாய் (பாங்கியில் அவன் போட்டு வைத்திருந்த பணம் அதுதான்) கொடுத்தான்.

உல்லாசக் கள்ளர்கள், வீட்டில் எல்லோரிடமும் விடைபெற்றுக்கொண்டு ஊருக்குப் பிரயாணமாகினர்.

வேலனே, கோகிலமோ, பேச்சிலோ, நடவடிக்கையிலோ, சாரதா கருப்பையா மர்மக் காதலைப்பற்றிக் கண்டு கொண்டதாக, சாரதாவின் புருஷனுக்குக் காட்டிக்கொள்ளவேயில்லை.

''கண்ணே, சாரதா, போய் வரட்டுமா? ஆண் குழந்தை பிறந்தால், பிரபாகரன் என்று பெயரிடு. பெண் பிறந்தால் பிருந்தா, கவனமிருக்குமா'' என்று கொஞ்சினுள் கோகிலம். சாரதாவிடம்.

சாரதாவின் புருஷன், விருந்தாளிகளை மிக மரியாதையுடன் அனுப்பிவைத்தார். அபின் உலகில் அலையும் அவருக்கு மர்ம சம்பவங்கள் என்ன தெரியும் பாபம்!

கருப்பையாவுக்கும், சாரதாவுக்கும் மாதாமாதம் 200 ரூபாய் சேகரிப்பது தவிர வேறு வேலை கிடையாது.

கருப்பையா ஒய்ந்த வேளையில் எல்லாம், எந்தக் கணக்கை எப்படி மாற்றுவது, எப்படி சூதுசெய்வது என்ற யோசனையிலேயே இருந்தான்.

வீட்டில் தன் புருஷனின் பரம்பரைச் சொத்துக்களைக் கொஞ்சங்கொஞ்சமாக கணவனுக்குத் தெரியாமல் திருடித் திருடி கருப்பையாவிடம் தந்துவந்தாள் சாரதா.

செக்கு இழுத்து இழுத்து மாடுகெட, எண்ணெயைத் தடவித்தடவிப் பிறர் மினுக்குவதைப் போல சாரதாவும்

கருப்பையாவும் பாடுபட்டு, திருடி, சூது சூழ்ச்சி செய்து பணம் சேர்த்துச் சேர்த்து அனுப்ப அதனை வைத்துக் கொண்டு ஆனந்தமாக விஸ்கியும், பிராந்தியும் வாங்கிக் குடித்துச் சிரித்தான் சிங்காரவேலன்.

''இப்படியும் எனக்குத் தொல்லை வருமா, நீ செய்த வேலைதானே. பாவி, உன்னால்தானே நான் இப்பாடுபடு கிறேன், திருடுகிறேன், அவர் என்றைக்கேனும் கண்டு விட்டால், எங்கே பச்சைக்கல் பதக்கம், எங்கே கழுத்துக் கண்டி என்று கேட்க ஆரம்பித்தால், நான் என்ன செய் வேன்'' என்று சாரதா, சிந்தை நொந்து கருப்பையாவைக் கேட்பாள். அவன் பலமுறை சாதகமாகவே பதில் கூறி னான். சஞ்சலமும் சலிப்பும் அவனுக்கு ஆத்திரத்தை மூட் டிவிடுமல்லவா? ''சரி! என்னைப் பற்றிக் கவலைப்பட வேண் டாம். அவன் படத்தைக் காட்டிவிடட்டும். நான் ஒன் றும் சந்நியாசி அல்ல! உனக்குத்தான் ஆபத்து! ஓட வேண் டியதுதான் நீ வீட்டைவிட்டு'' என்று மிரட்டினான்.

''படுபாவி! என்னைக் கெடுத்ததுமின்றி, மிரட்டியுமா பார்க்கிறாய். நீ நாசமாய்ப் போக, உன் குடிமுழுக'' என்று சாரதா தூற்றினாள்.

ஆனால், மாதம் முடிகிறது என்றதும் இருவரும், தகராறுகளை விட்டுவிட்டு, பணத்தைச் சேர்த்து அனுப்பு வதிலேயே அக்கரையாக இருப்பார்கள். ஏன்! வயிற்றி லுள்ள குழந்தை வாழ்க்கையில் இழிச்சொல்லோடு இருக் கக்கூடாதே! அதற்குதான்!

''பாவி, படத்தைக்காட்டி, என் முரட்டுக் கணவன் என்னைத் துரத்திவிட்டால் என் குழந்தையின் கதி என்னவாகும்? கண்டவர் ஏசுவார்களே, அதோ அந்தப்பிள்ளை, வீட்டைவிட்டு ஓடிவிட்டாளே, சாரதா, அவள் பிள்ளை என்றுதானே தூற்றுவார்கள். நான் செய்த குற்றம் என் வாழ்க்கையை கெடுக்குமே'' என்று எண்ணும்போது சாரதாவின் நெஞ்சு ''பகீர்'' என்றுகும். மாதங்கள் ஆறு பறந்தன. மாதம் தவருது பணம் போய் சேர்ந்தது. ஒரு ஆண் குழந்தையும் சாரதாவுக்குப் பிறந்தது. கருப்பையாவின் கணக்குப் புரட்டுகளும் சாரதாவின் திருட்டுகளும் அதிகரித்தன. இவர்களின் நல்ல காலத்திற்கு அடையாளமாக, சாரதா புருஷனின் அபின் தின்னும் வழக்கம் அதிகமாகிக் கொண்டே வந்தது.

இதே நேரத்தில் கருணுநந்த யோகீசுவரருக்கும், பரந்தாமனுக்கும் சச்சரவு வளர்ந்தது. மன சோகத்தை மாற்ற காவியணிந்த யோகியின் சேவையை நாடிய பரந்தாமன் காவிபூண்ட கருணுநந்தன், காசாசை பிடித்த கயவன் என்பதை உணர்ந்தான். அவனுக்கு தன் நிலைமையில் வெறுப்பு ஏற்பட்டது.

யோகியைத் தண்டிக்கத் தொடங்கினுன். ஊரை ஏய்க்க, உருத்திராட்சமா? கண்டவரை மயக்க காவியா? விபூதி பூசிக்கொண்டு விபரீதச் செயல் புரிவதா? என்று கேட்க ஆரம்பித்தான். யோகி ஒரு திருட்டுப் போகி என்பது பரந்தாமனுக்குத் தெரிந்ததும் இப்படிப்பட்டவனிடம்

சிக்கி. வாழ்க்கையைக் கெடுத்துக்கொண்டோமே, வீணுக்கு உழைத்தோமே, என்று வருந்தினன்.

"நான் என் நிலைமையைப்பற்றி மட்டுமே கவனித்தேன். என் சுகம், என் மன ஆறுதல் என் அமைதியைப் பற்றி அக்கரை கொண்டேனே யன்றி, என்னிடம் காதல் கொண்டு இக்கட்டுகளில் சிக்கிக் கலங்கிய காரிகையின் கஷ்டத்தைப் போக்க நான் என்ன செய்தேன், அவள் எக்கதியானுள்? அவள் பக்கத்தில் அல்லவா நின்று பாதுகாத்திருக்கவேண்டும் அதுதானே வீரனுக்கு அழகு. நான் ஒரு கோழை, எனவேதான். கோணல் வழி புகுந்தேன்" என்று மனங்கசிந்தான்.

நாளாக நாளாக, பரந்தாமனுக்கு கருணனந்த யோகியினிடம் வெறுப்பும் கோபமும் வளர்ந்தது. உலகின் முன் அவனை இழுத்து நிறுத்திவிட வேண்டுமென்று எண்ணினன்.

இந்நிலையில் சென்னை வந்து சேர்ந்தார் கருணநந்தர். தமக்கென புதிதாகத் தயாரிக்கப்பட்டிருந்த மடத்தில் தங்கினர்.

சென்னை நாகரீகத்திலும் படிப்பிலும் மிக முன்னேறிய நகரமாயிற்றே. இங்கு யோகியின் தந்திரம் பலிக்காது என்று பரந்தாமன் எண்ணினன். ஆனல் சென்னையைப் போல கருணநந்தருக்கு ஆதரவு தந்த ஊரே இல்லை யெனலாம், அவ்வளவு ஆதரவு தந்துவிட்டது சென்னை.

சீமான்களெல்லாம் சீடர்களாயினர். மேனாட்டுப் படிப்பில் தேறியவர்கள், கல்லூரி ஆசிரியர்கள், பத்திரிக் கைக்காரர்கள் யாவரும் சீடர்களாயினர்.

கருணாநந்தரின் தோழரொருவர் ஒரு பிரபல பத்திரி கையில் இருந்தார். அவர் யோகியின் குணாதிசயங்களைப் பற்றி கட்டுரைகள் வெளியிட்டார். அவருடைய 'தத்து வமே' உலகில் இனி ஓங்கி வளருமென்றார். அவர் சர்வ மத சமாஜத்தை உண்டாக்குவார் எனறு கூறினார்கள் பலர்.

அவருடைய கொள்கைக்கும் அரவிந்தர் கொள்கைக் கும் அதிகம் வித்தியாசமில்லை என்று வேறொருவர் கூறினார்.

மடத்தின் வாயிலில் மணி தவறாது மோட்டார்கள் வரும். விதவிதமான "சீமான்கள்" அவருடைய "பக்தி" மார்க்கத்தைக் கேட்டு ஆனந்திப்பர்.

பரந்தாமன் திடுக்கிட்டுப் போனான். சென்னையில் நாக ரீகம் அதன் கட்டடங்களிலும், காட்சிகளிலும், மக்கள் உண விலும் உல்லாச வாழ்விலும் காணப்பட்டதேயன்றி, உள் ளத்திலே மிகமிக குருட்டுக் கொள்கைகளே இருப்பதைக் கண்டான். உலகை ஏமாற்றும் ஒரு வஞ்சகனிடம் "வரம்" கேட்க, பலர் வருவது கண்டு, சிந்தை மிக வெந்தான்.

ஆஹா! பகட்டு வேஷத்துக்குப் பாழும் உலகம் இப்படிப் பலியாகிச் சீரழிகிறதே என்று வாடினான். இனி இந்த வஞ்சக நாடகத்தில் தான் பங்கு கொள்ளக்கூடாது என்று தீர்மானித்தான். நாள் முழுதும் அத்தீர்மானம்

வளர்ந்து வலுப்பட்டது. ஒரு நாள் நடுநிசியில் பரந்தாமனின் உள்ளம் பதைபதைத்தது.

நேரே யோகியின் அறைக்குச் சென்று, எச்சரித்துவிட்டு மடத்தை விட்டு விலகி விடுவது என்று முடிவு செய்து கொண்டான்.

கோபத்துடன் எழுந்தான். கொத்துச் சாவியை எடுத்தான். பெட்டியைத் திறந்தான் இரண்டு வெள்ளை வேட்டிகளை எடுத்துக்கொண்டான். காவியைக் களைந்து வீசினான். வெள்ளை வேட்டிகளைக் கட்டிக்கொண்டான். உருத்திராட்ச மாலைகளை எடுத்தெறிந்தான்.

நேரே யோகி படுத்துறங்கும் அறைக்குச் சென்றான். கதவு சாத்தப்பட்டிருந்தது. ஆனால் கதவிடுக்கில் வெளிச்சம் தெரிந்தது.

அடிமேலடி எடுத்து வைத்து கதவருகே சென்று உள்ளே நடப்பதை நோக்கினான்.

யோகி, மங்கை யொருவளுடன் சல்லாபித்துக்கொண்டிருப்பதைக் கண்டான்.

"கோகிலா! நீ என்னை உதவாக்கரை என்று ஒதுக்கித் தள்ளினாயே, பார் இப்போது!" என்று யோகி கூறிட, இவ்வளவு சமர்த்து உமக்கு இருப்பதைக் காணவே நான் உம்மை முன்னம் வெறுத்தேன்"—கோகிலம் என்று அழைக்கப்பட்ட பெண் கூறினாள்.

பரந்தாமனுக்கு ஆத்திரம் பொங்கிற்று. கதவைக் காலால் உதைத்து உள்ளே சென்று யோகியின் கன்னத்தில் அறையலாமா என்று தோன்றிற்று. பொறு மனமே பொறு என்று நின்றான்.

"அழகாபுரி உமக்குத்தெரியுமோ?" என்றாள் கோகிலம்.

"அங்கே என்ன அதிசயம்" என்றார் யோகி.

"அங்கே, சாரதா என்றொரு பெண்......" என்று கோகிலம் கூறலானாள்.

தன் காதலி சாரதாவின் பெயர் உச்சரிக்கப்பட்டவுடன் பரந்தாமன் மிக ஜாக்கிரதையாக உள்ளே என்ன பேசுகிறார்கள் என்பதை உற்றுக் கேட்கத் தொடங்கினான். யோகியின் மடிமீது சாய்ந்தபடியே, அவள் சாரதாவின் ரசமுள்ள கதையைக் கூறலானாள்.

கோகிலம், சாரதாவின் சேதி பூராவையும், ஒன்று விடாது கூறினாள். ஒரு போட்டோ மூலம் தன் அண்ணன், அவளை மிரட்டுவதைக் கூறிய போது, "இது ஒரு பிரமாதமா? இருப்பதைக் காட்டி உன் அண்ணன் மிரட்டுகிறான். யாரவள், சாரதாவா, அவள் மிரளுகிறாள். இந்த கருணாநந்தன் செய்வது உனக்கென்ன தெரியுமடி, கட்டழகி" என்று கொஞ்சினான். யோகி வேடம் பூண்ட போகி.

"உன் சமர்த்தை உரைக்க ஒரு நாக்கும் போதாதே" என்று இசைந்தாள் கோகிலம் கிண்டலாக.

"கேள் கோகிலா, இருப்பது கண்டு மிரள்வது இயல்பு. இல்லாதது கண்டு மிரள்வதை என்னவென்பேன் பேதை மக்களிடம்.

பிடிப்பான், அடிப்பான், கடிப்பான், உதைப்பான்
பேசினுயா நமச்சிவாயா என்பான்
பூசினையோ திரு நீறு எனக் கேட்பான்.

என்று கேட்டு, பற்களை நறநறவெனக் கடித்து, மீசைகள் படபடவெனத் துடிக்க, அந்த நரகலோகத் தூதர்கள், சிவபக்தி அற்றவர்களின் சிரத்தில் சூட்டி, கரத்தில் வெட்டி, எரிகிற கொப்பரையில் எறிந்து, சுடுகின்ற மணலில் உருட்டி, செந்தேள், கருந்தேள் விட்டுக் கொட்ட வைத்து சித்திரவதை செய்வார். எனவே மெய்யன்பர்களே.

"மந்திரமாவது நீறு வானவர் மேலுது நீறு" என்ற மணி மொழிப்படி, விபூதி பூசி ருத்திராட்சமணிந்து வில்வாபிஷேகனை, வேண்டிட வேண்டும்" என நான் நரகலோகக் காட்சி பற்றி பிரசங்கிக்கும் போது, அடடா, இந்த மக்கள் தான் எவ்வளவு நம்புகிருர்கள். எத்தனை பயம், இதைவிட சாரதாவின் பயத்தை நான் கண்டு ஆச்சரியப்படேன்"—என்ருன் யோகி.

"அதுவுஞ் சரிதான்" என்ருள் கோகிலம்.

"ஆகவே நீ எனை அணைந்திட வாடி,
அணைந்திட வாடி, ஆனந்தத் தோடி பாடி"

என்று யோகி ஜாவாளி பாடினுன். சரசமாடினுன். ஜடையைப் பிடித்திழுத்தான். அவள் இவன் ருத்திராட்ச மாலை

யைப் பிடித்திழுத்தாள். பொட்டைக் கலேத்தான் இவன். அவள் நீரைத் துடைத்தழித்தாள். கிள்ளினுன்! கின்ளினுள். நெருக்கினுன்! நில் என்ருள், சிரித்தான்! சீறுவதுபோல் நடித்தாள், எழுந்தான்! அவள் படுத்தாள்!

எட்டி உதைத்தான் கதவைப் பரந்தாமன், ஆத்திரம் தாளமாட்டாது!! மட்டி! மடையா! எனத் திட்டினுன். மாது கோகிலம் மருண்டாள். "மானத்தைப்பறித்திடுவேன், உன் சூது மார்க்கத்தை அழித்திடுவேன். ஊரை இதோ எழுப்பிடுவேன், உன் சேதி உரைத்திடுவேன்" என்று கோபத்துடன் கூறினுன் பரந்தாமன்.

"பரந்தாமா! பொறு! பொறு! பதருதே! ஏதோ நடந்தது நடந்துவிட்டது. இவள் என் சொந்த மனைவி. கோகிலம் கூறடி உள்ளதை. நான் குடும்பம் நடத்த முடியாது திகைத்தேன். பாடுபட் முயற்சித்தேன். உலகம் ஏற்றுக்கொள்ளவில்லே. எனவே இவ்வேடம் பூண்டேன். என் மானத்தைக் காப்பாற்று. உன் காலடி விழுவேன்" என்று கருணுகரன் அழுதான்.

மடத்துக்கென வரும் காணிக்கையை எண்ணினுன். ஐயோ, அது வராவண்ணம் இப்பாவிப் பரந்தாமன் செய்திடுவானே, என் செய்வது என்று பயந்தான்.

"மோசக்கார வேடதாரியே கேள்! இனி உன் முடிவு காலம் கிட்டிவிட்டது. நீ பிழைக்க வேண்டுமானுல், அந்த சாரதா போட்டோவை என்னிடம் தந்துவிட ஏற்பாடு

செய். இல்லையேல் உன்னை, கரும்புள்ளி செம்புள்ளி குத்தி கழுதை மீது ஏற்றி ஊர்வலம் வரும்படி செய்வேன். உஷார்'' என்றான் பரந்தாமன்,

''சாரதாவின் போட்டோவிலே என்ன ரசம் கண்டீர்'' என சாகசமாகக் கேட்டாள் கோகிலம்.

''அதிரசம்'' என்று அலட்சியமாகப் பதிலளித்தான் பரந்தாமன்.

யோகி. மங்கையின் மலரடி தொழுதான். அவள் முதலில் மறுத்தாள். பிறகு திகைத்தாள். கடைசியில் அண்ணனிடமிருந்து அப்படத்தைத் திருடிக்கொண்டு வருவதாகக் கூறினாள்.

''புறப்படு'' என்றான் பரந்தாமன்.

''போவோம்'' என்றாள் கோகிலம்.

நள்ளிரவில், கோகிலமும் பரந்தாமனும் மெள்ள, சிங்கார வேலன் ஜாகை சென்றனர்.

கோகிலம், படத்தை அதன் ''நெகட்டிவ்'' உள்பட, திருட்டுத்தனமாக எடுத்து, பரந்தாமனிடம் கொடுத்து விட்டு, ''நீ மிரட்டினதற்காக நான் இதனைத் தருவதாக எண்ணாதே. முன்னாளில் நீ சாரதாவிடம் கொண்ட காதல் இவ்வளவு காலத்துக்குப் பிறகும் அணையாதிருப்பது கண்டு, மகிழ்ந்தே இதனைத் தருகிறேன். நான் அறிவேன் உன் சேதி யாவும். அன்றொரு நாள் தோட்டத்தில் அவள் எல்லாம்

என்னிடம் கூறினுள். ஆனுல் நான் நீ காதல் இழந்ததுடன், வேறு வாழ்வில் புகுந்திருப்பாய் என்றே எண்ணினேன். இன்றுதான் கண்டேன் அன்று அவள் தீட்டிய சித்திரம், இன்னமும் இருப்பதை'' என்று மிகுந்த வாஞ்சையுடன் கூறினுள்.

பரந்தாமனின் கண்களில் பல துளி நீர் சரேலென வந்தது.

''ஐயய்யோ! புளியமரத்தைப் பாருடா பொன்னு'' என்று அலறினுன் பொம்மன்.

''பிணம் தொங்குதேடா பிடிடா ஓட்டம், தலேயாரி வீட்டுக்கு'' என்று கூறினுன் பொன்னன். கரியா, வரதா, காத்தா, முத்து, என கூக்குரல் கிளம்பிற்று. அமிர்தம், கமலம், ஆச்சி அகிலாண்டம் என்ற படைகள் வந்தன. மரத்திலே தொங்கிய பிணம், காற்றிலே ஊசலாடிற்று, அதைக்கண்ட வர்களின் குடல் பயத்தால் நடுங்கிற்று. கூவாதே! கிட்டே போகாதே! என்றனர் சிலர்.

''அடி, ஆறுமாதம் கர்ப்பக்காரி அகிலாண்டம் இதைப் பார்க்கக்கூடாது, என்று புத்தி புகட்டினுள் ஒரு மாது.

''ஐயய்யோ இது என் அக்கா புருஷனுச்சே'' என்று அலறினுள் வேறொரு வீரி.

''ஆமாம்! ஆமாம்! கருப்பையாதாண்டோ! அடடா? இது என்னடா அநியாயம்'' என்ருன் பொம்மன்.

தலையாரி வந்தான். ஊர் கூடிற்று. கருப்பையாவின் மனைவியும் மக்களும், மார்பிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு கூடிவிட்டனர்.

கருப்பையா புளியமரத்துக் கிளையில் பிணமாகத் தொங்குவது கேட்ட சாரதாவின் முகம் வெளுத்துவிட்டது.

அவள் புருஷன் அழுதே விட்டான்.

ஊர் முழுவதும் ஒரே அமர்க்களம்தான்.

ஏன் கருப்பையா தற்கொலை செய்து கொண்டான் என்பதை ஊர் அறியாது.

வருட முடிவில், வீட்டுக் கணக்குப் பார்ப்பார். அதிலே ஆயிரத்துக்கு மேலே துண்டு விழுந்துவிட்டது. தன் மோசம் வெளிக்குவரும். தன்பாடு பிறகு நாசந்தான். இங்கிலையில் மாதக் கப்பம் கட்டத் தவறிவிட்டது. மருட்டி உருட்டிக் கடிதம் வந்தது. சாரதா கைக்கு எப்பொருளும் சிக்கவில்லை இருவருக்கும் சண்டையோ நிற்கவில்லை. சாரதா, சற்றுக் கடுமையாகப் பேசிவிட்டாள், கருப்பையாவின் சித்தம் கலங்கிவிட்டது. "ஒரு முழக்கயறுக்குப் பஞ்சமா, ஊரில் ஒரு மரமும் எனக்கில்லையா" என சாரதாவிடம் வெறுத்துக் கூறினன். அப்படியே செய்தும்விட்டான். பிணமானன்! இரண்டொரு மாதத்தில் புளியமரத்துப் பிசாசுமாவான்!

சாரதாவின் நிலைமைதான் என்ன? சிங்காரவேலனின் மிரட்டல் கடிதம் அவளைச் சிதைக்கத் தொடங்கிற்று.

ஊர்க் கோடியில் ஒரு மாந்தோப்பு. அதில் உள்ள கிணறு ஆழமுள்ளது. அதுதான் தனக்குத் துணை என முடிவு செய்தாள் சாரதா, அந்த முடிவு செய்தது முதற் கொண்டு அவள் முகத்தில் வேதனை, தாண்டவமாடிற்று. விதி என்னை இப்படியும் வாட்டுமோ என்றெண்ணுவாள். வேதனைக்கோ நான் பெண்ணாய்ப் பிறந்தேனே என்பாள். கணவன் தன் மனைவியின் கலக்கத்தை அறியான். அவள் இளைப்பது கண்டு, மருந்து கொடுத்தான்.

பரந்தாமன் போட்டோவை எடுத்துக்கொண்டு அழகாபுரிக்குப் புறப்பட்டான். இரவு நேரத்தில் ஊருக்குள் புகுந்தான், இடியும் மழையும் இணைபிரியாது அழகா புரியில் அவதி தந்தது. குளம் குட்டை நிரம்பி வழிந்து ஓடிற்று. பெருங் காற்று அடித்தது. சாலை சோலையை அழித்தது. மரங்கள் வேரற்று வீழ்ந்தன. மண் சுவர்கள் இடிந்தன, மாடு கன்றுகள் மடிந்தன. வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிற்று. ஊர் தத்தளித்தது; வந்துள்ள வெள்ளம். தன்னைக் கொள்ளைக்கொண்டு போக வேண்டும் என சாரதா மாரியை வேண்டினாள்.

இருட்டும் வரை ஊர்புறத்தே ஒளிந்திருந்து பிறகு மெள்ள நடந்து சாரதாவின் தாய் வீட்டை அடைந்தான் பரந்தாமன்.

நரைத்து நடை தளர்ந்துபோன அம்மாது விதவைக் கோலத்துடன் இருந்தாள்.

"கருத்துமிரட்டும் கடு மழையில் எங்கிருந்து தம்பி நீ வந்தாய்'' என்ருள். "வந்தேன் ஒரு முக்கியமான வேலைக்காக, நான் சாரதாவைப் பார்க்க வேண்டும்'' என்ருன் பரந்தாமன்.

"சாரதாவையா? நீ பழைய சாரதாவென எண்ணுதேயப்பா. அவள் என் மகள்தான். ஆனாலும் பெரிய பாவியாளுள். அவள் முகத்தில் நான் விழிப்பதே இல்லை. ஊர் சிரித்துவிட்டது'' என்று சலிப்புடன் தாய் கூறினுள்.

"சாரதா என்ன செய்தாள்?'' என்ருன் பரந்தாமன்.

"என்ன செய்தாளா? நல்ல கேள்விதான்!'' என்று வெறுத்துக் கூறினுள் தாய்.

"இதோ இதைப்பார். இதனைத்தானே நீ கூறுகிருய்'' என்று கூறிக்கொண்டே, போட்டோவைக் காட்டினுன் தாயிடம்.

"ஆ! படமும் எடுத்தார்களா'' என்று திகைத்தாள் தாய்.

"பயப்படாதே அம்மா, இதனைக் காட்டத்தான், நான் சாரதாவைப் பார்க்கவேண்டும்'' என்ருன் பரந்தாமன். "நீயாவது, இந்தப் படத்தையாவது அவளிடம் காட்டுவதாவது! வெட்கக்கேடு'' என்ருள் தாய்.

"அம்மா! நீ விஷயமேது மறியாய். இந்தப் படத்தை ஒரு போக்கிரி வைத்துக்கொண்டு சாரதாவை மிரட்டிக்கொண்டிருந்தான். பாவம் நம் சாரதா, எவ்வளவு பயந்

தாளோ, அழுதாளோ நமக்கென்ன தெரியும்? என்னிடம் இது தற்செயலாகச் சிக்கிற்று. இதனை சாரதாவிடமே கொடுத்துவிட்டால் அவள் மனம் நிம்மதியாகும்,' என்றான் பரந்தாமன்.

"தம்பீ, பரந்தாமா, உனக்குத்தான் அவள் மீது எவ்வளவு ஆசை. உம்! உன்னைக் கட்டிக்கொண்டிருந்தால் அவளுக்குப் பாடும் இல்லை. பழிப்பும் இல்லை" என்றாள் தாய். "ஆமாம்! எனக்கு சாரதா கிட்டாது போனால்தான் வாழ்வுமில்லை, வகையுமில்லை" என்று அழுதான் பரந்தாமன்.

நாளைக் காலையில் நான் சேதி விடுத்து, அவளை இங்கு வரவழைக்கிறேன். நீ உடையைக் களைந்துவிட்டு வேறு துண்டு உடுத்திக்கொண்டு படுத்துறங்கு" என்று வேதவல்லியம்மை கூறினாள்.

'ஆகட்டும்' என்றான். ஆனால் அழுத கண்களுடனும் நனைந்த ஆடையுடனும் படுத்துப் புரண்டான். அலைச்சலாலும், அடைமழையில் நனைந்ததாலும், மனமிக நொந்ததாலும், பரந்தாமனுக்கு காய்ச்சல் வந்துவிட்டது. கண் திறக்கவும் முடியாதபடி காய்ச்சல். ஊரில் மழையும் நிற்கவில்லை. உடலில் ஜுரமும் நிற்கவில்லை, ஆறுகள் பாலங்களை உடைத்துக்கொண்டு ஓடின! வயல்கள் குளமாயின. செயல் மறந்து படுத்திருந்தான் பரந்தாமன்.

ஜுரம் முற்றிற்று. உடலும் திடீரென சிவந்தது. வேதவல்லி தனக்குத் தெரிந்த சில்லரை வைத்தியமெல்லாம் செய்து பார்த்தாள். ஒன்றுக்கும் ஜுரம் கேட்கவில்லை.

பரந்தாமன் அலற ஆரம்பித்தான். வேதமும் அழுது கொண்டிருந்தாள். சாரதாவுக்குச் சொல்லி அனுப்பிப் பயனில்லை. "எப்படி நான் அவர் முகத்தைப் பார்ப்பேன்" என்று இடிந்து போனுள் சாரதா, பரந்தாமனுக்கு ஜுரம் குறைந்ததுபோல் காணப்பட்டது. ஆனல் அம்மை வார்த்து விட்டது, சிவந்த அவன் மேனியில் சிவப்புச் சித்திரங்கள் பல நூறு ஆயிரம் திடீர் திடீரெனத் தோன்றின. மயக்கமும் மருட்சியும் அதிகரித்தன. குளறலும் குடைச்சலும் அதிகமாயிற்று. புரண்டு புரண்டு படுத்ததால் அம்மை குழைந்துவிட்டது. பார்க்கவே பயங்கரமாக இருந்தது பரந்தாமனை.

வேதவல்லி வேப்பிலையும் கையுமாக அவன் பக்கத்தில் வீற்றிருந்தாள்.

அம்மையின் வேகம் அதிகரிக்க, அதிகரிக்க, பரந்தாமனின் நிலை மோசமாகிக் கொண்டே வந்தது. வேதவல்லி வேப்பிலை கொண்டு வீசி, உபசாரம் செய்தாள். மாரியோ கேட்கவில்லை. பரந்தாமனின் மேனியில் துளி இடங்கூடப் பாக்கியில்லை. எங்கும் சிவப்புப் பொட்டுகள் பூரித்துக் கொண்டிருந்தன. பரந்தாமனின் உடல் எரிச்சல் சொல்லுந் தரமன்று. அவன் அம்மைத் தழும்புகளைத் தேய்த்துவிடு

வான். தழும்புகள் குழைந்துவிடும். வேதவல்லி, அபசாரம், அபசாரம், மாரி கோபிக்காதே, மகன் மீது சீறுதே, மாவிளக்கு ஏற்றுகிறேன் என்று வேண்டுவாள். மாரிக்கு என்ன கவலே?

இரவு பத்து மணிக்கு ஒரு உருண்டை அபினெடுத்தாள். சாரதா பாலில் கலக்கினுள். நேரே படுக்கையறை சென்ருள். பாதி மயக்கத்தில் படுத்திருந்த அவள் கணவன், "சாரதா எனக்கேண்டி கண்ணே இவ்வளவு பால்! நீ கொஞ்சம் சாப்பிட்டால்தான்'' என்று கூறினுன்—கொஞ்சினுன். "வேணுமுங்கோ, சொல்றதைக் கேளுங்கோ, நான் இப்ப தான் பெரிய டம்ளர் நிறையப் பால் சாப்பிட்டேன்'' என்று சாக்குக் கூறினுள் சாரதா.

அந்த நேரத்திலே அவனுக்கு ஏதோ குஷி! விளையாட வேண்டுமென்று தோன்றி விட்டது.

"நீ குடித்தால் தான் நான் குடிப்பேன்'' என்று கூறி விட்டான்.

"பால் ஆறிப் போய் விடுகிறதே''

"ஆறட்டுமே, யாருக்கென்ன?''

"விளையாட இது தாஞ சமயம்''

"சரசத்துக்கு சமயம் வேண்டுமோ''

"சின்னப் பிள்ளை போல விளையாட வேண்டாம்! எனக்கு தூக்கம் வருகிறது. நீங்கள் பால் குடித்துவிட்டால் படுத்துத் தூங்கலாம்.''

"தூங்க வேண்டுமா! ஏன் நான் ஆராரோ ஆரரிரோ பாடட்டுமா? தொட்டிலிலே படுக்க வைக்கட்டுமா?" என்று கூறிக்கொண்டே, சாரதாவைத் தூக்க ஆரம்பித்து விட்டான் கணவன். சாரதாவுக்குத் தன்னையும் அறியாமலே ஒரு சிரிப்பு வந்துவிட்டது.

"ஐய்யய்யோ! இதேது இவ்வளவு சரசம். என்ன சங்கதி! பால்யம் திரும்பிவிட்டதோ" என்று கேட்டுக் கொண்டே "இதோ பாருங்கள் இப்படி, என் மீது உமக்கு ஆசைதானே" என்றாள்.

தலையை வேகமாக கிழவன் அசைத்தான்.

"சத்தியமாக, ஆசை தானே?" என்று கேட்டாள் சாரதா.

"சாமுண்டி சாட்சியாக நிஜம்" என்றான் கிழவன்.

"அப்படியானால் நான் சொல்வதைக் கேட்க வேண்டும். பாலைக் குடித்துவிட்டு பிறகு பேசுங்கள்" என்றாள் சாரதா.

"ஹூஹூம். நான் மாட்டேன். நீ கொஞ்சமாவது குடிக்கவேண்டும்" என்றான். கிழவன் சொல்லிக்கொண்டே பால் செம்பை, சாரதாவின் வாயில் வைத்து அழுத்திக் கொண்டே விளையாடினான். கொஞ்சம் பால் உள்ளேயும் கொஞ்சம் அவள் மேலாடையிலும் விழுந்தது.

"இப்போ சரி! உன் உதடுபட்ட உடனே, இந்தப் பால் அமிர்தமாகிவிட்டது. இனி ஒரு சொட்டுப் பால்கூட விடமாட்டேன்." என்று கிழவன் கொஞ்சு மொழி கூறிக் கொண்டே பாலைக் குடித்தான். பக்கத்தில் படுத்த சாரதா வை நோக்கிச் சிரித்தான்.

"ஆலமர முறங்கக் குட்டி அடி மரத்தில் வண்டுறங்க, உன் மடிமேலே நானுறங்க, குட்டி என்ன வரம் பெற்றே னேடி" என்று பாடத் தொடங்கினன். சாரதா, தனக்குத் தூக்கம் வருவதாகக் கூறினள். பார்க்கலாமா, யார் முதலில் தூங்குவது என்று பந்தயங் கட்டினன் கணவன்.

இரண்டொரு வினடிகளில் சாரதா குறட்டை விட் டாள். அது வெறும் பாசாங்கு. கிழவன், அவள் பாசாங்கு செய்வதைக் கண்டுகொண்டான். அவளுடைய காதில் சிறு துரும்பை நுழைத்தான். அவள் சிரித்துக்கொண்டே எழுந்துவிட்டாள்.

"என்னை ஏமாற்ற முடியுமோடி குட்டி, என்னிடம் சாயுமோடி" என்று பாடினன். இரண்டொரு விநாடியில் குறட்டைவிட்டான். பாசாங்கு அல்ல! நிஜம் பாலில் கலந் திருந்த அபின் வேலைசெய்யத் தொடங்கிவிட்டது. சாரதா, கணவனைப் புரட்டிப் பார்த்தாள். எழுந்திருக்கவில்லை. பிறகு அவள் படுக்கையைவிட்டு எழுந்து, பெரிய பச்சைச் சால்வை யொன்றை எடுத்து போர்த்துக்கொண்டு புறக் கடைக் கதவைத் திறந்துகொண்டு கழனிப்பக்கம் நடந் தாள். இருட்டு, தவளையின் கூச்சல் காதைத் துளைத்தது.

சேறும் நீறும் கலந்த வழி. தொலைதூரத்தில், நரியின் ஊளை ஆங்காங்கு வீட்டுப் புறக்கடைகளில் கட்டி வைக்கப்பட்டிருந்த மாடுகள் அசைவதால் உண்டாகும் மணி ஓசை. மரஉச்சியில் தங்கி ஆந்தை கூச்சலிட்டது. சாரதா பயத்தையும் மறந்து நடந்தாள். கணவனின் பிடிவாதத்தால் பாலைக் கொஞ்சம் பருகியதால், அபின் அவளுக்கு மயக்கத்தைத் தந்தது. அதையும் அவள் உணர்ந்தாள். ஆனால் எதைப்பற்றியும் கவலைப்படாமல், நடந்தாள். எங்கே தன் தாய் வீட்டுக்கு! ஏனெனில் பரந்தாமன் பிழைப்பதே கஷ்டம். அவன் உயிர் போகு முன்னம் சாரதா வந்து பார்த்துவிட்டுப் போனால்தான் போகிற பிராணனாவது சற்று நிம்மதியாகப் போகும் என சாரதாவுக்கு அவள் தாய் சேதி விடுத்திருந்தாள். எனவேதான் சாரதா, பதைத்து கணவனுக்கு அபின் கலந்த பால் கொடுத்துவிட்டுப் பறந்தாள். தன் காதலனைக்காண.

''சாரதா வரவில்லையே. சாரதாவுக்கு என் மீது கோபமா? ஆம்! நான் அவள் வாழ்விற்காக ஒரு சகுனத்தடைபோல வந்தேன். சாரதா என் மனதைக் கொள்ளைகொண்ட சாரதா...'' என்று பரந்தாமன் அலறிக்கொண்டிருந்தான்.

கண் இரப்பை மீதும் அம்மை இருந்ததால் பரந்தாமனுக்குக் கண்களைத் திறப்பதென்றாலும் கஷ்டம். திறந்ததும் வலிக்கும். வலித்ததும் மூடுவான். ''வந்தாளா சாரதா?'' என்று கேட்பான்.

“தம்பி, வருவாள் பொறு, சற்றுத் தூங்கு” என்பாள் சாரதாவின் தாய்.

“தூக்கம்! எனக்கா! அம்மணி. நான் சொல்கிறேன். சாரதா இங்கு வரமாட்டாள். நானே அங்கு செல்கிறேன்.

போனால் என்ன? அவள் கணவன் என்னைக் கொல் வானு! கொல்லட்டுமே? நான் செத்துத்தான் பல வருஷங் களாயிற்றே.

எனக்கு இல்லாத சொந்தம் அவனுக்கா ?

தாலி கட்டியவன் அவன்தான்! ஆனால் அவளுடைய கழுத்தின் கயறுதானே அது! நான் அவள் இருதயத்தில் என் அன்பைப் பொறித்துவிட்டேன். எனக்கே அவள் சொந்தம்.

ஓஹோ! ஊரைக்கேள், சாரதா யாரென்று, என்பானே? ஊரைக்கேட்டால், ஊராருக்கு என்ன தெரியும்? உள்ளத் தைக் கேட்டுப் பார்க்கட்டுமே. எதோ இங்கேவா அம்மா இப்படி, நீயே சொல், சாரதா உன் மகள்தான். நீ சொல், சாரதா எனக்குச் சொந்தமா, அந்தக் கிழவனுக்கா !

யாருக்கம்மா சொந்தம்! கொண்டுவா சாரதாவை, இனி ஒரு க்ஷணம் விட்டு வைக்கமாட்டேன். என் சாரதா; என்னிடம் வந்தே தீரவேண்டும்”—என்று பரந்தாமன்

அலறினன். கப்பல் முழுகுவதற்கு முன்பு கடல் நீர் அதிகமாக உள்ளே புகும். அதுபோல, பரந்தாமன் இறக்கப் போகிருன். ஆகவே தான் அவன் எண்ணங்களும் மிக வேகமாக எழுகின்றன என வேதவல்லி விசனித்தாள்.

சாரதாவைப் பெற்றவள் அவள். அவளே சாரதாவை கிழவனுக்குக் கலியாணம் செய்து கொடுத்தாள். பரந்தாமனே சாரதா யாருக்குச் சொந்தம்? கூறு! என தன்னையே கேட்கிருன். வேதவல்லி என்ன பதில் சொல்வாள்?

''கதவைத் தட்டுவது யார்?''

''அம்மா! நான்தான் சாரதா!''

''வந்தாயா கண்ணே, வா வந்து பாரடி அம்மா பரந்தாமனின் நிலையை'' என்று கூறி, சாரதாவை வேதவல்லி அழைத்துவந்தாள்.

பரந்தாமனைக் கண்டாள் சாரதா. அவள் கண்களில் நீர் பெருகிற்று.

உள்ளம், ஒருகோடி ஈட்டியால் ஏககாலத்தில் குத்தப் பட்டதுபோல் துடித்தது, குனிந்து நோக்கிஞள்.

அந்த நேரத்தில் பரந்தாமனின் எண்ணம். அன்றொரு நாள் ஜுரமாக இருந்தபோது சாரதாவுக்கு முத்தமிட்ட காட்சியில் சென்றிருந்தது. அதனை எண்ணி புன்சிரிப்புடன் அவன் மீண்டும் உளறினன். ''சாரதா, நான் உன்னைக்

காதலிக்க, நீ என் பாட்டனுக்குப் பெண்டாளுயே. உன்னை விடுவேனு! ஒரு கயறு என்னிடமிருந்து பிரித்து விடுமா! என்னைவிட அக்கயறு என்ன பிரமாதமா? வா! சாரதா! வந்துவிடு'' என்று உளறினுன்.

''தம்பி பரந்தாமா, இதோ இப்படிப் பார்! சாரதா வந்திருக்கிருள்'' என்று வேதவல்லி கூறினதும், பரந்தாமன் ''யார் சாரதாவா? இங்கேயா'' என்று கேட்டுக்கொண்டே கண்களைத் திறந்தான். சாரதாவைக் கண்டான். படுக்கையிலிருந்து தாவி தன் கரங்களால் சாரதாவை இழுத்தான். சாரதா தழதழத்த குரலுடன் கண்களில் நீர்ததும்ப, ''வேண்டாம், வேண்டாம், என்னைத் தொடாதீர்கள்'' என்ருள்.

பரந்தாமனின் விசனம் அதிகமாகிவிட்டது. கரங்களை இழுத்துக்கொண்டான். ''மறந்துவிட்டேன் சாரதா. அம்மை தொத்து நோய் என்பதை மறந்துவிட்டேன். என் பிரேமையின் பித்தத்தில், எனக்கு எதுதான் கவனத்துக்கு வருகிறது'' என்று சலிப்புடன் கூறினுன். சாரதா பதை பதைத்து ''பரந்தாமா, அப்படி எண்ணுதே. நான் என்னைத் தொட்டால் அம்மை நோய் வந்துவிடுமென்பதற்காகக் கூற வில்லை. நீ தொடும் அளவு பாக்கியம் எனக்கில்லை. நான் ஒரு பாவி'' என்ருள். புன்னகையுடன் பரந்தாமன், ''நீ பாவி. தப்பு தப்பு. சாரதா, நான் பாவி. நான் கோழை. என் ஞல் தான் நீ துயரில் மூழ்கிஞய்'' என்ருன், என்று கூறிக் கொண்டே சிங்காரவேலனிட மிருந்து வாங்கிக்கொண்டு

வந்த "போட்டோவை" சாரதாவிடம் கொடுத்தான். சாரதா சிறிதளவு திடுக்கிட்டுப் போனாள். பரந்தாமனைப் பார்த்து "அந்தப் படத்தைக் கண்ட பிறகுமா, என் மீது உனக்கு இவ்வளவு அன்பு? நான் சோரம் போனதைக் காட்டும் சித்திரங்கூட உன் காதலை மாற்றவில்லையா?" என்று கேட்டாள்.

"சாரதா, கல்லில் பெயர் பொறித்துவிட்டால், காற்று அதனை எடுத்து வீசி எறிந்து விடுமா!" என்றான் பரந்தாமன். அவனுடைய இருதயப் பூர்வமான அன்பு கண்ட சாரதா வால் அழுகையை அடக்க முடியவில்லை. இவ்வளவு அன்பு கனியும் பரந்தாமனிடம் வாழாது வாழ்க்கையைப் பாழாக்கிக்கொண்டு, வழுக்கி விழுந்ததை எண்ணினாள். ஆனாள் அவள் என் செய்வாள்!

சமுதாயத்தில் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக உருக்கி ஊற்றப்பட்டிருக்கும் பழக்க வழக்க சமூகத்தை ஒரு சருக்கு மரமாக்கிவிட்டது. அதில் தம்மிஷ்டப்படி செல்ல விரும்பி சருக்கி விழுந்து சாய்ந்தவர், கோடி கோடி, அதில் சாரதா ஒருத்தி.

"சாரதா! ஒரே ஒரு கேள்வி, என்மீது கோபிப்பதில்லையானால் கேட்கிறேன்" என்றான் பரந்தாமன்.

"குணசீலா, உன் மீது எனக்குக் கோபமா வரும்? கேள், ஆயிரம் கேள்விகள்" என்றாள்.

“அந்தப்படத்திலுள்ள கருப்பையாவிடம் நீ காதல் கொண்டிருந்தாயா!” என்று சற்று சஞ்சலத்துடன் கேட்டான் பரந்தாமன்.

“கருப்பையாவிடம் காதலா? வலை வீசும் வேடன் மீது புள்ளிமான் ஆசைகொண்டா வலையில் விழுகிறது?” என்றாள் சாரதா.

“தெரிந்துகொண்டேன், ஆம்! நான் எண்ணியபடிதான் இருக்கிறது. நீ அவன் மீது காதல் கொள்ளவில்லை. அவன் உன் நிலை கண்டு உன்னைக் கெடுத்தான். நீ என்ன செய்வாய். பருவத்தில் சிறியவள்” என்று பரந்தாமன் கூறிக்கொண்டே சாரதாவின் கரத்தைப் பிடித்து தன் மார்பில் வைத்துக்கொண்டு, “சாரதா: நீ இதனுள்ளே எப்போதும் இருந்து வந்தாய். அன்று உன்னை முந்திரிச் சோலையில் கண்டபோது உன் முத்திரை என் இதயத்தில் ஆழப் பதிந்தது. அதனைப் பின்னர் அழிக்க யாராலும் முடியவில்லை. நாளொன்றுக்கு ஆயிரம் தடவை “அரகரா சிவசிவா அம்பலவாணா” என்று சொல்லிப் பார்த்தேன், உன் கவனம் மாறவில்லை. தில்லை, திருவானைக்கால், காஞ்சி, எனும் ஸ்தலங்களெல்லாம் சென்றேன்? என் ‘காதல்’ கரையவில்லை. எப்படிக் கரையும்? “உமை ஒரு பாகன்” “இலட்சுமி நாராயணன்” “வள்ளி மணாளன் முருகன்” “வல்லபை லோலன்” என்றுதான் எங்கும் கண்டேன். நான் தேடிய உமை நீ தானே!”—என்று பரந்தாமன் பேசிக்கொண்டே இருந்தான்.

கேட்கக்கேட்க சாரதாவின் உள்ளம் தேன் உண்டது. ஆனாலும், கடுமையான அம்மையின் போது, பேசி, உடம்புக்கு ஆயாசம் வருவித்துக் கொள்ளக்கூடாதே என்று அஞ்சி, "பரந்தாமா போதும், பிறகு பேசுவோம். உன் உடம்பு இருக்கும் நிலைமை தெரியாது பேசிக்கொண்டிருக்கிருயே" எள்று கூறி, அவன் வாயை மூடினாள்.

"உடம்பு ஒன்றும் போய்விடாது. போனாலும் என்ன? உன்னைக் கண்டாகிவிட்டது. உனக்கு இருந்துவந்த ஆபத்தைப் போக்கியுமாகிவிட்டது. இனி நான் நிம்மதியாக ...என்று கூறி முடிப்பதற்குள் சாரதா மீண்டும் அவன் வாயை மூடி, "அப்படிப்பட்ட பேச்சு பேசக்கூடாது. நான் சாகலாம். ஆனால் உங்களுக்கு ஒரு கெடுதியும் சம்பவிக்கலாகாது" என்று கூறினாள். சாரதாவைக் கண்ட ஆனந்தம் அவளிடம் பேசியதால் ஏற்பட்ட களிப்பு பரந்தாமனின் மனதில் புகுந்தது. அயர்வு குறைந்தது. பேசிக்கொண்டே கண்களை மூடினான். அப்படியே தூங்கி விட்டான். அவன் நன்ருகத் தூங்கும் வரை பக்கத்தில் உட்கார்ந்துகொண்டிருந்தாள் சாரதா. மெல்ல குறட்டை விட்டான் பரந்தாமன். சாரதா, மெதுவாக எழுந்தாள். தாயை அழைத்தாள். இருவரும் சமையலறை சென்று, அடுப்பில் நெருப்பை மூட்டினர். பரந்தாமன் தந்த போட்டோவை எரியும் நெருப்பில் போட்டு கொளுத்தி விட்டனர். பின்னர் சாரதா மெள்ள நடந்து வீடு சென்ருள். படுத்துறங்கும் கணவன் பக்கத்தில் படுத்தாள். பூனைபோல சில நிமிடங்கள்

வரை சாரதாவின் கவனம் முழுதும் பரந்தாமன் மீதே இருந்தது. திடீரென அவள் திடுக்கிட்டாள். ஏன்? தன் கணவன் குறட்டை விடும் சத்தமே கேட்கவில்லை. என்றுமில்லாத அதிசயமாக இருக்கிறதே என்றெண்ணி, மெதுவாக கணவன் மீது கையை வைத்தாள். பனிகட்டிபோல் ஜில்லென இருந்தது. அலறிக்கொண்டே அவர் உடலைப் பிடித்து அசைத்தாள். பிணம் அசைந்தது. அபின் அதிகம். அதனுல் மரணம்.

சாரதா விதவையானுள். குங்குமம் இழந்தாள். கூடின பந்துக்கள் தமது அனுதாபத்தைத் தெரிவித்தனர். வேதவல்லி தன்னைப்போலவே சாரதாவும் ஆனது கண்டாள்; மனம் நொந்தாள்,

சாரதா விதவையானுள்; பரந்தாமன் குருடனுனுன். அம்மையிலிருந்து அவன் தப்பித்துக்கொண்டான். ஆனுல் அவனது கண்கள் தப்பவில்லை. பார்வையை இழந்தான் பரந்தாமன். சாரதாவுக்கு நேரிட்ட விபத்தைக் கேட்டான், மனம் நொந்தான். ஏன்? சாரதாவுக்கு இதனுல் மனக் கஷ்டம் வருமே என்பதனுல். அம்மை போயிற்றே தவிர, எழுந்து நடமாடும் பலம் பரந்தாமனுக்கு வருவதற்கு ஒரு மாதத்துக்கு மேல் பிடித்தது.

ஒரு மாசத்துக்குப் பிறகு, பரந்தாமன் சாரதாவைக் காணச்சென்றுன். கண் இழந்தவன்—கபோதி—எனினும்

அவளைக் காணமுடியும் அவனால்! கண் இழந்தான், கருத்தை இழக்கவில்லையல்லவா!

சாரதா தாலியை இழந்தாள். பிறரால் பிணைக்கப்பட்ட கணவனை இழந்தாள். தன் வாழ்க்கையில் அதனை ஒரு விபத்து எனக் கொண்டாள். ஆனால் அதனாலேயே தன் வாழ்க்கையில் இருந்து வந்த இன்ப ஊற்று உலர்ந்து விட்ட தாகக் கருதமுடியவில்லை.

துக்கம் விசாரிக்க வந்தவர்களெல்லாம், தனக்கும் மாண்டுபோன தன் கணவருக்கும் இருந்த பொருத்தம், ஒற்றுமை, நேசம் முதலியவைகளைப் பற்றிப் பேசினர். அது வாடிக்கையான பேச்சுத்தானே! யாருக்குத் தெரியும், தன் காதலனைக் காணப் போகவேண்டும் என்பதற்காக கணவனுக்கு அபின் ஊட்ட, அது அளவுக்கு மீறிப் போன தால் அவன் இறந்தான் என்ற உண்மை.

தன் கணவனைத் தானே கொன்றதை எண்ணும்போது, சாரதாவுக்கு இருதயத்தில் ஈட்டி பாய்வது போலத்தான் இருந்தது. "நான் அவர் சற்று தூங்க வேண்டும் என்று அபின் கொடுத்தேனேயொழிய அவர் இறக்க வேண்டும் என்றுகொடுத்தேன்? இல்லை! இல்லை! நான் எதைச் செய் தாலும் இப்படித்தானே "வம்பாக" வந்து முடிகிறது. என் எழுத்துப்போலும். "என்று கூறி தன்னைத் தானே தேற்றிக் கொண்டாள்.

தன் வீட்டின் கடனைத் தீர்க்கத்தான் சாரதாவின் தகப்பன் பணக்காரனுக்குத் தன் பெண்ணை மணம் செய்து கொடுத்தார். வேதவல்லியும் தன் மகள் நல்ல நகை நட்டுடன் நாலு பேர்கண்களுக்கு அழகாகவாழவேண்டும் என்ற விருப்பத்துக்காகத்தான் சாரதாவை சீமானுக்கும் மணம் செய்ய ஒப்பினாள். ஆனால் அந்த மணம், மரணத்தைத் தான் கணவனுக்குத் தந்தது. மணமற்ற செத்த வாழ்வைத் தான் சாரதாவுக்குத் தந்தது. என் செய்வது? ஓட்டைப் படகேறினால் கரை ஏறு முன்னம் கவிழ்ந்தாக வேண்டுமல்லவா? சாரதாவுக்கு அவள் பெற்றோர்கள் அமைத்துக் கொடுத்த வாழ்க்கைப் படகு, ஓட்டை உள்ளது, அதில் எத்தனை நாளைக்குச் செல்லமுடியும்? இந்த ஓட்டைப் படகுக்கு கருப்பையா ஒட்டுப் பலகை' ஆனால் ஒட்டுப் பலகை தான் எத்தனை நாளைக்குத் தாங்கும், அதுவும் பிய்த்துக் கொண்டு போய்விட்டது, ஒரு நாள்; பிறகு படகே கவிழ்ந்து விட்டது. கணவன் மாண்டான். இனி சாரதா கரை சேருவது எப்படி முடியும்?

"முடியுமா? முடியாதா?"

"நான் என்ன பதில் கூறுவேன்?"

"உன் உள்ளத்தில் தோன்றுவதை, உண்மையைக் கூறு"

"ஊரார்.................."

"ஊரார்! பாழாய்ப் போன ஊராருக்குப் பயந்து தானே நாம் இக்கதிக்கு வந்தோம், அறுபட்ட தாலி.

பொட்டையான கண், மரத்தில் தொங்கிய பிணம் இவைகள் ஊரார் ஊரார் என வீண் கிலி கொண்டதால் வந்த விளைவு கள் என்பது ஊராருக்குத் தெரியுமா? உன் காரியத்துக்கு, ஊரார் ஒருவரையும் பாதிக்க முடியாதா? உன் காரியத்தை நீ செய்து கொள்ள உன் உள்ளம் உனக்கு அதிகாரியா' ஊராரா? ஊராருக்கென்ன சாரதா? இது ஆகுமா, அடுக்கு மா? தாலி அறுத்த முண்டைக்கு கண் இழந்த கபோதியா என்றுதான் கூறுவர். ஏளனம் செய்வர், எதிர்ப்பர், நீ ஏழைப் பெண்ணுக இருந்தால், உன்னை சமூக பகிஸ்காரமும் செய்வர். ஆனுல், அதனைப்பற்றி நீ ஏன் கவலை கொள்ள வேண்டும். சாரதா, கேள் நான் சொல்வதை. நான் கண்ணி ழந்தவன், ஆனுலும், எனக்கு பார்வை தெரிந்த காலத்தில் நான் கண்ட காட்சிகள், இந்த சமுதாயத்தின் சித்திரங்கள், எனக்குப் புகட்டும் பாடம் இது தான்; சமூகம் திடமுடன் யார் எதைச் செய்யினும் பொறுத்துக் கொள்ளும். தாங்கிப் பதுங்கிஞல் அவர்கள் மீது பாய்ந்து அவர்களைப் பதைக்க வைக்கும்.

சாரதா! கழுதையின் பின்புறம் நின்ருல் உதைக்கும். முன்ஞல் செல், ஓடிவிடும்,

''பழக்க வழக் மெனும் கொடுமையை, தீரமாக எதிர் தால் தான் முடியும்''—என பரந்தாமன் சாரதாவிடம் வாதாடிஞன். தன்னை மறுமணம் செய்துகொள்ளும்படி.

சாரதாவுக்கு மறுமணம்–தான் தேடிய பரந்தாமனை நாயகஞகப் பெறுவது என்ற எண்ணமே அமிர்தமாகத்

தான் இருந்தது. அவள் மனக்கண் முன்பு எதிர்கால இன்பச் சித்திரங்கள் அடுக்கடுக்காகத் தோன்றின. அவனுடைய அன்பு தன்னைச் சூழ்ந்து தூக்கிவாரி இன்ப உலகில் தன்னை இறக்குவதைக் கண்டாள். அவனுடைய கருவிழந்த கண்களில் காதல் ஒளி வெளிவரக் கண்டாள். சிங்காரத் தோட்டத்தில் அவன் கைப்பிடித்து நடக்க. காலடிச்சத்தம் கேட்டு மரக்கிளைகளில் அமர்ந்திருந்த கிளி, கொஞ்சுமொழி புகன்று பறக்கக் கண்டாள். அவன் ஏதேதோ கூறவும் அவை எண்ணத்தில் இன்ப வாடையைக் கிளப்பவும் கண்டாள். அவன் அணைப்பு, அவன் முத்தம், அவன் கொஞ்சுதல், அவன் கூடி வாழ்தல், அவனுடன் குடும்பம் நடத்துதல் இவை யாவும் அவள் மனக்கண் முன்பு தோன்றின.

"சாரதா, இதோ உன் உலகம், நீ தேடிக்கொண்டிருந்த தேன் ஓடும் தேசம். நீ நடந்து சென்று வழி தவறி சேர முடியாது தத்தளித்தாயே அதே நாடு. காதல் வாழ்க்கை. பரந்தாமனுடன் இணைந்து வாழும் இன்பபுரி, போ. அவ்வழி வாழு. அந்த நாட்டில் ஒரு முறை தான் தவறிவிட்டாய். அதற்குக் காரணம் உன் தந்தை. இம்முறை தவறவிடாதே.

முன்பு நீ பேதைப் பெண்; உன்னை அடக்க மடக்க பெற்றோரால் முடிந்தது. இப்போது நீ உலகைக் கண்டவள் இம்முறை உணர்ச்சியை அடக்காதே. நட இன்பபுரிக்கு. சம்மதம் கொடு பரந்தாமனுக்கு. அவன் உனக்குப் புத்துலக

இன்பத்தை ஊட்டுவான். அவனுக்கு நீ தேவை; உனக்கு அவன், நீங்கள் இருவரும் தனி உலகில் வாழுங்கள், சாதாரண உலகைப்பற்றிக் கவலை ஏன்? பழிக்கும் சுற்றத்தார், இழித்துப் பேசும் பழமைப் பித்தர்கள், கேலி செய்யும் குண்டர்கள், என் சொல்வரோ என்பதைப்பற்றி நீ கவலைப் படாதே,

அவன் கபோதிதான்! ஆனல் அவனுக்குத்தான் தெரியும், உன்னை இன்பபுரிக்கு அழைத்துச் செல்ல, பிடித்துக் கொள் அவன் கரத்தை. அவன் குருடன்! எனவே உலகின் காட்சிகள் எதுவும் அவனுக்கு இனித் தெரியாது. ஆனல் உன்னை மட்டும் அவன் அறிவான். பிறவற்றைப் பார்க்க வொட்டாதபடி தடுக்கவே பார்வை அவனை விட்டுச் சென்றும் விட்டது'' என சாரதாவுக்கு விநாடிக்கு விநாடி காணும் காட்சிகள் யாவும் உணர்த்துவித்தன,

விதவை சாரதாவுக்கும் விழியிழந்த பரந்தாமனுக்கும் மணம் நடந்தேறியது.

வீதி மூலைகளில் வீணர்கள் வம்பு பேசினர். சமயற் கட்டுகளில் பெண்டுகள் சகலமும் தெரிந்தவர்கள் போல கேலி செய்தனர். வைதீகர்கள், 'வந்தது விபரீதம்' எனக் கைகளைப் பிசைந்தனர். உற்றார், உறவினர், உறுமினர். ஆனல் கபோதிபுரக்காதலை இனி யாராலும் தடுக்க முடியாது. அவர்கள் இன்பபுரி சென்று இன்பத்துடன் வாழ்ந்து வரலாயினர்.

என் எண்ணம்

கடந்த இரண்டு நாட்களாக இங்கே செங்கற்பட்டு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவில் விமரிசையான மாநாடுகள் நடைபெற்றுவருகின்றன.

நேற்றயத்தினம் சமூக சீர்திருத்த மாநாடு நடைபெற்றது. இன்று அரசியல் மாநாடு நடைபெறுகின்றது. இந்த இரு நாட்களாக மாநாட்டில் நாட்டின் பலதிறப்பட்ட பிரச்சினைகளைப் பலரும் பேசிய கருத்துமிக்க சொற்பொழிவுகளைக் கேட்டீர்கள், களித்தீர்கள்.

மாநாட்டிலே பெருவாரியான மக்கள் கூடியிருப்பதைக் கண்டு நான் பெரிதும் மகிழ்கிறேன்.

தேர் திருவிழாக்களுக்குக் கூடுவதைப்போல மக்கள் இங்கே கூடியுள்ளாதாரையும் சிலர் குறிப்பிட்டார்களாம்.

சீரங்கம் போன்ற ஊர்களிலும் காஞ்சிபுரத்திலும் நடைபெறும் திருவிழாக்களிலே ஏராளமான மக்கள் கூடத்தான் கூடுகிறார்கள். ஆனால் திருவிழாக்கூட்டத்திற்கும் இப்படிப்பட்ட மாநாடுகளிலே கூடுகின்ற மக்களுக்கும் மகத்தான வேற்றுமை உண்டு.

சீரங்கம் திருவிழாவிற்குச் சென்றேன், சொல்லமுடியாத கூட்டம். நான் கோயில்முன் நின்றேன். அதுதான்

எனக்குத் தெரியும். மறுபடியும் பார்க்கிறேன், கோயில் சன்னதியில் இருக்கிறேன்! வெளியில் இருந்தவன் எப்படியோ ஆண்டவன் அருளால் உள்ளே போய்விட்டேன் என்று கூறுகின்ற பக்தர்கள் எத்தனையோ பேர் உண்டு.

திருவிழாவில் ஏராளமாகக் கூடிய மக்கள் நெருக்கிய படியே முன்னுக்கு செல்வதால், முன்னே இருப்பவர்கள் தன்னாலே மேலே செல்லத்தானே வேண்டும் ? இப்படிக் கூட்டத்தினரால் நெருக்கி முன்னே தள்ளப்படுவதால் சன்னதிக்குச் சென்றதை பகவான் அருள் என்று மெய் மறந்து பேசுகின்ற பக்தர் கூட்டம் போன்றதல்ல இங்கே கூடுகின்ற கூட்டம்!

திருவிழாவில் மக்கள் கூடிக்கலந்து செல்லும் வேடிக்கை நிகழ்ச்சியைப் போன்று இத்தகைய மாநாடுகளுக்கு வருகின்ற யாரும் எண்ணிவிடக்கூடாது, அப்படி நடந்து விடுவதும் நல்லதல்ல !

இப்படிப்பட்ட மாநாடுகளுக்கு போகும் மக்கள் அனைவரும் இதனைத் திருவிழாவிற்கு வந்து போவதைப்போன்று நினைத்து நடக்கக் கூறுமாறுக, இங்கே நடைபெற்ற நிகழ்ச்சிகளைப்பற்றி மற்ற மக்களிடையே விளக்கவேண்டும் இங்கே பேசப்பட்ட நல்ல கருத்துக்களைப் பற்றி நன்கு சிந்தித்து அவைகளைப் பிறரிடம் பரப்பவேண்டும். பிரச்சினைகளைப் பற்றித் தரப்பட்ட விளக்கங்களைப்பற்றி விவாதங்கள்நடத்த வேண்டும். மாநாட்டிற்கு வந்து போவதற்கு இதுதான் அடையாளமே தவிர திருவிழாவிற்கு வந்து திரும்பியவர்

கள் விழாவில் நடந்த வெத்துவேட்டுக்களின் சத்தங்களைப் பற்றியும், வாண வேடிக்கைகளின் விமரிசைகளைப் பற்றியும், பேசுவதைப்போல் இருந்துவிடக்கூடாது.

இந்த செங்கற்பட்டு மாவட்ட மாநாட்டில் மக்கள் ஏராளமாகக் கூடியிருக்கின்றனர். சிற்றூர்களினின்றும், பேரூர்களினின்றும் வந்துள்ள பெருங்கூட்டத்தினரைக் கண்டு நான் உண்மையிலேயே பெருமகிழ்ச்சியடைகிறேன். இருநாட்களாக மிகவும் விமரிசையாக நடைபெற்று வருகின்றது. இதில் நீங்கள் காட்டும் உற்சாகத்தையும் பேரார்வத்தையும் கண்டு பெரிதும் பாராட்டுகிறேன்.

இப்படிப்பட்ட மாநாட்டைக் கூட்டி, அதனை இவ்வளவு சீரும் சிறப்புடனும் நடத்திய இந்த மாவட்டத்தினருக்கு தி. மு. க. சார்பில் எனது நன்றியறிதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் ஏற்கெனவே குறிப்பிட்டபடி, இங்கே கூடியுள்ள மக்கள் அனைவரும், மாநாடு முடிந்து தங்கள், தங்கள் இருப்பிடம் சென்றதும் இங்கே நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பற்றி எண்ணவேண்டும். அதனை மற்றவர்களிடமும் எடுத்துக் கூறிப் பரப்பவேண்டும்.

திருவாங்கூர் தமிழர் பிரச்சினைபற்றி கவனித்து நண்பர் நெடுஞ்செழியன் விளக்கினார், மிகவும் திறம்பட, நேற்று பகுத்தறிவுக் கொள்கைகளைப் பற்றித் திருச்சி டி. கே. சீனிவாசன் மிகத்தெளிவானதோர் உரையாற்றினார். மக்கள்

மறுமலர்ச்சி பெறவேண்டிய அவசியத்தைப்பற்றி தோழர் அன்பழகன் நல்லதோர் விளக்கவுரையாற்றினர். இன்னும் இப்படிப்பட்ட பல நல்ல கருத்துக்களைப் பற்றிய சொற் பொழிவுகளை நேற்றுமுதல் நீங்கள் அனைவரும் கேட்டு மகிழ்ந்தீர்கள். இடையிடையே உங்கள் மகிழ்ச்சிப் பெருக்கை கைதட்டல் மூலம் தெரிவித்தீர்கள்.

இதோடு உங்கள் கடமை முடிந்துவிட்டதாக எண்ணி விடக்கூடாது. மாபெரும் பந்தலைப்போட்டு, அதிலே பெருத்த அளவில் மக்களைக் கூட்டிக் காண்பிப்பதோடு மாநாட்டின்நோக்கம் தீர்ந்துவிட்டதாக யாரும்கருதக்கூடாது.

இங்கே நீங்கள் இருநாட்களாகக் கேட்ட கருத்துரை களையும், விஷய விளக்கங்களையும் நீங்கள் சந்திக்கும் மற்ற வரிடம் கூறவேண்டும், விவாதிக்க வேண்டும். பல கருத் துக்களைப் பற்றி விவாதிக்கவும், பல விஷயங்களைப் பற்றிய விளக்கங்களையும், தெளிவுகளையும், பெற்றுத்திரும்புமான சொற்பயிற்சிக் கூடமாகத்தான் இத்தகைய மாநாடுகளை நீங்கள் கருதவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். மாநாட்டுக்கு வந்துள்ள அத்தனை தோழர்களும், தோழி யரும், இப்படிப்பட்ட உற்சாகத்துடனும், ஊக்கத்துடனுந் தான் ஊர்திரும்பவேண்டும். அப்போதுதான் இங்கு வந்த தற்கான பயன் ஏற்பட்டதாகப் பொருள்! இன்றேல் வெறும் திருவிழாக் கூட்டத்திற்கும் உங்களுக்கும் எந்த விதமான வேற்றுமையோ வித்தியாசமோ இருக்காது என்பதை உணர வேண்டுகிறேன்.

டாக்டர் வீட்டிற்குச் சென்று திரும்புகின்றவருக்கும், சோதிடன் வீடு சென்று வருபவருக்கும், உள்ள வித்தியாசத்தைப் போலத்தான் மாநாட்டிற்கு வந்து 'போகின்ற மக்களுக்கும் திருவிழாவிற்குச்சென்று திரும்புகின்ற கூட்டத்திற்கும் இருக்கும், இருக்கிறது, இருக்கவும் வேண்டும்.

சோதிடன் வீட்டிற்குச் சென்று திரும்புகின்றவன் உற்சாகத்தோடு பொருத்த மனக்கோட்டைகளையெல்லாம் கட்டிக்கொண்டே வருவான். சோதிடன் கூறியிருப்பார் 'உனக்கு அஷ்டமத்திலே உள்ள சனி ஆவணிமாதம் ஆருந் தேதியோடு தொலைந்து போய்விடும்' அதற்குமேல் குரு தசை ஆரம்பம் என்று'. இதை எண்ணி பூரித்துக் கொண்டே திரும்புவார் சோதிடன் வீட்டிலிருந்து !

ஆனால் டாக்டர் வீட்டிலிருந்து வெளிவரும் தோழர் அப்படியா திரும்புவார்? திரும்பமுடியும்? டாக்டர் வீட்டிலிருந்து திரும்பும் தோழரிடம், சோதிடன் வீட்டிலிருந்து திரும்பும் தோழரிடம் காணப்படுவது போன்ற உற்சாகம் காணப்படாது ! அவரிடம் சிறுது தளர்ச்சிகூடக் காணப்படும். கொஞ்சம் வருத்தமாகக்கூட காணப்படுவார் அவர் ஏன் ?

டாக்டர் அவரது நாடியைப் பிடித்துப் பார்த்து நரம்புத் தளர்ச்சி இருக்கிறது என்றோ, ரத்தச் சோகை காணப்படுகிறது என்பதாகவோ, அல்லது ஜுரத்திற்கான அறிகுறி தென்படுகிறது என்றோ கூறி, அதற்கான மருந்து வகை

களைச் சாப்பிடும்படி தெரிவித்திருப்பார்! இதைக் கேட்டு வரும் நபரிடம் எங்கிருந்து உற்சாகத்தைக் காணமுடியும்? அவரிடம் உற்சாகத்திற்குப் பதில் மனச் சோர்வு தானே காணப்படும்.

இதைப்போன்ற வேறுபாடுதான் திருவிழாக் கூட்டத்தினருக்கும், மாநாடுகளுக்கு வந்து போகும் மக்களுக்கும் இடையே காணப்படும்-காணப்படுகிறது.

மாநாடுகளிலே பேசப்படும் விஷயங்களைக் கேட்டுச் செல்பவர்களுக்கு ஒருவகையில் உற்சாகம் இருப்பினும், பலவகையில் மனச் சோர்வுதான் காணப்படும். சிலருக்குத் தயக்கம், ஏற்படக்கூடும்! வேறு சிலருக்கு அச்சமும் ஆயாசமுங்கூடத் தோன்றலாம்.

மாநாட்டிலே கூறப்படுகின்ற பலவகைக் கருத்துக்களையும், விளக்கப்படும் பலவகைப்பட்ட பிரச்சினைகளையும் எண்ணும் எவருக்கும் அத்தகைய நிலைதான் ஏற்படக்கூடும் என்பதில் ஆச்சரியமொன்றுமில்லை.

என்ன நாம் வசிக்கும் நாடு நம்மிடம் இல்லையென்கிறார்கள். சர்க்காரும் நம்ம சர்க்கார் அல்லவாம், நாடு நலிந்து கிடக்கிறதாம். நாம் சுரண்டப்படுகிறோம். சூது நிறைந்த பலர் நம்மிடையே உலவுகிறார்களாம். இப்படி எதையெதையோ கூறுகிறார்கள், புராணங்களைப் பொய்யென்று கூறுகிறார்கள்! இதிகாசங்கள் இழிவை உண்டாக்குகின்றன, வேதங்கள் மக்களிடையே பேதங்களையும் பிளவுகளையும்

ஏற்படுத்தின, என்றெல்லாம் பேசுகிறார்களே! நாடு வறுமையில் உழல்கிறது, மக்கள் பசியால் தத்தளிக்கிறார்கள் இதை அரசாங்கம் கவனிக்கவில்லையென்று எடுத்துக்காட்டுகிறது. அப்பப்பா இவ்வளவு தொல்லையா கிடக்கிறது? இத்தனை மூடக் கொள்கைகளா நம்மிடையே மலிந்துள்ளது? இதையெல்லாம் பார்க்க வேண்டுமே என்று எண்ணும்போது யாருக்கும் முதலில் சிறிதாவது அச்சமும், ஆயாசமும் ஏற்படத்தானே வேண்டும்!

டாக்டர் நோயாளியின் நாடியைப் பிடித்துப்பார்த்து உடலில் உள்ள கோளாறுகளைக்கூறி அதற்கேற்ற மருந்து வகைகளைக்கூறுவது போலத்தான் நமது மாநாடுகளிலே மக்களின் வாழ்வுப் பிரச்சனைகளை நாம் எடுத்துப் பேசுகிறோம். நாட்டின் நலிவுகளைக் காட்டிப் போக்கவேண்டுமென்று கூறுகிறோம்.

இதுதான் நமக்கும் மற்ற கட்சிகளுக்கும் உள்ள மகத்தான மாறுபாடு, அடிப்படை வித்தியாசமாகும். மற்ற கட்சிக்காரர்கள் நாட்டிலுள்ள பொலிவுகளைப் பற்றி மட்டும் பேசுவர், பாராட்டுவர். ஆனால் தி. மு. கழகம் முக்கியமாக நாட்டில் உள்ள நலிவுகளைப்பற்றித்தான் பேசும். எடுத்துக் காட்டிக்கொண்டிருக்கும். அவற்றைப் போக்கவேண்டிய வழிவகைகளைப்பற்றிக்கூறும், ஆராயும், அதற்காகப் பாடு படும்.

தி. மு. கழகத்தவர் கூட்டங்களிலே பேசப்படும் கருத்துக்கள் மக்களுக்குச் சிறிது கசப்பாகத்தானிருக்கும்

முதலில்! காரணம் நாங்கள் மக்களை மற்றவர்களைப்போல ஞானவான்கள் என்றோ இந்திரன் சந்திரன் என்றோ போற்ற மாட்டோம், புகழவும் மாட்டோம்.

நாங்கள் அந்த இந்திரனையும், சந்திரனையுமே குறை கூறுகிறோமே! இந்திரன் ரிஷிபத்தினியைக் கெடுத்தான், சந்திரன் குரு பத்தினியைக் கெடுத்தான் என்று குற்றஞ் சாட்டும் நாங்கள், மக்களை எப்படி இந்திரர் என்றும் சந்திரர் என்றும் புகழ முடியும்.

நாங்கள் கூறுவதெல்லாம் என்ன? இந்த நாட்டுச் சமுதாயம் மிகவும் கீழான நிலைமையில் இருக்கின்றது. மக்களில் படித்தவர்கள் நூற்றுக்குப் பன்னிரண்டுபேர்தான். மற்றவர்கள் அனைவரும் தற்குறிகள். படித்தவர்களிலும் பலர் பகுத்தறிவற்றவர்களாகத்தான் காணப்படுகிறார்கள்! மக்களிடையே சாதி பேதம் தலைவிரித்தாடுகிறது. மதமூட நம்பிக்கைகளிலே மக்கள் சிக்கிச் சீரழிகிறார்கள், ஆண்டவனை நம்பி மக்கள் அவதிப்படுகிறார்கள். இந்த அவல நிலை போக வேண்டும் போக்கவேண்டும். இப்படிப்பட்ட விஷயங்களைத்தான் நாங்கள் பேசுகிறோம்.

இதனால்தான் மக்களுக்கு மற்ற கட்சிகளிடம் சுலபத்தில் ஏற்படுவதுபோன்ற கவர்ச்சியும், பற்றும் பாசமும், எங்களிடத்தில் சுலபத்தில் ஏற்படுவது கிடையாது என்றாலும், நாங்கள் கூறுவதைக்கேட்டுச் சிந்தித்தபிறகு மக்கள் அனைவரும் எங்கள் போக்கில்தான் திரும்பி வருகிறார்கள்.

ஊரில் உள்ள ஜோதிடரின் வீட்டுக்கு அனைவரும் போகமாட்டார்கள் போகவேண்டிய அவசியமோ, கட்டாயமோ இல்லை. ஆனால் ஊரில் உள்ள டாக்டரிடம், ஏறத்தாழ அனைவருமே அந்த ஜோதிடர் உட்பட தமக்கு நோய் வருகின்ற நேரத்தில் போய்த்தீரவேண்டும். நோய் வரும் போது டாக்டரிடம் போய்த்தான் ஆகவேண்டும் என்ற கட்டாயம் அவசியம் ஏற்பட்டுவிடுகிறது. ஆகவே ஊருக்கு ஒரு டாக்டரேனும் இருந்தாகவேண்டிய நிர்ப்பந்தமும் உண்டாகிறது.

ஊரில் உள்ள மக்களின் நாடியைப் பிடித்துப்பார்த்து நோயை தெரிவித்து நோயின் கூறுகளையும் ஆராய்ந்து, அதற்குதக்க மருந்து தரும் டாக்டரைபோலத்தான் தி. மு. கழகம் நாட்டு மக்களின் நலிவைப் பார்த்து கேடுகளைச் சுட்டிக்காட்டி அவைகளைப் போக்குவதற்கான வழிகளையும் சொல்லி வருகின்றது.

நாங்கள் நாட்டு மக்களின் நலிவுகளைப் பற்றியே அதிகம் பேசுகிறோம், சீர்கேடுகளைச் சுட்டிக் கண்டிக்கிறோம். பழமைப் பிடிகளை அகற்றவேண்டுமென்று பாடுபட்டு வருகிறோம். நாட்டு மக்களின் நானுவித பிரச்சினைகளைப் பற்றியும் அலசிக்காட்டி மக்களிடையே தெளிவையூட்டுகிறோம். துணிவை ஏற்படுத்துகிறோம். கேடுகளைக்களைந்து முன்னேறும் மார்க்கங்களைப் பரப்பிவருகிறோம்,

இப்படிப்பட்ட நாட்டின் நலிவுகளைச் சுட்டிக்காட்டி, கேடுகளைக் கண்டித்து முன்னேறும் முறைகளைக் காட்டும்

மருத்துவர்களாகத்தான் மக்கள் மதிக்கவேண்டும், நாட்டு மக்களின் நானாவித பிரச்சினைகளையும், தீர்த்துவைக்கும் வழி காட்டியாக நோய்தீர மருந்துதரும் மருத்துவ மனையாகத் தான் தி. மு. கழகத்தைக் கருதவேண்டும்.

இந்த முறையில்தான் மக்கள் இந்த மாநாட்டில் நடை பெறும் நிகழ்ச்சிகளையும் கூறப்படும் கருத்துக்களையும், விளக்கப்படும் பிரச்சினைகளையும் கருதவேண்டுகிறேன். இப்படிக்கருதி இக்கொள்கைகளையும் நாட்டில் மேலும் பரப்ப வேண்டிக்கொள்கிறேன்.

இந்தவகையில் இந்த மாநாடு மக்களுக்கு பயன்தரும் என்று நம்புகிறேன். இதனை இங்கு கூடியுள்ளவர்களும் இந்த முறையிலேயே பயன்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சரியாகவோ, தவருகவோ மற்றவர் எப்படிக்கருதினாலும் சரி, திராவிட முன்னேற்றக் கழகம் இன்று நாட்டில் ஓர் நிலைத்த அமைப்பாகிவிட்டது. இதனை யார் மறுத்தாலும் சரி, ஒப்பினும் சரி, தி. மு. கழகம் நிலைத்த அமைப்பாகி விட்டதென்னவோ மிகவும் நிச்சயமானதாகும்,

நாட்டில் மிகவும் நிலைத்த அமைப்பாகிவிட்டிருக்கும் தி. மு. கழகத்தை சிலர் அழித்துவிடலாம் என்று நினைக்கிருர்கள். வேறு சிலர் இதனை அலட்சியம் செய்து ஒதுக்கிவிட முடியும் என்றும் எண்ணுகிருர்கள். இப்படி நினைப்பவர்கள்

எல்லாம் தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொள்பவர்களாகத் தான் ஆவார்கள் என்பது மிகமிக நிச்சயம்!

இன்று எந்தக்கட்சிக்காரர் ஆனாலும் தி. மு. காவைப் பற்றிப் பேசாத மேடையில்லை. நாளில்லை. எல்லா மக்களும் நம்மைப்பற்றிப் பேசுவதால், அனைவரும் நமது கழகத்தை பாராட்டுவதாக எண்ணிட நான் ஒன்றும் ஏமாளியல்ல!

மற்றவர்கள் நம்மைக் கவனிக்கவேண்டிய நிர்ப்பந்தம் இன்று ஏற்பட்டுவிட்டது. நம் கழகத்தைப்பற்றி பேசித் தீர வேண்டிய அவசியம் உண்டாகிவிட்டது. பாராட்டிச் சிலரும், பகைத்துச் சிலரும், தூற்றி வேறு சிலரும் பேசுகிறார்கள், எப்படியோ அனைவரும் நம்மைப்பற்றி ஓயாது பேசவேண்டிய நிலைமை, நிர்ப்பந்தம் இன்று ஏற்பட்டிருக்கிறது என்பதைத்தான் நான் குறிப்பிடுகிறேன்.

தி. மு. கழகத்தைப்பற்றி பலர் பலவிதம் பேசுகிறார்கள். பலவிதமாக எண்ணுகிறார்கள்.

கம்யூனிஸ்டுகள் நினைக்கிறார்கள், நாம் அந்தக்கட்சியை ஒழித்துக்கட்டுவதற்காகவே இருப்பதாக. காங்கிரசாரும் தங்களைத்தான் நாம் தாக்குகிறோம் என்று. பணக்காரர்கள் எண்ணுகிறார்கள், அவர்களின் பகட்டான பாங்கான வாழ்வைத் தீர்த்துக் கட்டவே நாம் தோன்றியுள்ளதாக. பார்ப்பனர் மீது துவேஷத்தை வளர்ப்பதற்குத்தான் நமது கட்சி இருப்பதாக பார்ப்பனர் கருதுகிறார்கள். இப்படிப் பேசுகிறார்கள். நினைக்கிறார்கள் பலப்பல விதங்களிலே!

இதில் இருவகைப்பட்ட கருத்துக்களும் நம்மைப்பற்றிக் கூறப்படுகின்றன. பார்ப்பனர்களைத் துவேஷிப்பதே நமது வேலையென்று பார்ப்பனர் எண்ணுகின்றனர். அதே நேரத்தில் பார்ப்பனரை அழைத்து அணைத்துக்கொள்வதாகவும் சிலர் நம்மைக் கூறுகிறார்கள், மலையாளிகளைப் பகைவர் என்றும் பேசுகிறார்கள். அதே நேரத்தில் மலையாளிகளைச் சேர்த்துக்கொள்பவர்கள் என்றும் குற்றம் சாட்டப்படுகிறோம். ஆந்திரர் தமிழர் பகை வளர்ப்பதாகச் சிலர் தூற்றுகிறார்கள். அதேசமயம் ஆந்திரரை அணைத்துஅகமகிழ்கிறோம். தமிழர்களைக் காட்டிக்கொடுக்கிறோம் என்று சிலர் பிரச்சாரம் செய்கிறார்கள். சினிமாவில் அரசியலைப் புகுத்துவதாக சினிமாத்துறையில் இருப்பவர்கள் அஞ்சுகின்றனர். ஆனால் நாம் அரசியலில் சினிமாவைப் புகுத்துவதாகவும் சிலர் கேலி பேசுகிறார்கள்.

நம்மைப்பற்றி இப்படிப்பட்ட இரண்டுவிதமான பேச்சுக்களும் நாட்டில் தினந்தினம் பேசப்படுகின்றன. கம்யூனிஸ்டுகள் நம்மை பிற்போக்கு வாதிகள் என்றால், நாட்டில் உள்ள மற்றவர்கள் நம்மைப் புரட்சிக்காரர்கள் என்று பேசுகின்றனர்.

யார் யார் எப்படியெப்படிப் பேசினாலும், இன்று நாடு முழுவதும் நன்கு நிலைத்துவிட்ட ஜனநாயக அமைப்பு தி. மு. கழகம் என்பது எவராலும் மறுக்கமுடியாத உண்மையாகும்,

நம்மைப்பற்றி சைவர்கள் பேசுகிறார்கள், ஆத்திகர்கள் நினைக்கிறார்கள் அரசியல்வாதிகள் எண்ணுகிறார்கள். எல்லா கட்சிகளும் நம்மைப்பற்றிப் பேசத்தவறுவதே இல்லை. ஆனால் ஒவ்வொருவர் ஒவ்வொருவிதமாகப் பேசுகிறார்கள், நினைக்கிறார்கள். பழிக்கிறார்கள், தூற்றவும் தூற்றுகிறார்கள்.

பலரும் நம்மைப்பற்றிப் பலவிதமாகப் பேசினாலும், ஒருவராலும் நம்மைப்பற்றி நிச்சயமான, உண்மையான பேச்சைப் பேசமுடியவில்லை. நமது நிலையைப்பற்றி எவராலும் இறுதியிட்டுக் கூறமுடிவதில்லை. இதற்குக் காரணம் யாரும் நம்மை நெருங்கவில்லை. எந்தக்கட்சிக் காரருக்கும் நமக்கும் நல்ல நெருக்கம் ஏற்படவில்லை என்பதுதான்.

நம்மை நெருங்கிப் பார்த்தால் நாம் எவருக்கும் பகையானவர்கள் அல்ல, எந்தக் கட்சிக்காரர்களுக்கும் நாங்கள் விரோதிகளல்ல என்பது நன்கு விளங்கும், ஆனால் யாருக்காகவும், எந்தக்கட்சிக்காகவும் தி. மு. கழகம் தனது கொள்கைகளையும் திட்டங்களையும் கைவிட்டுவிடும் நிலையிலும் இல்லை.

நம்மைப்பற்றி எல்லோரும் பேசுகிறார்கள். நம்மைப் பேசாதவர்கள் இல்லை, பேசாத நாள் இல்லை. பேசப்படாத இடமுங்கிடையாது.

இரண்டு நண்பர்கள் சந்திக்கும்போது 'வணக்கம்' என்று கூறுகிறார்கள் என்றால் 'ஓகோ இவர்கள் சூனாமானாக் கள் போலும்' என்று நினைக்கிறார்கள்.

ஏதாவது ஒரு நாடகத்தில் ராஜாதி ராஜன் என்று பேசவேண்டிய இடத்தில் மன்னன் என்று பேசப்பட்டால் இவர்கள் கழகத்தைச் சேர்ந்தவர்களைப்போலக் காணப்படு கிறது, என்று பார்ப்பவர்கள் எண்ணுகிருர்கள்.

எங்காவது ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுகிறவர். 'அவைத்தலைவர் அவர்களே! பொதுமக்களே' என்று பேசட்டும்! உடனே அவரையும் தி. மு. கழகத்துடன் சேர்த்துவிடுகிருர்கள், கேட்பவர்கள்.

இப்படித்தான் எந்தத்துறையிலும் தி. மு. கழகத்தைப் பற்றி பேச்சு அதிகமாகி விட்டது என்பதுமட்டுமல்ல, மிகவும் முக்கியமானதாகவும் ஆகிவிட்டிருக்கிறது.

பலரும் நம்மைப்பற்றிப் பேசுவதற்குக் காரணம் என்ன? எல்லாம் பிரச்சினையாகிவிட்டிருக்கும் நிலைமை ஏன் ஏற்பட்டுவிட்டிருக்கிறது? நாம் அத்தனை துறைகளிலும் படையெடுத்துவிட்டிருக்கிறேம்! எல்லாத் துறைகளிலும் நுழைந்து பணியாற்றி வருகிறேம். இதனுல்தான் நம்மைப் பற்றிய பேச்சு பேசுவதற்கும், பிரச்சினைகள் கிளப்புவதற் கும் முக்கியமான காரணமாகும்,

ஒவ்வொரு துறையில் இருப்பவர்களும், நாம் அறிவுத் துறையில் ஈடுபட்டு வருவதால் நம்மை விரோதிகளாகக் கருதுகிருர்கள். மற்றவர்களை ஒழித்துவிடுவதற்காகவே நாம் அத்துறைகளில் நுழைந்ததாக எண்ணிக் கலக்கமடை கிருர்கள்.

நாடகம், சினிமா, பேச்சு, எழுத்து, பொதுமேடை, அரசியல், சமுதாயம், பொருளாதாரம் ஆகிய எந்தத்துறையினை எடுத்துக்கொண்டாலும், அங்கெல்லாம் நாம் இருக்கிறோம், நமது கழகம் அத்தனை துறைகளிலும் ஈடுபட்டிருக்கின்றது,

இதைக்கண்டு மற்றவர் கிலி கொள்வதும், கேலிசெய்வதும், பழி சுமத்துவதும், இழி மொழி புகழ்வதுமான நிலைமை ஏற்பட்டுவிட்டது, பலர் நம்மைக்கண்டு பதைக்கிறார்கள், பொறுமையும் பொச்சரிப்புங்கொண்டு ஏசுகிறார்கள். எரிச்சலுடன் பழகுகிறார்கள். எப்படியாவது இவர்கள் தத்தம் துறைகளிலிருந்து விரட்டவேண்டும். ஒழித்துக்கட்டலாம் என்பதிலேயே கண்ணுங் கருத்துமாக இருக்கின்றனர். காலம் சிலருக்கு இதே முறையிலேயே கழிந்தும் விடுகிறது!

கம்யூனிஸ்டுக் கட்சியைச் சார்ந்த நண்பர் ஜீவானந்தம் சில நாட்களுக்கு முன்னர் என்னுடன் உரையாடிக்கொண்டிருந்தார். அந்த உரையாடல் நடந்த இடம் தி. மு. கழகத்தின் தலைமை நிலையமான 'அறிவகம்' ஆகும்,

அப்போது நண்பர் ஜீவா என்னிடம் சொன்னார், 'அண்ணாத்துரை' உங்கள்மேல் எனக்கு ஒருவகையில்தான் மிகவும் கோபமாக இருக்கிறது. நீங்கள் எந்தத் துறையில் கால் வைத்தாலும் அதனை உங்கள் சொந்தமாக்கிக்கொள்கிறீர்கள். ஏற்கனவே அத்துறையில் உள்ளவர்களை யெல்

லாம் நீங்கள் மிஞ்சிவிடுகிறீர்களே' என்ற கருத்துப்பட நண்பர் ஜீவானந்தம் என்னைக்கேட்டார்.

திருவாங்கூர் தமிழ்ப் பிரச்சினையாகட்டும், சித்தூர் தமிழர் பிரச்சினையாகட்டும், அதிலெல்லாம் முதன் முதலில் நேரடி நடவடிக்கையில் ஈடுபட்ட. தாய்த் தமிழகத்தவர் நாம்தான், இதன் பின்னர்தான் மற்றவர்கள் வந்தார்கள்

அதேபோல பொதுஉடமைப் பிரச்சினையிலும் நாம் தான் உண்மையான பொதுவுடமை பிரச்சினைகளைப் பற்றிப் பேசுகிறோம். பாடுபடுகிறோம். இதைப் போலவே பகுத் தறிவுத் துறையிலும் நாம்தான் மற்ற எவரையும்விட அதிக மாகப் பாடுபட்டு வருகிறோம்! என்ன செய்வது! நாம் இத்தனை துறைகளிலும் பாடுபடவேண்டியிருக்கிறதே!

நண்பர் ஜீவானந்தம் அத்தனை துறைகளையும் நாம் நமக்குச் சொந்தமாக்கிக் கொள்வதாகக் குறிப்பிட்டதற்குப் பதிலாக நான் கூறியதாவது, 'நாங்கள் எல்லாத்துறைகளி லும் ஈடுபடுவதற்குக் காரணம், நாங்கள் எல்லாத்துறைகளி லும் நல்லதைத் தேடுகிறோம், நல்லனவற்றை உண்டாக்க விரும்புகிறோம். என்பதுதான் என்று அவரிடம் தெரிவித் தேன்.

நல்லவை எங்கெங்கு கிடைக்கிறதோ அங்கெல்லாம் தி. மு. க.வும் சென்று பணியாற்றும். மக்களுக்கு எந்தெந்தத் துறைகளின் மூலம் நன்மையை செய்யமுடியுமோ, அத்தனை துறைகளையும் கைபற்றியே தீரும். அத்தனை துறைகள்

மூலமாகவும் மக்களுக்கு நன்மைகள் ஏற்பட்டுத் தீரும்வரை தொடர்ந்து பணியாற்றியே வருமென்பது உறுதி!

சினிமா நாடகத் துறைகளிலே உள்ள நல்லவற்றைப் பயன்படுத்துகிறோம், நாட்டு மக்களைத் திருத்த இத்துறைகளில் வேலை செய்கிறோம். ஏடுகளிலே உள்ள நல்ல கருத்துக்களைப் பரப்புகிறோம், பாராட்டுகிறோம். நாட்டில் நல்ல ஏடுகள் உலவிடவும் உழைத்து வருகிறோம். பொதுஉடைமை நல்லவிதத்திலே, சரியான அடிப்படையிலே ஏற்படப் பாடுபடுகிறோம். தமிழர் உரிமை பாதுகாக்கப்படவேண்டுமென்பதிலே மிகவும் அக்கரைகாட்டி வருகிறோம்.

ஒவ்வொரு துறைகளிலும் அந்தத் துறைகள் சரிவரச் சீர்திருத்தி நாட்டு மக்களுக்குப் பயன்படும் வரையில் நாங்கள் இருப்போம். வேலை செய்துதான் வருவோம். ஆகையால் நாங்கள் எல்லாத்துறைகளிலும் இருப்பதாக நண்பர் ஜீவானந்தம் குறிப்பிட்டார்,

அன்று நானும் நண்பர் ஜீவானந்தரும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்த அறையின் சுவற்றில், ஸ்டாலினும், லெலினும் பேசிக்கொண்டிருக்கும் படம் ஒன்று மாட்டப்பட்டிருந்தது, இதனை நண்பர் திரும்பிப்பார்த்தார்.

அந்தப்படத்தை கையினால் எனக்குச் சுட்டிக்காட்டினார். பிறகு என்னைப்பார்த்துக்கேட்டார். 'இந்தப்படத்தை சுவற்றில் மாட்டிவைத்துக்கொண்டே எங்களைத் திட்டுகிறீர்களே? எவ்வளவு துணிவு' என்று.

நான் உடனே அவரைக் கேட்டேன், 'அவ்வளவு சுலபத்தில் அந்தப்படத்தை உங்களுக்கு மட்டுமே, கம்யூனிஸ்டுகளுக்கு மட்டுமே ஏன் சொந்தமாக கருதுகிறீர்கள்? அது தவறான கருத்தல்லவா' என்று.

அதோடு படத்தில் உள்ள ஸ்டாலினும் சரி, லெனினும் சரி இன்று உயிரோடு இல்லை. இருவருமே இறந்துவிட்டனர். அவர்கள் உயிரோடு இருந்தாலாவது அவர்கள் படத்தை மாட்டிக்கொள்ள எனக்குச் சொந்தம் உண்டா இல்லையா, என்று கேட்கமுடியும்! அதோடு நாங்கள்தான்—தி.மு கழகந்தான் இந்த நாட்டில் உண்மையான பொதுஉடமைவாதிகள் என்றுகூட எடுத்துக்கூற முடியும்! நிலைமை இப்படியிருக்க, லெனின் ஸ்டாலின் படம் உங்களுக்கே சொந்தம் என்று எண்ணுவதும் தவறு. அதை எங்கள் சுவற்றில் மாட்டிக்கொண்டால் உங்களைக் குறையே கூறக்கூடாது என்பது அதைவிடப் பெருந்தவறு எனக் குறிப்பிட்டேன்.

தோழர் மேலும் கூறினார் இதுதான் அண்ணாத்துரை உங்களைப் பொருத்தவரை எங்களுக்குள்ள சங்கடம்! எங்களைப் பாராட்டிக்கொண்டே, எதிர்க்கிறீர்கள். இந்த வகையில் பெரியார் போக்கு தெளிவாக இருக்கிறது. அவர் எங்களை வெளிப்படையாகவே தாக்கி வருகிறார். அதனால் அவருடன் நேரிடையான விரோத மனப்பான்மையாவது காட்டமுடிகிறது. உங்களிடம் அப்படி முடியவில்லையே என்று.

இதற்கு நான் என்ன செய்வது? இதுதான் நான். எனக்கும் மற்றவர்களுக்கும் உள்ள வித்தியாசம் இதுதானே!

நான் யாரையும் அர்த்தமற்றுப் பகைத்துக்கொள்ள மாட்டேன். அதே நேரத்தில் யாரையும் அவர்கள் செய்யும் நல்ல காரியங்களுக்காகப் பாராட்டாமலும் இருக்கமாட்டேன். அதற்காகக் கண்டித்துப்பேச நேரிடும் நேரத்தில் கண்டிக்காமலும்இருக்கமாட்டேன். கண்டித்தேதீருவேன். இதுதான் எனது சுபாவம்.

மற்றவர்களுக்கு என்னைப் பிடிக்கவில்லையானால், எனது கொள்கைப்படி நடக்கமுடியவில்லையானால் அவர்களாக வெட்டிக்கொண்டு போகட்டும், பிரிந்து செல்லட்டும். நானாக யாரையும் விரட்டமாட்டேன், தள்ளவும் மாட்டேன்.

யாராக இருந்தாலும், வக்கும், வசதியும் வலிமையும் இருந்தால் அவர்களாகப் பிரியட்டும். நானாகப் பிரித்து விடுவேன், விரோதித்துக்கொள்வேன் என்று எண்ணுவதும், எதிர்பார்ப்பதும் வீண், அர்த்தமற்றது.

நல்லது யார் செய்தாலும் ஆதரிப்பேன். அதைப் போலவே கெட்டது யார் செய்தாலும் கண்டித்தே தீருவேன். இதனை நண்பர்கள் அனைவரும் மிக நன்றாக உணரவேண்டுகிறேன்.

நான் எப்போதும் ஒற்றுமைகீதம் பாடித்தான் வருவேன். அதற்காகத்தான் பாடுபடுவேன். ஆனால் அதற்காக

வேற்றுமை வளர்ப்பவர்களைத் தழுவிச் செல்லவும் மாட்டேன். அதற்காக அவர்களைக் கண்டிக்காமல் இருக்க மாட்டேன். கண்டிப்பதால் அவர்களை நான் விரோதித்துக் கொள்வதாக எண்ணுவதும் தவறுதான். பிரச்சினையைப் பொறுத்தவரையில்தான் என்னுடைய கண்டிப்பு இருக்கும். அவர்களே நல்லது, அதை என்றும் வாழ்த்தி வரவேற்பேன்.

இப்படிப்பட்ட நிலைமைதான் எங்களுக்குச் சங்கடமாக இருக்கிறது என்று யாராவது—எந்தக்கட்சியாவது கருதினால், அவர்களாக என்னுடைய தொடர்பை அறுத்துக் கொள்ளட்டும். தைரியமிருந்தால், வக்கும், வழியும், வகையுமிருந்தால் செய்யட்டும் அப்படி! இதைத்தான் நான் கூறுவேனே தவிர, நானாக யாரையும் விரோதிக்கமாட்டேன்.

தி. மு. கழகம் நாட்டின் எல்லா பிரச்சினைகளைப்பற்றியும் அக்கறை காட்டுகிறது. ஆகவேதான் அது எல்லாத் துறைகளிலும் ஈடுபட்டு வேலைசெய்ய வேண்டியிருக்கிறது.

நாட்டில் உள்ள நலிவுகள் என்ன என்பதைக்கண்டு பிடித்துப் போக்கவேண்டும், சமுதாயத்துறையிலே உள்ள சீரழிவுகளுக்கான அடிப்படைக் காரணங்களைக்கண்டறிந்து அவற்றைக் களைந்தெறிய வேண்டும். மார்க்கத் துறையிலே உள்ள சீர்கேடுகளைப் போக்கவேண்டும். அரசியலில் ஏற்படும் நெருக்கடிகளைச் சமாளித்தாக வேண்டும். கலைத்துறையில் உள்ள சீர்கேடுகளைத் திருத்தவேண்டும். நாட்டைப்

பிரித்திடும் பணியைத் தொடர்ந்து நடத்த வேண்டும். வட நாட்டுச் சுரண்டலைத் தடுக்கவேண்டும்.

ஆக, இத்தனை பிரச்சினைகளையும் ஒரு சேர கவனித்து வருகிறோம். நாம் இவைகளில் எதையும் விட்டுவிட முடியாது. அல்லது யாராவது ஒன்றிரண்டை மட்டுமே பற்றிக் கொண்டு அதிலேயே மூழ்கிவிடுவது மிகமிகச் கேடுதரக் கூடியதாகும். நாட்டின் அத்தனை பிரச்சினைகளையும் கவனிக்கவேண்டும். இதற்கு எல்லாத்துறைகளிலும் ஈடுபட்டு உழைத்தாக வேண்டும்.

எப்படி ஒரு டாக்டர், ஒரு நோயாளியின் நாடியைப் பார்த்து, நோய்க்குத் தக்க மருந்துவகைகளைக் கூறியும், கொடுத்தும் அவர் பின்னர், வேறு நோயாளியைப் பற்றிய அக்கரைகாட்டி வருகிறாரோ அதைப்போல தி. மு. கழகமும் நாட்டில் உள்ள அத்தனை நலிவுகளையும் நீக்கியாக வேண்டும். எல்லாப் பிரச்சினைகளையும் கவனித்து, எல்லாத் துறைகளிலும் முனைந்து வேலை செய்தாக வேண்டும்.

இதனால்தான் தி. மு. கழகத்திற்கு எப்போதும் வேலை -ஓயாத வேலை இருக்கிறது, எல்லாத்துறைகளிலும் ஈடுபட்டுத்திரவேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுள்ளது.

ஒரு கழகம் அல்லது ஒரு கட்சி நல்ல வளர்ச்சியடைந்துள்ளது என்பதைச் சுலபத்தில் தெரிந்துகொள்ளலாம். அதற்கான அடையாளங்களை எளிதில் கண்டறியமுடியும்.

சுருக்கமாகக் கூறவேண்டுமானுல், ஒரு கழகமோ அல்லது ஒரு கட்சியோ வளர்ந்துள்ளது என்பதற்கான அறிகுறி அடையாளம். அந்தக் கழகத்தைப் பற்றியோ, அல்லது அந்தக் கட்சியைப் பற்றியோ நாட்டில் எங்கும் பேசப்படும். நாட்டு மக்களின் அன்ருட வாழ்க்கையில் அதைப்பற்றிய விவாதங்கள் நிகழும். மற்ற கட்சிக்காரர்கள் அனைவரும் அதைப்பற்றிக் கவனிப்பார்-கவலைப்படுவர்.

இப்படிப்பட்ட நிலைமை இன்று தி. மு. கழகத்திற்கு ஏற்பட்டிருக்கின்றது. இன்று எந்தக் கட்சிக் கூட்டமானுலும் தி. மு கழகத்தைப் பற்றிப் பேசப்படுவதைக் காணலாம். கம்யூனிஸ்டுகளும் சரி, காங்கிரசாரும் சரி. தமிழரசுக் கழகத்தினரும் சரி நம்மைப் பற்றிப் பேசுகிருர்கள். பெரும்பாலான கட்சிக் கூட்டங்களில் அவர்களுடைய கட்சிக் கொள்கைகளைப் பற்றிப் பேசுகின்ற நேரத்தைவிட நம்மைப் பற்றித்தான் அதிகநேரம் பேசி வருகின்றனர்.

காரைக்கால் அம்மையார் சரித்திரம் போன்ற புராணப் பிரசங்கங்களிலுங்கூட நம்மைப்பற்றிக் கூறுகிருர்கள். புராணப்பிரசங்கம் செய்து, பக்த ரசத்தையும், பகவான் லீலைகளையும் விளக்கிவிட்டுக் கடைசியில், இதையெல்லாம் இல்லையென்று கூறுகின்ற தி. மு. கழகத்தார்களும் இருக்கின்ருர்களே என்று பேசுகின்றனர்.

சங்கீதக் கச்சேரிகளிலே, எத்தனை பாகவதர்கள் பாடினுலும், எத்தனை விதமான ஆலாபனங்களும், ஆவர்த்தாளங்

களும், நடைபெற்ருலும், மங்களம் பாடிஞல்தான் முடி கிறது என்பதைப் போல, இன்று எந்தக்கட்சி மேடையி லும் நம்மைப்பற்றிப் பேசிஞல்தான் கூட்டம் முடிந்ததாகக் கருதுகின்றனர். தங்கள் மேடை பூர்த்தியானதாகத் திருப் தியடைகின்றனர்.

நல்லதொரு வளர்ச்சியடைந்துள்ள தி. மு; கழகம் இன்று எல்லாக்கட்சிகளின் கண்களேயும் உறுத்திக்கொண் டிருக்கிறது. எல்லோரும் நமது வளர்ச்சியைக் கண்டு பெரி தும் ஆச்சரியமடைகின்றனர். எப்படி இவர்களுக்கு இத்த கைய வளர்ச்சி ஏற்பட்டது? எங்கிருந்து இவ்வளவு வல்ல மை உண்டாகியது? எதஞல் இத்துணை ஆதரவு கிடைத் தது? யார் மூலம் இவ்வளவு மகத்தான சக்தியைப் பெற்ற னர்? என்ற கேள்விக்குறிகள் மற்றவர்களிடம் பெரிதும் தோன்றிய வண்ணமே உள்ளன !

நாம் வளர ஆரம்பித்தபோதே நம்மை நோக்கிப் பெருத்த எதிர்ப்பு வெள்ளம் வந்தது. அதனே நாம் எதிர் நீச்சலிட்டுத்தான் முன்னேறிஞேம்! வளர்ந்தோம்! எத்தனே யோ ஏளனப்புயலேத் தாங்கிஞேம்! எதிர்ப்புச் சக்திகளேச் சமாளித்தோம். அடக்குமுறை அம்புகளுக்கெல்லாம் ஈடு கொடுத்தோம். பொருமைக்காரர்களின் கணேகளேயும் ஏற்ருேம்.

இத்தனேயும் ஏற்று, தாங்கி இப்படி வளர்ந்து விட்டார்களே! இது எப்படி என்பதுதான் மற்றவர்களுக் குப் பெருத்த ஆச்சரியமாக இருக்கின்றது. நாம் வளர்ந்துள்

ளதையும், மேலும் வளருவதையுங்கண்டு பலர் 'நல்லது தான்' என்று கருதுகின்றனர் களிப்புமடைகின்றனர். வேறு சிலர் நமது வளர்ச்சிகண்டு பொருமையும் பொச்சரிப்புங்கொண்டு தூற்றுகின்றனர். இன்றும் சில ருக்கு நாம்-நமது கழகம் இருப்பதே தங்களுக்கும், தங்கள் கட்சிக்கும் மாபெரும் ஆபத்து என்று கருதுகின்றனர். அப்படிப்பட்டவர்களுக்கு நம்மை கட்டோடு ஒழித்துவிட வேண்டுமென்பதே பேரவா.

நான் ஒன்றை மட்டும் தெளிவாகக் கூறிவிடுகிறேன். நம்மைப்பற்றித் தெளிவாக ஒருவராலும் கூறமுடியவில்லை. காரணம் யாரும் நம்மை நெருங்கிப் பார்க்காததுதான். ஆனல் நாம் யார்-நமது கழகம் எப்படிப்பட்டது என் பதை அனைவரும் நன்கு புரிந்துகொள்ள வேண்டுகிறேன்.

திருவள்ளுவர் தமது திருக்குறளில் ஒரு பெண்ணின் கண்களில்-கண் பார்வையில் இரண்டுவித சக்திகள் இருப்ப தாகக் கூறியுள்ளார். பெண்களின் கண்களில் விஷமும் இருக்கிறது, அதைப்போலவே அமிர்தமும் இருக்கிறது என்று வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். பெண்ணின் பார்வை யில் காதலும் உண்டு. கடுகடுப்பும் இருக்கிறது விருந்தும் இருக்கிறது, வெறுப்பும் காணப்படுகிறது.

இதைப்போலவேதான் தி. மு. கழகத்தினிடம் விஷ மும் உண்டு விருந்துதரும் அமிர்தமும் உண்டு. ஆக்கவேலை செய்யும் சக்தியும் இருக்கிறது. அழிவுவேலை நடத்தும்

திறமையும் இருக்கிறது. நம்மிடம் நஞ்சும் இருக்கிறது. நல்ல நல்ல விருந்து தரும் அமிர்தமும் உண்டு.

நான் இந்த நஞ்சு குறைந்து, நீங்கி அமிர்தம் அதிகப் பட வேண்டுமென்றுதான் கூறுகிறேன், விரும்புகிறேன். நாம் அழிப்பதற்காக வெளிப்படுத்தும் நஞ்சு-அழிவுவேலை-சிலசமயம் நம்மையே அழித்துவிடவும் கூடும். ஆகவேதான் நாம் ஆக்க வேலைகளை அதிகமாக்கி, அழிவு வேலைகளை அறவே ஒதுக்கி வருகிறோம்.

இதைத்தான் நான் கடமை என்றும், கட்டுப்பாடு என்றும் எடுத்துரைத்து வருகிறேன்.

கண்களில் விஷத்தையும், விருந்துபோன்ற அமிர்தத்தையும் அடக்கிவைத்திருக்கும் பருவமங்கையைப் போன்றதுதான் தி. மு. கழகம். நம்மை நெருங்கி வருபவர்களை நம்மால் அழிக்கவும் முடியும், நல்ல ஆக்கவேலைகளுக்குப் பயன் படுத்தவும் முடியும். நாம் எப்போதும் அழிவு வேலைகளில் இறங்குவதே கிடையாது. பலாத்காரம் நமக்குத் துளியும் பிடிக்காததாகும்.

இந்த மாநாட்டில் கூடியுள்ள மக்களை அழிவு வேலைக்குப் பயன்படுத்துவதாக இருந்தால் முடியாதா? அதற்கு அதிக நேரமே வேண்டாமே! கூடியுள்ள மக்களைப் பார்த்துச் சில நிமிடங்கள் பேசினல் போதுமே!

பொதுமக்களே! அடுத்த கடைவீதி ஆடிசன் பேட்டையில் உள்ள ஆரும் நம்பர் கடைக்காரர் மிகவும் அக்கிர

மக்காரர். அவரைச் சும்மா விடுவதா என்று கேட்டால் மக்கள் கொதித்துக் கிளம்பி விடுவார்களே! (நான் உதார ணத்திற்காகத்தான் குறிப்பிடுகிறேன்! தயவுசெய்து ஆடிசன் பேட்டை ஆறும் நம்பர் கடைக்காரர் தவருக எண்ணிவிட வேண்டாம்!)

என் பேச்சைக்கேட்டு நூறுபேர் கிளம்பி அந்த கடை யைச் சூறையாடப் புகுந்தால், அதனை வேடிக்கை பார்க்கப் பத்தாயிரம் பேராவது கூடுவர். என்ன ஆகும்! கடையில் போலீஸ் வந்து, முதலில் கலகம் விளைவித்தவர்கள் எங்கோ சென்றுவிட, ஆள் தெரியாமல் வேடிக்கை பார்த்தவர்களுள் 500 பேர் கைது செய்யப்படலாம். இந்த நிலைமை ஏற்படுத் துவது என்றும் பெரிதல்ல! பிரமாதமான காரியமும் அல்ல! ஆனல் நானும் சரி, நான் சார்ந்துள்ள கழகமும் சரி எங்கள் சக்தியை என்றும் அழிவுத்துறைக்குப் பயன் படுத்தியதே கிடையாது, இனி என்றும் பயன்படுத்தவும் மாட்டோம்.

ஆனல் நம்மிடம் உள்ள சக்தியைக்கண்டு மற்றவர் கலங்குகின்றனர், பொருமைப்படுகின்றனர். நம்மீது அர்த்த மற்று மோதுகின்றனர். அவர்கள், நம்மிடம் பெண்ணிடம் உள்ள அமிர்தம் போன்ற விருந்தும் உண்டு என்பதை யெண்ணி நம்முடன் நேசத்துடன் நடந்துகொள்ள வேண்டுமே தவிர, பகையுணர்ச்சியுடன் நடந்துகொள்வது மிகவும் தவருனதாகும்,

இவ்வளவு சக்தியைப் படைத்துள்ள தி.மு.கழகத்தை மேலும் வளர்த்து, அதற்குக் கட்டுப்பாட்டை உண்டாக்கி,

கண்ணியத்தைக் காப்பாற்றி மேலும் மகத்தான சக்தியுள்ள தாக்கிச் சமயம் பார்த்து நாம் சாதிக்கவேண்டிய காரியங்கள் அத்தனையையும் சாதித்தாக வேண்டும் வாளைக் கூர்மை யானதாக்க வேண்டும் முதலில்! அதன் பின்னர்தான் குறி பார்த்து வீசவேண்டும். குறிபார்த்து வீசுவதற்குமுன் குறி எது என்பதையும் நன்கு தெரிந்து வாளை வீசவேண்டிய இடத்தில் வீசும் திறமையைப் பெற்றாக வேண்டும். அதன் பின்னர் வாளை வீசினால்தான் நாம் நினைத்த பலன், நினைத்த படி கிடைக்கும்' உண்டாகும்.

எனவேதான் நாம் நமது கழகத்தை முதலில் வளர்த்து மேலும் சக்தியுள்ளதாகச் செய்தாக வேண்டும். வாளைக் கூர்மையாக்குவது போல! வாளை வீசவேண்டிய இடம், குறி எது என்பதையும் நன்றாகத்தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டும். அதே நேரத்தில் வீசுகின்ற முறையுடன்-திறமை யுடன் வீசவேண்டும். நாளை வீசுகின்ற வலிவையும் பெற் றாகவேண்டும். இத்தனையும் தெரிந்த பிறகுதான், பெற்றான பின்னர்தான் கூர்வாளானாலும் வீசுவதால் பயன்தரும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

நமது கழகத்தின் சக்தியைப் பயன்படுத்தி நாம் அடையவேண்டிய பலன்கள் ஏராளமானவை! நமது குறி கள் பலப்பல, எனவேதான் நாம் நமது வாளை மிகவும் கூர் மையானதாக்க வேண்டும், வீசப்படவேண்டிய குறிகள் என்னென்ன என்பதையும், தெரிந்து வீசும் திறமையும், முறையையும், விரிதையும் பெற்று நம்மை வாள் வீசும் தகுதியுடையவர்களாக்கிக்கொள்ள வேண்டுகிறேன்.

நாம் வாள் வீசவேண்டிய இடமோ பலப்பல நம் குறிகள் ஒன்றல்ல, இரண்டல்ல அநேகம். நமது இலட்சியங்கள் பலப்பல துறைகளிலும் இருக்கின்றன. பலப்பல துறைகளிலும் நாம் நமது சக்திகளைப் பெருக்க வேண்டும். அப்போதுதான் நாம் நமது இலட்சியங்கள் அனைத்திலும் ஒருங்கே வெற்றிகாண முடியும்.

ஆகவே நாம் பல குறிகளிலும் போரிடத்தக்க கூர்வாட்களைத் தேடுகிறோம். மாபெரும் சக்தி நமது கழகத்திற்குத் தேவைப்படுகிறது. இதற்காகத்தான் நாம் ஒவ்வொரு துறைகளிலும் விதிக்கவேண்டிய காரியங்களுக்காக, அடையவேண்டிய குறிகளுக்காக அங்கங்கே கூர்வாட்களைத் தயாரித்து வருகிறோம்.

சினிமாத்துறையைச் சீர்திருத்த வேண்டுமே, அங்கேயே ஆட்களைத் தயார்செய்கிறோம். வீசப்பட வேண்டிய இடத்திலேயே வாள் தயாரிப்பதைப்போல சினிமாத்துறையில் இருந்தே கே. ஆர். இராமசாமி, என். எஸ். கிருஷ்ணன் எம். ஜீ. ராமச்சந்திரன் போன்ற பலப்பல வாட்கள் தயாரிக்கப்பட்டு, கூர்மையாக்கப்பட்டு வருகின்றன.

இதைப்போலவேதான் கைத்தறித்துணிப் பிரச்சினையா, சேலம் முதலிய கைத்தறியாளர் மிகுந்துள்ள பகுதிகளிலிருந்தே அதற்கேற்ற நல்ல கூர்வாட்கள், திறமைமிக்க உழைப்பாளிகளைக் கண்டெடுத்துப் பயன்படுத்துகிறோம். பிரச்சினைகட்கு நல்ல முடிவு காண்கிறோம்.

மடாதிபதிகளை சீர்திருத்த எங்கள் முழக்கம் ஏற்படாமலேயே ஒரு குன்றக்குடி அடிகளார் தயாராகி வருகிறார். நாங்கள் நெருங்கினால் போதும் அவரும் தக்க கூர்வாளாகி விடுவாரே!

நமக்கிருக்கும் குறிகள் பல என்று குறிப்பிட்டேன்' நாம் பிரச்சினைத்திருத்தல் வேண்டும், மதமூட நம்பிக்கைகளிலிருந்து அவர்களை மீட்கவேண்டும். சங்கராச்சாரியார், தம்பிரான்போன்ற தத்துவங்கள் இருப்பதைத் தகர்த்தெறிய வேண்டும். சாதி பேதங்களைப் போக்கவேண்டும். உழைக்காமலே பிறர் உழைப்பை உறிஞ்சிடும் ஏற்பாடுகளைத் தொலைக்கவேண்டும். மூட நம்பிக்கைகளை முறியடித்தாக வேண்டும். குருட்டு நம்பிக்கைகளை, பிறப்பால் உயர்வுதாழ்வு கற்பிப்பதை மக்கள் மனதிலிருந்து விரட்டவேண்டும், புராணப் பொய்களைப் போக்கவேண்டும். கலை உலகைச் சீர்திருத்தவேண்டும். வடநாட்டுச் சுரண்டலை . ஒழிக்க வேண்டும். இந்த நாட்டு அரசியலைக் கவனிக்க வேண்டும். அதனால் ஏற்படும் அவதிகளை நீக்கவேண்டும். வடநாட்டுப் பிடியிலிருந்து விடுபட்ட திராவிடத்தனியரசு அமைத்தாக வேண்டும்.

நமக்கு இருப்பது இத்தனைக் குறிகள்! நாம் வாள் வீச வேண்டிய இடங்களோ ஏராளம், இதைப்போல! ஆகவே தான் நான் ஏற்கனவே குறிப்பிட்டபடி அத்தனை துறைகளிலும் நாம் கூர்வாட்களை அங்கங்கயே தயாரித்து வருகிறோம், மிக முக்கியமான திராவிடநாட்டுப் பிரிவினையையும்'

வடநாட்டுச் சுரண்டலையும் நாமே—நமது கழகமே நேரடி யாகக் கவனித்து வருகிறது.

இவ்வளவு பிரச்சினைகளையும் நாம் கவனித்து, அவ் வளவு இலட்சியங்களையும் அடைந்தாகவேண்டியிருப்பதால் நாம் பன்னிப்பன்னிப் பேசவேண்டியிருக்கின்றது. ஓயாது உழைக்கவேண்டியவர்களாகிருேம்!

காங்கிரஸ் போன்ற மற்ற கட்சிகளுக்கோ சில குறிப் பிட்ட பிரச்சினைகள்தான், குறிகள்தான், அன்னை பாரத மாதா ஒன்றை வைத்துக்கொண்டே அவர்கள் சுலபமாகப் பேசிவிட்டுப் போய்விடுவார்கள், ஆனால் நாமோ. பல பிரச் சினைகளை விளக்கிப் பாடுபடவேண்டியிருப்பதால் பலமுறை யும் பேசுகிருேம். பல மணிநேரமும் பேசித்தீரவேண்டி யிருக்கின்றது.

மேடையேறிகளோ ஏதோ நாலுவார்த்தைகள் பேசி ஞல் போதும் என்ற முறைப்படி. நாம் பேசினல் முடியாது, போதவும் போதாது.

ஜஸ்டிஸ் கட்சித்தலைவராக ப் பொப்பிலி ராஜா அவர் கள் இருந்தபோது நான் ஆந்திராவில் உள்ள கடப்பைக்குச் சென்றிருந்தேன். அங்கே ஒரு பொதுக்கூட்டத்தில் நான் பேச நேரிட்டது. நான் ஏறக்குறைய ஒன்றரை மணி நேரத் திற்குமேல் பேசினேன், பேசி முடிந்ததும், மேடையிலிருந்த ஒரு பிரமுகர் எதற்காக இவ்வளவு நேரம் பேசினய் என்று கேட்டார்.

நான் கடப்பைக்கு வந்தது இதுதான் முதல்தடவை. ஆகவே சொல்லவேண்டிய விஷயங்களைச் சிறிது விளக்க மாகவே பேசவேண்டி வந்துவிட்டது என்றேன்.

அதற்கு அந்த ஜஸ்டிஸ் பிரமுகர் அப்படியானால் ஒரு பதினைந்து நிமிடங்கள் பேசினால் போதுமே. எதற்காக அதிக நேரம் பேசி வீணாக உடம்பைக் கெடுத்துக்கொள்ள வேண்டும் என்று கூறினார்.

இப்படிப்பட்ட ஜஸ்டிஸ் கட்சியில்தான் நான் வளர்ந் தவன். ஆனால் இப்படி இருந்ததால்தான் இடையில் நீதிக் கட்சி மறைய நேரிட்டது என்பதையும் நன்கு உணர்ந்த வன்தான்!

ஆகவேதான் நான் எந்தப்பிரச்சினையைப்பற்றிப் பேசி னாலும் சிறிது விளக்கமாகவே பேசுவேன். மற்றவர்களும் பேசவேண்டுமென்று விரும்புகிறேன். அப்படிப்பேசினால் தான் நாம் விளக்க விரும்பும் அத்தனை பிரச்சினைகளையும் பற்றிப்பேச முடியும். கேட்பவர்களுக்கும் நன்கு விளங்கும்

நாட்டில் இன்று இவ்வளவு மகத்தான பல பிரச்சினை களையும் ஒருசேரக் கவனிக்கும் கட்சி நாம்தான்—தி. மு. க. ஒன்றே ஒன்றுதான்.

காங்கிரஸ் கட்சி அன்னை, மாதா பிதாவுடன் நின்று விடுகிறது. கம்யூனிஸ்டுக் கட்சிக்கோ, ஏழை-பணக்காரன் பிரச்சினையே பெரிய பிரச்சினையாகிவிட்டிருக்கிறது. பிரஜா சோஷலிஸ்டுகள் வேறுவிதம், இப்படி ஒவ்வொரு கட்சிக்

கும் சில குறிப்பிட்ட குறிகள்தான் உள்ளன. ஆனால் நமக்கோ பலப்பல குறிகள்!

நாம் மற்ற கட்சிகள் ஒதுக்கித்தள்ளிய, கவனிக்க மறுக்கின்ற பந்து விட்டுவிடுகின்ற, அலட்சியம் செய்கின்ற அத்தனை துறைகளேயும் சேர்த்துக் கவனிக்கிறோம். எனவே தான் நாம் மிகவும் விளக்கமாகப் பேசுகிறோம். பலநாளும் பேசுகிறோம்.

சமுதாயச் சீரழிவுகளைப்பற்றிப் பேசுவதற்கு இன்று தி. மு. கழகந்தானே இருக்கின்றது? மதமூட நம்பிக்கைகளைப்போக்கப் பாடுபடுகின்றவர்களும் நாம்தான்! மக்கள் ஒற்றுமையாகவாழஅடிப்படையான கருத்துக்களைப்பரப்பி வருகின்றவர்களும் நாமேதான். ஜாதிபேதங்கள் ஒழிய வேண்டும் என்று மற்ற கட்சிக்காரர்கள் வெளிப்படையாகப் பேசுவதே கிடையாது.

இப்படிப்பட்ட கட்சிகள் பயந்து ஒதுக்கிவிட்ட பிரச்சினைபற்றிக் கவலைப்படுகின்றவர்கள் நாம்தான், இப்படிப் பட்ட விஷயங்களில் தலையிட்டால் தங்களுக்குச் சுலபமாக செல்வாக்குக் கிடைக்காது என்பது மட்டுமல்ல, தங்களுக்கு ஏற்கனவே இருக்கின்ற செல்வாக்கும் அறவே போய்விடுமென்று மற்ற கட்சிகள் அஞ்சி நடுங்குகின்றன.

மற்றவர்கள் அஞ்சி நடுங்கிடும் கருத்துக்களைத் துணிவுடன் நாம்தான் எடுத்துப்பேசி வருகிறோம். மக்களிடையே பரப்பியும் வருகிறோம்.

ஆகவே அடுத்த மாநாட்டில் பேசப்படும் விஷயங் களைக் கேட்பவர்கள் மிகவும் பொறுப்போடு கேட்க வேண்டும். மறுநாள் அதைப்பற்றி எழும் சந்தேகங்களையும் கேட்டு விளக்கம் பெறவேண்டும்.

எவருமே கேட்கவில்லை என்றால், அடுத்த மாநாட்டில் வேண்டுமென்றே தப்புத் தவறுமாகச் சிலவற்றை வேண்டு மென்றே பேசி வைத்து, மறுநாள் அவற்றைக் கவனித்துக் கேள்வி கேட்கிறீர்களா என்பதையும் கவனிப்போம்.

பேசுகின்ற பேச்சாளிக்கும் பேச்சைக் கேட்கின்ற மக்களுக்கும் தொடர்பு இருக்கவேண்டும். அப்போதுதான் பேசுகின்றவர்களுக்கும் சரி, கேட்கின்றவர்களுக்கும் சரி பொறுப்பு இருக்கும்.

எனவே இரு நாட்களிலும் நீங்கள் கேட்ட பல விஷ யங்களையும் நன்கு சிந்தித்துப்பார்த்து மற்றவர்களிடமும் அதைப்பற்றி பேசவேண்டும், பரப்பவும் வேண்டும் என்று மீண்டும் வலியுறுத்துகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி மக்களிடை யே சில தவறான கருத்துக்களைச் சிலர் பரப்பி வருவதாகத் தெரிகிறது. அதைப்பற்றி சிறிது விளக்கக் கருதுகிறேன்.

கம்யூனிஸ்டுகள் சிலர் இன்றைய முதன்மந்திரி காமராஜ ருடன் நாம் ஏதோ ஒப்பந்தம் செய்துகொண்டு மக்களைக் காங்கிரஸ் ஆட்சிக்குக் காட்டிக்கொடுப்பதாகப் பேசி வரு கின்றனர்.

ஆகவேதான் நாம் மிகவும் அதிகமாகப் பேசவேண்டி யிருக்கிறது. அதிகமாக உழைக்க வேண்டியுமுள்ளது.

இரு நாட்களாக நடைபெறும் இந்த மாநாட்டில் பல தோழர்கள் பேசியதைக்கேட்டதோடு கேட்டவர்களுடைய கடமை தீர்ந்துவிட்டதாக நினைக்கக்கூடாது. கேட்ட விஷயங்களைப்பற்றி நன்கு சிந்திக்கவேண்டும். சிந்தித்து முடிவு கண்ட நல்ல விஷயங்களை பிறரிடம் எடுத்துக்கூறி விளக்க வேண்டும். இப்படிச் செய்தால்தான் இங்கே மாநாடு நடந்ததற்கும், அதில் பலர் சொற்பொழிவாற்றியதைக் கேட்டதற்கும் ஏதாவது அர்த்தமேற்படும். பொருத்தமும்இருக்கும்.

இனி நடக்கும் மாநாடுகளில் இதற்காகவே ஒரு புது முறையை ஏற்படுத்தலாமென்று எண்ணுகிறேன். அடுத்த மாநாட்டிலிருந்தே முதல் நாள் பேசப்படும் சொற்பொழிவுகளைப்பற்றி மறுநாள் கேள்வி-பதில் என்று ஒரு பகுதியை ஏற்பாடு செய்யலாம் என்றும் கருதுகிறேன்.

முதல்நாள் பேசப்படும் விஷயங்களைப்பற்றி மறுநாள் முதல்நாள் பேச்சுக்களைக் கேட்டவர்கள் தங்களுக்கு உள்ள சந்தேகங்களைப்பற்றிய கேள்விகளைக் கேட்கவேண்டும், அப்படிக் கேட்கப்படும் கேள்விகளுக்குச் சம்பந்தப்பட்ட பேச்சாளிகளே பதில் கூறவேண்டும் என்ற முறை ஏற்படுத்தப் படும்

இப்படிச் செய்தால்தான் பேசுகின்ற பேச்சாளிகள் தெளிவோடு பேசுவார்கள் என்பது மட்டுமல்ல, கேட்பவர்களும் பொறுப்போடு கேட்பார்கள்.

அதிலும் காமராஜர் என்னைக்கூப்பிட்டு அறையில் உட்கார வைத்துக்கொண்டு கையிலிருந்த பிஸ்டலைக் காட்டிப் பயமுறுத்தினாராம். இதோ பார் அண்ணாதுரை என் கையிலிருக்கும் துப்பாக்கியைப் பார்த்தாயா? நீ என்னை ஆதரிக்க வேண்டும். அப்படி ஆதரிக்காவிட்டால், உன்னை வேலூர் சிறையில்போட்டு அடைத்துவிடுவேன் என்று காமராஜர் என்னை மிரட்டியதாகவும், அதைக்கேட்டு நான் பயந்து காமராஜரை நானும் தி. மு. கழகமும் ஆதரிக்க ஒப்பியதாகவும் கம்யூனிஸ்டுகள் மக்களிடையே பிரச்சாரம் செய்து வருகிறார்களாம்.

இந்தப் பிரச்சாரம் மிகமிகப் பொய்யானதாகும். மக்களிடம் எதைக் கூறினால் பிடிக்கும்? சுலபத்தில் நம்புவார்கள் என்பதைத் தெரிந்துவைத்துள்ள கம்யூனிஸ்டுகள் இப்படிப்பட்ட பொய்யான செய்திகளையும் மக்கள் நம்புவர் என்று கருதிப் பேசி வருகிறார்கள் போலும்!

கெட்டதைக்கூறி, பொய்யான தகவல்களைப் பிரச்சாரம் செய்து மக்களை மயக்க நினைப்பது மிகவும் தவறானதாகும். இதனைக் கம்யூனிஸ்டுகள் செய்து வருவதானது மிகமிக முறைகெட்ட செயல் என்பதுமட்டுமல்ல பொருத்தமற்றதாகவும் காணப்படுகிறது.

கம்யூனிஸ்டுகள் செய்து வருகின்ற பிரச்சாரத்தின் படியே பார்த்தாலுங்கூட அவர்கள் பேச்சு எவ்வளவு அர்த்தமற்றதென்பதும், பொருத்தமில்லாதது என்பதும் நன்கு விளங்கும்.

முதலாவதாக காமராஜரை நான் ஆதரிப்பதாக ஒப்புக் கொண்டதாகவும், அதன்பின்னர் நான் பொதுச் செயலாள ருகப் பணியாற்றி வருகின்ற தி. மு. கழகத்தையும் அவரை ஆதரிக்கும்படி செய்வதாக உறுதி கூறி அதன்படி தி. மு. கழகமும் காமராஜரை ஆதரித்து வருவதாகவும் கூறி வரு கிருர்கள்!

இது எவ்வளவு பொருத்தமற்றது என்பதுடன் ஒரு சிறிதும் நடக்க முடியாதது என்பதையும் நாடு நன்கு அறியுமே!

ஆறு ஆண்டுகளாக என்னை பொதுச்செயலாளராகக் கொண்டு நல்ல முறையில் வளர்ந்துள்ள தி. மு. கழகம், வெறும் ஆட்டுமந்தையல்ல, திடீரென்று இன்றைக்கு காம ராஜர் பின்னே ஓடுவதற்கு. அப்படிப்பட்ட நிலைமையில் கழகமும் இல்லை. கழகத்திலுள்ள எனது தம்பிமார்கள் இருக்கவில்லை,

தப்பித்தவறி நானே காமராஜரை ஆதரிக்கும்படி கூறி ணுலும் என்னுடைய தம்பிமார்களில் யாரும் கண்மூடிக் கொண்டு காமராஜரை ஆதரிக்க முன்வரவே மாட்டார்கள் என்பது மிகவும் உறுதியானதாகும்.

அண்ணுதுரையே கூறினுலும் எந்தத் தம்பியும் அப் படிப்பட்ட இழிசெயலுக்கு உடன்படவே மாட்டான். அண்ணு சொன்னதும் எந்தப்பக்கம் போகவேண்டும், கண் ணைத் திறந்துகொண்டா, கண்ணை மூடிக்கொண்டா, எப்

படிப்போகவேண்டும்என்றே, கையை நீட்டிக்கொண்டா, மடக்கிக்கொண்டா எப்படிச் செல்வது என்றே எந்தத் தம்பியும் கேட்கமாட்டான்.

அப்படிக் கேட்டால் இத்தனை நாள் என்னிடம் அவர்கள் கேட்ட பாடத்தை மறந்தவர்கள் என்பதுமட்டுமல்ல, பாடத்தையே சரியாகக் கேட்டுக்கொள்ளாதவர்கள், கருத்துடன் கவனிக்கத் தவறியவர்கள் என்றுதான் பொருள் படும், ஆனால் இன்று எந்தத் தம்பியும் சரி அல்லது நானும் சரி கண்ணை மூடிக்கொண்டு எதையும் செய்யவோ ஒரு சிறிதும் தயாராக இல்லை.

அப்படி நாம் இருந்தோம் ஒரு காலத்தில். அப்படி இருந்த இடம் வேறு! அது ஒரு காலம்! அந்தக் காலம் இப்போது இல்லை. நாம் இருக்கும் இடமே வேறு. இப்போது இங்கே ஜனநாயகப் பண்பு பூத்துக் குலுங்குகிறது. அனைவரின் எண்ணங்களும், ஒன்று திரண்டு கூட்டு முயற்சியாகத்தான் எதுவும் செய்யப்படுகின்றது. எனவே நான் சொல்வதையும் கேட்டு தி. மு. கழகம் எவர் பின்னும் ஓடவே ஓடாது என்பது திண்ணம்.

அடுத்து கம்யூனிஸ்டுகள் கூற்றுப்படி காமராஜர் பிஸ்டலைக் காட்டி மிரட்டி, வேலூர் சிறையிலடைப்பதாகக் கூறினராம், துப்பாக்கி வைத்திருப்பவர், சுட்டுவிடுவேன் என்று கூருமல், சிறையிலடைப்பேன் என்று கூறினராம். இந்தப் பேச்சும் பொருத்தமற்ற பேச்சுத்தான் என்பது தெரிகிறதே!

மிரட்டுகின்ற பாம்பு கடித்து விடுவேன் என்றுதானே கூறும். அதைவிட்டு என் சொற்படி நீ கேட்காவிட்டால் அடுத்த குளத்தில் உள்ள தவளையை விட்டுக் கடிக்கச்சொல் லுவேன் என்று கூறும்? கூறாதே! நாடகத்திலே வரும் பாம்புகூட அப்படிப்பேசாது.

இதைப்போல தானே, துப்பாக்கியைக் காட்டிப் பய முறுத்திய காமராஜர் என்னைச் சுட்டுவிடுவார் என்று கூறா மல் வேலூர் ஜெயிலில் அடைப்பதாகக் கூறியதாகக் கம்யூ னிஸ்டுகள் கட்டிவிடுகின்ற கதையும் இருக்கின்றது.

கம்யூனிஸ்டு மக்களுக்குப் பிரியமானதாக எதையாவது கூறித் தங்களுக்கு ஆதரவுதேட இப்படிப்பட்ட கட்டுக் கதைகளையும், பொறுப்பற்ற பழிகளையும் பேசிப் பரப்பி வருவது அரசியல் நேர்மையல்ல கண்ணியமுமல்ல என் பதைத்தான் எடுத்துக்காட்டவேண்டியிருக்கிறது.

தி. மு. கழகம் யாரைக்கண்டும் மயங்கிவிடாது. எவர் மிரட்டலுக்கும் எந்த விதத்திலும் அடிபணிந்து விடாது என்பதைத் திட்டவட்டமாக அறிவித்துவிடுகிறேன்.

கடந்த பத்து நாட்களுக்கு முன்னர்கூட தினமணி பத்திரிகையில் ஒரு கார்ட்டூன் போடப்பட்டிருந்தது. அதில் காமராஜர் தனது நான்கு பாக்கெட்டுகளில் நான்கு கட்சி களைப் போட்டுக்கொண்டு இருப்பதைப் போலத் தீட்டப் பட்டிருந்தது. எதிரில் கம்யூனிஸ்டுக்கட்சி நிறுத்தப்பட்டி ருக்கிறது. கீழே காமராஜர் கம்யூனிஸ்டுகளை எதிர்க்க மற்ற

கட்சிகளை ஒன்று சேரும்படி வேண்டுகோள் விடுத்தார் என்ற செய்தியும் போட்டிருந்தது.

இந்தக் கார்ட்டூன், காமராஜருக்குச் சாதகமானதல்ல! மற்ற கட்சிகளைத் தம் பாக்கெட்டுக்குள் போட்டுக்கொண்டாலும் எவராலும் நிம்மதியாக இருக்கமுடியாதே! ஒவ்வொருவரும் தத்தம் பிரச்சினைகளுக்காகத்தானே பாடுபடுவர்! அது காமராஜருக்கு நிம்மதியையா தரும்? தராது!

மேலும் வடநாட்டில் காமராஜர் மற்ற வகுப்புவாதக் கட்சிகளுடன் கூட்டுறவு கொண்டிருந்ததாகக் காண்பித்து காமராஜரைப்பற்றிய தவருன எண்ணத்தை ஏற்படுத்தவே இந்தக் கார்ட்டூன் பயன்படும். அதற்காகத்தான் இது போடப்பட்டிருக்கக்கூடும் என்று கருதுகிறேன்.

அதோடு ஒரு பாக்கெட்டு சட்டையைப்போடும் காமராஜருக்கு நான்கு பாக்கெட்டுகளைப்போட்டு நான்கு கட்சிகளை அடைத்திருப்பதாகப் போட்டிருக்கிருர்கள்! இதுவும் பொருத்தமற்றதே. அப்படிப் பார்த்தால் இரண்டு பாக்கெட்டுகளைக் கொண்ட சட்டைபோடும் நாங்கள் எட்டு பாக்கெட்டுகளில் எட்டு கட்சிகளை அடைத்துக் கொள்வதாகப் படம்போட்டுக்கொள்ள முடியுமே!

நாங்கள் காமராஜரை எந்தவிதத்திலும் இப்போது ஆதரிக்கவில்லை என்பதைத் தீர்மானமாகத் தெரிவித்து விடுகிறேன், அப்படியானுல் காமராஜரைக் கண்டிக்கிறீர்களா என்று கேட்டால் அதுவும் இல்லை,

நாங்கள் காமராஜரை ஆதரிக்கவும் இல்லை. அதைப் போலவே கண்டிக்கவும் இல்லை. இதுதான் காமராஜர் ஆட்சியைப் பொறுத்தவரைக்கும் எங்களுடைய இப்போதைய கொள்கை என்பதை அனைவரும் மிகவும் தெளிவாகவும் தெரிந்துகொள்ள வேண்டுகிறேன்.

ஆதரிக்கவில்லை யென்றால், கண்டிப்பதாக வேண்டும் என்ற கட்டாயம் என்றும் கிடையாது. எதிர்த்த வீட்டுப் பெண்ணிடம் உனக்குக் காதலா? என்று கேட்டால் இல்லை என்று கூறினால், பகையோ என்று கேட்டால் அதுவும் இல்லையென்று பதில் சொல்வதைப் போலத்தான் இதுவும்,

எதிர்த்தவீட்டுப்பெண்ணிடம் காதல் இல்லையென்றால், விரோதம் இருந்தாக வேண்டுமா என்ன? அப்படியொன்றும் விதிகிடையாது. காதலும் இல்லை என்பன போன்றே எந்தவிதமான விரோதமும் இல்லை என்ற உள்ள நிலையைத் தான் கூறமுடியும்!

காமராஜர் ஆட்சி எங்கள் கழகத்தைப் பொறுத்தவரை ஒரு எழுதப்படாத காகிதம்! அவரை ஆதரிப்பதும் அல்லது கண்டிப்பதும் எதிர்காலத்தில் அவரது ஆட்சியின் போக்கைப் பொருத்துத்தான் எழுதப்படும். முடிவு செய்யப்படும்.

காமராஜர் நாளையே ஒரு தீதான திட்டத்தைக் கொண்டு வந்தால் அவரைக் கண்டித்தே தீருவோம். அதைப் போலவே அவர் திராவிட நாட்டுப் பிரச்சினையை ஆதரிக்க முன் வந்தால் எங்கள் முதல் நண்பராகிவிடுவார்,

எனவே காலப்போக்கில் காமராஜர் ஆட்சி முறையின் நன்மை தீமைகளைப் பொறுத்துத்தான் நாங்கள் அவரை ஆதரிப்பதும் அல்லது கண்டிப்பதும் தெரியமுடியும், முடிவாகும் அப்போதுதான் அவரைப்பற்றி தெளிவான குறிப்பு எங்களால் எழுதமுடியும். இதுவரை காமராஜர் பக்கம் எழுதப்படாத காகிதமாகத்தான் இருக்கும். இதைப்பற்றி பேரம்பேசி யாரும் எந்தவிதமான குழப்பமும் ஏற்படுத்திக் கொள்ளவேண்டாமென்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்

திராவிட முன்னேற்றக் கழகம் மதத்தை அழித்து விடுவதற்காகவே தோன்றியிருப்பதாக மதவாதிகள் கருதுகிறார்கள்-கலக்கமடைகிறார்கள்.

உண்மையான மதவாதியின் இலட்சணம், தன்னுடைய மதத்தில் உள்ள நல்ல கொள்கையைப் பற்றித்தானே எடுத்துப் பேசவேண்டும். மதம் மக்களுக்குச் செய்கின்ற நன்மைகளைத்தானே அதிகம் எடுத்துக்காட்ட வேண்டும். ஆனால் இன்றுள்ள மதத்தலைவர்களும் மதவாதிகளும் தங்கள் மதத்தின் பெருமையைப்பற்றியும், அதிலுள்ள நல்ல கொள்கைகளைப் பற்றியும் பேசுவதைவிட நம்மைப்பற்றித் தான் அதிகமாகப் பேசி வருகிறார்கள்!

தங்கள் மதத்திலே இன்ன நல்லது இருக்கிறது, என்பதைப்பற்றிப்பேச மறந்தாலும் மறப்பார்களே தவிர, மதத்தை அழிக்க வந்துள்ள மாபாவிகள் என்று நம்மை ஏசுவதை எப்போதும் மறக்கவே மாட்டார்கள்.

மதவாதிகள் பெரும்பாலும் தங்கள் மதத்தைப்பற்றிய விளக்கங்கள் கூறுவதை அறவே விட்டொழித்துவிட்டு, மதத்தை அவன் கெடுக்கிறான். இவன் மதத்தின் மீது குறை கூறுகிறான். அந்தக் கழகம் மதத்தின்மீது மாசு கற்பிக்கிறது ஆகவே மக்கள் மதத்தைக் காப்பாற்ற வாரீர் என்று மத விரோதிகளைக் காட்டி, மதத்திற்கு ஆதரவு தேடுவதையே பெரிய காரியமாகக்கொண்டு விட்டிருக்கின்றனர்.

மதங்களை பூண்டோடு களைந்து எறிந்துவிடவேண்டு மென்று நாங்கள் ஒருபோதும் இருக்கவேயில்லை. ஆனால் மதம் என்ற பெயரால் மக்களை மடமையில் தள்ளிவிடும் மதக்கருத்துக்களை எப்போதும் கண்டித்தே தீருவோம். மக்களை மிரட்டவும், மருட்டவும், மதம் பயன்பட்டால்! பயன்படுத்தப்பட்டால் அதனை நாங்கள் எப்படிக் கண்டிக் காமலிருக்கமுடியும்?

மதம் மக்களுக்குப் பயன்பட்டால், மக்களை மக்களாக வே வாழ வழிவகுத்தால், அந்த மதத்தை நாங்கள் மனதாரப் பாராட்டுவோம். ஆனால் மக்களை அறியாமை இருளில் ஆழ்த்தி, மூட நம்பிக்கைகளில் வீழ்த்தி, வறுமையில் உழ லும்படி செய்கின்ற எந்த மதத்தையும் எங்களால் ஆதரிக் கத்தான் முடியாது. ஆதரிக்க முடியாது, என்பதுமட்டு மல்ல, அப்படிப்பட்ட மதக்கருத்துக்களை மக்கள் மனதி லிருந்தும் அடியோடு நீக்கி அறிவொளி பரப்பிட எங்கள் கழகம் என்றும் தயாராக இருக்கின்றது.

அறிவுத்துறையில் நாம் செய்துவருகின்ற சீர்திருத்தங்கள்தான் மதக்கருத்துக்களை நாம் எதிர்ப்பதாகக் கூறப்படுவதற்குக் காரணமாகும். மக்கள் அறிவுத்துறையில் முன்னேறவேண்டுமானால், முதலில் சமுதாயம் சீர்திருந்தியாகவேண்டும். இதற்கான சீர்திருத்தப்பணி, சுயமரியாதைப் பிரச்சாரம் நிச்சயமாக மேலும் தொடர்ந்து நடந்தே வரும். நடத்தப்பட்டே தீரவேண்டும்.

ஆகவேதான் தி. மு. கழகம் சமுதாயத்துறை சீர் திருந்த வேண்டுமென்பதிலே அதிக அக்கரை காட்டி வருகிறது. அடிப்படையான வேலையாகவும் அதனைக் கொண்டுள்ளது. நேற்று நடைபெற்ற சமூக சீர்த்திருத்த மாநாட்டிலே. மாநாட்டுத் தலைவர் கலைவாணர் என். எஸ் .கிருஷ்ணன் அவர்களும், மற்ற தோழர்களும் சமூக சீர்திருத்தம் பற்றி மிகத் தெளிவாகப் பேசினார்கள், பல அரிய கருத்துக்களைத் தங்கள் சொற்பொழிவின்மூலம் விளக்கினார்கள்.

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் தமது தலைமை உரையில் சீர்திருத்தம் போதுமான அளவு இல்லை. யென்று குறிப்பிட்டார். அவர் இவ்வாறு குறிப்பிட்டதற்குக் காரணம் மேலும் சீர்திருத்தத்துறையில் நல்ல ஆர்வம் செலுத்தவேண்டுமென்ற நல்ல கருத்தோடுதான் என்பதை அனைவரும் உணர்ந்து மேலும் ஊக்கத்துடன் அத்துறையில் பாடுபட வேண்டுகிறேன்.

சுயமரியாதை இயக்கம் கடந்த இருபத்தைந்து ஆண்டு காலமாக நாட்டில் சீர்திருத்தப் பிரச்சாரம் செய்து வருகி

றது. பகுத்தறிவு பணிபுரிந்து வருகின்றது. நாம் செய்து வரும் சுயமரியாதைப் பிரச்சாரம் பலன் தராது. போக வில்லை. பகுத்தறிவுப் பணியினால் பயன் ஏற்படாதும் போய்விடவில்லை.

சுயமரியாதைப் பிரச்சாரம் நல்ல பயன் தந்துள்ளது, பகுத்தறிவுப் பணி குறிப்பிடத்தக்க பயனைத் தந்துதான் இருக்கின்றது. இதனை மறுத்துக்கூற எவராலும்முடியாது.

பொதுப்படையாகவே பார்த்தாலுங்கூட நமது சு.ம பிரச்சாரப் பணியின் பயனாக நாட்டில் ஏற்பட்டுள்ள மகத்தான பகுத்தறிவு மாறுதல்களைக் காணமுடியும்!

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் புதிதாகக் கட்டப் பட்ட கோயில்கள் எத்தனை? பள்ளிகள் எத்தனை? என் பதைக் கணக்கிட்டுப் பாருங்கள்! அதைப்போலவே எத் தனை சத்திரங்கள் கட்டப்பட்டன, சாவடிகள் ஏற்படுத்தப் பட்டன. அதே நேரத்தில் எத்தனை ஆஸ்பத்திரிகள் கட்டப் பட்டன என்பதையும் ஒப்பிட்டுப்பாருங்கள். எத்தனை சமா ராதனைகள் நடத்தப்பட்டன என்பதையும் குறித்து, அவற் றுடன் எத்தனை பிரசவவிடுதிகள் ஏற்படுத்தப்பட்டன என் பதையும் குறித்துப் பார்க்கவேண்டுகிறேன். எத்தனை பஜனை மடங்கள் புதிதாக ஏற்பட்டன என்பதோடு எத்தனை நூல் நிலையங்கள் உண்டாகியிருக்கின்றன என்பதையும் எண் ணிப்பார்க்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். எத்தனை திரு விழாக்கள் புதிதாக நடத்தப்பட்டன என்பதையும் நோக்

குங்கள். அத்துடன் எத்தனை கண்காட்சிகள் நடத்தப்பட்டன என்பதையும் கருதுங்கள்.

இப்படி இரண்டு வகைகளையும் கணக்கிட்டுப்பார்த்து இதற்கு முன்னர் இருந்த நிலைமைக்கும் இப்போதுள்ள நிலைமைக்கும், உள்ள வித்தியாசங்களைப் பார்த்தாலே தெரியுமே! சுயமரியாதை இயக்கத்தின் பிரச்சாரத்தால் ஏற்பட்டுள்ள பலன் எவ்வளவு மகத்தானது என்பது! இதிலிருந்து விளங்குமே நாம் வெற்றி பெற்றுத்தான் உள்ளோம் என்பது.

ஆகவே நாம் நமது பணியினுல் ஒன்றும் சாதித்துவிடவில்லை யென்று யாரும் கருதத்தேவையில்லை. அப்படி எவராலும் கூறவும் முடியவே முடியாது என்பதுஉறுதியாகும்.

நமது சுயமரியாதைப் பிரச்சாரத்திஞல் மக்களிடையே மகத்தான மனமாறுதல் நிச்சயமாக ஏற்பட்டுள்ளது சமூகத்துறையில் மக்கள் எவ்வளவோ சீர்திருத்தமடைந்து தான் வருகிருர்கள். மக்களிடம் பெருகிக்கிடந்த மதமூட நம்பிக்கைகள் குறிப்பிடத்தக்க அளவு குறைந்து வந்துள்ளதென்பதை மறுப்பவர் யார்? எவரும் இல்லையே!

கோவில்களுக்கும், திருவிழாக்களுக்குமே பணத்தைச் செலவிட்டுவந்த மக்கள், இன்று பள்ளிகளுக்கும் ஆஸ்பத்திரிகளுக்குமே பணத்தைச் செலவிடும் அளவுக்கு மனமாறுதல் அடைந்துள்ளது யாரால்? நம்முடைய சுயமரியாதைப் பணிதானே, பிரச்சாரந்தானே இதற்குக் காரணம்? வேறு என்ன?

சில நாட்களுக்கு முன்னர் பத்திரிகைகளிலே போடப் பட்டிருந்த ஒரு விளம்பரத்தைப் பார்த்திருக்கலாம், நீங்கள் திருவண்ணுமலை தேவஸ்தானத்திற்கு நாள் ஒன்றுக்கு அர்ச்சனை ஆராதனை முதலிய செலவுகளுக்காக ரூபாய் ஐம் பது தேவைப்படுகிறதாம். அந்தக் கோயில் வருமானம் இப்போது குறைந்துவிட்டதால் இந்த தினசரி செலவான ரூ. 50ஐ ஈடு செய்யமுடியவில்லை. ஆகவே பக்தர்கள் யாரா வது தினம் தினம் கோயில் கைங்கர்யம் நிறைவேற ரூபாய் ஐம்பது வீதம் அனுப்பி உதவவேண்டுமாம். இப்படி திரு வண்ணுமலை கோவில் தர்மகர்த்தா பத்திரிகைகளில் விளம் பரம் செய்திருந்தார்.

இந்த விளம்பரத்தைப் பார்த்துவிட்டு அல்லது பார்க் கத்தவறி. இப்பொழுது நான் கூறியதற்குப் பிறகு கூட கோயிலுக்கு பணம் அனுப்புகின்ற பக்தர்கள் இரண்டொரு வர் இதே காஞ்சிபுரத்தில்கூட இருக்கக்கூடும்.

ஆனால் நான் குறிப்பிடுவது வேறு! கோயில்களின் அன்றாட செலவுக்குப் பத்திரிகையில் விளம்பரம் போட்டா இதுவரை பக்தர்களிடமிருந்து காணிக்கை பெற்றனர்! கிடையாதே!

முன்பெல்லாம் கோயில்களுக்குப் பணம் பெற்ற முறையே வேறுதானே! ஒருநாள் அதிகாலையில் கோயில் அர்ச்சகர் ஊரில் உள்ள பணக்காரர் வீட்டுக்கு வருவார். அல்லது தமது வீட்டுக்கே கூப்பிட்டு அனுப்புவார், அப் படிப் பார்க்கின்ற பக்தரை நோக்கி அர்ச்சகர் கூறுவார்.

இரவு கடவுள் என் கனவில் தோன்றி ‘அடே இந்த ஊரில் என்னடா அக்ரமம் நடக்கிறது! எனது மேலேவாசல் ஒரு பக்கம் சரிந்திருப்பது உன் கண்ணில் படவில்லையா?’ என்று கேட்டார். நான் உடனே பணிந்து ‘அடியேன் என்னசெய்யக் கடவேன் ஏழைநான்’ என்று கூறினேன். எம் பெருமான் உடனே அடே ‘கோடிவீட்டுத் தணிகாசல முதலி இருக்கிருனே, அவன் மகா தர்மிஷ்டன், அவனிடம் போ! நம் எண்ணம் ஈடேறும்’ என்று உரைத்தார். உடனே உன்னிடம் ஓடிவந்தேன்! என்று கோயில் அர்ச்சகர் தர்மவான் தணிகாசல முதலியாரிடம் கூற உடனே கோபுரம் சரியாக்கப்பட்டு, கும்பாபிஷேகம் முதல் எல்லா சத்காரியங்களும் அர்ச்சகர் கூறுகின்றபடி நடந்தேறிவிடும்.

இப்படித்தான் அந்தக்காலங்களில் எல்லாம் கோயில் காரியங்களுக்கு மிகச் சுலபமான முறையில் சொத்துக்கள் சேர்க்கப்பட்டன!

ஆனல் இன்று நிலைமை மாறிவிட்டது என்பது தினம் ரூ. 50 தேவையென்று திருவண்ணுமலை கோயில் தர்மகர்த்தா பத்திரிகையில் விளம்பரம் போட்டு பணம் தேடுவதிலேயே தெரிகிறதே!

முன்பெல்லாம் கோயில் காரியத்திற்கு மக்கள் தேடிக் கொண்டுபோய், தாமாகவே பணத்தைக் கொடுத்தனர். ஆனல் இன்று கோயில் செலவுக்குப் பணம் கேட்டுப் பத்திரிகையில் விளம்பரம் போடவேண்டிய நிலைமையல்லவா ஏற்பட்டுவிட்டிருக்கிறது!

மக்களிடையே ஏற்பட்டுள்ள இந்த மனமாறுதலுக்கும், நாம் கடந்த இருபத்தைந்து வருடங்களாகச் செய்து வந்த சுயமரியாதைப் பணியேதான் முக்கிய காரணமாகும்!

இதனை நான் கர்வத்திற்காகக் கூறவில்லை. இந்த மாறுதல் சுயமரியாதைஇயக்கத்தின் வெற்றி என்பது மட்டுமல்ல இது காலத்தின் குறி என்பதையும் நாம் உணரவேண்டும். காலக்குறி கருத்து மாற்றத்தைத் தெளிவாகக் காட்டுகிறது, என்பதைத்தான் நாம் தெரிந்துகொள்ளவேண்டும்.

நேற்று காலையில் தோழர் டி. கே. சீனிவாசன் அருள் நெறி இயக்கத்தைப்பற்றிக் குறிப்பிட்டார். அந்த இயக்கத்தை நடத்துகின்ற குன்றக்குடி அடிகளாரும் ஒரு மதத் தலைவர்தான். ஆனால் முன்காலத்தில் இருந்த மடாதிபதிகளைப்போலன்றி அவர் மக்களிடம் நேரில் சென்று பழகி மதப் பிரச்சாரம் செய்கிறாராம். இந்த அளவுக்காவது மாறுதல் ஏற்படவும் நாம்தான் காரணம்.

இதைப்போலவேதான் இந்தக் காஞ்சிபுரம் பச்சையப்பன் பள்ளி ஆசிரியர் திரு. வச்சிரவேலு முதலியார் அவர்கள், இன்று இங்கிருந்து தருமபுரம் ஆதினத்திற்குச் சென்றதும், நேரே மடாதிபதி வரவேற்று உட்காரவைத்து 'காரைக்காலம்மையார் புராணமோ,' மற்ற எந்தப் புராணத்தையோ பேசுவதற்காக ரூபாய் ஐநூறு என்ற முறையில் பணம் தருவதற்கும் யார் காரணம்? நாமே தான்!

மக்களையே நேரில் பார்க்க மறுத்த மடாதிபதிகள் மனம்மாறி இன்று தமிழ்ப்பற்று என்று பேசுவதும். தமிழ்ப்பற்று பேசுவதால் தமிழ்ப்பண்டிதர்களை ஆதரிப்ப தற்கும் நமது சுயமரியாதைக் கணைகள்தான் முக்கியதூண்டு கோலாகும்!

இன்று எத்தனையோ மடாதிபதிகள் பள்ளிகள் கட்டு கிறார்கள். ஆஸ்பத்திரிகளுக்கு நன்கொடை தருகிறார்கள். சமீபத்தில்கூட ஒரு மடாதிபதி ஒரு பிரசவ விடுதியைக் கட்டித் திறந்ததாகப் பத்திரிகைகளிலே செய்தி வந்ததே!

முன்பெல்லாம் இப்படியா நடந்தது? மக்களிடமிருந் துதான் மடாதிபதியின் காணிக்கைகளைப் பெற்றார்களே தவிர, மக்களுக்காக எந்த மடாதிபதியும் எதையும் செய்ய வில்லையே! இன்று ஏன் இந்த மாற்றம் ஏற்பட்டது? இதற் கெல்லாம் நம்முடைய சீர்திருத்தப்பணியும் பிரச்சாரமுந் தான் முக்கியமான அடிப்படைக் காரணங்களாகும்.

ஒரு ஆண் ஒரு மனைவியைத்தான் மணக்கவேண்டும் என்று நாம்தான் நாட்டின் மனமான பிரச்சாரம் செய்து வந்தோம். இன்று நாம் அறிவித்தபடி சட்டம் இயற்றப் பட்டுவிட்டது.

ஒரு மனைவியிருக்கும்போது மற்றொரு பெண்ணை மணப்பது இன்று கிரிமினல் சட்டப்படி குற்றமாகும். அப் படிச் செய்தால் பெண்ணை மணக்கும் ஆணுக்கும், பெண் ணைக் கொடுப்பவருக்கும், அப்படிப்பட்ட திருமணத்தைச்

செய்துவைக்கின்றவர்களுக்கும் சேர்த்துத் தண்டனை தரப்படுகிறதே!

இப்படிப் பலவழிகளிலும், பல்வேறு துறைகளிலும் நாம் செய்துவந்த சுயமரியாதைப் பிரச்சாரம் போற்றத்தக்க அளவு நல்ல பலனைத்தான் தந்துள்ளது.

ஆகவே தோழர்கள் அனைவரும் மேலும் தொடர்ந்து இப்படிப்பட்ட சமூக சீர்திருத்தப் பணியைச் செய்துவர வேண்டுமென்று மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறேன்.

சுயமரியாதை இயக்கக் கொள்கைகளை நாடு முழுதும் மேலும் பரப்ப வேண்டுமென்று குறிப்பிட்டேன். இதற்காக நாம் எல்லாத் துறைகளிலும் நுழைந்து மிகத் தீவிரமாக வேலை செய்யவேண்டும். அப்போதுதான் நாட்டில் உள்ள பழமைப்பிடிகளும், மதமூட நம்பிக்கைகளும், நீங்கும்—நீக்கப்படும்.

நல்ல ஓவியம் வரையத் தெரிந்தவர்கள் அனைவரையும், சுயமரியாதைக் கொள்கைகளைப் பரப்பும், விளக்கும் ஓவியங்களையே தீட்டிவரவேண்டும்.

இசைபாடத்தெரிந்த தோழர்களும், தோழியர்களும் தங்கள் இசைத்திறன் மூலம் சீர்திருத்தக் கருத்துக்களடங்கிய பாடல்களையே பாடிவர வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். சினிமாத்துறையிலும், நாடகத்துறையிலும், ஈடுபட்டுள்ள நண்பர்களையும், சமுதாய சீர்திருத்தக்

கொள்கைகளையே படங்களாகவும் தீட்டும்படி வற்புறுத்து கிறேன். பேச்சாளர்களும், எழுத்தாளர்களும் இதையே தான் பேசவேண்டும். எழுதவேண்டும்.

நாம் சமூக சீர்திருத்தக் கருத்துக்களைக் கலைத்துறை யின் மூலம் புகுத்துவதைக்கண்டு நண்பர் சிவஞானம் போன்றவர்கள் சில குறுக்குக் கேள்விகளைக்கேட்டு வருவ தாகத் தெரிகிறது.

புதிய சீனாவின் தலைவர் மா-சே-துங் சினிமா நாடகங் களுக்குக் கதை வசனமெழுதினாரா, ரஷ்ய நாட்டு லெனின் ஸ்டாலின் போன்ற தலைவர்கள் எல்லாம் இப்படியா செய் தார்கள்? சினிமாவிற்கும், நாடகத்திற்கும் கதை வசனம் எழுதுவதால் நாடு சீர்பட்டுவிடுமா? மற்ற நாட்டில் அப்ப டிச் செய்யாதபோது, அண்ணாத்துரை மட்டும் இப்படிச் செய்வது சரிதானா? என்பன போன்ற குறுக்குக்கேள்விகளை நண்பர் சிவஞானம் பொதுக்கூட்டங்களில் மட்டுமே கேட்டு வருகிறாராம்.

சினிமாவிற்கும், நாடகத்திற்கும் கதை வசனம் எழுது வது சரியா? அல்லது தவறா? என்பதைப்பற்றி அவருக்கு எந்தவிதமான அக்கரையோ அல்லது ஆர்வமோ சிறிதளவும் இருப்பதாகத் தெரியவில்லை! ஆனால் கலைத்துறையில் அண் ணாத்துரைபோன்றோர் செல்வாக்குப்பெற்றுவிடுகிறார்களே! என்ற பீதிதான் அவரை இப்படியெல்லாம் குறுக்குக் கேள்விகள் கேட்கும்படி செய்திருக்கின்றது!

எப்படியாயினும், அந்த கேள்விகளுக்கு நாணயமான முறையிலேயே பதில் கூறுகிறேன்.

மாசேதுங்கும், லெனினும், ஸ்டாலினும், சினிமாவிற்கும் நாடகத்திற்கும் கதைவசனம் எழுதினார்களா? என்று நண்பர் கேட்கிறார்! இல்லை! நிச்சயமாக அவர்கள் சினிமாவிற்கும் நாடகத்திற்கும் கதை வசனம் எழுதத்தான் இல்லை அப்படியானால் நீ மட்டும் எழுதலாமா? என்று குறுக்குக் கேள்வி போடுகிறார்!

மாசேதுங், ஸ்டாலின், லெனின் போன்றார் கதை வசனம் எழுதவில்லை யென்றால், அவர்களுக்கு அது அவசியமாகவில்லை! அவ்வளவுதானே தவிர கதைவசனம் எழுதக் கூடாது என்பதல்லவே!

ரஷ்யா சீனு போன்ற நாடுகளில், மக்களைச் சீர்திருத்தக் கலைத்துறை மூலம் பணியாற்றித் தீரவேண்டிய நிர்ப்பந்தம், அந்த நாட்டுத்தலைவர்களுக்கு இல்லாமல் இருந்தது. அங்கெல்லாம், இந்த நாட்டில் உள்ளதைப் போன்ற மத மூடநம்பிக்கைகள் பெருகியில்லை யென்பதுமட்டுமல்ல, கலைத்துறை மூலம், மதத்துறை மக்கள்மீது ஆதிக்கம் செலுத்தவில்லையென்பதும் இதற்கு முக்கிய காரணமாகும்! எனவேதான் அவர்கள் கலைத்துறையில் ஈடுபட்டு உழைக்க வேண்டிய தேவையில்லாமற் போய்விட்டது.

இந்த நாட்டில் உள்ள நிலைமையே வேறு என்பதை நண்பர் சிவஞானம் ஏன் புரிந்துகொள்ளத் தவறி வருகி

ருரோ தெரியவில்லே. இந்த நாட்டில் மதத்துறை மக்களே எவ்வளவு ஆதிக்கம் செலுத்தி, அவர்களது முன்னேற்றத் தைத் தடுத்து வருகின்றது? மதத்துறை மக்கள்மீது ஆதிக் கம் செலுத்தப் பெரிதும் கலேத்துறைதானே கருவியாகப் பயன்பட்டது! மேலும் பயன்பட்டு வருகின்றது!

மதமூட நம்பிக்கைகளேயும், பழமைக் கருத்துக்களே யும், புராண இதிகாசங்களேயும், சாதிபேதங்களேயும் கலேத் துறையின் மூலமாகத்தானே மதவாதிகளும், பழமை விரும்பிகளும் புகுத்திப் பரப்புகின்றனர்! நாட்டில் நிலேக்கச் செய்கின்றனர்! புதுமைக்குத் தடைபோடுகின்றனர்! இந் நாட்டில் மதத்துறையும், கலேத்துறையும்இரண்டறக்கலந்து ஒன்ருேடு ஒன்று நன்ருக இணேத்துக்கிடக்கின்றன, ஆக வே மதத்துறையும், மார்க்கத்துறையும்-சீர்திருத்தவேண்டு மாஞல், கலேத்துறையை முதலில் சீர்திருத்தியாக வேண்டும். எனவேதான் நாங்கள் கலேத்துறையில் நுழைந்து பணி யாற்ற வேண்டியது மிகவும் அவசியமாகிவிட்டது.

மக்களிடத்தில், எந்தக் கலேத்துறை மூலமாக மதமூட நம்பிக்கைகள் புகுத்தப்பட்டனவோ, அதே கலேத்துறை யின் மூலம் நாங்களும் சீர்திருத்தக் கருத்துக்களேப் புகுத்தி மக்களிடம் மதவாதிகள் புகுத்தியுள்ள மதமூட நம்பிக்கை களே முறியடிக்கப் பாடுபடுகிருேம்! இதில் தவறென்ன இருக்கின்றது?

மதமூட நம்பிக்கைகளேப் பரப்ப, கலேத்துறை பயன் படும்வரை, நாங்களும் கலேத்துறையில் ஈடுபட்டுச் சுயமரியா

தைக் கருத்துக்களை மக்களிடையே பரப்பித்தான் வரு வோம்.

கலைத்துறை மூலம்தான் மக்களிடையே பெருவாரி யான மூடப்பழக்க வழக்கங்களும், கண்மூடிக் கருத்துக் களும் புகுத்தப்பட்டுள்ளன! அதனால்தான் அதேதுறையின் மூலமாகவே மக்களிடம் புகுத்தப்பட்ட கேடுகளைக் களைந் தெறிய நாங்கள் உழைத்து வருகின்றோம்,

கலைத்துறையின் மூலம்தான் பலமதக் கருத்துக்கள் மக்களிடம் புகுத்தப்பட்டன. புகுத்தப்பட்டு ஆதிக்கம் செலுத்தி வருகின்றன என்பதற்கு ஒரே ஒரு உதாரணத் தைக் குறிப்பிடுகிறேன். அதுவே போதும் இதனை உறுதி படுத்த!

பகவான் மகாவிஷ்ணு பூலோகத்தில் பத்து அவதா ரங்கள் எடுத்ததாகப் பக்தர்கள் புகழும் புராணங்கள் கூறு கின்றன. ஆனல் எத்தனை அவதாரங்களுக்கு மக்களிடையே மதிப்பும் மரியாதையும் இருக்கின்றன! பூஜைகளும் தேர் திருவிழாக்களும் நடைபெறுகின்றன! எல்லா அவதாரங் களுக்குமா? இல்லையே! மச்சாவதாரம், கூர்மாவதாரம், வாமனவதாரம். வரகாவதாரம் முதலியவைகளும் பகவான் விஷ்ணுஅவதாரங்களாகத்தான் கருதப்படுகின்றன, அதைப் போன்ற அவதாரங்கள்தான், இராமாவதாரமும் கிருஷ்ண வதாரமும். ஆனல், இராமாவதாரமும் கிருஷ்ணவதாரமும் மக்களிடையே பெற்றுள்ள மதிப்பும் மரியாதையும் மற்ற

அவதாரங்களுக்கு இல்லாதது ஏன்? சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறேன்.

இராமன், கிருஷ்ணன் ஆகிய அவதாரங்களுக்கு மாத்திரமே தான் நாட்டில் கோயில்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இவைகளுக்குப் பூஜையும், ஜயந்தியும் தேர் திருவிழாக்களும் நடைபெறுகின்றன. மற்ற அவதாரங்களுக்கு இதைப்போல நடைபெறக் காணோம். இதற்குக் காரணம் இராமன், கிருஷ்ணன் ஆகிய அவதாரங்கள் மக்களுக்குத் தெரிந்ததைப் போல மற்ற அவதாரங்கள் தெரியாததுதான் இதற்கு முக்கிய காரணமாகும்.

மக்களுக்கு இராமன், கிருஷ்ணன் ஆகிய அவதாரங்கள் பெரிதும் தெரிவிக்கப்பட்டன! இவை பற்றித்தான் பெருத்த இரண்டு இதிகாசங்கள், இராமாயணம் என்றும், பாரதம் என்றும் ஏற்பட்டன. இந்த இரண்டு அவதாரங்களைப்பற்றிக்கலைத்துறையின் மூலம்ஏராளமான விளம்பரம் செய்யப்பட்டது. ஆடல், பாடல், இசை, நாடகம், ஓவியம் சினிமா முதலிய எல்லாவற்றிலும் இவைகள் போற்றப்பட்டன. ஆகவே இந்த இரண்டு அவதாரங்கள் மட்டும் மக்களின் மதிப்புக்கும் மரியாதைக்கும் உரியனவாகின. புகழுக்கும், பூஜைக்கும் ஏற்றவைகள் ஆகிவிட்டன! கலைத்துறை கைவிட்ட மற்ற அவதாரங்கள் ஆண்டவன் எடுத்த அவதாரங்கள் தான் என்றாலும், மக்களிடம் பரவாமல் போய்விட்டன. ஆகவே கலைத்துறையின் மூலம் எந்தக்கருத்தையும்

சுலபமாக மக்களிடம் புகுத்தி நிலைநிறுத்த முடியும் என்பது நன்கு விளங்குகிறது இதன் மூலம். ஆகவே தான் சுயமரி யாதைக் கருத்துக்களையும் நாங்கள் கலைத்துறையின் மூலம் மக்களிடம் புகுத்த முனைகிறோம். ஓரளவு வெற்றியும் பெற்றுவருகிறோம்.

இந்த நாட்களில்கூட மதக்கருத்துக்களைப் பரப்பும் சினிமா நாடகங்களுக்கு மதவாதிகள் பெரிதும் வரவேற்பு தருகின்றார்களே! மதத்தலைவர்கள் அப்படிப்பட்ட படங் களைப் பாராட்டத் தவறுவதும் இல்லையே!

ஜெமினி ஸ்டுடியோவின் அதிபர் தோழர் எஸ். எஸ். வாசன் சந்திரலேகா படத்தை எடுத்தார். படம் நல்ல வெற்றியோடு ஓடி அவருக்கு பெருத்த லாபத்தையும் புக ழையும் கொடுத்தது. ஆனால் அப்போது வாசனை எந்த மடாதிபதியும் பாராட்டவில்லை. புகழ வில்லை. ஆனால் அதே வாசன் ஔவையார் படத்தை யெடுத்தபோது மட் டும் மதவாதிகள் அனைவரும் ஒருசேரப் பாராட்டினரே! மடாதிபதிகளும் வாழ்த்தி வரவேற்றுப் பொன்னாடை போர்த்தினார்களே! ஏன்?

ஔவையார் படத்தின்மூலம் பிள்ளையார் பெருமை வளருகிறது. சைவத்தின் மேன்மை காட்டப்படுகிறது ஆஸ்திகம் தழைக்க உதவுகிறது என்பதுதான் இதற்கெல் லாம் முக்கிய காரணமாகும்.

ஔவையார் படத்தைப் பிடிக்க ஏறக்குறைய 40 லட்சம் ரூபாய் செலவாகியதாம். ஆறு ஆண்டுகாலம் படப் பிடிப்பு நடைபெற்றுள்ளது. கே. பி. சுந்தராம்பாளின் இசைத்திறன் வேறு பயன்பட்டது. இத்தனை இருந்தும் ஔவையார் படம் வெற்றிபெறவில்லை. பெருத்த அளவில் படம் கொட்டகைகளில் ஓடியதாகத் தெரியவில்லை யென்ருலும், மதத்துறையில் உள்ளவர்கள் அதில் உள்ள மதக் கருத்துக்களுக்காக அதைப்புகழத் தெரியவில்லை!

உங்களில் பலருக்குத் தெரியாது என்று கருதுகிறேன்; ஔவையார் படம் சம்பந்தமாகத் தோழர் வாசன் என்னைக் கண்டு பேசிய விபரம்!

ஔவையார் படம் வெளிவந்த சில தினங்களுக்குப் பிறகு ஜெமினி வாசன் என்னைக் காண விரும்புவதாக நண்பர்கள் சிலர் தெரிவித்தார்கள். உடனே பார்ப்பதற்குச் சந்தர்ப்பமில்லை யென்று தெரிவித்துவிட்டேன். என்னைப் பார்த்துத்தான் ஆகவேண்டும் என்று அவர் பலமுறை விரும்பினுர். ஆகவே ஒருமுறை சென்னையில் தோழர் ஈ. வே. கி. சம்பத் அவர்களின் தமக்கையார் இல்லத்தில் வாசனைச் சந்திக்க ஒப்பினேன்.

ஏற்பாட்டின்படி தோழர் வாசன் என்னைப் பார்க்க வந்தார். இருவரும் ஏறக்குறைய ஐந்து நிமிடங்களுக்கு மேல் என்ன பேசுவதென்றே தெரியாமல் உட்கார்ந்திருந்தோம். பின்னர் வாசன் ஔவையார் படம் வெளிவந்திருக்

கிறதே. அதைப் பார்த்தீர்களா என்று கேட்டு, படம் எப்படியிருக்கிறது என்றும் கேட்டார்.

நான் படத்தைப் பார்த்ததாகத் தெரிவித்து, படம் பிடிப்பு சம்பந்தப்பட்ட சிலவற்றைப் பாராட்டினேன்.

கடைசியாக வாசன் ஔவையார் படத்தை யெடுக்கத் தமக்கு 40 லட்சம் ரூபாய் செலவாகிவிட்டதாகவும், ஆனால் தாம் எதிர்பார்த்த அளவிற்கு படம் வெற்றிகரமாக ஓடவில்லையென்றும், சந்திரலேகா படம் ஓடியதைப் போலவே ஔவையாரும் ஓடினால்கூடத் தமக்கு சுமார் 20 லட்சம் ரூபாய் நஷ்டந்தான் வருமென்றும் தெரிவித்தார். ஆனால் ஔவையார் படத்தின் மூலம் தாம் தமிழுக்காகத்தொண்டு செய்திருப்பதாக, நான் மனதார நம்பினால் ஔவையார் படத்தின் மூலம் தமிழுக்கு நல்ல தொண்டு செய்திருப்பதாக ஒரே ஒரு வார்த்தையை நான் கூறிவிட்டால், அவர் 40 லட்சம் ரூபாய் போனதைப்பற்றிக் கவலைப்படாமல் பெருத்த மகிழ்ச்சியடைய முடியும் என்று தெரிவித்தார்.

என்னால் எதைக்கூறினாலும் கூறமுடிந்ததே தவிர, அவர் கேட்ட அந்த ஒரே ஒரு வார்த்தையைத்தான் சொல்ல முடியவில்லை.

அதன் பின்னர் மறுபடி வாசன் என்னைச் சந்தித்து என்னுடைய தலைமையிலேயே ஒரு நாள் ஔவையார் படம் நடைபெற வேண்டுமென்றும் கேட்டார், இப்படிப்பட்ட

சமயங்களில் நான் மிகவும் இலகுவாகத் தப்பித்துக்கொள்வதிலே நான் மிகவும் சமர்த்தன், ஆகவே வாசனுக்கு இடங்கொடுக்காமல் தப்பித்துக்கொண்டேன்.

நான் எதற்காக இதனைக் குறிப்பிடுகிறேன் என்றால், மதத்துறையைச் சார்ந்த படங்களுக்கு மக்களிடம் எவ்வளவு மதிப்பு குறைந்துள்ளது என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத்தான்.

ஜெமினி வாசன் கேட்டபடி ஔவையார் படத்தின் மூலம் தமிழுக்கு தொண்டு செய்திருப்பதாக நான் எப்படிக் கூறமுடியும்? முடியவே முடியாதே! தமிழுக்கா அந்தப் படத்தின் மூலம் தொண்டு செய்துள்ளார்? இல்லவே இல்லை! மதத்திற்குத்தானே அவர் பிடித்த ஔவையார் பயன்பட்டது! அதனை எப்படி நான் தமிழருக்குத்தொண்டு செய்ததாகக் கூறமுடியும்? முடியாதே! ஆகவேதான் நான் அவரிடம் இதைக் கூறாமல் விட்டேன்! 40 லட்சம் ரூபாய் பணத்தைச் செலவிட்டும் வெற்றி காணாமல், நொந்த மனத்தோடு எதிரில் உட்கார்ந்திருக்கும் மனிதரிடம், நாம் ஏன் நமது கருத்தைக்கூறி மேலும் நோகவைக்க வேண்டும்என்ற எண்ணத்தில்தான் நான் அவரிடம் எதையும் கூறவில்லை!

நாம் நினைக்கும் ஔவையார் வேறு! வாசன் பிடித்த ஔவையார் வேறாயிற்றே! வாசன் படத்தில் சுப்பிரமணியரைப்பார்த்து, படம் பார்ப்பவர் மெய்சிலிர்த்து மயங்கிவிட்டதாகப் படம் பிடித்துப் பத்திரிகையில் வெளியிட்டார்

களே! அப்படிப்பட்ட ஔவையாரல்ல, தமிழருக்குத் தொண்டு செய்யும் ஔவையார். இந்தப்படம் மதத்திற்குத் தான் புதுமுறையில் பக்கபலம் தேடப் பயன்பட்டதே தவிர மக்களுக்கோ அல்லது அவர் கூறிக்கொண்டபடி தமிழுக்கோ எந்தவிதமான தொண்டையும் ஒரு சிறிதும் செய்யவில்லை!

இப்படிப்பட்ட மதக்கருத்தைப் புகுத்தும்ஔவையார் களும் வரும் சினிமாப்படமாக, ஆனால் நீங்கள் மட்டும் சீர் திருத்தப்படங்களை ஏன் எழுதுகிறீர்கள் என்று கேட்பது அறிவுடைமையல்ல! மதத்தைப்பரப்புகின்ற நாடகங்களும், சினிமாக்களும் உள்ளவரையில், நாங்கள் அத்துறையில் இருந்துதான் தீருவோம். கலைமூலம் இழைக்கப்படும் கொடுமைகளைக் களைந்தெறிவோம், மதமூட நம்பிக்கை களைப் போக்கியே தீருவோம் என்பது உறுதியாகும்.

கலைமூலம் கருத்துக்களை மக்களிடையே பரப்ப முடியும் என்ற காரணத்தால்தான் அரசாங்கத்தினரும் தணிக்கை போர்டை ஏற்படுத்தி, அதனிடம் நீண்ட கத்த ரிக்கோலையும் கொடுத்திருக்கிறார்கள்!

'சொர்க்கவாசல்' சினிமாப்படம் தணிக்கை செய்யப் பட்டபோது, அந்த தணிக்கை அதிகாரியிடம் நான் மூன்று நாட்கள் வாதாடினேன். ஒன்றும் பயன்படவில்லை. ஆனால் அந்த அதிகாரி மிகவும் நெஞ்சழுத்தத்தோடு, ஆனால் மனம்

விட்டு நேர்மையாகவே கூறிவிட்டார். நீ எழுதுகிருய் ஆகவேதான் இந்தப் பகுதிகளை வெட்டுகிறேன் என்று!

அமெரிக்க நாட்டிலும்கூட சினிமாமூலம் கம்யூனிசக் கருத்துக்கள் பரப்புவதைத் தடுக்க பலமான தணிக்கை போர்டை ஏற்படுத்தியிருக்கிருர்களாம்.

ஆகவே சினிமா மூலம் கருத்து பரவுகிறது என்பதை உலகம் ஒப்புக்கொள்கிறது என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. ஆனுல் அத்துறை மதத்துறைக்குத்தான் பயன் படவேண்டும், பகுத்தறிவுத்துறைக்குப் பயன்படக்கூடாது என்று பேசுவது முறையல்ல, முடியாத காரியமுமாகும்!

நாம் சினிமாத்துறையிலும், நாடகத்துறையிலும் செல்வாக்குப் பெற்று வருவதைக் கண்டிக்கிருர்கள், அவர்கள் நாம் செய்யும் எதையுந்தானே கண்டிக்கிருர்கள். அவர்கள் கலைத்துறையில் நாம் இருப்பதை எப்படி கண் டிக்காமல் இருப்பார்கள்!

காட்டிலே துள்ளி ஓடும் புள்ளிமான்மீது வேங்கைக் குக்கோபம் இருப்பதைக்கண்டு ஆச்சரியப்பட முடியுமா? புள்ளிமான் இருப்பதே வேங்கைக்குக் கோபம். மேலும் அது வேங்கை முன்னர் துள்ளி விளையாடலாமா? வேங்கை யைக் கண்டதும் அதன் கண்கள் மிரட்சியடையலாமா? அதைவிட வேங்கையைப் போல இரத்தங்குடிக்காமல்' இறச்சியைத் தின்னுமல் புல்லைமட்டும் புசிக்கலாமா? அத ஞல்தான் வேங்கைக்கு மான்மீது கோபம்! அதற்காக மான்

வாழாதிருக்க முடியுமா? துள்ளி ஓடாமல்தான் இருக்க முடியுமா? முடியாதே!

இதைப்போலத்தான் இன்று நாம் கலைத்துறையில் நுழைந்து சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்பி வருவதைக் கண்டு கேலி பேசுவோரும், கிண்டல் செய்பவர்களும் என்பதை, நாம் புரிந்துகொள்ள வேண்டுகிறேன்.

நாட்டில் சினிமாவே இருக்காது, நாடகமும் நடக்காது என்ற நிலைமை இருக்கட்டும், என்ருவது மற்றவர்கள் பேசட்டும். செய்யட்டும் முடிந்தால்.

சினிமாவும் இருக்கும் நாடகங்களும் நடக்கும், அவை மூலம் பழமைக் கருத்துக்களைப் பரப்புவோம், புராணக் கதைகளைப் படம்பிடிப்போம், மதத்துறைக்கு மான்பு தேடுவோம் ஆனால் நீங்கள் மட்டும் கலைத்துறையில் வேலை செய்யக்கூடாது என்பது எந்த நீதிக்குப் பொருந்தும்?

ஆகவே இன்றுள்ள நிலையில் நாம் கலைத்துறையில் ஈடுபட்டு வருவதைக் கண்டு மனம் புழுங்குவோர் மூன்றே மூன்று ரகத்தைச் சேர்ந்தவர்கள்தான். ஒன்று பழமை விரும்பிகளும், மதவாதிகளும். இரண்டாவது ரகம். கலைத் துறையில் ஏற்கனவே ஈடுபட்டுத் தோல்வி கண்டவர்கள், பாவம் இவர்கள் நொந்த உள்ளத்தினர். இன்னமும் தங்களுக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லையே என்ற பொருமைக்காரர்கள் மூன்ருவது ரகம்.

இப்படிப்பட்டவர்களுக்காக நாம் கலைத்துறையைக் கைவிட்டுவிட முடியாது என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துவிடுகிறேன்.

இயக்க நண்பர்களை நான் மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். எந்த அளவுக்குப் பேசுகின்றீர்களோ எவ்வளவு எழுதுகிறீர்களோ. அந்த அளவுக்குக் குறையாமல் நாடகங்களும் ஆடிவாருங்கள். இசைத் துறையிலும் ஈடுபடுங்கள். சினிமாவிலும் சேர்ந்து பணியாற்றுங்கள். நாட்டில் எத்தனை விதமான துறைகள் உண்டோ, அத்தனை துறைகளிலும் நேர்மையுடன் ஈடுபட்டுச் சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்பி வாருங்கள்.

நாம் எல்லாத் துறைகளிலும் அடைந்துள்ள செல்வாக்கைக்கண்டு பொருமை கொள்வோரும், பொச்சரிப்பு மேலிட்டு மனம் பதைப்போரும் இருப்பதைக் கண்டு ஒரு சிறிதும் கவலைப்படத் தேவையே இல்லை. நாம் நமது வழியே செல்வோம்!

நம்மைக்கண்டு வயிற்றெறிச்சல்கொள்வோர், புராணத்தில் யாரோ காந்தாரி பாண்டவர் பிறந்ததைக்கேட்டு அம்மிக்குழவியை எடுத்து அடிவயிற்றில் இடித்துக்கொண்டாளாமே, அதைப்போல வேண்டுமானாலும் இடித்துக்கொள்ளட்டும், அது பற்றி நமக்குக் கவலையில்லை. முடிந்தால் இந்தப் பொருமைச் செய்கையையும்கூட அடுத்த நாடகத்தில் ஒரு காட்சியாக்கி மக்களுக்கு காட்டுவோம். யாருக்

காகவும் நமது கலைப்பணியை நாம் நிறுத்தமாட்டோம், நிறுத்தக்கூடாது!

நாம் நாடகம் ஆடுவதைப் பற்றி பலரும் தூற்றிவருவதைக் காணும்போது நான்கூட மீண்டும் நாடகமாடவேண்டுமென்று தீர்மானித்துவிட்டேன். நாடகப்பணியை நாம் எப்போதும் போலத் தொடர்ந்து செய்து வருவதில் ஒரு சிறிதும் ஆர்வங்குன்ருது இருந்துவர வேண்டுகிறேன்.

நல்ல வசதியும், இனியகுரலும் படைத்து, கிறிது பழக்கமும் உள்ள ஆட்களைப் பொருக்கி நாடு முழுதும் காலட்சேபங்களையும் நடத்த வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

ஆம்! நாடெங்கும் பகுத்தறிவுக் காலட்சேபங்கள் நடக்க இனி ஏற்பாடு செய்யவேண்டும். இன்னும் எத்தனை நாட்களுக்கு மக்களிடையே புராண காலட்சேபங்களே நடப்பது? நமது கருத்துக்களடங்கிய காலட்சேபங்களும் இனி தொடங்கத்தான் வேண்டும்.

சீதா கல்யாணங்களையே மக்கள் இன்னும் எத்தனை நாளைக்குக்கேட்டுக் கொண்டிருக்கும்படி விட்டுவிடுவது! அவர்கள் சாக்ரடீஸ் பற்றிய காலட்சேபத்தையும் கேட்கும்படி செய்ய வேண்டாமா? ருக்மணி கல்யாணத்தையும், காரைக்காலம்மையார் புராணத்தையும்பற்றிய கதைகளையே காலட்சேபங்களாக மக்கள் கேட்டது போதும்! இனி

அவர்கள் பகுத்தறிவுக் கொள்கைகளை விளக்கும் காலட்சேபங்களைக் கேட்கும்படி செய்யவேண்டும்.

மின்சார விளக்குகளைக் கண்டுபிடித்தவனைப்பற்றி, ஒலிபெருக்கியைக் கண்டுபிடித்தவனைப்பற்றி, ஆகாய விமானம், ரயில் முதலியவற்றை உலகுக்கு அளித்தவர்களைப் பற்றியெல்லாம் மக்கள் அறியவேண்டும். இப்படிப்பட்ட விஞ்ஞானிகளைப்பற்றிக் காலட்சேபம் மூலம் மக்களுக்கு எடுத்துச்சொல்லவேண்டும்.

நம்முடைய மூதாதையர்களான முடியுடை மூவேந்தர்களைப்பற்றிக் காலட்சேபங்கள் நடத்தவேண்டும். முடியுடை மூவேந்தர்கள் வாழ்ந்த வளமான வரலாறுகளைக் காட்டவேண்டும். அந்த முடியுடை வேந்தர்களை, ஜடைமுடி தரித்தவர்கள் எப்படித் தந்திரமாகத் தாழ்த்தினர்கள் என்பதையும் விளக்கவேண்டும்.

இராஜேந்திர சோழனை, வரகுண பாண்டியனை. குலோத்துங்கனை, சேரன், செங்குட்டுவனை, சிலப்பதிகாரம் தந்த இளங்கோவை மக்கள் முன் நிறுத்திக் காட்டவேண்டும். நமது இனம் வாழ்ந்த வரலாறுகளைக் கூறவேண்டும். வாழ்ந்த இனம் வஞ்சகரின் பிடியில் சிக்கிச் சீரழிவதையும் எடுத்துக்காட்டவேண்டும்.

இனி இத்தகைய பகுத்தறிவுக் காலட்சேபங்கள் நாடெங்கும் நடைபெறத் தோழர்கள் முயற்சி செய்ய

வேண்டும். அதற்கான நல்ல ஏற்பாடுகளேயும் உடனடி யாகச்செய்ய வேண்டுகிறேன்.

கலேத்துறையில் ஈடுபட்டதன் மூலம் நண்பர் கருணு நிதியும் நானும் பதினேந்து இலட்சம், பத்து இலட்சம் என்று பணம் சேர்த்துவிட்டதாகச் சிலர் வீண்பேச்சுப் பேசுகிருர் கள் இனி அதையும் மறுக்கப் போவதில்லே. தங்களுக்குக் கிடைக்கவில்லேயே என்று பொருமையால் புழுங்கிச் சாகின்றவர்கள் சாகட்டும். எனக்குக் கவலே இல்லே.

எனவே தோழர்களே நான் மறுபடியும் கேட்டுக்கொள் வதெல்லாம் இதுதான். மற்றவர்கள் என்ன கூறுகிருர்கள் என்பதைப்பற்றிக் கவலேப்படாமல் நாம் கலேத்துறையில் ஈடுபட்டுச் சீர்திருத்தப்பணியைத் தொடர்ந்து செய்துவர வேண்டும். இதற்கான ஆக்கவேலேயில் அனேவரும் ஈடுபடுங்கள்.

அரசியல் துரையில் நமது இலட்சியம் திராவிடநாடு தனிநாடாக வேண்டும் என்பதுதான். இதைப்பற்றி இன்று வரை ஆயிரமாயிரம் மேடைகளிலே நல்ல விளக்கங்கள்கூறி வந்திருக்கிருேம். இதுவரை அவற்றை எவரும் மறுத்துக் கூறவில்லே. ஆனுல் மறைக்கப் பார்க்கின்றனர். அது வீண் வேலே என்பதைத் தெரிவித்து விடுகிறேன்.

நமது நாடு நம்மிடந்தான் இருக்கவேண்டும் என நாம் கூறுவதை மறுத்துக்கூற யாரால் முடியும்? சொந்த நாட்

டைப் பிறநாட்டானிடம் அடிமைப்படுத்தி வாழ்வதை யார் தான் விரும்புவார்கள்! தமிழ்நாடு-திராவிட நாடு திராவிடரின் சொத்தாகவே இருக்க வேண்டுமென்பதைத் தடுத்திட எவருக்குத்தான் துணிவு பிறக்கும்? இதனை மறுத்துத் தீர்ப்பு வழங்க எந்த நீதிமான்களும் உலகத்தில் கிடையாதே!

தமிழகம்–திராவிடம் திராவிடரிடமே இருக்க வேண்டுமென்பதைப்பற்றி எந்த திராவிடனுக்கும், எத்தகைய சந்தேகமும் எழக்காரணமே இல்லை. ஆங்கில நாட்டுச் சுதந்திரத்தைப்பற்றி ஆங்கிலேயருக்கு! ஆங்கிலத்தில் கூறத் தேவையில்லை! என்று ஒரு ஆங்கிலப் பழமொழி உண்டு. அதைப்போலத்தான் தமிழருக்கு- தமிழ்மொழியைத் தாய் மொழியாக உடையவருக்குத் தமது தாய்த்திருநாடு தம்மிடமே இருக்கவேண்டும் என்பதைக் கூறவேண்டியதில்லை,

தன்மானமுள்ள தமிழன், திராவிடன் ஒவ்வொருவனுக்கும் தமது தந்தையர் நாடு. தனித்திருநாடாக விளங்க வேண்டுமென்பதிலே, தணியாத ஆர்வமும் அக்கறையும் ஏற்படத்தானே ஏற்படும்? இதனைத் தகாதது என்று உரைக்க எத்தகைய அதிகாரம் படைத்த அதிகாரிகளும் எங்கும் இருக்க முடியாதே!

நமக்குச் சொந்தமான நமது பூமியை நாமே சுதந்திரமாக ஆள்வது கூடாது என்று கூறிட அகில உலகத்திலும் ஆட்கள் இருக்கமுடியாது. ஒவ்வொரு நாடும் அந்த நாட்டு மக்களுக்குத்தானே சொந்தம்! மக்களால்தானே அந்த நாடு

ஆளப்படவேண்டும்? இந்தப் பொதுநீதியைப் புறக்கணித்து விட உலகமுழுவதும் தேடினாலும் ஒருவர்கூட கிடைக்க மாட்டார்கள் என்பது மிக மிக நிச்சயமாகும்!

திராவிட நாடு தனி நாடாக வேண்டும் என்று நாம் கூறி வருகிறோம். இந்த நாடு தனி நாடாக, சுதந்திர பூமியாக விளங்கியது என்பதை வரலாறுகளில் படிக்கிறோம். நமது மூதாதையர் வீரத்துடன் உலவிய இந்த பூமியில் நாம் வீணர்களாக உலவிவருவதைக்காண, வெட்கம் நமது விலாவைக் கொத்துகிறதே! வேதனையால் உள்ளம் துடிக்கிறதே!

இந்த நாடு நமது என்பதற்கும், அது தனிச் சுதந்திர நாடாக விளங்கியது என்பதற்கும் நல்ல சான்றுகள் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன! இலக்கியங்களில் இருக்கின்றன! சிலர் சாசனங்களில் பொறிக்கப்பட்டுள்ளன! மூவேந்தர்களாக வளமுடனும், வகையுடனும், புகழுடனும், பெருமையுடனும் ஆண்ட நமது தந்தையார் நாட்டை நாமே மீண்டும் தனிச்சுதந்திர நாடாக ஆளவிரும்புகிறோம்! இதில் தவறென்ன?

இந்த நாட்டைத் தனியாகப் பிரித்துவிட்டால் எப்படி ஆள்வீர்கள்! பாதுகாப்பிற்காகப் படைகள் உண்டா? என்றெல்லாம் கேள்விகள் கேட்கிறார்களே தவிர இதன் அடிப்படை உண்மையை மறுத்துக்கூற எவரும் முன்வரவில்லையே!

இந்த நாட்டை வெளிநாட்டிலிருந்து வந்து கொள்ளையடித்த வெள்ளையன்கூட இதைத்தானே அன்று விடுதலை கேட்டபோது சொன்னான்! அப்படிப்பட்ட வெள்ளையனே, பின்னர் தனது யூகமும், அரசியல் அறிவும் கூறியதற்கிணங்க இந்த நாட்டைவிட்டு வெளியேறிவிட்டானே? அப்படி வெளியே போகும்போது விமானத்தையும், கப்பற்படையே இல்லாதிருந்த மக்களுக்குக் கப்பற்படையையும் துப்பாக்கி பீரங்கிகளையும் கொடுத்துவிட்டுத்தானே சென்றான். அதைப் போலத்தானே இன்றும் நடக்கும்! நடக்கவேண்டும்!

படை இருக்கத்தான் வேண்டும். உங்களால் ஒருபடை திரட்ட முடியுமா? என்று கேட்கட்டும். ஒரு ஆறு மாதம் நம்முடன் எதிலும் இந்த அரசாங்கம் குறுக்கிடாமல் இருக்கட்டும். இதே மாநாட்டில் வந்துள்ள அத்தனை தோழர்களையும் நல்ல படை வீரர்களாக்கிக் காட்டுகிறேன் பாருங்கள்!

நாமென்ன வீரமற்ற பரம்பரையிலா வந்தோம்? தொடை நடுங்கிகளா நாம்? இல்லையே! நாம் வீரமரபினர்கள், வெற்றிவேந்தர்களின் வழி வந்தவர்கள்! நமக்கா வீர மற்றுப்போய்விடும்? நாம் நினைத்தால் நல்ல படைவீரர்களாகி விடலாமே! நமது மக்களிடம் நமது நாட்டை நாமே ஆள்வதற்கேற்ற அத்தனை தகுதிகளும் நிறைந்துள்ளன! நாட்டில் எல்லா வளங்களும் ஏராளமாக இருக்கின்றன.

எல்லா வளங்களும் வல்லமையும் நிறைந்துள்ள இந்த நாட்டைத்தனியே பிரித்து, நம்மைநாமே ஆண்டுகொள்ளத்தான் நாம் எல்லாத்துறைகளிலும் பாடுபட்டு வருகிறோம். சமுதாயத்துறைகளிலுள்ள சீர்கேடுகளைக் களைந்து அறிவுத் துறையில் முன்னேற வேண்டும். மக்களிடையே ஒற்றுமை உணர்ச்சியை ஏற்படுத்தவேண்டும். நல்லதொரு மன எழுச்சியை ஊட்டவேண்டும்! இன உணர்வைத்தட்டி விழிப்புறச் செய்தாக வேண்டும். நாட்டில் உள்ள அத்தனை துறைகள் மூலமாகவும் சீர்திருத்தம் புரிந்துவரவேண்டும். அதே நேரத்தில் நமக்கு ஏற்படும் எதிர்ப்புகளைச் சமாளிக்க வேண்டும். ஏளனங்களைத் தாங்கியாகவேண்டும்.

எனவேதான் நமது சக்திகள் அனைத்தையும் பலதுறைகளிலும் சேர்த்து உருட்டித் திரட்டி இன விடுதலைக்காகப் பாடுபடவேண்டுமென்று கூறுகிறேன்.

நாம் நமது பணியினை மிகமிக எச்சரிக்கையுடன் செய்துவரவேண்டும். நம்மிடையே ஆர்வம் இருக்கவேண்டும், ஆனால் ஆர்ப்பரிப்புகூடாது! மன எழுச்சிவேண்டும், ஆனால் ஆவேசம் அடையக்கூடாது! கட்டுப்பாட்டுடன் நடக்கவேண்டும், அதற்காக கல்லைப்போல் உட்கார்ந்திருக்

கவும்கூடாது; உற்சாகம் தேவை. ஆனல் வீண் ஆரவாரம் செய்யக்கூடாது! எல்லோரையும் இணைத்துச்செல்ல வேண்டும், ஆனல் அதற்காக எவர் சொல்லையும் கண்மூடிக் கேட்டுவிடக்கூடாது! மற்றவர் கருத்துக்கு மதிப்பளிக்கத் தான் வேண்டும்! அதே நேரத்தில் கொள்கையைத் துளியும் விட்டுவிடவும் கூடாது! பிறர் உதவி தேவைதான். அதற்காக எவர் முன்பும் மண்டியிடத்தேவையே இல்லை. போராட்ட வேட்கை இருக்கவேண்டும். அதற்காக வீண் வம்புக்குப் போகக்கூடாது! வீரம் வேண்டும், ஆனல் சண்டையைத் தேடிச் செல்லக்கூடாது! இப்படிப்பட்ட மகத்தான பெரும் பொறுப்புடன்தான் நாம் காரியமாற்ற வேண்டியிருக்கின்றது!

ஒரு சர்க்கஸ்காரன் கம்பியின்மேல் ஒரு கையில் குடையுடன் நடந்து செல்லும் வித்தையைப் போலத்தான் நாமும் மிகச் சிரமத்துடன் காரியமாற்றி வருகிறோம். சர்க்கஸ் கம்பெனியிலாவது கம்பி ஆடாமல் அசையாமல் இருக்கப் பாதுகாப்பு இருக்கும். நமக்கு அதுகூட இல்லையே! நாம் நடந்து செல்கின்ற கம்பியை சென்னை மீரான் சாகிபு தெருவிலிருந்து ஆரம்பித்து அனைவரும் ஆட்டிக்கொண்டுதானே இருக்கிறார்கள்! இருந்தும் நாம் நல்ல முன்னேற்றமடைந்து தான் வருகிறோம்.

எனது தம்பிமார்களும் இந்தக் கஷ்டமானவித்தையில் நல்ல தேர்ச்சி பெற்றுத்தான் வருகிறார்கள். கம்பிமீது, அதுவும் மற்றவர்களால் வேண்டுமென்றே ஆட்டி அசைக்கப்படுகின்ற கம்பியின்மீது நடப்பதைப்போன்ற சிக்கலான வேலைதான், நமது சீர்திருத்தப் பாதையும். ஆகவேதான் நாம் எதையும் பொறுப்பறிந்து பேசவேண்டும். காலமறிந்து எதையும் செய்யவேண்டும். பொதுக்கூட்டங்களில் பேசும் போதும் அளவறிந்து வாக்குறுதிகள் தரவேண்டும். நம்மால் செய்ய முடிந்ததில் கால்பங்கு, அரைக்கால் பங்குதான் உறுதி கூறவேண்டும். என்னைப்பொறுத்தவரையில் இப்படிப்பட்ட பொறுப்புணர்ச்சியோடுதான் எப்போதும்

பேசுவேன், நடப்பேன். இதையே எனது தம்பிமார்களும் பின்பற்றிப் பொறுப்புடன் நடந்துகொள்ளக் கேட்டுக் கொள்கிறேன்.

நமது படை பொறுப்புமிக்க படையாக இருக்கவேண்டும்! அப்போதுதான் நாம் எந்த நேரத்திலும் விடுதலைப் போர் தொடங்குவதற்கேற்றதான நிரந்தரப் போர்ப்படையாக விளங்கமுடியும்.

ஆகவே தோழர்கள் அனைவரும் பொறுப்புடனும், கவலையுடனும், கவனத்துடனும், பகுத்தறிவுப் பணிபுரிந்து நாட்டில் இன எழுச்சியையும், விழிப்பையும் ஊட்டிவருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்துள்ள திருவாங்கூர் கொச்சி பகுதிகளிலுள்ள தமிழ்ப்பகுதிகளைத் தாய்த்தமிழகத்துடன் சேர்க்கவேண்டுமென்று அங்குள்ள தமிழர்கள் கிளர்ச்சி செய்துவருவது யாவரும் அறிந்ததே!

தங்கள் பகுதி தாய்த் தமிழகத்துடன் இணைய வேண்டுமென்று திருவாங்கூர் தமிழர்கள் நடத்திவரும் கிளர்ச்சியினைத் தி. மு. க. ஆதரித்தது மேலும் ஆதரிக்கிறது.

கடந்தமாத இறுதியில், நண்பர் மதியழகன், நான் மற்றும் கழகத் தோழர்கள் சிலரும் அப்பகுதிகளுக்கு நேரில் சென்று நிலைமைகளை அறிந்தோம். அதன் பின்னர் ஆகஸ்டு மாதம் ஆறுந்தேதியன்று நாஞ்சில், செங்கோட்டை ஆகிய இடங்களில் மட்டும் ஒரு நாள் அடையாள மறியல் செய்வதென்று ஏற்பாடு செய்துவிட்டு வந்தோம்,

இதன் பிறகு, சிறையிலிருந்த தோழர் நேசமணி விடுதலையானதும், அவருடன் கலந்துபேசி மேற்கொண்டு எதையும் செய்வதென்றுதான் தி. மு. கழகம் திட்டவட்டமாக முடிவு செய்தது.

இதன்படி ஆகஸ்டு ஆறில், நாஞ்சில் தி. மு. கழகத் தோழர்களால் தி கொ. தமிழர்களின் அறப்போராட்டத்தை ஆதரித்து அடையாள மறியல் நடந்தது, அந்த ஒரு நாள் அடையாள மறியலில் மட்டும் 110 பேர் கலந்து

கொண்டனர். இதில் இருபது பேருக்குமேல் சிறைத்தண்டனை பெற்றுள்ளனர்.

திரு-கொச்சி தமிழர் அறப்போரை முன்னின்று நடத்துகின்ற திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் ஆகஸ்டு 11ந் தேதியை, தி. கொ. தமிழர் விடுதலை தினமாகக் கொண்டாடியது. விடுதலை நாளன்று திரு-கொச்சி தமிழ்ப் பகுதிகளில் முழுவேலை நிறுத்தம் நடைபெற வேண்டுமென்றும் வேண்டுகோள் விடுத்தது.

இந்த விடுதலை தின விழாவில் நாஞ்சில் தி. மு. கழகம் கலந்துகொள்ளவில்லை. காரணம் கூடாது என்பதல்ல! தி. மு. கழத் தலைமை நிலையத்துடன் இதுபற்றித்தொடர்பு கொண்டு, அதன் அனுமதியைப்பெற போதுமான நேரம் இடையில் இல்லாததே காரணமாகும். அதோடு தி. மு. கழகம் ஒருநாள் அடையாள மறியலை மட்டும் செய்து, அதன் பின்னரே, போராட்டத் தலைவருடன் கலந்துபேசிய பின்னர்தான் மேற்கொண்டு எந்தவிதமான நடவடிக்கைகளிலும் ஈடுபடுவது என்று ஏற்கனவே முடிவுசெய்துவிட்டிருந்தது.

திரு-கொச்சி தமிழர் விடுதலைநாள் கொண்டாட்டத்தில் பலவிதப்பட்ட கலவரங்கள் நடந்தது என்பது அனைவருக்கும் ஏற்கனவே தெரிந்ததுதான். அதன் விளைவாக பட்டம்தாணுப்பிள்ளை சர்க்கார் துப்பாக்கிப் பிரயோகம் செய்து அதன் விளைவாகப் பதினொரு தமிழர்கள் மாண்டதாகவும், பலர் படுகொலையுற்றதாகவும் செய்திகள் கிடைத்துள்ளன.

நேரில் அப்பகுதியிலிருந்து வருகின்றதோழர்கள் கூறுவதைக்கேட்டால், அங்கு நடந்த பயங்கர அடக்குமுறைச் கொடுமைகளை அளவிட்டுச் சொல்ல முடியாது என்றே தெரிகிறது.

அன்று நடைபெற்ற கலவரத்தில், போலீஸ் ஜீப்பை யாரோ சிலர் தீயிட்டுக் கொளுத்திவிட்டதாகவும், அதன்

மீதுதான் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய நேரிட்டதென்றும் பட்டம்தாணு சர்க்கார் பேசுகிறார்கள்.

கிளர்ச்சிகள் நடைபெறும்போது இப்படிப்பட்ட சம்பவங்கள் நேரக்கூடும். ஆத்திரங்கொண்ட பொதுமக்களால் ஏற்படுவதைவிட கிளர்ச்சியால் ஏற்படுகின்ற தொல்லைகள்தான் அதிகமாக இருக்கும்.

கிளர்ச்சிகளை அடக்க கபடபுத்தி படைத்த சில சர்க்கார், தாங்களேகூட இப்படிப்பட்ட அழிவு வேலைகளைச் செய்துவிட்டு, அதைக் காரணமாகக்காட்டி மக்கள் போராட்டங்களை ஒடுக்க நினைப்பதும் உண்டு.

இந்த மூன்றுவகைகளில் எந்த வகையில் அங்கு நடந்த கலவரங்கள் நடைபெற்றன என்பது நமக்குத் தெரியாதென்றாலும், பட்டம் தாணு சர்க்கார் நடத்திய அடக்குமுறை வெறியாட்டங்கள் மட்டும் மிகமிக பயங்கரமாக இருந்தன என்பதுமட்டும் நிச்சயமாகத் தெரிகின்றது.

இந்த விடுதலை நாளில் ஒரு சிறிதும் கலந்துகொள்ளாத தி மு. க. கழகத்தவர் மீதும் இந்தக் கலவரத்தைக் காரணமாகக்காட்டி, தி. கொ, சர்க்கார் அடக்குமுறைகளைத் தொடுக்க முனைந்துள்ளனர். நாஞ்சில் தி. மு. கழக அலுவலகத்தையும் திடீரென்று சோதனையிட்டனர்.

பொதுவாக திரு-கொச்சி தமிழர்கள்மீது இன்று கண்மூடித்தனமான அடக்குமுறைகள் நடப்பது மட்டுமல்ல, தனிப்பட்ட முறையிலும் தகாதபடி, தாறுமாறான தாக்குதல்கள் நடைபெறுகிறதாம்.

இதோ இந்த மேடைமீது அமர்ந்திருக்கும் நாஞ்சில் தி. மு. கழகத்தோழர் ஜான் அவர்கள் ஒரு அகதியைப் போல இங்கே வந்துள்ளார். இவர் அங்கேயே இருந்திருந்தால் அவருடைய கதி என்னவாகியிருக்கும் என்றே கூற முடியாது. அவ்வளவு கண்மூடித்தனமான நிலைமை அங்கே இருக்கிறதாம்.

இந்த நிலைமையில் சென்னை முதன் மந்திரி காமராஜர், திருவாங்கூர் பகுதிகளுக்கு நேரில் சென்று, அங்குள்ள நிலையைப் பார்த்து, தமிழர்களுக்குத் தக்க பாதுகாப்பு ஏற்படுத்த வேண்டும். இது அவருடைய நீங்காக் கடமையாகும். காமராஜர் அங்கு நேரில் செல்ல முடியாவிட்டால், அங்கு நடக்கும் அடக்குமுறைகளைக் கண்டித்து ஒரு அறிக்கையாவது வெளியிடவேண்டும். அப்போதுதான் அந்தத் தமிழர்களுக்கு ஏதாவது ஆறுதல் இருக்கும் என்பது மட்டுமல்ல, பாதுகாப்பும் இருக்கும்.

ஏன், நீங்கள் செல்லக்கூடாதா என்றும் சிலர் கேட்கக்கூடும். நாங்கள் சென்ருேம். மேலும் சென்று காரியமாற்ற முடியும். ஆனல் அங்கே நடப்பது நாணயமான சர்க்கார் அல்லவே! தமிழர்கள் மீது மலையாளிகளிடம் பொச்சரிப்பை மூட்டி அதன்மூலம் தங்கள் அடக்குமுறை வெறியாட்டங்களுக்குப் பாதுகாப்பு தேடுகின்றனரே!

வேறு நாட்டில். வெளிநாட்டு அரசாங்கத்தில் அவதிப்படுகின்ற அத்தனை தமிழர்கட்கும், சென்னை அரசாங்கந்தான் பாதுகாப்பளித்துத்திரவேண்டும். மற்ற நாடுகளில் எங்களைப் போன்ற தனிப்பட்டவர் செல்வது அவ்வளவு சரியான பரிகாரமாகாதே!

திருவாங்கூர் போன்ற பகுதிகள், வெள்ளையன் காலத்திலிருந்தே இப்படிப்பட்ட அடக்குமுறைகளில் கைதேர்ந்தவர்களாகும். திருவாங்கூரில் சர். சி. பி. யும், காஷ்மீரத்தில் என். ஜி. அய்யங்காரும் திவான்களாக இருந்தபோது பண்டித நேருவையே தங்கள் சமஸ்தான எல்லைக்குள் வராது தடைசெய்தார்களே!

ஆகவே காமராஜர் தமது அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தி, மற்ற நாட்டுப் பகுதிகளில் வாழ்கின்ற தமிழர்களின் நல்வாழ்வைப் பாதுகாக்க உடனடியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதைப்போலவே இலங்கையிலிருந்து வெளியேற்றப் படும் பல்லாயிரக் கணக்கான தமிழர்களின் எதிர்கால வாழ்க் கையைப் பற்றியும், முதலமைச்சர் காமராஜர் தக்க முன்னேற்பாடுகள் செய்தாகவேண்டும்.

அண்மையில் காமராஜர் இலங்கையிலிருந்து முதன் முதலாக வெளியேற்றப்படும். ஐந்தாயிரம் தமிழர்களைப் பற்றிப் பேசியதாக ஒரு செய்தியைப் பத்திரிகைகளிலே படித்தேன். இலங்கையிலிருந்து முதலில் வெளியேற்றப் படும் தமிழர்கள் ஐந்தாயிரம் பேர்தானே! அவர்கள் ஏதா வது வேலை செய்து பிழைத்துக்கொள்வார்கள் என்று காமராஜர் பேசியதாகத் தெரிகிறது.

காமராஜர் அவ்விதம் பேசியிருந்தால் அது மிகவும் தவறானது என்பது மட்டுமல்ல, மிகவும் பொறுப்பற்ற பேச்சுமாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன்.

சொந்த நாட்டில் சோற்றுக்கு வழியின்றி, வெளிநாடு சென்று கூலிகளாய் வாழ்ந்துவரும் தமிழர்கள், இன்று மீண்டும் தமது தாய்நாட்டிற்கே வாழ வழிபற்றுத் திரும்பு கின்றனர். இந்த நிலைமையில், வாடி, வதங்கி, தேம்பித் திரும்புகின்ற தோழனை அன்புடன் வரவேற்று உபசரிப் பதை விட்டு, எப்படியாவது பிழைத்துக் கொள்வார்கள் என்று பொறுப்பைத் தட்டிக்கழிப்பது நல்லதல்ல!

நாம் நமது வீட்டில் அறுசுவை உண்டி சாப்பிடுகின்ற நேரத்தில் தெருவில் பிச்சைக்காரன், பசியுடன் வாடுகின்ற குரல் கேட்கும்போது, நாம் மகிழ்ச்சியுடன் இருக்க முடி யாதே! நாம் சாப்பிடுகின்ற இனிப்பும் கசக்காதா! அரிசிச் சோறு புழுவைப்போலத் தானே நமது கண்களுக்குத் தோன்றும். இலையில் போடப்படும் காய்கறிகளை ருசித்தா சாப்பிட முடியும். இரக்க மனம் படைத்த எவராலும் முடியாதே!

இதைப்போலத்தான் வாழ வழியின்றி. வயிற்றுக்குச் சோறின்றி, வெளிநாட்டிலிருந்து விரட்டப்படும் தமிழர்களைப் பாதுகாக்க இந்த அரசாங்கம் வழிவகை செய்யாது, தன் போக்கில் செல்வதும் இருக்கும்!

எனவே முதலமைச்சர் காமராஜர் திரு-கொச்சி, சித்தூர், இலங்கை முதலிய இடங்களில் வாழ்கின்ற தமிழர்களின் நல்வாழ்வைப் பற்றித் தக்க நடவடிக்கைகளையெடுத்து ஆவன செய்யவேண்டுமென்று மறுமுறையும் வற்புறுத்திக் கூறுகிறேன். இதற்காக அவர் செய்கின்ற காரியங்களில் தி. மு. கழகத்தின் ஒத்துழைப்பு அவருக்கு நிச்சயமாகக் கிடைக்கும் என்று உறுதி கூறுகிறேன்.

காமராஜர், நேரு போன்றவர்கள் பிரிவினை சக்திகளைப் பற்றிச் சமீபத்தில் ஏதேதோ பேசியதாகப் பத்திரிகைகளில் படித்தேன். இவை யாவும் அரசியலில் அடிக்கடி அவர்கள் பாடிவரும் அரசியல் பாகவதமே தவிர ஒன்றும் புதிதல்ல. இதற்காக நாம் கவலைப்படத் தேவையும் இல்லையே!

மற்றவர்கள் என்னதான் பிரிவினை சக்திகளைக் கண்டித்துப் பேசினாலும், நாம் நமக்குள்ள நியாயமான உரிமையைப் பெறுவதைத் தடுக்கமுடியாது. நமது அடிப்படை இலட்சியமான திராவிடநாட்டுப் பிரிவினையைத் தவறு என்று கூறவோ, அல்லது அதனைத் தடுக்கவோ எவராலும் முடியவே முடியாது.

ஆகவே இந்த மாநாட்டில் கூடியுள்ள அத்தனைதோழர்களும், இங்கே பேசப்பட்ட கருத்துக்களைத் தெளிவுடன் சிந்தித்துப் பார்த்து, திராவிட நாட்டின் எதிர்காலம் ஏற்றமுறுவதற்கான வழிவகைகளில் புதிய உற்சாகத்துடன் ஈடுபடும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

நாம் நமது இலட்சியத்தையடைய மகத்தான தொண்டு செய்தாகவேண்டும். அதற்கான ஆக்க வேலைகளில் முழு மூச்சுடன் இறங்கியாக வேண்டும். நமது மக்கள் அனைவரிடத்தும், திராவிட இன உணர்வையூட்டி, எழுச்சியை

ஏற்படுத்தி, விழிப்புடன் விடுதலைப் போராட்டத்தில் கலந்துகொள்ளத் தயார்செய்ய வேண்டுகிறேன்.

ஜோதி

★

[மதுரை மன்னன் திருமலையின் மாய மரணம்பற்றிய குறிப்புகளைக்கொண்டு சித்தரிக்கப்படும் ஓவியம் இது. இட்டுக்காட்டியதோ என்று ஐயப்படுவோருக்கு. எம்.எஸ்.சுப்ரமணிய ஐயர் தீட்டிய 'கன்னியர் வீரம்' என்ற சிறு நூலில் பட்டர் புதல்வி என்னும் சிறு கதையைப் பார்க்கும்படி கேட்டுக்கொள்கிறோம்!]

மதுரை மீனுட்சி அம்மன் கோவில் பிரதம பட்டாச்சாரியின் திருமகள் நான். பெயர் சுந்தரவல்லி. இளமங்கை—எழில் மிக்கவள்—பூங்கொடி—ஊர் புகழ்கிறது என்னை இதோ என் எதிரில் இருப்பது விஷக்கோப்பை, தங்கக் கோப்பை, மன்னர் முன்பு தந்த பரிசு இது—அப்பாவுக்கு! எனக்கும் பரிசு தந்திருக்கிருன், விஷம்!

''குழந்தை விக்ரஹம் போலிருக்கிறது! பாப்பா!! வாம்மா, வா! ஏன் பயம்? ஓடிவா, ஓடிவா! இதோபார். உனக்குத்தான் மல்லிகை—வா! நான் சிறுமி, பட்டாச்சாரி மகள்—அவர்!—நாடாளும் மன்னன், அவருடைய அன்பு மொழி எனக்குத் தேனுக இனித்தது. அப்பா பூரித்துப் போவார். என்னைப் பிடித்திழுத்துக் கொண்டுபோய் மன்னன் முன் நிறுத்துவார். அவர் என் முகவாய்க் கட்டையைப் பிடித்துத் தூக்குவார். கன்னத்தைக் கிள்ளுவார், துவள்வேன், தூக்கி உட்கார வைத்துக்கொள்வார், மடியிலே! ஊரார் சுந்தரவல்லி மஹா அதிர்ஷ்டக்காரி! மகாராஜாவுக்கு அவள் மீது உயிர்—என்பார்கள். பலநாள் எனக்கு பழமும், பட்சணமும், மல்லியும் முல்லையும் கொண்டு வந்து தருவார். ராஜ காரியங்கள் ஏராளம் என்ருலும், என்னைப் பார்க்கவும், விளையாடவும், எப்படியோ

அவருக்கு நேரம் கிடைத்தது. சிறுமிதானே நான்—எனக்கு ஒரே பெருமை! என்னைப்போன்ற சிறுமிகளைப் பார்க்கும் போது, பெருமையாகச் சொல்வேன். உங்க ஆத்துக்கு ராஜா வர்ராரோ? எங்காத்துக்கு ராஜா வர்ரார்—என்னோடு வேடிக்கையாகப் பேசிக்கொண்டிருப்பார், என்மேலே பிராணன். மஹாராஜாவுக்கு—என்றெல்லாம் சிறுமிகளே குறும்புக்காரிகள் கேலி பேசும்—சுந்தரியோட கண் இருக்கே. அது இராஜாவை மயக்கிவிட்டிருக்கும் என்று ஒருத்தி சொல்வாள். கோடி ஆத்து கோமளம், ''சுந்தரி சிரிக்கிறப்போ கன்னத்தில் குழி விழறது பாரடி'' என்பாள். ''சுந்தரியோட கலியாணத்துக்கு ராஜா நிறைய சன்மானம் செய்வார்'' என்று எல்லோரும் பேசிக்கொண்டனர்......!

இந்தத் தென்றலால் நான் வளர்க்கப்பட்டேன்—பருவ மங்கையுமானேன்! மன்னன் எப்போதுப் போலவே வந்து கொண்டிருந்தார்—'சுந்தரி—சுந்தரி!' என்று கனிவுடன் கூப்பிடுவார். நான் நமஸ்காரம் செய்துவிட்டு, உள்ளே போய்விடுவேன்—அப்பாவும் அவரும் பேசுவார்கள்—நான் வீட்டு வேலைகளைச் செய்துகொண்டே இருப்பேன், சிறுமியாக இருந்தபோது இருந்தபடி இப்போது முடியுமா?—அடே அப்பா. அப்போது வேடிக்கைதானே! அதை எண்ணிக்கொள்வேன் புன்சிரிப்புடன். போகும்போது ஒரு முறை நமஸ்காரம் செய்வேன். அவர் மட்டும் அடிக்கடி சுந்தரி, சுந்தரி என்று கூப்பிட்டபடி இருப்பார்......!

அப்பாவிடம் எனக்கு பிரமாதமான கோபம் பிறந்தது. அரசர்மீது குற்றம் கண்டுபிடிக்கத்தொடங்கினர் யாராரோ அப்பாவின் மனதைக் கெடுத்தனர்—இருவரும் பிறகு பலருடைய மனதைக் கெடுக்கலானர். மன்னர் எங்கள் நாட்டுக்கு வந்து கிறிஸ்தவப் பாதிரிகளுடன் கூடிக் குலவுகிறார் என்பதுதான் புகார். இதிலே என்ன தவறோ தெரியவில்லை! கிறிஸ்தவப் பாதிரிகள் என்றால் என்ன? அவர்களும் மனிதர்கள்தானே? ஏன் அப்பாவுக்கும் மற்றும் சிலருக்கும் அருவருப்பு— நான் கேட்டே விட்டேன் அப்பாவை—

அவர், ''பைத்தியம்! உனக்கென்னடி தெரியும் நம்ம புராதன மதத்துக்'த வைரிகள் இந்தக் கிறிஸ்தவர். நம்ம மதத்திலே உள்ளவாளை ஏழை எளியவர்களையும், விவரம் அறியாதவர்களையும் பிடித்து, கிறிஸ்தவ மதத்திலே சேர்த்துக் கொள்ளுகிறார். இந்த அக்கிரமத்தை ராஜன் அனுமதிக்கிறான். இவனே கிறிஸ்தவனாகிவிடுவானோன்னு நேக்கு பயமாயிருக்கு—ஊர் முழுவதும் இதைப்போலத்தான் பேசிக்கொள்ரா''—என்று சொன்னார். இவ்வளவுதானா! தங்கக் குன்றப்பா மகாராஜா! அவரைச் சந்தேகிப்பது மகாதோஷம் என்று நான் வாதாடி வந்தேன்.

ஒருநாள் அப்பா வெளியே போயிருந்தார்—அவர் வந்தார். நமஸ்காரம் செய்யவேண்டுமே—ஊராளும் ராஜா வந்திருக்கிறார். உட்காருங்கள் என்று நான் சொல்லி உட்கார்ந்தார். நான் அவர் கண்களில் பட்டும் படாததுமாக நின்றுகொண்டிருந்தேன்.........!

''அப்பா இல்லையோ?—சரி வருவார்;. சீக்கிரம்'' என்று சொல்லியபடி, மன்னர் நான் இருந்த பக்கம் கவனித்தார்—என்னையுமறியாமல், கூச்சம் தலைகுனிந்தபடி நின்றேன். 'ஏன் கூச்சமோ? சிறு பெண்ணாக இருக்கும்போது எவ்வளவு விளையாடுவாய்? மான்குட்டிபோல! நான் என்ன புது மனிதனா? என்னைக்கண்டு. ஏன் இவ்வளவு வெட்கம்?'' என்று கேட்டார்,

நியாயந்தான்! ஆனால் இந்த பாழாபோன வெட்கம்! உன்னைப் பிடித்து உலுக்கிவிட்டது. 'கொஞ்சம் ஜலம்' கேட்டார். ஓடினேன். உள்ளே வெள்ளிச் செம்பிலே வெட்டிவேர் தண்ணீர் நிரப்பி, ஊஞ்சலருகே கொண்டு சென்றேன்—அதை வாங்கும்போது, அவர் கரம், என் கரத்தின்மீது படுவதுபோலிருந்தது—ஊஞ்சலின் மீது செம்பை வைத்துவிட்டு' விலகி நின்றேன். புன்னகையுடன் அவர் அடேஅப்பா! எவ்வளவு ஜாக்கிரதை! நான் என்ன பூதமா, பிசாசா? என்றார். நான் என்ன பதில் சொல்வது? —புன்னகை புரிந்தேன். அப்பா வந்தார். எனக்கு அப்

போதுதான் மன அதிர்ச்சி மறைந்தது—பிறகு அவர்கள் பேசிக்கொண்டிருந்தனர்......!

அப்பா இல்லாத வேளையில் இதுபோல அவர் வருகிற போதெல்லாம் எனக்குப் பெரிய மன நெருக்கடியாகவே இருந்து வந்தது. வேண்டுமென்றே அப்பா இல்லாத நேர மாகப் பார்த்து வருகிருரா, தெரியவில்லையே, என்று சந்தேகம் கிளம்பிற்று—இலேசாகத் திகிலும் பிறந்தது. ஏனென்ருல், மகா உத்தமர். தர்மிஷ்டர் என்ருலும், மன்னருக்கும் மாதர்களிடம் மையல் அதிகம் என அப்பாவும் மற்றவர்களும் பேகிக்கொண்டது எனக்குத் தெரியும். முன்னூறு அழகிகள் இருக்கிருர்கள். அந்தப்புரத்தில் என்று சொன்ஞர்கள். நானே பருவ மங்கை! அவரோ அடிக்கடி நான் தனியாக இருக்கும்போது வருகிருர். அன்னியராக இருந்தால் அப்பா இல்லை, என்று ஒரே வார்த்தையில் அனுப்பி விடுவேன். அரசர்! குழந்தைப் பருவமுதல் விளையாடிய பழக்கம்! எப்படி அலட்சியப்படுத்த முடியும்? ஆனுல்...! என் அடி வயிற்றிலே அடிக்கடி இந்த 'ஆனுல்' கிளம்பும். ஆனுல் மறுகணம் சேச்சே! என் அப்பாவுக்குச் சமாதானம்—என்ற எண்ணம் தோன்றி, சாந்தி உண்டாகும்......!

என்ன அவசரமாகத்தான் இருக்கட்டும். இப்படி வெள்ளிச் செம்பை நானுகத் தருவதற்குள் அவர், என் கரத்தைத் தொடுவதா—நான் கொஞ்சம் முகத்தைச் சுழித்துக் கொண்டேன், அவர் சேச்சே! இதென்ன இவ்வளவு பயம்! பைத்தியம்! உன் அப்பா, ஜெபதபாதிகளை முடித்துக்கொண்டு வீடுவர வெகு நேரமாகும் என்ருர்''—என் மனம் பதறிவிட்டது, விலகினேன்—விடவில்லை—கரத்தை உதறித் தள்ளினேன். கருத்து புரிந்து விட்டது. அவரோ... என்ன சொல்வேன்—அணைத்துக்கொண்டார்—பிறகு—கூவுவேன் என்று மிரட்டினேன். கோமளமே என்று கொஞ்சலானுர்—இதென்ன அக்ரமம் என்றேன், அவர் காதல் பேசலானுர். என்மீது கோபித்து என்ன பயன் கண்ணே! தேவ

ரும் மூவரும் கூட மதிமயங்கக்கூடிய அழகை உனக்குத் தந்த அவன்மீது கோபித்துக்கொள். அல்லது உன் அழகைக் காண எனக்குக்கண்ணளித்தகடவுளின்மீது கோபித்துக்கொள். நான் மன்னன், ஆனால் மனிதன்! முனிவனுமல்ல! மோகனாங்கி!—என்றார்—அரசர் பேசும் பாஷையா இது—என் உடல் துடித்தது—நான் துணிந்து அவரைக் கண்டித்தாக வேண்டும்—விலகினேன்—விழியிலே நீர் தளும்பிற்று...!

"இந்த அக்ரமம் ஆகாது—அரசரின் புத்தி இப்படி அழியக்கூடாது" என்று சொன்னேன், கோபமாகத்தான், ஆனால் உரத்த குரலில் அல்ல—வெளியே தெரியக்கூடாதே! பதில் பேச வாயில்லை—ஆனால் என்னைவிடவில்லை. உன்னிடம் பிச்சை..." என்று கெஞ்சினார்...இந்தத் துர்ப்பாக்கியனைச் சாகடிக்காதே என்றார் சரசமாக, எனக்கும் கோபம் ஏசினேன், 'என்மீது என்ன கோபம்—தவறு சுந்தரி, கரும்பு வில்லோன் என்னைக்கொல்கிறான்' என்று கூறினார். ஆத்திரம் எனக்கு, கரும்பு வில்லோன் இப்படித்தான் கதியற்ற கன்னியைக் கற்பழிக்கச் சொல்கிறானா! கபடத்துக்கு கவசமிடாதீர் காவலரே! விநாசத்தைக் தேடிகொள்ளாதீர், அழிந்து போவீர்-நிச்சயமாக 'சத்தியமாக என்று கூறினேன். அழுதபடி பயம் போய்விட்டது, கோபம் அதிகரித்தது. ஓடிவந்து என்னைப் பிடித்திழுத்தபடி, 'அழிவேனா! நானா? உன்னைப் பெறாவிட்டால்தான் பேரழகி நான் அழிவேன்—பெற்றால் பெரு வாழ்வு புது வாழ்வு. இருவருக்கும் என்றார். வெறுப்பு எனக்கு—அவர் பிடியிலிருந்து விடுபடக்கூட முயற்கிக்கவில்லை-வாழ்வு! எனக்கு! கற்பிழந்த பிறகு என்று சொன்னேன்! என் கூந்தலைக் கோதியபடியே அவர். "கற்பு! யார் வேண்டாமென்பர் அந்தப் பூஷணத்தை—என்னைக் கணவனாகக் கொள்—பதி சொல் தவறாத உத்தமியாக வாழ உன்னை அழைக்கிறேன். வெறும் உல்லாசத்துக்கு அல்ல "என்றார். ஒரு கணம் திகைத்துப் போனேன். என்ன சொல்வது என்று தெரியா

மல்! கெடாதாமே! திருமணம் செய்துக்கொள்ளச் சொல்கிருரே என்று யோசித்தேன். வார்த்தைகள் வெளிவரத் தாமதமாயின-அவருடைய சேட்டைகளோ துரிதமாயின!

"அரசே! குலம் அறியாது பேசுகிறீர்" என்றேன். அணைப்பிலிருந்து என்னை விடுவித்துக்கொண்டபடி அழகு அறிந்து நாடுகிறேன் சுந்தரி! அவ்வளவுதான் எனக்குத் தெரியும் பேச என்ருர். அவருடைய போக்கை மேலும் பேச எண்ணி, அழகு கண்டு அகலியிடம் மோகம் கொண்ட இந்திரன் என்ன கதியானுன், தெரியுமா உமக்கு. என்றேன். அவர் என் வாயை அடைக்கும் விதமாக உனக்கு ஒரு கௌதமன் இல்லையே சுந்தரி! அதை மறந்து பேசுகிருயே என்ருர். ஆமாம் நான் கன்னி! அவரோ கலியாணம் செய்துகொள்ள அழைக்கிருர். ஒரு வேளை, என்னை மனைவியாகக் கொள்ளத்தான் விரும்புகிருரோ, என்றெல்லாம் எண்ணம் பிறந்தது. ஆனுல் இதை அவர் அப்பாவிடமல்லவா கூறவேண்டும். இப்படி என்னைத் தனியாகச் சந்தித்தா......முறை வேண்டாமா எதற்கும்! கோபம்குறைந்தது. பரிதாபமாக இருந்தது. எனவே, நான் என் தந்தை ஆதீனம், என்று கூறி என் நிலைமையை விளக்கினேன். அவர் கொஞ்சும் மொழியில் நீ உன் தந்தை ஆதீனம் அவரோ சாஸ்திர ஆதீனம் சாஸ்திரமோ பிரம்மகுல மங்கையை க்ஷத்திரியன் மணம் செய்துகொள்ள இடந்தராது—என்ன செய்வது என்று கேட்டார். எனக்கு அவருடைய வாதம்கூட சிறிது மகிழ்ச்சி தந்தது. ஆனுல் அவருடைய செய்கை—எனக்குக் கோபமூட்டியது. கடுமையாகவே "என்ன செய்வது—மனதை அடக்குவது—தர்மத்துக்குக் கட்டுப்படுவது—பாப தோஷத்துக்குப் பயந்து, நடந்து கொள்வது" என்று சொன்னேன், நான் சொல்லச்சொல்ல அவர் என்னை நெருங்கி, ஏட்டுச் சுரை எல்லாம் ஏட்டுச் சுரையடி எழிலரசி என்று கூறிவிட்டு, கட்டிப்பிடித்தார்—காட்டு முறை இது-வேண்டாம் என்று கூறியபடி விலகினேன்-சுவற்றிலேகூட மோதிக்கொண்டேன்-மேலேபோக

இடமில்லை. அவர் விடவும் இல்லை—ஐயோ என்று அலறி னேன்! ஆஹா என்று புகழ்ந்தார்!—இதழை இதழ் தொட் டது. துடித்தேன்—அடபாவி! என்று சபித்தேன். என் அன்பே—என்று—சரச மொழி பேசிவிட்டு...! அக்ரமம் என்று கூறியபடி என் பலம்கொண்ட மட்டும் பிடித்துத் தள்ளினேன். ஆனல் நான்தான் கால் இடறிக் கீழே விழுந் தேன்—அழிந்தேன். நான் அழுத கண்ணைத் துடைத்தபடி பாவி! பாதகா! என்று ஏசினேன். அமிர்தம் தேவாமிர்தம்! —என்று அந்த பாபி பஜனை பாடிக்கொண்டிருந்தான். உள்ளே சென்று, படுக்கையில் புரண்டு புரண்டு அழுதேன். சுந்தரீ—சுந்தரீ—சுந்தரீ என்று வேறு விதமாகக் கூறினர்— காலால் எட்டி உதைத்தேன் கதவை. உரத்த குரலில் சிரித்துவிட்டு, வெளியே போய்விட்டார் இரத்தம் குடித்த நரிபோல! நான் நானு? நாசப்படுகுழியிலே தள்ளப்பட்ட நான் என்ன செய்வது-நான் யார் இனி? மதுரை மீனுட்சி அம்மன் கோயில் பிரதம பட்டாச்சாரியின் மகள் சுந்தர வல்லி. மன்னனின் காமப்பசிக்கு பலியாக்கப்பட்டுவிட்ட பாபியானுள்! என்ன செய்வது! ராஜசர்ப்பம் தீண்டிவிட் டது துடைக்கமுடியாத கறை படிந்துவிட்டது. அரசன் சாமான்யன்—சகலகலா வல்லவன், சாமான்யன். நல்லவன் கெட்டவன்—என்று ஆடவர்களை எப்படி வேண்டு மானுலும், நிலையையும் குணத்தையும் கோண்டு பிரித்துக் காட்டலாம். ஆனுல் பெண்கள் விஷயத்திலோ ஆடவர்கள் கொள்ளும் போக்கைக் கவனித்தாலோ சேச்சே! எல்லா ஆடவரும் ஒரே தாரமாகத்தான் இருக்கிருர்கள். இந்த அர சன்; நான் பந்து ஆடுவதைக் கண்டு மகிழ்ந்தவன்தான். "பாப்பா, பாப்பா" என்று கூப்பிட்டவன்தான். இப் போது காமப்பசி பிடித்து என்னை நாசம் செய்து விட் டான்—நிலமையை அறிந்து இனி என் கதி......!

மறுமுறை அந்த மாபாவியின் முகத்தை ஏறெடுத்தும் பார்க்கலாகாது என்று தீர்மானித்தேன். அப்பா வருவதற் குள் என் அலங்கோலமான நிலையை திருத்திக்கொண்டேன்.

தலைவலி அதனால்தான். முகத்திலே மாறுதல் என்று தந்திரம் பேசினேன், அப்பா மீனாட்சி கோயிலிலே வந்திருந்த பக்தர்களின் பெருமையைப்பற்றி பேசிக்கொண்டே பிரசாத வகைகளை வைத்தார்-அம்பிகே! என்னை இந்த கதிக்கு உள்ளாக்கினாயே—என்று எண்ணி ஏங்கினேன். அப்பா, வேதாந்த விவகாரத்தில் ஈடுபட்டார்-வேதனையில் நான் மூழ்கிக் கிடந்தேன். வேட்டைக்காரன் அரண்மனையில் 'தர்பார்' நடத்தியிருப்பான்! ஊரார்? அவர்களுக்கென்ன!

மறுபடியும் புலி வந்தது! நான் என் கோபத்தையும் வெறுப்பையும் வெளிப்படையாகக் காட்டினால், அப்பா இல்லாத சமயங்களிலேயோ, அப்பா! அரசனாகவா இருந்தான். சித்ரவதை செய்தான், செந்தேனே என்று அவன் கொஞ்சுவது கருந்தேள் கொட்டுவது போலிருந்தது. சரி, இனி, நிலைமையை வேறு விதமாகவாகிலும் சரிபடுத்திக் கொண்டாக வேண்டும் என்று எண்ணி, திருமணப் பேச்சைத் துவக்கினேன்—அதற்குத் தடை ஏது என்றான்—அந்த ஏற்பாட்டை துரிதப்படுத்தச் சொன்னேன். அவன் அதற்காகவே 'அச்சாரம்' பெற்ற வண்ணம் இருந்த நான் உரிமையோடு பெறலானேன் நான் என்ன செய்வேன், இனிப்புப் பண்டம் கசக்கலாயிற்று, பால் புளித்தது! பசி குறைந்தது! பாதகன் எனக்குப் 'பரிசு' தந்துவிட்டான்; நான் கருவுற்றேன்—அவன் சொல்லத்தான் அதையும் அறிந்துகொண்டேன், பயத்தால் முகம் வெளுத்தது. அப்பா இதைக் கண்டுகொண்டார், "ஒன்றுமில்லை" என்ற பதில் எத்தனை நாளைக்குப் பலன் அளிக்கும் உண்மையைக் கூற வேண்டியதாயிற்று!

"சுந்தரி! ஏன் முகம் சோபிதமிழந்து கிடக்கிறது? கசங்கிய தாமரை போலாகி இருக்க என்னம்மா காரணம்?

"ஒன்றுமில்லையப்பா"

"என்னம்மா ஒன்றுமில்லை? தேகம் காந்தி மயங்கிக் காட்டுகிறது. விழி சதா ஏதோ மிரட்சி தூங்குவதில்லை சரியா, மனதிலே உனக்கென்னம்மா விசாரம்"

"அப்பா என்னை வேதனைக்காளாக்காதீர்கள்..."

"பைத்தியமே! காரணம் கூருமல் கலங்கி நிற்கிறயே ......கண்களிலே...நீர்...என்னம்மா!

"அப்பா நான் ஒரு பாபி!"

"பாபியா? பைத்தியமே! பித்தமா உனக்கு?"

"பித்தனின் காமப் பசிக்கு இரையான பேதையப்பா, நான் படு—குழியில் தள்ளப்பட்டேன்—பாவியால்—"

"காமப் பசி பலி! படுகுழி! என்னம்மா, பிதற்று கிருய்!"

"ஐயோ, அப்பா, நான் எப்படிக்கூறுவேன்...என்னை —மன்னன் எவ்வளவோ தடுத்தும் பலாத்காரமாக"

"சிவ, சிவ! என்ன பாபம் என்ன கர்மம் இது! திருமலையா இத்தீய செயல் செய்தான்! அழியாத அபகீர்த்தியை உண்டாக்கி விட்டான்...என் குலக் கொழுந்தைக் கெடுத்தானு! மகளைக் கெடுத்தானு மாபாபி—அடே பாதகா! வஞ்சகா என் குடும்பத்தைக் கெடுத்தாயே? மகளே பேதைப் பெண்ணே! எப்படி இடங்கொடுத்தாய்; உன் கையில் ஒரு கத்தி கிடைக்கவில்லையா? அவனைக் கொல்ல உன்னுல் முடியாவிட்டாலும் நீ செத்திருக்கலாமே! என்னிடம் ஒரு வார்த்தை சொல்லியிருந்தால்—என் குலப் பெருமை, குடும்பப் பெருமை எல்லாம் போயிற்று. எப்படி தேவி இந்தத் தீய காரியம் நடைபெற அனுமதித்தாய்? உன்னைத் தொழுதுவரும் எனக்கா இந்த அபகீர்த்தி. என் மகள். விபச்சாரி—கற்பிழந்தவள்..."

"அப்பா அந்தக் கபடன், என்னைக் கலியாணம் செய்து கொள்ளவும் சம்மதம் என்று பேசுகிருன்"

"உரக்கப் பேசாதடி" புத்தி யுக்தியற்ற பேதையே! கலியாணமாம்-ஜாதி' ஆசாரம்-சாஸ்திரம்-எல்லாம் என்ன ஆவது?—

"இப்போது, எல்லாம் நாசமாகித்தான் போயிற்று"

'திருமலை! உன்னைப் பழிவாங்காதிருக்கப் போவ

தில்லை?—நாடாளும் உன்னை நான் நாசமாக்காவிட்டால், என் பெயர் சந்திரசேகர பட்டர் அல்ல. மமதைகொண்டு வேதியர் குலம் என்றும் பாராமல், உன் நண்பன் என்றும் யோசிக்காமல், தேவி மீனுட்சி கோயில் திருப்பணி செய்யும் பட்டர் என்பதையும் பார்க்காமல், என் மகளைக் கெடுத்தாய். உன்னை நான் பழிவாங்காவண்ணம், ஊண் உரக்கம் கொள்ளேன் —இது சத்தியம் —தேவிமீதாணை—உன்னைத் தொலைத்துவிட்டு மறு காரியம் பார்க்கிறேன்.

தேவி கோயிலுக்கு வா, தெளிவற்ற பெண்ணே! ஆலயம் வா! பக்தர்களை அழைக்கிறேன். உன்னை மன்னன் கெடுத்த பாபக்கிருத்திய தீதை எடுத்துக் கூறி, பாபிக்கு என்ன தண்டனை என்று கேட்கிறேன், கற்பழிக்கும் காதகனையா, காவலனுகக் கொள்கிறீர்? என்று கேட்கிறேன்... கல்மனம் கொண்டவனும் கண்ணீர் விடாமலிருக்க முடியாதே; கல்லால் அடித்துக் கொல்வர் ''காவலனுக உள்ள காதகனை!''

''சொல்லடியை நாம் தாங்கவேண்டுமே! ஊர் மக்கள் இழித்தும் பழித்தும் பேசுவாரே...''

''ஆமாம் அதைக் கேட்டுச் சகிக்க முடியாதே...ஆத்திரப்பட்டு பயன் இல்லை! ஆனல் என் அடி வயிற்றில் நெருப்பைக் கொட்டிய அக்கிரமக்காரனைச் சும்மா விடுவது இல்லை—ஆமாம் என்னம்மா, என் ஐயா, அப்பா...என்ன''

''வலியா?''

''பாப மூட்டையைச் சுமக்கிறேன்''.

''பரமேஸ்வரா! ஏனேடாப்பா இந்தச் சோதனை? நான் செய்த பாவம் என்னவோ! தேவி! தேவி!

இதற்கு மேல் தந்தையும் மகளும் என்ன பேச முடியும்?

அவர் தலை தலையென்று அடித்துக்கொண்டு அழுதார். நான் என்ன கூறிச் சமாதானப்படுத்துவேன்?

நான் துணிந்துவிட்டேன்—இனி நான் வாழமுடியாதவன்—என் கற்பைக் காப்பாற்றிக்கொள்ள முடியாமல்

போய்விட்டது. ஆனால் என் உயிரைப் போக்கிக்கொள்ளவா முடியாது!

மானம் போயிற்று. பறித்தவனே மன்னன்! மணம் செய்துகொள். என்று வற்புறுத்தலாம். மக்களிடம் முறையிடலாம். அந்தப்புரத்தில் போய்ச் சேரலாம். ஆனால் அப்பாவோ சாஸ்திர விரோதம் என்றார். ஆகவே நான் இனி பிழைத்திருக்க முடியாது. செத்தாக வேண்டும். குடும்பத்துக்கு இழிவைத் தராதிருக்க வேண்டுமானால், சாகத்தான் வேண்டும்.

அப்பாவிடம் வாதாடினேன்—திருமணத்துக்கு, மன்னன் எப்படியும் ஒப்புக்கொள்வாரப்பா, என்று கெஞ்சினேன்—அவர் வெந்த புண்ணிலே வேலைச் சொருகாதேடி என்று கொக்கரித்தார். பெண்ணின் வாழ்வு பெரிதா, சாஸ்திர சம்பிரதாயம் பெரிதா என்று கேட்கத் துடித்தேன். நான் அழுகிய பழம், அப்பாவுக்கு அந்த நாற்றம் குறையும்போது நான் 'வாதாடுவது' வேதனையாகத்தானே இருக்கும், ஆகவே சாவு தவிர வேறு மார்க்கம் இல்லை. ஆமாம் நான் சாகத்தான் வேண்டும். விஷம்! சாவு!! வேறு வழியில்லை!

(சந்திரசேகர பட்டர்)

என் மகள் மாண்டுபோனாள்—அந்த இரகசியமும் அவளோடு. மண்ணோடு மண்ணாகப் புதைந்து போய்விட்டது.

ஆனால் என் மனம்! நான் கோயில் அர்ச்சகன். என் மூலம்தான் எண்ணற்றவர்கள் தேவியின் அருளைப் பெறுகிறார்கள்.

தேவி எனக்கு அளித்தது?...ஊரெல்லாம் தான் புகழ்ந்தது...? சுந்தரியின் அழகை! மன்னன் காட்டிய பரிவு. பலருக்கு பொறாமைத்தீயைக்கூட மூட்டிவிட்டது. அந்தப் பாவி என் மகளைக் கொன்றான், மாரடைப்பு-ஊராருக்குக் கூறினேன். ஆனால் என் உள்ளம் அறியுமே! விஷமருந்திச் செத்தாள் என் மகள்! பாதகன் என்ன காரியம் செய்து

விட்டான்! சபலம், ஆமாம் நடந்தது நடந்துவிட்டது. என்னையுமறியாமல் நேரிட்டுவிட்டது. அவள் அழகு என் அறிவை அழித்துவிட்டது. அந்தணரே! இனி அதுபற்றிப் பேசிப் பயனில்லை. நிலைமையை, நெஞ்சிலே கபடமின்றிக் கூறிவிட்டேன். நீர் மதியூகி! வேறென்ன சொல்ல—அவ் வளவுதான்—இப்படிப் பேசினான். என் மகளை இரை கொண்ட காமாந்தகாரன்,

அவளைத் திருமணம் செய்து கொள்வானும், கைவிட மாட்டானும்—வேறு ஏதாகிலும் ஏற்பாடு செய்ய வேண்டு மென்றாலும் தயாராம்! இந்த மண்டலத்திலேயும், எந்த மண்டலத்திலேயும். எனக்குப் பெரும் பழியைத் தேடிக் கொள்வதா! எப்படி சம்மதிக்க முடியும் திருமணத்துக்கு.

சுந்தரி திருமணம், திருமணம் என்று வாதாடினாள். அவளுக்கு என்ன தெரியும் சாஸ்திர சம்பிரதாய மகிமையும் மேன்மையும், வேதியர் குலம் முழுவதும் என்னை வெறுக் கும் கண்டிக்கும், சபிக்கும், இதை எண்ணித்தானே. திரு மணம் கூடாது என்றேன். ஒரு வேளை, சுந்தரியைத் திரு மணம் செய்துகொண்டு சுகமான வாழ்வளித்து இருக்கக் கூடும் மன்னன்! தங்கபல்லக்கிலே செல்லும் அந்தஸ்து கிடைத்திருக்கும் மகளுக்கு.

ஆனால் நான்? சண்டாளன் என்றல்லவா தள்ளப்பட் டிருப்பேன். கேவலமாகத்தானே கருதியிருப்பார்! இதற்கா கத்தான், மன்னனை சதாசர்வகாலம்வீட்டிற்கு வரவழைத்த படி இருந்தான் போலும் என்று இழிமொழி பேசு வர்! ஏற்கனவே-ஏதோ ஓர் விதமான வதந்தி பரவித்தான் வம்பளந்தார்கள் விஷமக்காரர்கள். அன்று கைலாசநாத பட்டரும் கனகசபேசபட்டரும் பேசியது ஒரு தினுசாக இருந்தது ஏன் அவ்விதம் பேசினார்கள் என்பது பிறகல்ல வா புரிந்தது. பித்துக்குளிகள் ஏதோ பிதற்றுகிறார்கள் என்று நானே ஏமாளி எண்ணிக்கொண்டிருந்தேன். அப் போது...!

''சௌக்கியந்தானே. ஸ்வாமிகளே!''

''இருக்கிறேன்—ஏன்...''

''கேட்டேன் ஸ்வாமி! லோகாசாரபடி...!

''சந்தோஷம்...வரட்டுமா''

''ஆஹா! நான் தடைசெய்வதை க்ஷமிக்கணும்-ராஜா இன்னேரம் தங்கள் தரிசனத்துக்காக தவித்துக் கொண்டிருப்பார்—போய்வாரும்''

''ஓய்! நீர், பேசுகிறதை கவனிச்சா, ஏதோ என்னை கேலி செய்கிறமாதிரியாகத் தோன்றுதே என்ன விஷயம்...

''உம்......''

''ஓய் ஏன் பெருமூச்சு விடறேள்...''

''பட்டாச்சாரியாருக்கு என்னங்காணும்குறை! ராஜன் அவர் வீட்டுவாசலலே காத்திண்டிருக்கான் சதாகாலமும்''

''வேதவேதாந்தத்தின் இரகசியத்தை அறிந்துகொள்ள வேண்டுமென்ற நோக்க...

''ஆமாம் தேவரும் மூவரும் கூடத்தானே அந்த இரகசியத்துக்காக...''

''படாதபாடு பட்டிருந்தாளேன்னோ...''

''அட ஏன் ஓய்! சும்மா சுத்தி வளைச்சி பேசிண்டிருக்கேள்—வேதமாம்—வேதாந்தமாம்—இரகசியமாம்?''

ஓய்! நீர் ஏன் இவ்வளவு கோபிக்கிறீர்?''

ஒன்றுமில்லே ஸ்வாமிகளே!-புறப்படும், புறப்படும்... ராஜா கோபிக்கப் போகிறார்...''

''கோபிக்கமாட்டார் ஓய்! பட்டாச்சாரியார். ஆத்துக்குப் போகிறபோது வழியிலே பேசிண்டிருந்தேனே. தாமதமாச்சின்னு தெரிஞ்சா உமக்கு ராஜா சன்மானம் செய்வார் ஓய்! பிரதிதினமும், இந்தக் கைங்கரியத்தைச் செய்திண்டிரும்னுகூடச் சொல்வார்''

''ஓய் என்ன இது—குறும்பு-போக்கிரித்தனம்-என்ன பேசறேள்-ஏதோ பூடமாக இருக்கு''

ஒன்றுமில்லை ஸ்வாமி! இவன் ஒரு வயத்தெரிச்சல் பிடித்த ஆசாமியேன்னே?......உமக்கு 'ராஜ கிருபை' கிடைத்திருப்பதாலே பொருமை கொண்டு பேசுருன்'!

''ராஜக்கிருபை, பட்டாச்சாரி ஸ்வாமிகளோட ஜாதகப்பலன் அல்ல. குமாரி சுந்தரியின் ஜாதகப்பலன் தந்ததாக்கும் இந்தக் கிருபை''

இப்படி எல்லாம் பேசினுளே, பட்டர் கூட்டம். அதை எல்லாம் எண்ணிக்கொண்டா என் மனம் படுகிற பாடு. அட அடா! சர்வேஸ்வரா! மகளை இழந்தேன்—செல்லத்தை இழந்தேன். மானம் போகாதிருப்பதற்குக் காரணம், விஷயத்தை வெளியே பேசாமல் 'நம்மவா' இருப்பதாலேதான்—அவள் மாண்டு போனதும் ஒரு விதத்திலே நல்லதுதான்...இருந்தால் என்ன நிலை ஆகும். மீனுட்சி கோயில் பட்டருக்கு, மகள் மாரடைப்பால் இறந்து விட்டதாலே மனக்கவலை என்று பேசுகிருர்கள். அவனே! நடந்தது நடந்து விட்டது! நாடாள்பவனல்லவா...தைரியமாக ...அலட்சியமாக...ஆணவமாகக் கூறுகிருன், நடந்தது நடந்துவிட்டது இனி நடக்கவேண்டியது ஒன்றுமேஇல்லை. என்பது அவன் நினைப்பு...யார் என்ன செய்ய முடியும் என்ற அகம்பாவம்...ஆமாம் நம்மால் என்ன செய்ய முடிந்தது...இதுவரையில் அவனைக் காணும்போது கடுங்கோபம் பிறக்கிறது...பிறந்து பழி பாவத்திற்கு அஞ்சாத பாவி, கெம்பீரமாக உலாவுகிருன். ஊரில் கோலாகலமாக கொலு நடத்துகிருன்—அந்தப்புரத்திலே மாதர்களின் கூட்டம் இருப்பது கேட்டு. மக்கள் ஒருவிதமாகப் பேசுகிருர்கள் என்று சொன்னுல் அவன் வாய்க்கொழுப்பு—ஏன் பட்டரே! மகளுக்கு ராமாயணம் தெரியாதோ! அவருடைய அந்தஸ்துக்கு அவர் அறுபதினுயிரம் கொண்டார்—ஏதோ சக்தியாசாரம் நமக்கு என்று கூறக்கூடாதோ. என்று கேலி பேசுகிருன்...கோமதியாளன்.

சுந்தரி ஒரு ராஜ குமாரியா ? அவள் சார்பாக ரதகஜ துரதபதாதிகள் கிளம்ப. அல்லது. நான் படிக்கும் புண்ய

கதைகளிலே கூறப்படுவதுபோல. சபிக்கக்கூடிய காலமா இது—கல்லாய்ப்போக. என்று சாபம் கொடுக்க...என்ன செய்வது ? எரியும் கொப்பரை போ லுள்ள என் மனதுக்கு எப்போதுதான் சாந்தி கிடைக்கும்...மன்னனை மாபாவி என்று கூற மனம் துடிக்கிறது. உண்மையைக் கூறவோ முடியவில்லை—மனம் தடுக்கிறது—பழிவாங்கியாகவேண்டும் --ஆனால், எப்படி...? ஆமாம்! லிங்கண்ணுவைத்தான் கருவியாக்க வேண்டும்.

லிங்கண்ணு! என் மகள், மாரடைப்பால் சாகவில்லை! மாபாவி செய்த அக்ரமத்தால் இறந்தாள், என்று சொன்னால், சேச்சே! சொல்லக்கூடாது கேவலமாகக் கருதுவான். லிங்கண்ணுவுக்கு மன்னன்மீது கோபம் இருக்கிறது. நாம் அவனை ஏவி விட்டால், மன்னனை ஒழிக்கலாம். மன்னனை ஒழிக்கா முன்பு என் மனமோ சாந்தி அடையாது. கோயில் பட்டாச்சாரிக்கு மன்னன்மீது கோபம் பிறக்கவிடக் கூடாது. என்ன செய்யலாம்? எதையாவது செய்தாக வேண்டும்! பாம்பாகி அவனைப் பிடுங்கவேண்டும். எப்படி? திருமலையைத் தீர்த்துக்கட்டியாகவேண்டும் — காரணம் வெளியே தெரியக்கூடாது. லிங்கண்ணுவின் மனதை அறிந்து தூபமிடவேண்டும் மன்னன் மதியிலி! என் மகளின் மரணத்துக்குப் பிறகு நான் பழைய சம்பவத்தை மறந்தே போனேன் என்று எண்ணிவிட்டான், என் மனதிலே மூண்ட தீ, அணையக்கூடாதா? நானே பக்குவமாகத் தான் நடந்துகொள்கிறேன்—அவனை நேரிடையாக எதிர்த்து ஒழிக்க முடியாது. மாமரத்தின் பின்புரமிருந்துதான் இந்த வாலியைக் கொன்றாக வேண்டும்! ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு யோசனை உதயமாகிறது. ஆனால் மறுநாள் அது பைத்தியக்கார யோசனை என்று புரிகிறது—தெளிவு பிறக்கவில்லை. சுந்தரியின் உருவம், நித்தம் நித்தம் என்முன் தெரிகிறது. அப்பா ஆகமம், சாஸ்திரம் என்றீர். இல்லையானால், நான் அந்தப்புரம் சென்று சுகப்பட்டு இருக்கும் என்று அழுகுரல் கூறுகிறது. அந்த உருவம் எப்படிச் சம்

மதிக்க முடியும் அவள் சொன்ன நீச ஏற்பாட்டுக்கு மதுரை மீனுட்சி அம்மன் கோயில் பட்டாசாரியே வர்ணுஸ்ரம விதியை சனுதன தர்மத்தை சாஸ்திர சம்பிரதாயத்தை, மீறி நடந்தால், பிறகு நமது குலப்பெருமை, மத மகிமை நிர்மூலமாகிப் போகுமே! ஏற்கனவே கிறிஸ்தவ பாதிரிகள் மக்கள் மனதை மயக்கிவிடுகிருர்கள்! என் மகளை நான் 'ஜாதி கெட' விட்டிருந்தால் போதுமே! மதமே மாண்டு போகும்! தேவி கோயிலிலிருந்து துரத்தப்பட்டுமிருப்பேன். ஆமாம் அவள் செத்தாள்—வேறு வழி கிடையாது, ஆனுல் இவன்—இவனைத் தொலைக்கவேண்டும்! எப்படி? அது தானே இன்னும் புரியவில்லை. மன்னன் நாஸ்திகனுக வருகிருன். தேவியை மறந்துவிட்டான். புராதன மார்க்கத்தைப் பழிக்கிருன் என்பதை மெல்ல, மெல்லப் பலரிடம் கூறி வருகிறேன். பரவுகிறது இந்தச்சேதி. மக்கள் மனம் பதறுகிறது. இது நல்ல சுப சகுனம்! ஏன்! அந்தப்புற மாதர்கள்கூட என் தூபத்தால் மன்னனுக்கு விரோதமாகக் கிளம்பத் தயாராகி விட்டனர். அதனுல்தானே. அந்தப்புரத்திலேயே அரசனைக் குத்திக் கொல்ல ஏற்பாடு செய்தேன்—அரசனின் அபிமான ஸ்திரிகளும் சம்மதித்தனர்-அந்த மடையர்களால் முடியவில்லை. மன்னனைக் கொல்ல—வேறு ஏற்பாடு செய்தாக வேண்டும்-அதுவும் லிங்கண்ணு மூலமாகத் தான்! பார்ப்போம். பழிவாங்காது விடக்கூடாது—முடியாது போனுல் இப்புவியேது!—எப்புவியிலும் நம்மவர் போட்ட திட்டம் தோற்றது கிடையாது. மதுரை மண்டலத்திலே மட்டும். நமது முறை தோற்று போகும்? இல்லை. இல்லை. வெற்றி கிட்டும். லிங்கண்ணு வெற்றிகொண்டவனுகவே காணப்படுகிருன். ஒரு நல்ல திட்டம் தயாரித்துக் கொண்டு. அவன் உதவியைத் தேடினுல் வெற்றிதான். திட்டம் வேண்டும்—திட்டம் வேண்டும்.

[லிங்கண்ணு]

மோசமாகிவிட்டது. மன்னன் போக்கு. இந்த கிறிஸ்தவ பாதிரிகளுக்கு இப்படியா இடம் தருவது? மதுரை

கொந்தளிக்கிறது. மன்னன் ஏதும் நேரிடாது என்று இருக்கிருன். மமதையுடன். என்னிடம் துளியாவது மதிப்பு இருக்கிறதா. என்ன செய்துவிட முடியும் என்ற தைரியம்.

ராஜ சபையிலே நம்மை எல்லாம் அலட்சியப்படுத்துகிருன். எவ்வளவு தைரியமாக மத விஷயத்தைக் கண்டிக்கிருன். இந்த மண்டலத்திலும். வேறு மண்டலங்களிலும் மறையவர்களிடம் மன்னர்கள் பயபக்தி விசுவாசத்டன் நடந்துகொள்கிருர்கள். திருமலை மட்டும்தானே தர்க்கிக்கிருன், தர்க்கிப்பது மட்டுமா...அன்று ஒருநாள். சந்திர சேகர பட்டரிடம் சில புதிய கேள்விகள் பாதிரி தயாரித்தார்கள். படிக்கிறேன் கேளுங்கள்—பட்டரே பதில்கூற முடியுமாஞல் நல்லது. கவனமாகக்கேட்க வேண்டுமென்று கூறி, என் எதிரிலேயே அந்தப் பிராமணனை எவ்வளவு கேவலப்படுத்திவிட்டான். மதத்தையும் பழித்தான்.

'ஓய்! பிரபஞ்சத்தைச் சிருஷ்டித்தவர் கடவுள்தானே!'

'ஆமாம்...சந்தேகமென்ன...வேதப் பிரமாணுதிகள் அதைத்தான் வலியுறுத்துகின்றன...உபநிஷத்தம்...'

போதுமய்யா...நான்தான் ஒப்புக்கொள்கிறேனே ஒப்புக்கொள்ளும் விஷயத்துக்கு ஓராயிரம் ஆதாரம் ஏன்?

பிரபஞ்சத்தைச் சிருஷ்டித்தான் கடவுள்...உம்மையும் என்னையும்—ஊராள்வோனையும் உழவனையும்- ஈ எறும்பு முதலான எண்பத்திநான்கு கோடி ஜீவராசிகளையும் சிருஷ்டித்தான்...

'சிருஷ்டித்தான் அல்லவா? இதிலே மக்கள், ஆண்டவனின் குழந்தைகள்தானே'

'ஆமாம்'

'அப்படி இருக்க இதிலே உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி என்று பேதம் ஏன்?

'அது சாஸ்திரம்'

'சாஸ்திரம் சர்வேஸ்வரனுடைய வேலையைக் கெடுப்பதா சாஸ்திரத்தின் இலட்சணம்?

'இல்லை'

'என்ன, இல்லை...இல்லை... நாலு ஜாதிக்கு என்ன காரணம் கூறுகிறார்கள்...'

'பிரம்மனின் முகத்தில்...'

'முகத்திலே, தோளிலே, துடையிலே, பாதத்திலே! இப்படிக் கூறுகிறார்களே, அது இந்த நாட்டுக்கு மட்டும் இருக்கிறது தவிற உலகிலே மற்ற நாடுகளிலே இல்லையே ஏன்?

'தெரியவில்லை'

'விசாரிக்கப்படாதோ...'

'யாரை?'

'விஷயம்...தெரிந்தவர்களை' என்று பேசிவிட்டு ஒரு பேய்ச் சிரிப்புச் சிரித்தபோது, எனக்கு வந்த கோபம். கட்டாரிமீதே கை சென்றது. ஊர் மக்கள் இவனை ஒழித்துக் கட்டுபவர்களை வாழ்த்துவார்கள். அவ்வளவு வெறுப்பு வேந்தனிடம். யாரும் தன்னை ஏதும் செய்துவிட முடியாதா! நான் என்ன மரமா! வாள் ஏந்தி அறியாதவனா! இந்த மண்டலத்தையே ஆளும் வல்லமை உண்டு எனக்கு! ஆள நினைத்தால்தான் என்ன தவறு! அன்னியருக்கு இடமளிக்கும் இந்த மன்னனை ஒழித்துவிட்டு, நானே மன்னனானால் ஒரு தவறும் இல்லை. பதவி ஆசை என்பார்கள்—ராஜ துரோகம் என்று சிலர் தூற்றுவார்கள், ஆனால் மக்களுடைய மனம் எனக்குத் தெரியும். நான்தான் மாபாவியை ஒழித்தேன் என்று தைரியமாகக் கூறிவிடலாம். ஆனால் அவ்வளவு வெளிப்படையாகச் செய்வது ஒரு வேளை ஆபத்திலே கொண்டுபோய்ச் சேர்க்கக்கூடும். வேறுவிதமாகத்தான் ஏற்பாடு செய்யவேண்டும் நல்ல வேளையாக இந்த பட்டர் கிடைத்து இருக்கிறார்! பாவம் வெளியே சொல்லமுடியாத வேதனை அந்த ஆசாமிக்கு. இந்த நிலையில் உள்ளவரைத்தான் தக்க கருவியாகக் கொள்ளவேண்டும். அவருக்கு

உள்ள வேதனையின் காரணத்தை அறிந்ததாகக் காட்டிக் கொள்ளக்கூடாது. அன்று மெல்ல ஒத்திகைப் பார்த்தேன் நேர்த்தியாகவே இருந்தது. பட்டரின் ஒத்தாசை நிச்சயம் கிடைக்கும் என்பதிலே சந்தேகம் இல்லை, மக்கள் ஏதாகி லும் சந்தேகப்பட்டாலும் பட்டர் அவர்களைச் சரிப்படுத்தி விடுவார்! அவர் என்ன சாமான்யமானவரா? தேவி சன்ன தியில் பட்டாச்சாரியார்—அவர் வாக்கு சத்திய வாக்கு என்றுதான் யாரும் எண்ணுவார்கள்.

மன்னனுக்கு மதி கூறுவதைவிட, மணலைக் கயிராகத் திருக்கிவிடலாம் போலிருக்கு. மறையவரே! விதண்டா வாதம், பேசுவதெல்லாம், செய்வது மகாமோசமான மட்ட ரகமான காரியம்'...

'மன்னன்!—ராஜா...!'

'மரப் பொம்மைகளா மக்கள்?'

'மன்னன் என்றால், எதுவும் செய்யலாம் என்று எண் ணுவார்கள்? அந்தக்காலம் மலையேறிவிட்டது;

'மதுரையிலா?'

'ஏன்? இங்கு மாவீரர் இல்லை என்று எண்ணுகிறீரா?

'லிங்கண்ணா! வீரருக்கு இங்கு என்ன குறை. உமது வீரதீரபராக்கிரமத்தை நான் அறியமாட்டேனா?''

'ஆனால்...'

'ஆனால் என்று இழுக்கக் காரணம் அந்தணரே! என்ன கூறும் ராஜவிஸ்வாசம் பலமான பாசமல்லவா!

'ஆமாம்—ஆனால் ராஜபதவி மிகவும் பொறுப்பானது அல்லவா?

,ஆமாம்—தடை—என்ன—தர்மசாஸ்திரம் தவறாமல் நடப்பதுதான் ராஜதர்மம்...'

'தவறினால்...,

'ஆண்டவன் தண்டிப்பார்...ஆண்டவன் அதற்காகத் தான் மக்களுக்கு அறிவையும் ஆற்றலையும் தந்திருக்கிறார்—கடிக்க வரும் பாம்பை எல்லாம் ஆண்டவன் தூரத்திக் கொண்டு வந்து அடிக்க வேண்டுமா-நாம் என்ன மண்ணுங் கட்டிகளா?'

'ஏது லிங்கண்ணு, புரட்சிப்பொறி வீசுகிறது, உன் பேச்சில்'

'பட்டரே! மன்னரிடம் கூறிவிடும்-லிங்கண்ணு உமது நடத்தையைப் பலமாகக் கண்டிக்கிறான்-மக்கள் ஆத்திரம் கொண்டுள்ளனர் - அக்ரமத்தைச் சகிக்கமாட்டார்கள், என்று கூறிவிடும்,

'நானு...'

'ஏன்? வேறுயார் கூறுவது? உமக்குத்தெரியவில்லையா மன்னன் நமது புராதன மார்க்கத்தையேநாசமாக்கத் துணி கிறான், பரங்கிகளின் பேச்சைக் கேட்டுக்கொண்டு......'

'தெரியும்—மனம் வேகிறது அந்த மாபாவி செய்யும் காரியத்தை நினைத்தால்'...என்றல்லவா பேசினார். பட்டாச் சாரியாருக்கு மனம் எரிமலையாகிக்கிடக்கிறது. அந்தநெருப் புக்குழம்பிலே தள்ளிப் பொசுக்கிவிடலாம் மன்னனை. சரி யான சமயம் வாய்க்கவேண்டும். திட்டம் தீட்டியபடிதான் இருப்பார் பட்டாச்சாரி. பழிவாங்கித் தீரவேண்டும் என்ற எண்ணம் அணையாத தீயாக இருக்கிறது அவர் மனதில்.

திருமலை

பணம் இல்லாமல் எவ்வளவு திட்டங்கள் பாழகிவிடு கின்றன. நானும் கொஞ்சம் வீண்செலவு செய்துவிட்டிருக் கிறேன். அந்தப்புரத்திலே மட்டும். தேவிமார் முன்னூறு—பரிவாரம் பலநூறு—பொன் பாழகிறது. இவ்வளவு அழகி களும் என் சுந்தவல்லியின் கால்தூசுக்கு இணையாக மாட் டார்கள்! அந்தப் பொற்கொடியைப் பெற அரும்பாடுபட் டேன்—பெற்றேன்—ஆனால் நிரந்தர விருத்தாகவில்லை. பழைய

போதை இந்தப் பட்டாசாரிக்கு. பாதிரிமார்கள்தான்பட்ட வர்தனமாகக் கூறினார்களே, வைதீகவெறி. லேசில்போ காது என்று அவ்வளவு வாதடினேன். சுந்தரியைத் திரு மணம் செய்துகொள்ள வேண்டுமென்று. பிரளயம் வந்து விடும்என்று பீதிகொண்டான். அவள் அழுதபோதெல்லாம் அஞ்சியபோதெல்லாம். தைரியம் சொன்னேன். உன்னை என் தேவியாக்கிகொள்கிறேன் என்று சிலநாட்களில் இந்த பட் டாச்சாரியின் பித்தம் தெளிந்துவிடும். திருமணத்துக்குச் சம் மதிப்பான் என்று எண்ணினேன். அதற்காகவே. பழைய சாஸ்திர சம்பிரதாயங்களிலேஉள்ள அர்த்தமற்ற. பொருத்த மற்றவிஷயங்களை எல்லாம். பட்டாசாரியிடம் கூறினேன்– வேடிக்கையாகப் பேசுவதுபோல. எதற்கும் அசையவில்லை. பாபம்! சுந்தரி திடீரென்று மாண்டுபோனாள். மாரடைப்பு என்று புரளுகிறான். இருக்காது; தற்கொலையாகத்தான் இருக்கவேண்டும். பேதைப் பெண் பீதி கொண்டுவிட் டாள். பட்டாச்சாரி அவள் செத்ததோடு சம்பவத்தையே மறந்துவிட்டான் மகள் செத்ததுகூட அவனுக்கு வருத்த மளிக்கவில்லை. ஜாதி கெடவில்லையென்று மகிழ்கிறான். எல்லாம் விதி என்ற ஆறுதல்! என்மீது கோபம்கூட இல்லை. மகாராஜாவைக்கருவியாக்கி பிரமன் தன் வேலையை முடித்துக்கொண்டான் என்று கூறி மனச்சாந்தி தேடிக் கொண்டான் மடையன், ஆனால் 'ராஜபக்தி' அபாரம்அவ னுக்கு, இல்லாமலா, நான் பணமின்றி திண்டாடுவது தெரிந்து, தேவி சன்னதியில்உள்ள இரகசியம் சுரங்கத்திலே, பெரும் பொற்குவியல் பேழைகளில் உள்ள இரகசியத்தைக் கூறினான். பரம்பரை பரம்பரையாச் சேர்க்கப்பட்ட பொன்! நல்ல சமயத்திலே உதவுகிறது. இன்றிரவு நடுநிசிப் பூஜை யின்போது சென்று எடுத்து வரவேண்டும், பட்டாச்சாரி நமக்காக காத்துக் கொண்டிருப்பான். எத்தனை பேழை களோ! எவ்வளவு பொற்குவியலோ!

சந்திரசேகரப்பட்டர்

நடுநிசி! பக்தகோடிகளெல்லாம் போய்விட்டார்கள். பேராசைக்காரன், காமாந்தகாரன், என்மகளைக் கெடுத்துச் சாகடித்த காதகன் வரப்போகிறான். பேழைகள் எத்தனை! பொற் குவியல் எந்த அளவு இருக்கும் என்றல்லவா கேட்டான். வா! வா! சந்திரசேகரன் கட்டிய சமாதி தயாராக இருக்கிறது. இதோ லிங்கண்ணாவும் வீரர்களும், எனக்குத் துணையாக வந்துள்ளனர். புல்லேந்தும் கரம்தான், ஆனால் இன்று உன் உயிரைப் போக்கும் வலிமை இதற்கு!! வேதனை, கோபம், வெட்கம் எது கிளம்பினால்தான் என்ன? மணி அடிக்கும் இவன், நம்மை என்ன செய்துவிட முடியும் என்று இறுமாந்து கிடந்தான். இதோ சவக்குழி—தேவிக்கோயில் பட்டாச்சாரி வெட்டியிருக்கும் சவக்குழி! உள்ளே சென்று, பேழைகளைப் பார்த்து, வாய் பிளந்து நிற்கும்போது இந்த விளக்குகள் அணைக்கப்படும்! இருள் சூழ்ந்து கொள்ளும். பிறகு, இந்தப் பெரும் பாறை-லிங்கண்ணா பலசாலி— இருவரும் சேர்ந்து சுரங்க வழியை இதனால்அடைத்துவிடவேண்டும்—உயிரோடு சமாதி—காற்று கிடையாது—பாறைக் கதவு—தட்டிப் பயனில்லை—நெட்டித் தள்ளி பயனில்லை—உயிர் ஊசலாடும்—சித்திரவதை—அணு அணுவாக உயிர் கத்தரிக்கப்படும். பிணமாவான் பேயன். லிங்கண்ணா இதைத் தர்ம கைங்கரியம் என்றே எண்ணுகிறான். மதத்தைக் காப்பாற்ற மன்னனானாலும், அருமை மைந்தனானாலும், தாய் தகப்பனானாலும், யாராக இருந்தாலும் கொல்வது புண்ணிய காரியம் என்றேன்—ஆமாம் என்றான். சொல்லாமலிருப்பானா, சாஸ்திரம் அறிந்தவனாயிற்றே! நான் எதற்தாகப் பழி தீர்த்துக்கொள்கிறேன் என்பது நல்லவேளை, லிங்கண்ணாவுக்குத் தெரியாது. என் திட்டத்தை மெச்சினான். ஆமாம் அதோ மன்னன்—தேவி! உனக்குப் பலி, நர பலி! சுந்தரி, உன் தந்தை சாமான்யனல்ல—இதோ பார்! வருகிறான் சாக!

காலம் கலியாளுலென்ன, அற்புதம் நடவாமலா போகும். நேற்று நடுஜாமப் பூஜையின்போது, நமது மன்னன் திருமலே, தேவியோடு ஐக்கியமாகிவிட்டாராம் தேவியின் மகிமையே, மகிமை! திருமலேக்குக் கிடைத்த முக்தியே முக்தி! தேவியைத் தரிசித்தபடி நின்ருராம் மன்னர் —நெடுநேரம்! பட்டாச்சாரியார்கூட ஆச்சரியப்பட்டாராம் பாதிரிகளின் சகவாசத்தால், மன்னனுக்கு மத நம்பிக்கை குறைந்துவிட்டதாக எண்ணிக்கொண்டோமே! இவர் பக்தி பரவசமகியல்லவா நிற்கிருர் என்று எண்ணி இப்படிப்பட்ட பக்திமானேப் பழித்தோமே என்று வருந்திருராம். மன்னன் கண் மூடி, கரம் கூப்பி, மவுனம் செய்தவண்ணம் இருக்கும்போது, பட்டாச்சாரியின் கண்களேப் பறித்துவிடும்படியான ஓர் ஜோதி தோன்றிற்ரும். அம்பாளிடமிருந்து முகத்திலிருந்தா, காலிலிருந்தா என்று மட்டும் கண்டுபிடிக்க முடியவில்லேயாம். ஜோதி தோன்றியதும் 'பக்தா' என்று தேவியின் குரல் கேட்டதாம், 'வந்தேன்' என்ருராம் திருமலே. அவ்வளவுதான்! மன்னர் ஜோதியில் கலந்துவிட்டாராம் என்ன, பக்தியின் பெருமை! திருமலே நாமம் வாழ்க! திவ்ய ஜோதி வாழ்க! தேவியின் நாமம் வாழ்க! திவ்ய ஜோதியில் கலந்த திருமலேயான் திருநாமம் என்றென்றும் வாழ்க!

சுபம்.

வீ. சுப்புராயலு நாயுடு பிரஸ், மதுரை—58.

1303



"பரிசு" மலிவுப் பதிப்பு.